
முத்துலட்சுமி ராகவன்
எங்கிருந்தோ ஆசைகள்...
பாகம் - 5

முத்துலட்சுமி ராகவன்
எழுதிய

# எங்கிருந்தோ ஆசைகள்...

பாகம் - 5


**லட்சுமி பாலாஜி பதிப்பகம்**

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி. நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் : bchandar24@yahoo.com

website : www.muthulakshmiraghavan.com

**முத்துலட்சுமி ராகவன் எழுதிய**

**எங்கிருந்தோ ஆசைகள்...** *பாகம்* **- 5**

உரிமை : **ஆசிரியருக்கு**

| | | |
|---|---|---|
| பொருள் | : | நாவல் |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2013 |
| வெளியீடு | : | **லட்சுமி பாலாஜி பதிப்பகம்**<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி. நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |
| நூலின் அளவு | : | 1x8 கிரவுன் |
| தாள் | : | 11.6 kg புக் பிரிண்ட் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| மொத்தப்பக்கங்கள் | : | 400 |

**விலை : ₹ 200/-**

லேசர் டைப் செட் : **விஜி கிராஃபிக்ஸ்,** மதுரை.

அச்சிட்டோர் : **பாரதி அச்சகம்,** சென்னை–**6**

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது.... இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்...

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ... திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்...

இப்படிக்கு

முத்துலட்சுமி ராகவன்

# ஆசிரியர் கடிதம்...

## சில கேள்விகளும்... அதற்கான பதில்களும்...

என் பிரியத்துக்குரிய வாசக.. வாசகிகளே..!

ஆழ்ந்த வாசிப்பு என்றுமே பல கேள்விகளை உள்ளடக்கியதாகவே இருந்து வருகின்றது.. என் கதைகளின் ஆழ்ந்த வாசிப்பும் அதற்கு விதி விலக்கானதல்ல.. என்னை நோக்கியும் பல கேள்விக்கணைகள் பறந்து வந்து கொண்டேயிருக்கின்றன.. அதற்கான பதில்களை நான் இந்தக் ஆசிரியர் கடிதத்தில் சொல்லியே ஆகவேண்டும்...

முதல் கேள்வி.. என் கதைகளின் கதாநாயகன் கதாநாயகியை புரட்டிப் புரட்டி அடித்து வைக்கிறான் என்பது...

என்ன செய்வது..? நான் வளர்ந்த மதுரை வட்டாரத்தின் சூழல் அப்படி.. நான் கடந்து வந்த தலைமுறையில் தாத்தாக்கள் பாட்டிக்களை கூசாமல் அடித்து விடுவார்கள்.. அதையடுத்து வந்த அப்பாவின் தலைமுறையிலும் அதே கதைதான்.. பத்துப் பேரின் மத்தியிலும் சட்டென்று ஆண்கள் பெண்களை அடித்து விடும் சூழலில்தான் நான் வளர்ந்து வந்திருக்கிறேன்.. அதை மிக இயல்பான ஒன்றாகவும் அவர்கள் எடுத்துக் கொள்வார்கள்.. எங்கள் தலைமுறையில் இது மாறியிருக்கிறது என்றாலும்.. இப்போதும் அங்கொன்றும்.. இங்கொன்றுமாக இந்த நிகழ்வுகளை நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.. அதைத்தான் என் கதைகளில் நான் கொண்டுவந்தேன்.. மற்றபடி என் அனைத்துக் கதைகளின் கதாநாயகன்களும் கதாநாயகிகளிடம் கை நீட்டியதில்லை...

'என்னவென்று நான் சொல்ல...?' கதையின் நாயகன் பிரபாகரன் ஒரு 'இரும்புமனிதன்..' அவன் மாலினியிடம் கோபப்பட்டான்... அந்த வெறி கொண்ட நிலையிலும் அவன் கை நீட்டவில்லை...

'நெஞ்சமடி நெஞ்சம்...' ஹரிஹரன் யார் என்று நான் சொல்ல வேண்டிய தேவையில்லை.. அவன் தன் காதலியை பூவைப் போலப் பார்த்துக் கொண்டான்...

இன்னும் எத்தனையோ சொல்லலாம்.. மிகச் சொற்பமான கதைகளில்தான் அது போன்ற நிகழ்வு வந்திருக்கின்றது.. அதுவும் கதைக்குத் தேவைப் பட்டதால் அது நிகழ்ந்திருக்கும்.. உதாரணம்...

'அம்மம்மா கேளடி தோழி...'

'அம்மம்மா.. கேளடி தோழி..'யில் கதாநாயகன் மனைவியை அதிகமாக அடித்துத் தொலைத்து விடுவான்.. அதனால் அவளுக்கு வரும் காய்ச்சலும்.. அதன் தொடர்கதையாய் சிகிச்சையளிக்கும் லேடி டாக்டர் அவனை வில்லனைப் போலப் பார்ப்பதும்.. அதற்குப் பின்னால் அவனுக்குக் கோபம் வந்தாலே கதாநாயகிக்கு காய்ச்சல் வந்து தொலைத்து விடுவதும்.. அதை வீட்டில் வேலை செய்யும் வேலையாள்கள் வரை வெகு நுட்பமாக கண்டு வைத்திருப்பதும் என் கதையோட்டத்திற்குத் தேவைப்பட்டுத் தொலைத்தது...

மற்றபடி நான் உங்களில் ஒருத்தி.. பெண்ணை ஆண் அடிப்பதை நான் கொஞ்சம் கூட ஆதரிக்கவில்லை.. ஆணுக்குப் பெண் அடிமையில்லை.. அவளுடைய சுதந்திரத்தை ஆணின் கையிலிருந்து யாசகமாக பெறும் நிலையில் அவளிருக்கக் கூடாது என்று நினைப்பவளே நான்.. நம் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட சுதந்திரத்தின் வரம்பினைப் பற்றி மிக நன்றாகவே தெரியும்.. அவர்கள் தங்களின் சுதந்திரத்தை வரையறுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு என்றுமே உண்டு...

ஆதலினால் தோழிகளே.. என் மீதான இந்தக் குற்றச்சாட்டை விட்டு விடுங்கள்... ஒரு கதை சொல்லி தன்னைச் சுற்றி நிகழும் அனைத்தையும் சொல்லியாக வேண்டுமல்லவா..? அது ஆணாகப் பட்டவன் பெண்ணை அடித்துத் தொலைப்பதைத்தான் ஆண்மையென்று நினைக்கிறான் என்பதாக இருந்தாலும் அதை கதையில் கொண்டுவர வேண்டுமல்லவா..? அதுவே இது...

இரண்டாவது குற்றச்சாட்டு எதுவெனில்.. என் கதைகளின் நாயகனாக நான் தாதாக்களையும்.. ரௌடிகளையும்.. தீவிரவாதிகளையுமே கொண்டு வருகிறேன் என்பது...

அதிலும் அவர்களைக் காதலிக்கும் கதாநாயகிகளுக்கு வளமான வாழ்க்கை அமைவதாக நான் எழுதுகிறேனாம்.. அதனால் இளம் தலைமுறையினரின் எண்ணங்கள் மாறி விடலாமாம்...

இதைப் போல நிறைய வாசக வாசகிகள் பேசிக் கொள்கிறார்கள் என்று எனது தீவிர வாசகியொருவர் சொன்னார்.. வருந்தினேன்..

'எங்கிருந்தோ ஆசைகள்..' என்ற இந்தக் கதை என் நூறாவது கதை.. என் நூறு கதைகளின் பெயர்களையும்.. அந்தப் பட்டியலையும்..

முதல் பாகத்தின் ஆசிரியர் கடிதத்தில் நான் கொடுத்திருக்கிறேன்.. அவற்றில் எத்தனை கதைகளில் நான் தாதாக்களையும்.. ரௌடிகளையும்.. தீவிரவாதிகளையும் கதாநாயகன்களாக கொடுத்திருக்கிறேன் என்று நீங்களே சொல்லுங்கள்...

1. 'நெஞ்சமடி நெஞ்சம்..' ஹரிஹரன்.. (தாதா..)
   (சங்கமித்த நெஞ்சம் கதை இதன் தொடர்ச்சியே..)
2. 'கை தொட்ட கள்வனே..' ரமணன் (ரௌடி..)
3. 'போர்க்களத்தில் ஓர் பூவிதயம்..' சாங்சென் (தீவிரவாதி)

மூன்றே கதைகள்.. என் 100 கதைகளில் 3 கதைகளில் மட்டுமே இவர்கள் கதாநாயகன்களாக வருகிறார்கள்.. மற்ற 97 கதைகளிலும் வரும் கதாநாயகர்கள் நம் சமூகத்தின் பெரிய மனிதர்களே...

இந்த மூன்று கதைகளும் வெவ்வேறான கதைத் தளங்களைக் கொண்டவை.. ஹரிஹரனுக்கு 'தாதா' இமேஜ்தான் இருந்தது.. அவன் 'தாதா' அல்ல.. 'கை தொட்ட கள்வனே..' ரமணன் ஒரு நல்ல மனம் கொண்ட ரௌடியின் நிழலில் வளர்ந்தவன்.. சூழ்நிலையால் அந்தப் புலிமீது செய்யும் சவாரியை ஏற்றவன்.. 'போர்க்களத்தில் ஓர் பூவிதயம்..' கதாநாயகன் சாங்சென் தீவிரவாதத்தை விரும்பாதவன்.. அதிலிருந்து தப்பிக்க முனைந்தவன்...

இந்த மூவரையும் நான் ஆதரிக்கவில்லை.. அவர்களின் வாழ்க்கையை நியாயப்படுத்த முனையவில்லை.. அவர்களை அவர்களின் மனக் குமுறல்களோடு உங்கள் முன்னால் உலவ விட்டேன்.. அவர்களின் நிறைகுறைளோடு அவர்கள் கதாநாயகிகளின் முன்னால் மண்டியிட்டார்கள்.. கதையின் போக்கில் வாழ்ந்தார்கள்.. அவர்கள் வாழ்வை வளமானதாக நான் காண்பிக்கவில்லை... 'நெஞ்சமடி நெஞ்சம்..' ஹரிஹரன் ஒரு அற்புதமான காதலன்.. இருந்தும் அவன் மீதான காதலை ஒப்புக்கொள்ள அவன் காதலி பயந்தாள்.. அதை உணர்ந்த அவன் விலகிப் போனான்.. 'கை தொட்டகள்வன்..' ரமணனைப் பார்த்து அவன் காதலி "உன்னை என் கணவன் என்று இந்த உலகிற்கும் என்னைப் பெற்றவர்களுக்கும் நான் அறிமுகப் படுத்தி வைக்க முடியுமா..?" என்று கேட்டாள்... 'போர்க்களத்தில் ஓர் பூவிதயம்..' கதையின் கதாநாயகி காதலனைக் காட்டிக் கொடுத்தாள்.. அவனுடன் செல்ல மறுத்தாள்.. அவளை வில்லனைப் போல மயங்க வைத்து கடத்திக் கொண்டு போகத்தான் கதாநாயகனால் முடிந்தது...

இந்தக் கதைகளின் சுபமான முடிவுகளையும் என் வாசக வாசகிகளே தீர்மானித்தார்கள்.. 'போர்க்களத்தில் ஓர் பூவிதயம்..' கதைக்கு.. கதாநாயகி கதாநாயகனை சுட்டுக் கொல்கிறாள் என்ற முடிவைத்தான் நான் கொடுப்பதாக இருந்தேன்.. அப்படியொரு முடிவை நான் கொடுத்தால் என்னை வீடு கட்டி அடித்து விடுவோம் என்று நிறைய ரசிகைகள் எச்சரிக்கைகளை அனுப்பிவிட்டார்கள்.. வேறு வழியின்றி அவளை மெஸ்மரிசத்தில் ஆழ்த்தி அவன் மணமுடித்துக் கொண்டான் என்று கதையை மாற்றி எழுதினேன்...

ஆதலினால் தோழிகளே..! இந்தக் குற்றச்சாட்டில் ஒருபோதும் உண்மையில்லையென்று உணர்ந்து கொள்ளுங்கள்.. நானும் பிள்ளையைப் பெற்றவள்.. இளைய தலைமுறையினரைப் பாதிக்காத படைப்புக்களைக் கொடுக்க வேண்டுமென்ற அக்கறை எனக்குள நிறைந்து கிடக்கின்றது..

மூன்றவதான குற்றச்சாட்டு.. இரண்டு கதைகளைப்பற்றிய விமரிசனங்கள்.. 1. சந்தித்தேன்.. சிந்தித்தேன்.. 2. போர்க்களத்தில் ஓர் பூவிதயம்..

'சந்தித்தேன்.. சிந்தித்தேன்..' கன்டேன் காதலை என்ற திரைப்படத்தை நினைவுறுத்துகிறது என்பது குற்றச்சாட்டு.. இரண்டாவது போர்க்களத்தில் பூவிதயத்தின் நாயகன் சாங்சென் 'ஏழாம் அறிவு' திரைப்படத்தின் வில்லனை நினைவூட்டுகிறான் என்பது...

இரண்டுக்குமான பதில்களை இங்கே கொடுக்கிறேன்.. 'கன்டேன் காதலை' திரைப்படத்தின் கதாநாயகன் தந்தையின் மறைவு.. தாயாரின் மறுமணம்.. காதலியின் பிரிவு போன்றவற்றின் பாதிப்பில் தொழிலைக் கவனிக்காமல் கோட்டை விடுகிறான்.. மனம் போன போக்கில் பயணம் செய்கிறான்.. ரயில் பயணத்தில் வேறு ஒருவனைக் காதலிக்கும் நாயகியைச் சந்திக்கிறான்.. அவளின் இயல்பான பேச்சுக்களில் வசீகரிக்கப் படுகிறான்.. அவள் காதலனைத் தேடிச்செல்ல.. இவன் புத்துணர்வுவரப் பெற்றவனாக தொழிலைக் கவனிக்கத் திரும்புகிறான்..

நன்றாக கவனியுங்கள் 'கன்டேன் காதலை...' கதையின் நாயகி எதையும் சீரியஸாக எடுத்துக் கொள்ளதவள்.. அவளுக்கு கதாநாயகனின் சோர்வான மனநிலைபற்றி எதுவும் தெரியாது.. அவனுடைய தொழிலைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பையும்.. தன்னம்பிக்கையையும் அவள் கொடுக்கவில்லை.. அவன்

பொறுப்புக்களைப் பற்றி அவள் அவனிடம் எடுத்துச் சொல்லவில்லை.. இத்தனைக்கும் மேலாக அவள் மனதில் வேறொருவனின் மீது ஆழ்ந்தகாதல் இருந்தது.. அந்தக் காதல் தோல்வியினால் அவளது குணமே மாறி கண்ணீருடன் அவள் விரக்தி மனநிலைக்கு போகுமளவிற்கு அந்தக் காதல் தோல்வி அவளை பாதித்தது...

என் 'சந்தித்தேன்.. சிந்தித்தேன்..' கதையின் நாயகிக்கு கதாநாயகனைப் பற்றிய அனைத்து விவரங்களும் தெரியும்.. அவனைக் நேரில் காணாமலேயே காதல் கொண்டவள் அவள்.. மனதிலிருந்த நாயகன் தற்கொலை செய்து கொள்ள முனைகிறான் என்பதைத் தெளிவாக தெரிந்து வைத்துக் கொண்டு.. அதைப் பற்றி ஒன்றும் தெரியாதவளைப் போல தற்கொலையிலிருந்து அவனைக் காத்தவள் அவள்.. அவனுக்கான தன்னம்பிக்கையை ஊட்டி.. வெற்றி பெறு என்று சொல்லி தொழிலைக் காக்க அனுப்பி வைத்தவள்.. அவள்.. இத்தனைக்கும் மேலாக அவனிடம் காதல் சொல்ல முடியாமல்.. வேறு ஒருவனையும் மணக்க முடியாமல் வீட்டை விட்டு வெளியேறுகிறவள் அவள்..

இருந்தும் இரண்டும் ஒன்றென்று நீங்கள் தீர்ப்பளித்தீர்கள்.. வருந்துகிறேன்.. இனி இது போல நிகழாது பார்த்துக் கொள்வேன்..

அடுத்து 'ஏழாம் அறிவு..' வில்லன்..

கதையின் கதாநாயகன் ஒரு தீவிரவாதி என்றதும் அவனை பாகிஸ்தானிலிருந்து வருகிறவனாகச் சொல்வதில் எனக்கு விருப்பமில்லை... அதற்கான காரணங்களை கதையில் நான் சொல்லிவிட்டேன்... நம்மை சத்தமில்லாமல் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் சீனாவைத்தானே நான் அடுத்து தேர்ந்தெடுத்தாக வேண்டும்..? அவனுக்கான குணங்களில் 'ஏழாம் அறிவு' வில்லன் எப்படி வந்தான்..? இருவரும் சீனாக்காரர்கள் என்பதினால் உங்களுக்கு இப்படித் தோன்றியிருக்கலாம்.. என் கதையின் 'சாங்சென்..' உயரமானவன்.. வசீகரமானவன்.. அவன் பற்றிய வர்ணனைகள்.. 'ஏழாம் அறிவு' வில்லனை நினைவு படுத்தாது..

இருந்தும் இந்த இரண்டு ஒன்றென்ற உங்களின் தீர்ப்புக்கு நான் கட்டுப்படுகிறேன்.. எதிர்காலத்தில் இதையும் தவிர்ப்பேன்...

இப்போது எனது முறை.. நான் கேள்வி கேட்கிறேன்.. என் ரசிக.. ரசிகைகளான நீங்கள் அதற்கான பதிலை எனக்கச் சொல்லுங்கள்..

என் ‘உன்னோடு ஒரு நாள்..’ என்ற கதை...

உங்களுக்கு நினைவிருக்கும்.. கதையின் நாயகி பிறந்தவீடு மீசைக்கார ஆண்களைக் கொண்டது.. அவர்களை மீறும் எண்ணமில்லாத நாயகி.. வீச்சரிவாள்.. மீசைகொண்ட முறை மாப்பிள்ளையை மணக்க மனதளவில் தயாராக இருக்கிறாள்.. இந்த நிலையில் அவள் வேறொரு வாலிபனுடன் மூணாறுக்கு போக நேர்கிறது.. தான் இருக்குமிடத்தை போனில் சொல்ல முனைகிறாள்.. போனை எடுக்கும் அந்த வீட்டுப் பெண் அதைப் பற்றி வீட்டில் சொல்லாமல் மறைத்து விடுகிறாள்...

இதுபோன்ற சம்பவ நிகழ்வுகளுடன் எந்தவொரு திரைப்படத்தையும் நீங்கள் பார்த்ததில்லையா..? உங்கள் மனதை... இது நாம் படித்த ‘உன்னோடு ஒரு நாள்..’ என்ற கதையில் வரும் நிகழ்வுகளாயிற்றே என்ற கேள்வி கொத்தவில்லையா...? விடுங்கள்.. நானென்ன பறவையா.. இதை நீங்கள் நினைத்துப் பார்ப்பதற்கு..? உங்கள் மனதை இது கொத்தாதுதான்..

என் ‘நீயின்றி நானில்லை..’ என்ற கதை..

இதுவும் உங்களுக்கு நினைவிருக்கும்.. கதாநாயகியை ஒருவன் காதலிக்கிறான்.. அவனது நண்பன்.. அந்த ஒருவனின் காதலைப் பற்றிச் சொல்ல கதாநாயகியிடம் பேச்சை ஆரம்பிக்கிறான்.. நண்பனைப் பிடித்திருக்கிறதா என்ற கேள்விக்கு உன்னைப் பிடித்திருக்கிறது என்று கதாநாயகி பதில் சொல்லி விடுகிறாள்.. அவளுடைய அப்பா.. திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை.. காதலனின் அப்பா தடாலடியாக அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கிறார்.. இது போன்றகதையை நீங்கள் பார்த்ததில்லையா..? மதுரையை ஆண்டவர்களிடம் தான் இதை கேட்க வேண்டும்..

என் ‘உன்னோடு நான்..’ என்ற கதை...

இறந்தபின்பும் காதலியிடம் தன்னைப் பற்றி ஒருவன் உணர்த்துகிறான்.. அவளை வில்லனிடமிருந்து காக்கும் முயற்சியில் அவன் இறந்து போகிறான்...

இந்தக் கதையை எந்தத் திரைப்பட வடிவாகவும் நீங்கள் பார்க்கவேயில்லையா..? என்னங்க நீங்க.. ‘ஈ’ ‘எறும்பை’க் கூட விட்டு வைக்காமல் என் கதைகளை அக்குவேறு ஆணி வேறாக பிய்த்துப் போட்டு அலசுகிறிங்க.. இதைக் கண்டுக்காம இருக்கறிங்களே.. ஏங்க..? நான் எழுதினால் அது ‘காப்பி..’ இவங்க படம் பிடித்தா அது

அவங்க 'உரிமை..' அதுதானே உங்க தீர்ப்பு..? என்னவோ போங்க.. எப்போதுமே வலியவர்கள் பின்னால்தான் உலகம் போகும்.. நான் மிக.. மிக.. மிக.. எளியவள்...

என் 'நீங்காத நினைவுகள்..' என்ற கதை..

என் அண்ணனைப் பற்றிய என் நினைவுக் கவிதைகளைத் தாங்கிக் கொண்டு வந்த கதை இது.. இந்தக் கதையின் கதாநாயகி ஒரு போலிஸ் ஆபிசர்.. அந்த ஊரிலிருக்கும் தகப்பனும் மகனுமான இரண்டு வில்லன்களை பிடிக்கும் நோக்கத்துடன் வருகிறாள்.. அவர்கள் எளிதில் அணுகமுடியாத மிகப் பெரிய உயரத்தில் இருப்பவர்கள்.. அந்த ஊரே அவர்களைப் பார்த்து நடுங்குகிறது.. கதாநாயகி போலிஸ் ஆபிசராக அந்த ஊரில் நுழையாமல் ஒரு பள்ளியின் ஆசிரியையாக அந்த ஊரில் நுழைகிறாள்.. அந்தப் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்தபடி அந்த இருவரைப் பற்றித் துப்பு துலக்குகிறாள்.. நினைத்ததை முடித்ததும்.. போலிஸ் ஆபிசராகி சென்னைக்குத் திரும்பி வடுகிறாள்..

இந்தக் கதையை நீங்கள் திரைப்படமாக பார்த்ததே இல்லையா..? அதைப் பார்த்ததும் இது 'நீங்காத நினைவுகள்..' கதையில் வரும் நிகழ்வைப் போல இருக்கிறதே என்று நினைக்கவில்லையா..? நாயகி.. நாயகனாக மாறிவிட்டால் போதுமா..? முகத்தின் மீது சிறு மருவை ஒட்ட வைத்து விட்டால் ஆளை அடையாளம் தெரியாதா..? என்னவோ போங்க.. என்னிடம் தான் நீங்க சிங்கம் போல கர்ஜனை செய்கிறிங்க.. மற்றவர்களிடம் பனிமலையாய் குளிர்ந்து போயிடறீங்க.. நான் கொடுத்து வைத்தவள்..

நீங்க என் கதைகளை விமரிசனம் செய்யுங்க.. கேள்வி கேளுங்க.. பதில் சொல்ல நானிருக்கேன்.. என்னைக் கேள்வி கேட்க பலர் இருக்கிறாங்க.. எனக்காக கேள்வி கேட்க யாரிருக்காங்க..?



நட்புடன்

முத்துலட்சுமி ராகவன்

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
website : www.muthulakshmiraghavan.com

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

## 'எங்கிருந்தோ ஆசைகள்'

பாகம் – 5

144

*உனைப்பற்றி உயர்வாக*
*நான்கேட்க ஆசைகொண்டேன்..*

**அ**ம்புஜத்தின் திருவாய் அப்படிப்பட்ட கேள்விகளையும் கேட்கக்கூடும் என்று அந்த நாள்வரை காவ்யா நினைத்தும் பார்த்ததில்லை...

அவளா இவற்றையெல்லாம் கேட்பது...? அவளுடைய சொந்தப் பேரனைவிட.. அக்காவின் பேரனின் மீது அளவுகடந்த மதிப்பு.. மரியாதை.. அன்பு.. பாசம்... வாத்சல்யத்தை வைத்திருந்த அம்புஜமா இந்தக் கேள்விகளை அர்ஜீனைப் பார்த்துக் கேட்பது...?

அவள்தான் கேட்டுக் கொண்டிருந்தாள்... மகனின் வார்த்தைகளுக்காக.. அர்ஜீனை வார்த்தைகளால் சுட்டுக் கொண்டிருந்தாள்...

"பதில் சொல்லுலே.. உன் பொறுப்பில இருந்த பணம் எப்படிக் காணம போச்சு...? மத்தவங்களால இது

முடியாது.. உன்னால் மட்டும்தான் முடியும்ன்னு நம்பி உன் சித்தப்பா உன்கிட்ட இந்தப் பொறுப்பை ஒப்படைச்சான்லே.. நீயும் இப்படிப் பணத்தைப் தொலைச்சிட்டு வந்து நின்னா இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்றதுலே..?"

"நான் பத்திரமாத்தான் வைத்திருந்தேன் பாட்டி..."

"அப்புறம் எப்படிலே பணம் காணாம போகும்...?"

"அதுதான் தெரியலையே பாட்டி.."

"பெத்த மகனைக் கூட நம்பாம உன்னை நம்பி பணத்தைக் கொடுத்து விட்டானே.. அந்த நம்பிக்கையை நீ காப்பாத்த வேணாமாலே..."

"பாட்டி.. இது எப்படி நடந்துச்சுன்னு எனக்கே தெரியலைன்னு சொல்றேனே.. அதுக்கப்புறமும் சித்தப்பா சொல்கிறதைக் கேட்டுக்கிட்டு என்னை நீங்க கேள்வி கேட்கலாமா...?"

"அவன் சொல்கிறதைப் போல ஏன் நீ வைத்துக்கிட்ட அர்ஜீன்...? உன்னை நான் கேள்வி கேட்கிறது மட்டும்தான் உன் அறிவுக்குத் தெரியுது... அவன் என்னைக் கேள்வி கேட்கிறதை நீ தெரிஞ்சுக்கலையா...?"

அர்ஜீன் பதில் சொல்லாமல் வேகமாக வெளியே போய் விட்டான்.. கார்த்திக் தாமதித்து நின்று.. அந்த நிலைமையிலும் காவ்யாவின் கண்களை சந்திக்க முயன்றான்...

‘இவனுக்கு சைட் அடிக்க நேரம் காலம் கிடையாதா...’ காவ்யா எரிச்சலுடன் அவனை முறைத்தாள்...

அவன் அவசரமாக செல்போனை காதுக்குக் கொடுத்தபடி வெளியே ஓடி விட்டான்...

தலையைப் பிடித்தபடி அமர்ந்திருந்த சரவணனின் தோளை சுமதி தொட்டாள்.. அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்த சரவணன் வாய்க்குள் முணுமுணுத்து தன் ஆதங்கத்தைக் கொட்டியபடி எழுந்து நின்றார்.. தாழ்ந்த குரலில் சுமதி அவருக்கு ஆறுதல் மொழிகளைக் கூறினாள்.. அவர்கள் இருவரும் பேசியபடி அறையை விட்டு வெளியேறி விட்டார்கள்...

அறைக்குள் அம்புஜத்துடன் காவ்யா தனித்து நின்றாள்..

காவ்யாவின் முகத்தில் இருள் பரவியிருந்தது.. அம்புஜம் அர்ஜீனைப் பேசிய வார்த்தைகளை அவளால் மறக்க இயலவில்லை.. அம்புஜத்தின் முகம் பார்க்காமல் வேறு திசையில் பார்த்தபடி...

“நான் கிளம்பனும் பாட்டி.. அண்ணன் தேடும்..” என்ற அவளின் வழக்கமான வசனத்தைச் சொன்னாள்...

“எல்லாரும்தான் இந்தக் கிழவியை தனியா விட்டுட்டுப் போறாங்கன்னா.. நீயும் அப்படியே கிளம்பனுமா..?” அம்புஜம் மெலிதான துயரத்துடன் கேட்டாள்..

“அப்படியில்லை பாட்டி.. எப்படியும் நான் போய்த்தானே ஆகனும்..?” என்றாள் காவ்யா...

“போகலாம்.. இப்படி உட்காரு.. உன்கிட்டயாவது நான் மனசு விட்டுப் பேசலாம்.. மத்தவங்கிட்ட அது முடியாது..” குரல் கம்ம கட்டிலின் பக்கத்தில் கிடந்த நாற்காலியைக் காட்டினாள் அம்புஜம்..

காவ்யாவுக்கு உட்கார மனமில்லை.. இருந்தும்.. அம்புஜத்தின் பேச்சைத் தட்ட முடியாதவளாய் அமர்ந்தாள்..

“என்னடா.. இந்தக் கிழவி இப்படிப் பேசிட்டாளேன்னு நினைக்கறியா...?” மனம் வலிக்கக் கேட்டாள் அம்புஜம்..

“இதில.. நான் நினைக்க என்ன இருக்கு பாட்டி..? இது உங்க குடும்ப விசயம்.. என்னதான் இருந்தாலும் நான் மூணாம் மனுஷிதானே...”

சரவணனை சுமதி ஆறுதல் படுத்தியதைப் போல.. அர்ஜீனை ஆறுதல் படுத்தும் உரிமையில்லாத துக்கத்தோடு பதில் சொன்னாள் காவ்யா..

“அடிதான் வாங்கப் போற...” அம்புஜம் அதட்டினாள்..

“உன்னை மூணாம் மனுஷியாய் யார் நினைச்சது..? அப்படி நினைச்சிருந்தா உன் முன்னால இத்தனை பேச்சும் நடந்திருக்காது.. ஏற்கனவே துயரத்தில இருக்கேன்.. நீயும் துயரம் பண்ணனுமா...?”

துக்கம் தொண்டையை அடைக்க அம்புஜம் கேட்டபோது.. காவ்யாவுக்கு மனம் தாளவில்லை...

“வருத்தப்படாதீங்க பாட்டி..” என்று அவளால் சொல்லாமலிருக்க முடியவில்லை..

அம்புஜத்திற்கு ஆறுதலாகப் பேசிய போதும்.. வருத்தப்பட்டுப் போனது அர்ஜீன்தானே என்ற எண்ணம்தான் காவ்யாவின் மனதில் எழுந்தது.. அவனை உயரத்தில் வைத்துப் பார்த்தவர்கள் அவனை நிற்க வைத்துக் கேள்வி கேட்டதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை...

அந்தக் கோபத்தை அம்புஜத்தின் மீது அவள் காட்ட வேண்டிய அவசியமின்றி அவள் பெருமூச்சு விட்டாள்...

“அர்ஜீன் மனக்கஷ்டத்தோட போறான்...” இவள் மனக் கஷ்டத்தோடு கூறினாள்...

“ம்ம்ம்...” காவ்யா முணுமுணுத்தாள்...

“நான் என்ன செய்யட்டும்...? அவனைக் கேள்வி கேட்கலைன்னா நான் ஒரு பக்கம் மட்டும் சார்ந்து பேசுறேன்னு ஆகிடாதா...? எனக்குத் தெரியும்... அர்ஜீன் மேல குற்றமிருக்காதுன்னு.. அதைச் சொன்னா சரவணன் என்ன சொல்லுவான்...? என் அக்கா பேரன்ங்கிற பாசத்தில.. அர்ஜீன் செஞ்ச தப்பை நான் மறைக்கப் பார்க்கிறேன்னு பேச மாட்டானா...?”

காவ்யாவிற்கு என்ன பதிலைச் சொல்வதென்று தெரியவில்லை.. அவளால் என்னதான் சொல்ல முடியும்...?

எனவே அவள் மௌனத்தை துணைக்கழைத்தாள்..

அம்புஜம் அவள் பதிலை எதிர்பார்க்கவில்லை.. அவள் தன் போக்கில் அவள் மனதிலிருந்த அழுத்தங்களைக் கொட்டிக் கொண்டிருந்தாள்...

"அவ்வளவு உயரத்தில இருக்கிறவன்.. இது வரைக்கும் இது போல யாரும் அவனைப் பேசினதில்லை.. பேசறதைப் போல அவனும் வைத்துக்கிட்டதில்லை.. அவன் உச்சியிலே.. ஜொலிக்கிற சூரியன்.. அவனைக் கேள்வி கேட்டது நானாத்தான் இருக்கும்.."

"உங்களுக்கு முன்னாடியே சார் கேள்வி கேட்டுட்டாரே பாட்டி.." மெல்லிய குரலில் சொன்னாள் காவ்யா...

"அதுதான்.. அதனாலதான்.. நான் அவனைக் கேள்வி கேட்டு சரவணனின் வாயை அடைச்சேன் காவ்யா... அர்ஜீனை நான் கேள்வி கேட்கலாம்.. என் மகன் கேட்கக் கூடாது..."

"பாட்டி..."

"ஆமாம் காவ்யா.. நான் பேசறதெல்லாம் பேச்சா...? என் பேரன் என் பேச்சைக் கேட்டுக்கலாம்.. என் மகன் பேச்சைக் கேட்கலாமா..? அதான்.. சரவணன் கேட்க

நினைச்சதை நான் கேட்டு.. சரவணனை பேச விடாம பண்ணினேன்...”

அம்புஜம் கூறிய காரணத்தில் அயர்ந்து போனாள் காவ்யா.. நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் என்பது இதுதானா...?

“அர்ஜீனுக்கு இந்தப் பணமெல்லாம் பெரிய விசயமேயில்லை காவ்யா.. அரை நொடியில் சமாளிச்சுருவான்.. இப்பக் கதையே வேற.. கலிவரதன் கையில பெட்டியைக் கொடுத்த அந்த நொடியில பெட்டியில பணமில்ல... இதுதான் விசயம்.. இதைத்தான் சரவணனால தாங்கிக்க முடியல.. அர்ஜீன் கொஞ்ச நேரத்திலே அந்தப் பணத்தை சரவணன் கணக்குக்கு கொண்டு வந்திருவான்.. ஆனா அவன் ஒப்புக்கிட்ட காரியம்...? அது நடக்காதே.. அதுதானே சரவணனை கோபப்பட வைக்குது...?”

“என்னதான் நடந்திருக்கும் பாட்டி...?”

“அதான் எனக்கும் தெரியலைம்மா...”

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது கண்ணதாசனிடமிருந்து காவ்யாவுக்கு போன் வந்து விட்டது.. அதற்கு மேலும் தாமதிக்க முடியாது என்று காவ்யா எழுந்து விட்டாள்.. வீடு போய் சேர்ந்த பின்னாலும் அர்ஜீனைப் பற்றிய நினைவே அவள் மனதை ஆக்ரமித்து உழட்டிக் கொண்டிருந்தது..

கண்ணதாசன் அவள் முகத்தைக் கவனித்து விட்டு

“என்னம்மா...?” என்றான்...

ஒன்றுமில்லையென்று சொல்ல காவ்யாவினால்.. முடியவில்லை... அதுவரை கண்ணதாசன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் ‘ஒன்றுமில்லை...’ என்ற அந்தப் பதிலின் பின்னால் ஒளிந்து கொள்வதைப் போல அவளுக்குத் தோன்றியது..

அதனால் பொதுவாக அவள் சொல்ல ஆரம்பித்தாள்..

“சரவணன் சார் ஒரு வேலையை முடிக்கிற பொறுப்பையும் பணத்தையும் அவரோட சொந்தக்காரர் ஒருத்தர்கிட்டக் கொடுத்திருந்தாராம்ண்ணே...”

“ஓஹோ.. அதுக்கும் உன் முகம் வாடியிருக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்..?”

கண்ணதாசன் சட்டென்று கேட்டுவிட.. பதில் சொல்ல முடியாமல் திகைத்தாள் காவ்யா..

அந்தச் சொந்தக்காரன்.. அவளது காதலுக்குச் சொந்தக்காரன்.. அவளது மனதுக்கு சொந்தக்காரன்.. அவளது உணர்வுகளுக்கு சொந்தக்காரன் என்பதை கண்ணதாசன் எப்படி அறிவான்...?

அதனால் அவன் தங்கையின் திகைப்பை யோசனையுடன் பார்த்தான்..

"அதுவாண்ணே.. அந்தச் சொந்தக்காரர் பாட்டியோட அக்கா பேரனாம்.."

"ஊம்..."

"அவர் பணத்தை தொலைச்சுட்டார்..."

"என்னது...?"

"ஆமாண்ணே.. அதனால அவங்க வீட்டில பிரச்னை.. என்னைக்கும் அக்கா பேரனை விட்டுக் கொடுக்காத பாட்டி இன்னைக்கு அவரை நாலு கேள்வி கேட்டுட்டாங்க..."

"அடப் பாவமே..."

"யாரைச் சொல்றேண்ணே...? பாட்டி பாவமா..? இல்ல பேரன் பாவமா...?"

ஏனோ அதற்கான அவளது தமையனின் பதில் என்னவாக இருக்கக்கூடும் என்று அறிந்து கொள்ள வேண்டுமென்று அவள் மனம் படபடத்தது...

"ரெண்டும் பேரும்தான்ம்மா..." கண்ணதாசன் இலகுவாக பதில் கூறினான்...

எந்தவொரு பிரச்னையிலும் பார்வையாளர்களாக இருப்பவர்கள் இலகுவாகவே இருக்கிறார்கள் என்று காவ்யா நினைத்துக் கொண்டாள்.. மனச் சுமையெல்லாம்... அந்தப் பிரச்னையின் உள்ளே இருப்பவர்களுக்குத்தான்.. அவர்களின் துடிப்பை பார்வையாளர்கள் அறிய மாட்டார்கள்..

கண்ணதாசனுக்கு அந்தச் சொந்தக்காரன்தான் அர்ஜீன் என்பது தெரியாது.. அதனால் அவனுக்கு பார்வையாளனாக இருப்பது சாத்தியமானது.. அவனுக்கு மட்டும் அது அர்ஜீன் என்று தெரிந்திருந்தால் நிச்சயமாக அவன் வெறும் பார்வையாளனாக மட்டும் இருந்திருக்க மாட்டான்...

"ரெண்டு பேரும்ன்னா...? எப்படிண்ணே...?"

"அது அப்படித்தான்ம்மா... பணத்தைத் தொலைத்தவன் தெரிஞ்சே அதைச் செய்திருக்க மாட்டானில்லையா.. அதனால் அவன் பாவம்..."

"இதில பாட்டி எங்கே வந்தாங்க....?"

"என்னைக்கும் திட்டாத பாட்டி.. இன்னைக்கு அவனைத் திட்ட வேண்டிய நிலைமை வந்திருச்சே.. அதனால... அவங்களும் பாவம்தான்.."

அப்படியா...? அம்புஜம் பாவமா..?

தீவிரமான சிந்தனையுடன் சாப்பிட மறந்து தோசையை துண்டு.. துண்டாக பிய்த்துப் போட்டுக் கொண்டிருந்தாள் காவ்யா...

கண்ணதாசன் புருவங்கள் சுருங்க தங்கையை பார்த்தான்...

"என்னம்மா...? இன்னுமா சாப்பிடாம இருக்கே...?"

தமையனின் அதட்டலில் திடுக்கிட்டு தந்நினைவுக்கு வந்த காவ்யா தட்டைப் பார்த்தாள்.. தோசைத் துண்டுகளாக நிரம்பியிருந்தன... நாக்கைக் கடித்துக் கொண்டு... அவசரமாக சாப்பிட்டேன் பேர்வழியென்று அவற்றை உள்ளே தள்ளினாள்...

“அடுத்தவங்க வீட்டுப் பிரச்னை நமக்கெதுக்-கும்மா...? பாட்டியைப் பார்க்கப் போனா... அதோட திரும்பி வந்திரனும்.. அவங்க வீட்டுப் பிரச்னைகளை மூளையில் ஏத்திக்கிட்டு வரக் கூடாது.. இப்பப் பாரு.. அவங்ககூட நிம்மதியா சாப்பிட்டுட்டு படுத்திருப்பாங்க.. நீ என்னடான்னா தட்டில கோலம் போட்டுக்கிட்டு இருக்க...”

“ஸாரிண்ணே....”

“புத்தி சொன்னா உடனே ஸாரி சொல்லனுமா..? போம்மா.. போய் படுத்துத் தூங்கு.. மனசைப் போட்டு உழப்பிக்காதே...”

கண்ணதாசன் கனிவுடன் சொன்னான்.. காவ்யா படுக்கப் போனாள்.. இரவின் நிசப்தம் அந்தப் பகுதியைச் சூழ்ந்தது.. எங்கோ நாய் குரைக்கும் ஓசை கேட்டது.. அவள் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டாள்... அர்ஜீனின் சோர்ந்த தோற்றமே அவள் மனக் கண்ணில் வந்து நின்றது..

‘இப்ப அவன் என்ன செய்துக்கிட்டு இருப்பான்..? தூங்கியிருப்பானா...?’

அதை அறிந்து கொள்ள வேண்டும் போல அவள் மனம் தவித்தது.. என்று அவன் வாயால் அந்தக் கேள்விகளைக் கேட்டு விட்ட துக்கத்தில் அவனைப் பிரிந்து அவள் வந்தாளோ.. அன்றிலிருந்து அவள் அவனுக்குப் போன் செய்ததில்லை...

‘இப்பப் போய் போன் பண்றதா...?’

அவள் கண்களை இறுக மூடித் தூங்க முயன்றாள்.. தூக்கம் வருவேனா என்று அடம் பிடித்தது.. அதை வெற்றிலை பாக்கு வைத்து ‘வா.. வா..’ என்று வணங்கிக் கேட்டு அழைத்து விட்டாள்.. அது முடியாதென்று மறுத்துவிட்டது.. ‘வருகிறாயா.. இல்லையா...’ என்று மல்லுக்கட்டிப் பார்த்து விட்டாள்.. அது ‘போ... சாட்டை’ யென்று அசட்டை செய்துவிட்டது..

## 145

*வெந்நிலவின் தண்ணொளியில்-நீ*
*எனையுணர ஆசை கொண்டேன்...*

‘**எ**ன்னடா இது.. இந்த மதுரைக்காரிக்கு வந்த சோதனை...’

காவ்யா களைத்துப் போய் விட்டாள்.. வராத தூக்கத்தை ‘வாவா’ என்று அழைத்தால் அது எங்கேயிருந்து வரும்..?

தூரத்தில் இரவு உலா வரும் கூர்க்காவின் ‘விசில்’ ஒலி காதில் விழுந்தது.. அவனுக்கு நாயைக் கண்டால் பயமாக இருக்காதா என்று அசந்தர்ப்பமாக யோசித்தாள் காவ்யா...

‘ம்ப்ச்.. கூர்க்கா நாய்க்கு பயந்தால் என்ன..? இல்ல.. நாய்தான் கூர்க்காவுக்கு பயந்தாலென்ன...? இப்ப அதுவா பிரச்னை..?’ என்று தன்னைத் தானே கடிந்து கொண்டவள்.. தலை மாட்டில் இருளில் துழாவி செல் போனை கைப்பற்றினாள்...

‘இப்ப எதுக்கு அதை எடுக்கிற..?’ மனம் அதட்டியது..

‘மணி பார்க்க..’ நொண்டிச் சமாதனம் கூறிக் கொண்டு செல்போனை உயிர்ப்பித்து மணி பார்த்தாள்..

இரவு இரண்டு மணி என்றது...

‘இன்னுமா தூக்கம் வரலை...?’ தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்...

தூங்காமலிருப்பது அவளுக்கு புதிதல்ல..

‘என்னைக்கு அவனைப் பார்த்துத் தொலைச்சேனோ.. அன்னைக்கே தூக்கத்தை தொலைச்சிட்டேன்...’

பெருமூச்சு விட்டவள்.. தொலைந்து போன தூக்கத்தை மீட்க முயன்றாள்.. முடியவில்லை...

மலை போல நிற்பவன்.. மனம் சோர்ந்து போவதைப் பார்த்த பின்பு எப்படி அவளால் நிம்மதியாக தூங்க முடியும்..?

அவளையுமறியாமல் அவள் கை... அவனது எண்களை செல்போனில் அழுத்தி விட்டதை.. செல் போனின் ஒளிர்வில் உணர்ந்தவள் அதிர்ந்து விட்டாள்.. அவசரமாக அதை அணைக்க முயன்ற போது...

“காவ்யா.. ” என்ற அவனது குரல் கேட்டு விட்டது..

அவன் குரலில் சொல்போனை அணைக்கப் போன அவளது விரல்கள் தயங்கி நின்றன...

“இன்னும் தூங்கலையா...?” அவன் இயல்பாக கேட்டான்..

எப்படி இவனால் எதுவுமே நடக்காததைப் போல இவ்வளவு இயல்பாக பேச முடிகிறது என்று அவளுக்குள் பொங்கியது...

அவனுக்கு நிகழ்ந்ததை அவள் நேரில் பார்த்தாளே.. பார்த்தவள் தூக்கத்தை தொலைத்து விட்டு மறுகிக் கொண்டிருக்க.. அவனோ.. எதுவுமே நிகழாததைப் போல இன்னுமா தூங்கவில்லையென்று கேட்கிறான்..

“நீங்க தூங்கலையா..?” மெல்லிய குரலில் பதிலுக்கு கேட்டாள் காவ்யா...

“ஊஹீம்...”

“ஏன்...?”

அவளது அக்கறையில் அவன் லேசாக சிரித்தான்.. அந்த நிலையிலும் சிரிக்கும் அவனது தன்மையில் அவள் மனம் கரைந்தாள்...

“வேலையிருந்தது.. தட்ஸ் ஆல்.. நமக்கு ராத்திரின்னா.. வெளிநாட்டில் பகல் நேரம்.. கொஞ்சம் மெயில் பார்க்க வேண்டியிருந்தது.. அதுக்குப் பதில் அனுப்ப வேண்டியிருந்தது.. இப்பத்தான் லேப் டாப்பை மூடிட்டு படுக்கலாமான்னு நினைச்சேன்.. உன் போன் வந்திருச்சு.. நீயேன் தூங்கலை...?” அவன் மென்மையாக கேட்டான்

“தூக்கம் வரல...”

“அதுதான் ஏன்..?”

‘இவனுக்குத் தெரியாதா...?’ மனம் வெகுண்டாள் காவ்யா..

அதை அவள் வாயால் சொல்ல வேண்டுமென்று அவன் எதிர்பார்க்கிறானா..?

அவள் மௌனமாகி விட.. அவனே கேட்டான்..

“இன்னைக்கு நடந்ததை நினைச்சுக்கிட்டு இருக்கியா..?”

‘கண்டுபிடிச்சுட்டான்..’ என்ற நினைவில்.. காவ்யாவின் முகம் விகசித்தது..

அவனுக்கான திறமைகளில் என்றுமே குறையிருந்த-தில்லை என்று அவள் நினைத்துக் கொண்டாள்..

“அது ஃசால்வாகிடுச்சு காவ்யா.. டோன்ட் வொர்ரி..”

‘அதுதான் தெரியுமே..’ காவ்யா மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்...

அவளுக்கு மட்டுமல்ல.. அம்புஜத்திற்கும்... அவள் குடும்பத்திற்கும் அது தெரிந்திருந்தது.. அர்ஜீனின் கையில் கொடுத்த பணம் பேங்கில் போடப்பட்ட பணத்தைப் போல பாதுகாப்பானது... அது திருடு போனாலும் தொலைந்து போனாலும்.. ஒரு ரூபாய் கூடக் குறையாமல் அவன் அதைத் திருப்பிக் கொடுத்து விடுவான் என்று எல்லோருக்கும் தெரியுமே...

“பணத்தைப் பத்தி யாரும் ஒன்னும் சொல்லலையே..” என்றாள் காவ்யா...

அவள் மறைமுகமாக குறிப்பிடுவது எதையென்று புரிந்து கொண்ட பாவனையில் அவன் சிரித்தான்...

“நானும் அதைத்தான் சொன்னேன்...” என்றான்..

“என்னது..?!” ஆச்சரியமாக வினவினாள் காவ்யா...

“யெஸ்.. சித்தப்பா ஆசைப்பட்டபடி கலிவரதனின் கம்பெனியை வாங்கியாச்சு.. டீல் முடிஞ்சுருச்சு...”

“நிஜமாவா..?”

காவ்யாவின் மனதிலிருந்த துக்கமும்.. துயரமும்.. சொல்லாமல் கொள்ளாமல் ஓடியே போய் விட்டன.. ‘டாட்டா..’ சொல்லாமல் துயரம் ஓடியே போய்விட.. அந்தத் துயரத்தி லிருந்து.. விடுபட்டவள் உற்சாகமான மனநிலையுடன்.. கதை கேட்கும் ஆர்வத்துடன் கட்டிலில் எழுந்து அமர்ந்து.. தலையணையை மடியில் வைத்துக் கொண்டாள்..

“நிஜம்தான்...”

மறுமுனையில் அவன் கண்சிமிட்டியிருக்கக் கூடும் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.. இது போன்ற வெற்றிச் செய்திகளைச் சொல்லும்போது.. கண்சிமிட்டுவது அவனது வழக்கம்..

“எப்படி..?” அவள் குதூகலித்தாள்..

“அது அப்படித்தான்..” அவளது குதூகலத்தை உணர்ந்த அமர்த்தலான குரலில் அவன் பதில் சொன்னான்..

“நான் பயந்தே போயிட்டேன் தெரியுமா...?”

அவனிடமிருந்து விலகி நிற்கும் முடிவை அவள் எடுத்திருக்கிறாள் என்பதை மறந்தவளாக அவள் சொன்னாள்..

அதை அவனும் உணர்ந்திருக்க வேண்டும்.. ஒரு நொடி மறுமுனை மௌனித்து.. அடுத்த நொடியில் அவன்குரலை ஒலிபரப்பியது..

“ஏன் பயப்படனும்..? இதெல்லாம் எனக்கு ஜீஜீபி..”

“இப்பச் சொல்லுங்க... சாயங்காலம் கதிகலங்க வையுங்க..”

“ஏன் கதிகலங்கனும்..?”

“ஏன் சொல்ல மாட்டிங்க...? யாருக்கும் அஞ்சாத தேசிங்குராசா இன்னைக்கு எதுக்காக உங்க சித்தப்பா முன்னால தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டு நின்னீங்களாம்...? எதுக்கும் பயப்படாத விக்கிரமாதித்த மகாராச.. இன்னைக்கு எதுக்காக உங்க பாட்டிக்கு பயந்து கை கட்டி நின்னீங்களாம்.. எனக்கு மனசே தாங்கலை தெரியுமா...?”

“தெரியும்...”

அவன் ஒற்றைச் சொல்லில் சொல்லியதில் அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது...

“தெரியுமா...?”

“தெரியும்...”

அவன் அதே அமர்த்தலான குரலில் சொன்னான்.. இவனுக்கு என்னவெல்லாம் தெரியும் என்று அவள் மனது கணக்குப் போட்டது..

எல்லாம் தெரிந்தவன் இவன்.. காற்றுக்கும் வேலிகட்டும் கணக்குக்காரன்.. அவள் மனதுக்குள் நுழைகின்ற மாயக்காரன்...

அவனுக்கு எதுவும் தெரியாமலிருந்தால்தான் அவள் ஆச்சரியப்பட வேண்டும்..

"தெரிஞ்சா வைச்சுக்கோங்க..." அவள் நொடித்ததும்

"வைச்சுக்கிறதா...? கதையை மாத்தாதே.. உன் கழுத்தில் தாலியை கட்டறதாயில்ல இருக்கேன்.." என்று அவன் பதில் சொல்ல..

"அடப்பாவி.." என்று சொல்லி விட்டாள் காவ்யா...

"ஆஹா.. என்னவொரு மரியாதை.. புல்லரிக்குது போ.."

"போதும்.. போதும்.. எப்பப் பாரு.. டபுள் மீனிங்கிலயே எல்லாத்தையும் அர்த்தமெடுத்துக்கிறது..." அவள் படபடத்தாள்..

"நீதான் தெளிவாச் சொன்னயே.. அதில டபுள் மீனிங் எங்கேயிருந்து வந்துச்சு காவ்யா...?" அவன் நியாயம் கேட்டான்..

"உங்களை..!" காவ்யா பல்லைக் கடித்தாள்..

***"இன்னும் என்னை***
***என்ன செய்யப் போகிறாய்..?***
***என் அன்பே... அன்பே...***
***அன்பே.. அன்பே..."***

அவன் பாடலில் கேட்டான்.. காவ்யாவின் முகம் சிவந்து விட்டது..

“அதானே பார்த்தேன்..” என்றாள்..

“என்னைத்தான் பார்த்துக்கிட்டே இருக்கியே.. இது தெரியாம அந்தக் கார்த்திக் உன்னைப் பார்த்துக்கிட்டு அலைகிறான்..” அர்ஜீன் சிரித்தான்..

“போதும் சாரே… சந்து கிடைச்சா சிந்து பாடிருவீங்களே.. எப்ப இந்த டீலிங் முடிஞ்சது..?”

“ஃவினிங்…” அவன் வெகு சாதாரணமாகச் சொன்னான்..

“பாட்டி.. சரவணன் சார்… இங்களுக்கெல்லாம் விசயம் தெரியுமா…?”

“இன்னும் சொல்லலை…”

அவன் அதே சாதாரணமான குரலில் கூற.. அவள் வியப்பின் உச்சிக்கே போனாள்…

அந்த வியாபார ஒப்பந்தம் முறிந்து விட்டதினால்தான் அவனிடம் அந்த அளவுக்கு சரவணன் கோபப் பட்டார்.. அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் அம்புஜம் மகனைத் திட்ட விடாமல் தானே அர்ஜீனைத் திட்டி விட்டு.. துக்கப் பட்டாள்…

இது அத்தனையும்.. அந்த ஒப்பந்தம் முடிந்து விட்ட விவரம் அறிந்தவுடன் மாறிவிடுமே.. ஏன் அதை அர்ஜீன் செய்யவில்லை…?

"காரணமாத்தான்..." என்றான் அவன்...

"என்ன காரணம்..? உப்புச் சப்பில்லாத காரணம்..?" அவள் கோபப் பட்டாள்...

அவள் கோபத்தை அவன் ரசித்திருக்க வேண்டும்.. அந்தக் கோபத்தின் அடிப்படை... அவன்மீது அவள் வைத்திருக்கும் அதீதகாதலினால் உண்டானது.. என்பதை அவன் நினைத்திருக்க வேண்டும்...

"காவ்யா..." என்ற அவன் அழைப்பில் நெகிழ்ச்சியிருந்தது..

"காவ்யாவுக்கு என்னவாம்..?" அவள் மனச்சிணுங்கலுடன் கேட்டாள்...

"உனக்காகத்தாண்டி நான் இதைச் செய்தேன்..."

அர்ஜுனின் அழுத்தமான வார்த்தைகளில் மீண்டும் அவளுக்குத் துக்கிவாரிப் போட்டது...

"எனக்காகவா..? இது ஒன்னுதான் குறையாய் இருந்தது.. அதையும் செய்தாச்சா...?"

"என்ன சொல்ற...?"

"இத்தன நாளா திருட்டுப் பழியைப் போட்டிங்க.. இன்னைக்குப் புதுசா.. என்னாலதான் நீங்க பணத்தைத் தொலைச்சீங்கங்கிற பழியையும் சேர்த்துப் போடறிங்க.. ஏஞ்சாமி.. நான் உங்களுக்கு என்னத்தை கெடுதல் செஞ்சேன்..?"

"அன்னைக்கு என் முன்னாலயும்... கடையில இருந்தவங்க முன்னாலயும் நீ நின்றதைப் போல நானும் நிற்கனும்னு நினைத்தேன் காவ்யா..."

"அர்ஜீன்..." அவள் அதிர்ந்தாள்...

"யெஸ்... அதையும் உன் கண் முன்னால் செய்யனும்னு நினைத்தேன் நீ பட்ட பாட்டை நானும் படனும்.. உன்னைப் பார்த்து நான் கேட்ட கேள்விகளை என்னைப் பார்த்து மத்தவங்க கேட்கனும்.. அதை நீ பார்க்கனும்னு நினைத்தேன்..."

"அர்ஜீன்..."

"இப்பப் புரியுதா காவ்யா.. பணப் பொறுப்பில் இருக்கிறவங்க நம்பிக்கைக்கு உரியவர்களா இருந்தாலும்.. அந்தப் பணம் தொலைந்து போனா.. கேள்விகளைச் சந்தித்துத்தான் ஆகனும்ங்கிறதை..."

"இதுக்காகவா.. இந்த விபரீத விளையாட்டு...?"

"இது மட்டுமில்லைடி.. உன் மனசு அன்னைக்கு என்ன பாடுபட்டுச்சோ.. அதே பாட்டை என் மனசும் படனும்னு நினைத்தேன்.. இது எனக்கு நான் கொடுத்துக்கிற பனிஷ்மெண்ட் காவ்யா..."

"நான் அப்படி நினைக்கலை.."

"உன்னால அது முடியாதுன்னு எனக்கும் தெரியும்டி.. இன்னைக்கு பாட்டி என்னைக் கேள்வி கேட்டாங்களே.. அதை சந்தோசமாவா கேட்டாங்க...?"

இல்லையே...! அந்தக் கேள்விகளால் அர்ஜீன் பட்ட வேதனையை விட அதிகமாக அம்புஜம் வேதனைப் பட்டாளே...

"இதேதாண்டி... இதுவேதான் அன்னைக்கு எனக்கும் நடந்தது.. நான் உன்னைக் கேள்வி கேட்டுட்டேன்னு நீ கோபப் பட்டயே.. நான் அதைக் கேட்கலைன்னா.. நீ பணத்தை மறைத்து வைத்திருக்க... நான் அதை மறைத்து உன்னைக் காப்பாற்ற நினைக்கிறேன்னு அந்த நேகா சொல்லியிருப்பா..."

நேகா அதைச் செய்யக் கூடியவள்தான்... அதை காவ்யாவை விட நன்கு உணர்ந்தவர் யார்..?

"உன்னை நான் கேள்வி கேட்டா... உனக்கு ஒன்னுமில்லைன்னு நினைச்சேன்.. நீ அதைப் பெரிதா எடுத்துக்க மாட்டேன்னுதான் நினைச்சேன்... நான் கேட்கலைன்னா அவ உன்னை கேள்வி கேட்டிருப்பா.. என்னால அதை அலோவ் பண்ண முடியாது காவ்யா..."

அம்புஜமும் இதைத்தானே சொன்னாள்...?

"உன்னைக் காப்பாற்ற நினைக்கிறேன்னு மத்தவங்க நினைக்கக் கூடாது... நீ குற்றமற்றவள்ன்னு புரூவ்

பண்ணனும்.. என் கண் முன்னால் மத்தவங்க உன்னைக் கேள்வி கேட்கக் கூடாது.. அதனால்தான் நான உன்னை அந்தக் கேள்விகளை கேட்டேன் காவ்யா.. இருந்தாலும் நான் உனக்குச் செய்தது அநியாயம்தான்... அந்தத் தவறுக்கு எனக்குத் தண்டனை வேண்டாமா..? அதான்.. அதை நானே கொடுத்துக்கிட்டேன்..”

## 146

### *உன் மனதின் வலிகள்தனை-நானும் உணர ஆசை கொண்டேன்....*

**அ**வன்.. சுற்றம், சூழல் மத்தியில் இமயம் போல் உயர்ந்து நிற்கும் அவன்.. வயதிலும், பணத்திலும் எத்தனை பெரியவர்களாக இருந்தாலும்.. அவனருகே சென்று ஓர் நொடி பேச தயங்கி நின்று அனுமதி கேட்கும் நிலையிலுள்ள அவன்.. அவளுக்காக, அவள் கண் முன்னால், தலை குனிந்து நின்றிருக்கிறான்...

ஏன்...? அது... அவள் பட்ட மன வலிக்காக... அவனுக்கு.. அவன் கொடுத்துக் கொள்ளும் தண்டனையாம்..

இதை என்னவென்று அவள் சொல்லுவாள்..? அவள் செய்த புண்ணியமென்று சொல்வாளா..? அவள் செய்த தவமென்று சொல்லுவாளா...?

சொல்ல வார்த்தைகளின்றி.. கண்ணீரை மட்டுமே சிந்தினாள் அந்தப் பேதை..

“சித்தப்பா சொன்ன வேலை ரொம்பச் சின்னது காவ்யா.. அதைப் போய் சொதப்புவேன்னா நினைக்கிற..?”

“இல்லை.. நான் மட்டுமில்ல.. பாட்டியும் அப்படி நினைக்கல...”

“கலிவரதனுக்கு என்னைப் பற்றித் தெரியாதா..? அவருக்கு என் வார்த்தைதான் முக்கியம்.. நான் கொடுத்த சூட்கேஸில் பணம் இருந்தாலும்.. இல்லாவிட்டாலும்.. அவர் அதை மைன்ட் பண்ணிக்க மாட்டார்.. அர்ஜீனின் வார்த்தை கோடி பெறும்ங்கிறதை உணர்ந்தவர் அவர்..”

காவ்யாவுக்கு அதைக் கேட்கும் போது பெருமையாகவும்.. மன நிறைவாகவும் இருந்தது.. அவளின் காதலன் நம்பிக்கைக்கும்.. நாணயத்திற்கும் பெயர் பெற்றவன்.. அவன் உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லும் கோடி பெறும் என்ற மதிப்பையுடையவன் என்று நினைக்க.. நினைக்க அவள் நெஞ்சம் இனித்தது...

“கார்த்திக் முன்னாலே பேச்சுவார்த்தை முடிந்ததும்.. நான் அவரிடம் வேற ஒரு பெட்டியை நீட்டினேன்.. அவரும்

திறந்து பார்த்தார்.. வெறும் பெட்டியைப் பார்த்தும் அவர் யோசிக்கக்கூட இல்லை.. நான் பெட்டியை மாற்றிக் கொடுத்துட்டேங்கிற நினைவில என்னை நிமிர்ந்து மட்டும்தான் பார்த்தார்.. நான் கார்த்திக்கிடம் காரில் போய் பாருன்னு சொன்னேன்.. அவன் அவசரமாப் போனதும்.. பணப் பெட்டியை கலிவரதனிடம் கொடுத்து டீலை முடிச்சுட்டேன்... பெட்டி மாறிட்டதுன்னு நான் சொன்னதுக்கு எனக்குத் தெரியாதா அர்ஜீன்னு அவர் சிரிச்சார்... உண்மையிலேயே பணம் காணாமப் போயிருந்தாலும் என்னை நம்பி அவர் கம்பெனியை எழுதிக் கொடுப்பார் காவ்யா.. அவருக்கு என்னைப் பற்றித் தெரியும்..”

“உங்க சித்தப்பாவுக்குத்தான் தெரியாமப் போயிருச்சு..” கோபத்துடன் சொன்னாள் காவ்யா...

அவளுக்கு மனம் தாளவில்லை.. மனிதர் எத்தனைப் பேச்சுக்களைப் பேசிவிட்டார்.. வார்த்தைகளைக் கொட்டி விட்டாரே.. கொட்டிய வார்த்தைகளை அள்ள முடியாது.. என்று அந்தப் பெரிய மனிதருக்குத் தெரிய வேண்டாமா..?

“விடுடி...” இலகுவாகச் சொன்னான் அர்ஜீன்...

“அவருக்கு இந்த வட்டாரத்துக்குள்ளே பெரிய மனிதனா இருக்கனும்.. அது குறையக் கூடாதுன்னு நினைக்கிறவர்.. உண்மையிலேயே இந்தக் கம்பெனியை

வாங்கறது அவரோட பிஸினெஸ்ஸிக்கு ரொம்ப முக்கியம் காவ்யா.. இந்தக் கம்பெனி அவரோட தொழில் எதிரியான ஆளவந்தான் கைக்கு போயிட்டா.. அது அவருக்கு பெரிய பாதிப்பை ஏற்ப்படுத்தும்தான்.. அதனாலதான் பதறிட்டார்..”

“என்னதான் பதறினாலும்.. அப்படித்தான் பேசறதா..?”

“ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டுன்னு கேள்விப் பட்டதில்லையா..?”

“ஹை.. பாரினிலே சுத்தறவருக்கு.. பழமொழி யெல்லாம் தெரிஞ்சிருக்கு..?” அவள் ஆச்சரியப்பட்டாள்...

“எல்லாம்.. உன்னாலேதான்..” என்றான் அவன்..

“என்னாலா...?” அவள் திகைத்தாள்..

“ம்ம்ம்.. நீதான் எதைப் பேசினாலும்.. பழமொழியிலேயே போட்டுத் தாக்குனயே.. ஸோ...”

“ஸோ...?”

“நீ என்னதான் சொல்லவர்றேன்னு புரிஞ்சுக் கனும்னா.. எனக்கும் கொஞ்சம் பழமொழிகளைப் பற்றித்தெரிந்திருக்கனும்னு தோணிச்சா... அதனால.. பழமொழிகளைப் பத்தின புத்தகம் ஒன்றைவாங்கிப் படித்து வைத்திருக்கேன் தெரியுமா..”

“என்னது..?!”

காவ்யாவுக்கு ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியத்தை அளித்துக் கொண்டிருந்தான் அர்ஜீன்.. அவளுடன் பேச வேண்டும்.. அவள் பேசும் பழமொழிகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவன் பழமொழிப் புத்தகத்தை வாங்கிப் படிக்கிறானா..?

“ஆமாங்க.. இது பெரிசா பிஸினெஸ்ஸை இம்ப்ரூவ் பண்ற விசயம்.. போவீங்களா...” அவள் விளையாட்டாகச் சொன்னாள்..

“போக மாட்டேன்டி...” அவன் ஆழ்ந்த குரலில் சொன்னான்..

அந்தக் குரலில் தெரிந்த உண்மையிலும்.. உறுதியிலும் சிலிர்த்துப் போனவளாக மௌனித்து விட்டாள் காவ்யா...

“உன்னை விட்டுப் போகவே மாட்டேன்.. நீதான் நான்.. நான்தான் நீ..”

“அர்ஜீன்..” காவ்யா அழுதுவிட்டாள்..

“அழுகிறாயா காவ்யா...?” அவன் கேட்டான்..

“இல்ல...” என்ற அவளின் கண்ணீர் குரல் அவள் சிந்தும் கண்ணீர் துளிகளைக் காட்டிக் கொடுத்து விட்டது..

“ஏன் அழுகனும் காவ்யா.. அதுக்குப் பதிலா என்கூட வந்து விடு...” அவன் இறைஞ்சும் குரலில் கேட்டான்...

“எங்கே...?” கண்ணீரைத் துடைத்தபடி பதிலுக்கு கேட்டாள் காவ்யா....

“அன்றைக்குச் சொன்னதைத்தான் இப்போதும் சொல்றேன்.. கோவிலில் மேரேஜ் பண்ணிக்கலாம்.. அதுக்கப்புறம் அதை ரிஜிஸ்ட்ரர் பண்ணிடலாம்.. குடும்பம் நடத்த ஆரம்பிக்கலாம்...”

“காவ்யா தனி மனுஷியில்லை அர்ஜீன்...”

“இதை எதுக்குச் சொல்ற...?”

“நீங்க வான்னு சொடக்குப் போட்டுக் கூப்பிட்டதும் உங்க பின்னால ஓடி வந்திர என்னால முடியாது.. ஒரு நாளும் நான் அதைச் செய்ய மாட்டேன்...”

“தெரியும்டி.. ‘ஐ லவ் யு’ சொல்லிட்டு.. பதிலுக்காக மாதக் கணக்கில் உன் பின்னால அலையவைத்தவளாச்சே.. எனக்கு உன் புத்தியைத் தெரியாதா.. ஏண்டி என்னை அழைக்கழிக்கிற...? நான்தான் உன்னைப் பெண் கேட்டு உன் வீட்டுக்கு வர்றேன்னு சொல்றேனில்ல.. அதுக்கும் முடியாதுன்னு நீ அடம் பிடிச்சா.. இதைத்தானே நான் சொல்லுவேன்...?”

“நீங்களா பெண் கேட்டு வந்தா.. என் வீட்டில் என்ன நினைப்பாங்க...?”

“என் குடும்பத்தோட வர்றேன்டி...”

"உங்க குடும்பத்தில் உங்க அப்பாவும் இருக்காரே.."

"அவர்தானே குடும்பத்தலைவன்..? அவரில்லாம இருப்பாரா...?"

"அவர் வருவாரா...?"

"நான் வரவைப்பேன்..."

"வேண்டாம் அர்ஜீன்..."

"பிடிவாதத்துக்கு பிறந்தவளே..! உன்னைக் காதலிச்சுட்டதுக்காக இந்தப் பாடா படுத்துவ...? ஏண்டி வேணாம்கிற...? என்பின்னாலே வந்துவிடு.. நாமா மேரேஜ் பண்ணிக்கலாம்ன்னு சொன்னா.. நான் தனிமனுஷியில்ல.. நீ சொடக்குப் போட்டுக் கூப்பிட்டா உன் பின்னால ஓடி வர நான் ஆளில்லன்னு பேசிவைக்கிற.. சரி.. உன் வீட்டுக்கு பெண் கேட்டு வர்றேன்னு சொன்னா... நீ தனியாவா வருவேன்னு கேள்வி கேட்கிற... குடும்பத்தோட வருவேன்னு சொன்னா.. அந்தக் குடும்பத்தில.. உன் அப்பாவும் இருக்காரேன்னு எரிச்சலைக் கிளப்பற.. ஏண்டி இந்தப் பாடு படுத்தற..?"

"அர்ஜீன்..."

"முடியலைடி.. என்னால எதையும் சாதிக்க முடியுது.. காதலிக்கிறவளை மேரேஜ் பண்ணிக்க மட்டும் முடியலன்னா கொலைவெறி கிளம்புதுடி..."

“என் மனசைப் புரிஞ்சுக்கங்க...”

“மனதா...? உனக்கா...? அப்படியொன்னு உன்னிடம் இருக்கா...”

“இருக்கப் போய்த்தான்.. விடிய விடியத் தூங்காம உங்க கூட பேசிக்கிட்டு இருக்கேன்...”

அவள் வார்த்தைகளில் கொஞ்சமாக மலையிறங்கினான் அவளது ஆருயிர் காதலன்...

“பேசத் தெரிந்தவளுக்கு... காதலிக்கிறவன் கூட குடும்பம் நடத்தவும் தெரியனும்...”

“ச்ச்சீ...”

“ஏய்ய்.. நீ உருப்படியாவே யோசிக்க மாட்டியாடி..? மேரேஜ் பண்ணிக்கிட்டுத்தான் குடும்பம் நடத்தச் சொன்னேன்..”

“சொல்றதை ஒழுங்காச் சொல்லனும்...”

“உன்கிட்ட சொல்லிட்டாலும்..! ம்ஹீம்.. நீ ‘ஊம்’ கொட்டிக் கேட்டுட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்ப...”

“இப்ப நான் ‘ஊம்’ கொட்டாம... வேற யார் ‘ஊம்’ கொட்டறதாம்... அந்த நேகா வந்து ‘ஊம்’ கொட்டாறாளா..?”

“நீயேண்டி அவளை மறக்கவே மாட்டேங்கிற...?”

“நீங்க மறந்துட்டிங்களா...?”

“அடச்சீ.. அடங்கு.. அவளைப் போய் யார் நினைத்தது...? நினைத்தாத்தானே மறக்கிறதுக்கு...?”

“நம்பிட்டேன்...”

“இதை நம்பாத வாய்ஸில் சொல்ற பாரு.. இங்கதாண்டி நீ நிற்கிற...”

“நிற்கலை.. உட்கார்ந்துக்கிட்டு இருக்கேன்...”

“எங்கே...?”

“வேற எங்கே...? இந்த அர்த்த ஜாம நேரத்திலே வாசல் படியிலயா உட்கார்ந்திருக்க முடியும்...? கட்டில்லதான் உக்காந்திருக்கேன்...” இயல்பாகச் சொன்ன காவ்யா...

“நான் வரவா...?” என்ற அவனின் தாபம் நிறைந்த கிசுகிசுப்பைக் கேட்டதும்.. மின்சாரம் பாய்ந்தவளாக உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

“என்னடி.. பேச்சைக் காணோம்... நான் வரவா..?”

“எங்கே...?” மனம் படபடக்க காவ்யா கேட்டாள்..

“அங்கேதான்.. உன் மடியில் படுத்துக்கிறேன்.. என் காதோடு நீ பாடு...”

அர்ஜீன் சொல்லச் சொல்ல.. அவளாக அவள் இல்லை...

“அன்னைக்கொரு நாள் நீ பாடினயே.. ஒரு பாட்டு..”

“என்ன பாட்டு..?”

***“காதோடுதான்.. நான் பாடுவேன்..***
***மனதோடுதான் நான் பேசுவேன்..***
***விதியோடுதான்.. விளையாடுவேன்..***
***உன் மடிமீதுதான் கண்மூடுவேன்..”***

அவளுக்குப் பதில் அவன் பாடிக்காட்ட.. அவள் விம்மினாள்..

“இப்படிப் பாடக்கூடாது...”

“அப்ப நீ பாடு..”

“முடியாது..”

“முடியனும்..”

“நான் தூங்கனும்..”

“பாடிட்டுத் தூங்கு..”

“என்ன பாட..?”

“ஏதோ ஒரு பாட்டு..”

அவன் பேசப்பேச.. காவ்யா உணர்வு மிகுதியில் பாடத் தொடங்கினாள்.. இரவின் அமைதியில் மிக மெலிதான குரலில் அவள் பாடியபோது.. மறுமுனையில் அதை ரசித்து கண்களை மூடிக் கொண்டான் அர்ஜீன்..

***“பிறையில் வளர்வதும்..***
***பிறகு தேய்வதும்..***
***ஒரே நிலவு..!”***

காவ்யாவின் கண்கள் ஜன்னல் வழி தெரிந்த ஆகாயத்தில் படிந்தன.. அங்கே சிரித்துக் கொண்டிருந்த நிலவு.. அவள் பாடலைக் கேட்டதும் நகராமல் அங்கேயே நின்று.. அவள் பாடலை செவி மடுத்ததைப் போல அவளுக்குத் தோன்றியது..

*"உறவில் கலப்பதும்..*
*பிரிவில் தவிப்பதும்..*
*ஒரே மனது...!"*

பிரிவுத்துயர் வார்த்தைகளில் ததும்ப.. கண்ணீர் குரலோடு பாடினாள் காவ்யா.. அவளின் மனத்துயரம் அந்தப் பாடல் வரிகளில் இறங்கிக் கொண்டிருந்தது..

*"தனிமை நிலையிலே..*
*உனது மடியில்..*
*இவள்தான் சரணம்...*
*சலனம்.. சலனம்..."*

சலனப்பட்ட அவள் மனது.. அவன் மடியில் சரணமாகி விடத் துடித்த துடிப்பை அவளது நடுங்கிய குரல் அவனுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது..

*"நானே நானா..?*
*யாரோதானா..?*
*மெல்ல.. மெல்ல.. மாறினேனா..?*

*தன்னைத்தானே.. மறந்தேனே..*
*என்னை நானே.. கேட்கிறேன்..”*

அனலில் உருகும் மெழுகாய் உருகித்தவித்த அவளின் பாடல் வரிகளில் அவன் குழைந்து போனான்..

“காவ்யா..” உணர்ச்சிப் பெருக்கில் அவன் அழைத்த போது..

“வேண்டாம்..” என்று அவள் விம்மினாள்...

“என்னை மறந்துருங்க.. விட்டுட்டுப் போயிருங்க.. உங்களை மனசில் நினைச்சதுக்கே உங்க அப்பா அந்தப் பாடு படுத்திட்டாரு.. இதுக்குமேல பெண்கேட்டு அவரை வரச்சொன்னா என்ன பாடுபடுத்துவாரோ..?”

# 147

*சொல்லாலே நீயடித்தும் - உனைச்*
*சுற்றிவர ஆசைகொண்டேன்...*

**க**திரவனின் கதிர்கள் முகத்தின் மேல் படிந்ததில்.. ‘சுள்’ளென்ற புத்துணர்வு தோன்ற.. கண்விழித்தாள் காவ்யா... அறைக்கதவு தட்டப் பட்டுக் கொண்டிருந்தது..

எழுந்து கொள்ளப் போனவளின் கண்களில் கட்டிலில் கிடந்த செல்போன் தட்டுப்பட்டது.. முதல்நாள் இரவில் அர்ஜீனிடம் அவள் பேசிய பேச்சுக்களும் நினைவில் வந்தன...

“உங்க அப்பாவுக்கு என்னை மருமகளாக்கிக்க இஷ்டமில்ல..”

“எனக்கு இஷ்டமிருக்கே காவ்யா..”

“அதை அவர் நினைச்சுப் பார்த்தாரா..? நீங்க என்மேல இஷ்டப்பட்டுட்டா.. அவர் உங்களையில்ல கேள்வி கேட்டிருக்கனும்..? அதைவிட்டுட்டு என்னைக் கொத்துகறி போட ஊர்விட்டுஊர் வந்து இறங்கினாரே.. அதை என்னால் மறக்க முடியுமா..?”

“காவ்யா.. நான் உன்மேல ஆசை வைச்சிருக்கேண்டி..”

“நான் மட்டும் ஆசை வைக்கலியா..? அப்படி ஆசை வைத்ததுக்குத்தான் உங்க அப்பா.. வண்டி வண்டியா தண்டனை கொடுத்துட்டுப் போயிட்டாரே..”

“என்னை நினைச்சுப் பாருடி..”

“நினைச்சேன்.. நினைக்கிறேன்.. நினைப்பேன்.. இந்தக் கொடுமைக்குத்தானே உங்க அப்பா என்னை கொடுமை பண்ணினாரு..? அவரு வந்து

இறங்கினதுமில்லாம.. அந்த பஜாரியையும் வர வைச்சாரு...? அவ வர்றதுக்கு முன்னாலேயே உங்க அப்பா கடைக்குள்ள வந்த முத நாளிலயே.. என்னை உங்க ஆபிஸ் ரூமை விட்டு வெளியே அனுப்பிச்சாரு.. உள்ளே கிடந்த என் மேஜை நாற்காலியை வெளியே தூக்கிப் போடச் சொன்னாரு.. அவ வந்த முதநாளிலயே.. அவளை உங்க ஆபிஸ் ரூமில.. உங்க சீட்டில உக்கார வைச்சாரு.. இது அத்தனைக்கும் மேலா.. அவளை உங்க வருங்காலப் பொண்டாட்டின்னு கடையில இருக்கிறவங்க முன்னால யெல்லாம் சொல்லிட்டு.. அவளுக்கு என்னை ஆரத்தி எடுக்கச் சொன்னாரே.. அந்தக் கொடுமையை என்னால மறக்க முடியுமா..?"

"காவ்யா.. ப்ளீஸ்.. இதெல்லாம் நடக்கும்ன்னு எனக்குத் தெரியாதுடி.."

"தெரிஞ்சிருக்கனும்.. நீங்க ஆசைப்பட்டா.. அந்த ஆசையை உங்க குடும்பம் அங்கீகாரம் பண்ணுமான்னு தெரிஞ்ச பின்னாலே என்மேல நீங்க ஆசைப்பட்டிருக்கனும்.. என் மனசில உங்க மீதான ஆசையை அதுக்கப்புறமா திணிச்சிருக்கனும்..."

"ஏய்ய்.. குடும்பத்துக்கிட்ட கேட்டுட்டுத்தான்... என் மனதுக்குப் பிடித்தவ மேல நான் ஆசை வைக்கனுமா..? அவ மனசில ஆசையைத் திணிக்கனுமா..? இவ்வளவு

பேசறயே.. நீ உன் குடும்பத்துக்கிட்ட கேட்டுட்டா என்மேல ஆசை வைச்ச..?”

“தெளிவாப் பேசறதா நினைக்க வேணாம் முதலாளி..”

“முதலாளியா..?”

“பின்னே..? நான் வேலை பார்த்த கடைக்கு நீங்க தானே முதலாளி..? இல்லையா..? அந்த நேகாதான் முதலாளியா..? அவகிட்டேயா நான் வேலை பார்த்தேன்..? அதனாலதான் அவ அவ்வளவு தைரியமா என்மேல திருட்டுப் பட்டம் கட்டினாளா..?”

“நல்லாத்தானேடி போய்க்கிட்டு இருந்துச்சு..? புதுசா இதையெல்லாம் எதுக்காக இழுக்கற..?”

“இழுக்காம.. ஆசைவார்த்தையா பேசிக்கிட்டு இருந்தா... என்ஆசை மச்சானுக்கு நல்லாத்தான் இருந்திருக்கும்.. என்ன செய்றது..? எனக்கு அது முடியலையே.. முதலாளிசார்.. என் குடும்பத்தைப் பத்திக் கேட்டாரில்ல.. நிஜம்தான் சாரே.. என் குடும்பத்தை கேட்காமத்தான் உங்க மேலே ஆசைவைச்சேன்.. என் குடும்பம்.. வெட்டரிவாளையும்.. வேலுக்கம்பையும் தூக்கற பரம்பரைதான்.. ஆனா அவங்க முகத்துக்கு நேரா நின்னு சண்டை போடறவங்க.. உங்க அப்பா போல முதுகுக்கு பின்னால குத்த மாட்டாங்க.. அந்த வேலையெல்லாம் சுட்டுப் போட்டாலும் என்குடும்பத்துக்கு வராது...”

அந்த வார்த்தைகளில் அர்ஜீன் கோபப்பட்டு விட்டான்.. என்னதான் இறங்கி வந்து மன்னிப்புக் கேட்டாலும்.. அவனுக்கு அவனே... அவள் கண் முன்னால் தண்டனை கொடுத்துக் கொண்டாலும் அவள் மனம் இரங்க மாட்டாள்.. அவன் தந்தை செய்ததையே சொல்லிச் சொல்லிக் காட்டிக் கொண்டிருப்பாள் என்றால் அவனும்தான் என்ன செய்வான்..?

ஆயிரம்தான் குற்றம் செய்திருந்தாலும் பார்த்தசாரதி அவனைப் பெற்ற தந்தை... அவரை அவன் காதலி சொல்லிக் காட்டிக் கொண்டேயிருப்பதா..?

“ஆமாண்டி.. நாங்க அப்படித்தான்..” அவன் ரோசத்துடன் சொல்லி விட்டான்...

“நாங்கன்னா.. என்ன அர்த்தம்..?”

அவன் அவளைத் தனிமைப் படுத்திவிட்டு.. அவன் அப்பாவோடு கூட்டுச் சேர்ந்து கொண்டதில் அவளுக்குள் கோபம் கொந்தளித்து எழுந்தது...

“நாங்கன்னா.. நாங்கதாண்டி.. எங்களுக்கு முகத்துக்கு முன்னாலே சண்டை போடும் வீரம் கிடையாதுதான்.. நாங்க முதுகுக்குப் பின்னாலே குத்தறவங்கதான்.. போ.. போயி வீராதி வீரன் எவன் மேலயாவது ஆசை வை.. அவனை மேரேஜ் பண்ணிக்கிட்டு அவன்கூட குடும்பம் நடத்து...”

அவன் சட்டென்று போனைத் துண்டித்துவிட.. காவ்யா தூங்க வெகு நேரமானது.. அவள் காதுகளில்.. கொந்தளிப்பான அவன் வார்த்தைகளே எதிரொலித்தன...

‘வேறொருத்தன் கூட குடும்பம் நடத்தனுமாமில்ல.. அதைச் சொல்ல இவன் யாரு..?’ அவள் வெகுண்டாள்..

“காவ்யா.. காய்வா...”

கண்ணதாசனின் குரல் கதவுக்கு அந்தப் பக்கம் இருந்து உரத்து ஒலித்ததில் தன்னுணர்விற்கு மீண்டவள்.. செல்போனைத் தூக்கிக் கடாசிவிட்டு கதவைத் திறந்தாள்..

தூக்கமின்றி சிவந்த கண்களும்.. கண்ணீர் விட்டதினால் வீங்கிய இமைகளுமாக.. கதவைத் திறந்தவளை உற்றுப் பார்த்தான் கண்ணதாசன்...

“ஏம்மா.. முகம் வீங்கியிருக்கு..?”

“சரியாத் தூங்கலைண்ணே...”

“ஏன்..?”

“தூக்கம் வரலை...”

“மத்தவங்க பிரச்னைகளை மண்டைக்குள்ள போட்டுக்கிட்டா இப்படித்தான்.. நமக்கிருக்கு ஆயிரம் பிரச்னைகள்.. நமக்கு எதுக்கும்மா மத்தவங்க பிரச்னை..?”

“நிஜம்தாண்ணே...”

"வா.. வந்து பல்லைத் தேய்ச்சுட்டு காபியைக் குடி.. இன்னைக்கு பாட்டி வீட்டுக்குப் போக வேணாம்..."

காவ்யாவுக்கு 'திக்' கென்றாகி விட்டது.. மற்ற சமயமாக இருந்தால் அவள் அதை வரவேற்றிருப்பாள் தான்... அப்போது அப்படியில்லையே.. அம்புஜத்தின் வீட்டில் அர்ஜீன் இருப்பான்.. அவனைப் பார்த்துவிட்டு வரலாம் என்ற நினைவில்தானே இப்போதெல்லாம் அவளது பொழுதுகள் விடிந்து கொண்டிருக்கின்றன..? அவன் மீதான ஆசையின் ஆதிக்கத்தில் மூழ்கித் தவித்துக் கொண்டிருப்பவளை போகாதே என்று கட்டளையிட்டால் அவள் என்ன செய்வாள்..? அவளால் போகாமல் இருக்க முடியுமா..?

அம்புஜத்தை மட்டும் பார்க்கப் போவது என்றால்.. அன்று அவளுக்கிருந்த உடல் அயர்வுக்கு அவள் கண்ணதாசனின் உத்தரவை வரவேற்றிருப்பாள்தான்.. 'ஆகட்டும்ண்ணே.. எனக்கும் அசந்துக்கிட்டு இருக்குது..' என்று சொல்லியிருப்பாள்தான்..

அப்படியில்லாமல் அம்புஜத்தின் வீட்டில் அர்ஜீன் இருக்கிறானே... சமீபகாலமாக அம்புஜத்தைப் பார்க்கப் போகும் சாக்கில் அர்ஜீனைப் பார்க்கத்தானே அவள் போய் கொண்டிருக்கிறாள்..?

"இல்லைண்ணே..." அவள் மறுத்தாள்...

“ஏம்மா..?” கண்ணதாசன் வியப்புடன் கேட்டான்..

“பாட்டிக்கு மனசு சரியில்லைண்ணே...”

“உனக்கு உடம்பு சரியில்லையேம்மா..”

“இருக்கட்டும்ண்ணே.. மாத்திரை போட்டுக்கிட்டா சரியாப் போயிரும்.. நான் போயிட்டு வந்திர்றேன்..”

“அப்படியாவது போய்த்தான் ஆகனுமுன்னு கட்டாயம் ஏதாவது இருக்காம்மா..? தனக்கு மிஞ்சித்தான் தான தர்மங்கிறது.. பணத்துக்கு மட்டுமில்ல.. மத்ததுக்கும் சேர்த்துத்தான் சொல்லியிருக்காங்க... நீ நல்லா இருந்துக்கிட்டு அடுத்தவங்களைப் பார்க்க ஓடினா அதில ஒரு அர்த்தமிருக்கு... அதைவிட்டுட்டு... நீயே நோயாளியாய் இருந்துக்கிட்டு.. அடுத்தவங்களுக்கு உடம்பும்.. மனசும் சரியில்ல.. பார்க்கப் போறேன்னு சொன்னா அதில என்ன அர்த்தமிருக்கு..? தெரியாமத்தான் கேட்கிறேன்.. பாட்டிக்கு மட்டுமா மனசு சரியில்ல..? எனக்கு சரியாயிருக்கா..? இல்ல.. உனக்குத்தான் சரியாயிருக்கா..?”

கண்ணதாசனின் கேள்விக்கு காவ்யாவினால் பதிலைச் சொல்ல முடியவில்லை.. அவள் என்ன பதிலைச் சொல்லுவாள்..?

ஏதும் பேச முடியாமல் மௌனமாக நின்ற தங்கையின் சுணங்கிய முகம்... மேலும் சுணங்கியதைக் கண்ட

கண்ணதாசன் என்ன நினைத்தானோ.. தங்கையின் அருகில் வந்து அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்..

"காய்ச்சல் இல்ல... சில்லுன்னுதான் இருக்கு.. சரி.. போனாப் போகுது.. நீ குளிச்சு சாப்பிட்டபின்னாடி மாத்திரை போட்டுக்கிட்டா உன்னை நானே பாட்டி வீட்டில கொண்டு வந்து விட்டுட்டு ஆபிஸ் போறேன்.. இப்ப சந்தோசம் தானே..."

'போச்சுடா.. அண்ணன் மனசில சந்தேகம் தட்டுப் பட்டிருச்சு போல இருக்கே.. இன்னைக்கு புதுசா அதுவே வந்து பாட்டி வீட்டில விட்டுட்டுப் போறேன்னு சொல்லுதே.. இத்தனை நாளா இப்படிச் சொல்லிய தில்லையே.. பாட்டி வீட்டுக்கு இது வந்தா கதை கந்தலாயில்ல போயிரும்..? அர்ஜீன் அங்கேயிருக்கிறத அண்ணன் பார்த்திருச்சுன்னா வேற வினையே வேணாம்.. இத்தனை நாளா ஏன் இதை மறைச்சேன்னு கேள்வி கூட கேட்க வேணாம்.. ஒரு பார்வை பார்த்தாலே போதுமே.. அந்த இடத்திலேயே நான் புதைஞ்சு போயிருவேனே..' கையைப் பிசைந்த காவ்யா.. அவசரமாக கண்ணதாசன் சொன்னதை மறுத்துப் பேசினாள்..

"இல்லண்ணே.. உனக்கு எதுக்கு வீண்சிரமம்..? அதான் அவங்க கார் அனுப்புவாங்களே..."

"ஏம்மா..? நானும் பாட்டியைப் பார்த்து நாளாச்சே.. ஒரு நடை அவங்களைப் பார்த்து விசாரித்ததைப் போல

இருக்கட்டுமே.. அதோட.. இதில எனக்கென்ன சிரமம் இருக்கு..? ஆபிஸீக்கு போறப்ப வழியில உன்னை இறக்கி விட்டுட்டுப் போகப் போறேன்..”

“இல்லண்ணே.. எனக்கு அசதியா இருக்கு.. நான் இன்னைக்கு பாட்டி வீட்டுக்குப் போகல...”

இதைவிட என் தகப்பனார் குதிருக்குள் இல்லையென்று காவ்யா சொல்லியிருக்கலாம்.. கண்ணதாசனின் வரவை அவள் ஆட்சேபித்து தொலைத்த பின்தான் கண்ணதாசனுக்குள் சந்தேகமே எழுந்தது.. அதுவரை அவன் இயல்பாகத்தான் பேசிக் கொண்டிருந்தான்...

‘அந்தப் பாட்டி வீட்டுக்கு நான் வர்றேன்னு சொன்னா தங்கச்சி எதுக்காக இந்த பயம் பயப்படுது..’ அவன் மனதுக்குள் சந்தேகத்தின் விதை விழுந்தது...

எப்படியோ.. தங்கை வீட்டில் ஓய்வெடுக்க ஒப்புக் கொண்டாள் என்பதில் அவனுக்குள் நிம்மதிபரவியது.. அந்த நிம்மதியுடன் அவன் குளிக்கப் போனான்...

காவ்யா சமையலறைக்குள் போனாள்.. எதையோ தீவிரமாக ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருப்பவளைப் போல வாணலிக்குள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மருக்கொழுந்து திரும்பிப் பார்த்து வாயெல்லாம் பல்லாகி..

"பாப்பா.." என்றாள்..

"உஷ்ஷ்.." வாயில் ஒற்றைவிரலை வைத்து எச்சரித்தாள் காவ்யா...

"ஏன் பாப்பா..? அண்ணன் இருக்காரா..?" கிசுகிசுப்பான குரலில் வினவியபடி ஹால் பக்கம் எட்டிப் பார்த்தாள் மருக்கொழுந்து...

அங்கே கண்ணதாசன் இருக்கும் சுவடே தெரியவில்லை...

"அண்ணன் இல்லை பாப்பா.." திரும்பிப் பார்த்து ஆனந்தத்துடன் சொன்னாள்..

"எங்கண்ணன் இல்லாட்டி உனக்கு கொண்டாட்டமா..?" காவ்யா அதட்டினாள்..

"இல்லையா பின்னே..?" மருக்கொழுந்து காவ்யாவுக்காக காபியை ஆற்றியபடி கேட்டாள்...

"இரு.. இதை அப்படியே அண்ணன் காதில போட்டு வைக்கிறேன்.. எவ்வளவு தைரியமும்.. தெனாவெட்டும் இருந்தா.. இதை.. அன்புத்தங்கச்சி ஆசைத்தங்கச்சி.. பாசத்தங்கச்சி.. நேசத்தங்கச்சியான என்கிட்டயே சொல்லுவ..?" காவ்யா மிரட்ட..

'தங்கச்சிங்கிற ஒத்தை சொந்தத்தை இவ்வளவு விலாவரியாச் சொல்லுவாங்களா..?' என்று அரண்டு போனாள் மருக்கொழுந்து..

# 148

*நீயிருக்கும் திசையினிலே...*
*நிழலாக ஆசைகொண்டேன்...*

**கா**வ்யா காபியை உறிஞ்சியபடி மருக்கொழுந்திடமிருந்து தப்பித்து வாசல் பக்கமாக வந்தாள்.. அதிகாலைக் குளிர் காற்று இதமாக அவள் உடல் தழுவ.. கல்லூரிக்கோ.. வேலைக்கோ.. போக வேண்டுமென்ற நிர்பந்தம் இல்லாத விடுதலையுணர்வோடு வாசல் படியில் உட்கார்ந்து தெருவை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்...

அரசு அலுவலர்களுக்கான தனிக் காலனி அது.. அதிகப் போக்குவரத்து இல்லாமல்.. அறிமுகமானவர்களின் நடமாட்டத்தோடு இருந்த தெருவில் ஓர்விதமான தனித்த அழகு தெரிந்தது.. பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிருந்த எதிர்வீட்டுச் சிறுமி எதிர்வீட்டு வாசலில் இருந்து கையாட்ட... இவளும் பதிலுக்கு கையாட்டினாள்.. சிறுமிக்கு தலைவாரிக் கொண்டிருந்த சிறுமியின் அம்மா சிரித்தாள்.. பதிலுக்கு காவ்யாவும் சிரித்தாள்..

“என்ன குழந்த..? தனியா உக்காந்து என்ன பண்ணின்டிருக்கே..?”

காலை நேர உலாவலுக்கு போய்விட்டு திரும்பிக் கொண்டிருந்த வேதாச்சலம் கேட்டார்.. கண்ணதாசன் கூடவேலை பார்க்கும் மகேஷின் அப்பா அவர்...

“வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கேன்..” வெட்கத்துடன் பதில் சொன்னாள் காவ்யா...

“நன்னா வேடிக்கை பாரு.. இது விச்ராந்தியா இருந்துக்கிற வயசு.. நாளபின்ன உனக்குக் கல்யாணமாகி ஆம்படையான் வீட்டுக்குப் போயிட்டியானா இப்படி விச்ராந்தியா உக்கார முடியாது.. வாயேன்.. எங்காத்துல மாமி போடற டிகிரிகாபி சூப்பராயிருக்கும்.. ஒருவாய் குடிச்சுட்டு வருவ..” வேதாச்சலம் அழைத்தார்..

‘ஒரு வாய் காபின்னா.. ஒரு ஸ்பூன் காபிய கொடுப்பாங்களோ.. அந்தக் காப்பியக் குடிக்க.. இவர் செய்கிற கதா காலட்சேபத்தக் கேட்டபடி இவர் வீடு வரைக்கும் போயிட்டு வரனுமா..? மாட்டவே.. மாட்டேன்..’ மனதுக்குள் அவசரத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொண்ட காவ்யா...

“இன்னொரு நாள் வரேனே.. இன்னைக்கு எனக்கு காய்ச்சல்..” என்று சோகையாக சிரித்து வைத்தாள்...

“காய்ச்சல்ன்னு சொல்லிக்கிட்டு வாசப்படியில உக்காரலாமோ..? ஈரக்காற்று உடம்பில பட்டா ஜீரம் கூடிப் போயிரும்.. ஆத்துக்குள்ள போ..” வேதாச்சலம் அதட்டி விட்டு நடையைக் கட்டினார்..

'எங்க வீட்டு வாசலில் நான் உக்காந்திருந்தா இவருக்கென்ன வந்தது..? எப்படியும் பொம்பளையா பிறந்தா வேலை வெட்டின்னு எதையாச்சும் பார்த்துக் கிட்டே இருக்கனும்.. ஒரு நிமிசம் அக்கடான்னு உக்காந்திரக் கூடாது..' காவ்யா எரிச்சலுடன் எழுந்து வீட்டுக்குள் போகப் போனாள்..

"என்னடிம்மா.. மாமியக் கண்டதும் ஆத்துக்குள்ள ஓடப்பாக்கிற..? நானென்ன உனக்கு ஆம்படையானையா கொண்டு வந்திருக்கேன்..? பில்டர் காபியத்தான கொண்டு வந்திருக்கேன்.." என்றபடி அங்கே யமுனா மாமி பிரசன்ன மானாள்.. அவள்கையில் காபித்தம்ளரும்.. அதைத் தாங்கிய டபராவும் இருந்தது..

"மாமி..! நீங்களா..?" ஆச்சரியமானாள் காவ்யா..

அப்போதுதான் வேதாச்சலம் அவளுடன் பேசிவிட்டு அவர் வீட்டைப் பார்த்து நடையைக் கட்டினார்.. அடுத்த ஆறாவது நிமிடத்தில் அவரது தர்மபத்தினி.. காபி டபராசெட்டுடன் அவள் முன் பிரசன்ன மானால் அவள் ஆச்சரியப்பட மாட்டாளா..?

"மாமா சொன்னார்.. நோக்கு ஜீரமாமே.. பாவம் குழந்த தாய் தகப்பனெல்லாம் மதுரையில இருக்கிறச்ச.. அண்ணனுக்காக ஊர்விட்டு ஊர் வந்திருக்கு.. சூடா காபியக் கலந்து கொண்டு போய் கொடுத்துட்டு

வாடின்னார்.. நானும் வந்துட்டேன்.. குடி..” காவ்யாவின் பக்கத்தில் அமர்ந்த யமுனா வாத்சல்யத்துடன் அவள் முகம் பார்த்தாள்...

அதில் தெரிந்த தாய்மையில் மனம் நெகிழ்ந்தாள் காவ்யா.. அவளுக்காக மனைவியிடம் சொல்லி காபியை கொண்டுவர வைத்த வேதாச்சலத்தை மனதுக்குள் திட்டித்தீர்த்த தன் மடமையை நினைத்து தனக்குத்தானே ஒரு குட்டு வைத்துக் கொண்டாள்...

“நான் யமுனா மாமிடிம்மா.. என்னவோ பிள்ளயாரப் பாத்துப்புட்ட மாதிரியில்ல தலயில குட்டிக்கிற..” என்றாள் யமுனா மாமி..

மாமியுடன் பேசிக் கொண்டிருந்ததில் காவ்யாவுக்கு நேரம் போனதே தெரியவில்லை.. குளித்து விட்டு வந்த கண்ணதாசன் காவ்யாவைத் தேடியபடி வாசலுக்கு வந்த போதுதான் நேரமாகிவிட்டதை அவள் உணர்ந்தாள்...

“காவ்யா..” என்றபடி வந்த கண்ணதாசன் யமுனாவை பார்த்ததும்..

“வாங்க மாமி..” என்று வரவேற்றான்..

“நான் அப்பவே வந்துட்டேன்.. பாவம்.. குழந்தைக்கு ஜீரமாமே...”

யமுனாமாமி இப்படிச் சொன்னதும் தன் வீட்டில் குழந்தை எங்கேயிருந்து வந்தது என்று குழம்பிப் போனான் கண்ணதாசன்..

“மாமா கார்த்தாலே வாக்கிங் போயிட்டு திரும்ப வர்றச்சே குழந்தை வாசப்படியில ஜீரத்தோட உக்காந்திண்டிருந்தப் பாத்திருக்கார்.. பாவம் குழந்த.. சூடாக் காபியக் கொண்டு போய் கொடுடின்னு என்ன விரட்டி விட்டார்.. அதான்.. காபியக் கொடுத்துட்டு குழந்தய விசாரிச்சுட்டுப் போகலாம்ன்னு வந்தேன்.. நீங்க ஆபிசுக்கு கிளம்பிட்டேளா..?” என்ற மாமியின் தொடர்ச்சியான பேச்சிலிருந்து அவள் காவ்யாவைத்தான் ‘குழந்தை’ என்று விசாரிக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட கண்ணதாசன்.. குழந்தையைத் தேடுவதை விட்டுவிட்டு.. யமுனா மாமிக்கு நன்றி சொல்ல ஆரம்பித்தான்...

“உங்களுக்கெதுக்கு மாமி வீண்சிரமம்..?”

“இதில சிரமம் என்ன இருக்கு..?”

“இங்க மருக்கொழுந்து இருக்கு... அது காவ்யாவைப் பார்த்துக்கும்...”

“இருக்கட்டுமே.. யாரு வேணாம்ன்னு சொன்னது..? அவ பாட்டுக்கு இருந்துட்டுப் போறா.. மாமி காப்பிக்கும்.. அவகாப்பிக்கும் வித்தியாசம் இருக்கோல்லியா..?”

இதை மருக்கொழுந்து கேட்டு வைத்தால் எப்படியிருக்கும் என்ற நினைவோடு திரும்பிப் பார்த்தான் கண்ணதாசன்.. அங்கே உண்மையாகவே மருக்கொழுந்து

நின்றிருந்தாள்.. அவள் கண்களில் தெரிந்த ஜ்வாலையில் அவள் யமுனாமாமியின் பேச்சை செவிமடுத்து விட்டாள் என்பது புரிந்துபோக.. கண்ணதாசன் நமட்டுச் சிரிப்புடன் திரும்பிக் கொண்டான்.. யமுனா மாமியும் மருக்கொழுந்தைப் பார்த்து விட்டு..

'இவ எப்ப வந்தா..?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள்...

"மகேஷ் கிளம்பியாச்சா மாமி.." கண்ணதாசன் பேச்சை மாற்ற முனைந்தான்...

"இந்நேரத்துக்கு கிளம்பியிருப்பான்... நான் போய் அவனுக்கு டிபனைக் கட்டிக் கொடுக்கனும்.. கார்த்தாலைக்கு வெண் பொங்கல் பண்ணியிருக்கேன்.. ஒரு அடுக்கில போட்டு உங்களுக்கும் காவ்யாவுக்கும் கொடுத்து விடவா..?" மாமி அக்கறையாய் கேட்டாள்..

"இருக்கட்டும் மாமி.. பரவாயில்லை.. மருக்கொழுந்து டிபன் பண்ணியிருக்கு.." மறுத்தான் கண்ணதாசன்...

"அதெல்லாம் ஒரு டிபனா...? மாமியோட வெண்பொங்கலுக்கு பக்கத்தில அது நிக்க முடியுமா..?"

மருக்கொழுந்து அங்கே நிற்பதை மறந்து போனவளாக பேசிவிட்ட யமுனா மாமிக்கு அது நினைவுக்கு வந்து விட்டதில் உள்ளுக்குள் குளிரெடுத்தது..

‘சண்டைக்கு வந்திருவாளோ..’

அவளது பயத்தை உணர்ந்தவனாக கண்ணதாசன் அபயமளித்தான்..

“மருக்கொழுந்து பேசாது மாமி.. அது மௌன விரதத்தில இருக்குது...”

‘அப்பாடி..’ ஆசுவாசமானாள் யமுனாமாமி...

‘அதனாலதான் நீ பிழைத்த..’ கண்களால் மிரட்டினாள் மருக்கொழுந்து..

உன் கண்களைப் பார்த்தால்தானே நீ மிரட்டுவதை நான் பார்க்க முடியும் என்று வேறு திக்கில் பார்த்தபடியே கண்ணதாசனுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்த்திதாள் யமுனா...

“ஜீரத்தில விழுந்திருக்க குழந்தைக்கு வாய்க்கு ருசியா கொடுக்கனும்...”

‘அதுக்கு பச்சரியில செஞ்ச வெண்பொங்கலத்தான் கொடுக்கனுமா..?’

பல்லைக்கடித்த மருக்கொழுந்தின் முகத்தில் மௌனவிரதத்தை துரத்தி விடத்துடிக்கும் முகக்குறிப்புக்கள் தோன்ற ஆரம்பித்ததில் காலையிலேயே பெண்களின் யுத்தத்தை விலக்கிவிட்டு சின்னக் கவுண்டராகி தீர்ப்புச் சொல்ல வேண்டி வந்துவிடுமோ என்ற கவலைக்கு ஆளானான் கண்ணதாசன்..

நல்லவேளையாக.. மகேஷின் போன் அழைப்பு அவனை பஞ்சாயத்து தலைவர் பொறுப்பை ஏற்கும் அபாயத்திலிருந்து காப்பாற்றியது...

கண்ணதாசனின் செல்போனில் மகேஷ் அழைக்க.. மாமியைப் பார்த்து..

“மகேஷ்தான் கூப்பிடறான்..” என்றபடி போனை காதுக்கு கொடுத்தான் கண்ணதாசன்..

“அம்மா அங்கேதான் வந்திருக்காங்களா..?” என்றான் மகேஷ்

“ஆமடா..”

“வீட்டுக்கு அனுப்பி வையேண்டா.. நாழியாயிருச்சு.. நான் ஆபிசுக்கு கிளம்பனுமா.. வேணாமா..?” மகேஷ் சிடுசிடுத்தான்..

‘அதையேண்டா எங்கிட்டச் கேட்கிற..? உங்க அம்மாகிட்டக் கேளேன்..’ மனதுக்குள் நினைத்தபடி வெளியே அகலமான புன்னகையொன்றை சிந்திய கண்ணதாசன்..

“அம்மாகிட்டப் பேசுடா..” என்று போனை யமுனாவிடம் கொடுத்து விட்டான்..

மறுமுனையில் மகேஷ் என்ன பொரிந்தானோ தெரியவில்லை.. போனை கண்ணதாசனிடம் கொடுக்க

மறந்து அவசர நடையுடன் யமுனா வீட்டை நோக்கி விரையப் போனாள்..

“மாமி.. போன்..”

கண்ணதாசன்தான் ஓடிப் போய் அவனது போனைக் கைப்பற்றிக் கொண்டு திரும்பி வந்தான்..

“மருக்கொழுந்து முகத்தில எள்ளும்.. கொள்ளும்.. வெடிக்குது..” காவ்யா வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்...

“நல்லவேளை.. மௌனவிரதத்தில இருக்காப்புல.. நான் தப்பிச்சேன்..”

கண்ணதாசன் சாப்பிடப் போனான்.. காவ்யா குளிக்கப் போனாள்.. அவள் குளித்து உடைமாற்றி வந்தபோது கண்ணதாசன் அலுவலகத்திற்கு கிளம்பிக் கொண்டிருந்தான்.. காவ்யா சாப்பிட உட்கார்ந்த போது வாசலில் கார் சப்தம் கேட்டது..

“அதுக்குள்ளேயா ஆபிஸ்கார் வந்துருச்சு..?” கண்ணதாசன் வாசல் பக்கமாக எட்டிப் பார்த்தான்...

“காவ்யாம்மாவ கூப்பிட்டுக்கிட்டு வரச் சொன்னாங்கய்யா...” அம்புஜத்தின் கார் டிரைவர் இறங்கி மரியாதையுடன் நின்றான்...

“அடடா.. நீ வரமுடியாதுன்னு பாட்டிக்கு போன் பண்ண மறந்துட்டேனே...”

சாப்பிட்டுக் கொண்டிருந்த காவ்யாவிடம் சொன்ன கண்ணதாசன் செல்போனை காதுக்கு கொடுத்து.. அம்புஜத்தை அழைத்தான்...

யமுனா மாமி வந்து போனதில் அம்புஜம் பாட்டியை மறந்து விட்டிருந்த காவ்யாவின் மனதில் கலக்கம் வந்தது...

சற்று நேரம் விட்டு விலகியிருந்த அர்ஜீனின் நினைவு ஆக்டோபஸைப் போல மீண்டும் அவளைச் சுற்றி வளைத்தது.. அவன் இருக்குமிடத்திற்கு அவளை அழைத்துச் செல்ல கார் வந்திருந்தும் அவளால் போக முடியாத துன்பத்தில் அவள் தொண்டைக்குள் மருக்கொழுந்து செய்து வைத்திருந்த பூரியும் குருமாவும் இறங்க மறுத்தது..

அதைப் புரிந்து கொள்ளாதவளாக.. மருக்கொழுந்து கச்சை கட்டிக்கொண்டு சண்டைக்கு வந்தாள்...

“ஏன் பாப்பா.. அந்த மாமி செய்யறதுதான் சமையலு.. மருக்கொழுந்து செய்யறதெல்லாம் மண்ணு.. கல்லுன்னு நீயும் நினைக்கறியா..? ஒத்த பூரிய உத்து உத்து பாத்துக்கிட்டு சாப்பிடாம மல்லுக்கட்டறியே.. இது நாயமா பாப்பா..?”

இதில் மருக்கொழுந்துவின் கைப்பக்குவத்தில் எந்தக் குறையுமில்லை என்று சொல்ல முடியாமல் தவித்த காவ்யா..

“உஷ்ஷ்.. அண்ணனிருக்கு..” என்று சொல்லித் தப்பித்தாள்...

“இது ஒன்னைச் சொல்லியே என் வாயை அடைச்சிரு..” வாய்க்குள் முணுமுணுத்தபடி சமையலறைக்குள் தனக்குத் தானே பேசியாவது ஆத்திரத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என்று அடைக்கலமானாள் மருக்கொழுந்து..

அம்புஜம் பாட்டியுடன் பேசிக் கொண்டிருந்த கண்ணதாசன்..

“அப்படியா..”

“ஓஹோ...”

“ம்ம்ம்...”

“அடடா...”

என்ற வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருந்தான்.. அவன் எந்த வார்த்தைகளை உதிர்த்தால் காவ்யாவுக் கென்ன வந்தது.. அவளால்தான் அன்று அம்புஜத்தின் வீட்டிற்குப் போக முடியாதே என்ற மனத்தாங்கலுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த காவ்யா...

“சரி பாட்டி.. காவ்யாவை அனுப்பி வைக்கிறேன்..” என்ற அண்ணனின் வார்த்தைகளில் ஆனந்தமாக நிமிர்ந்து பார்த்தாள்..

# 149

*மின்மினியின் வெளிச்சமில்லா..*
*அகல்விளக்காக ஆசைகொண்டேன்...*

**கா**வ்யாவின் மனம் துள்ளியது.. அதற்கேற்றார் போல...

*"துள்ளாத மனமும் துள்ளும்...*
*சொல்லாத கதைகளைச் சொல்லும்..*
*கிள்ளாத ஆசைகளைக் கிள்ளும்..*
*இன்பத் தேனையும் வெல்லும்..."*

என்று ஹாலில் இருந்த தொலைக்காட்சியில்.. கருப்பு... வெள்ளை திரைப்பட பாடல் காட்சியில் கதாநாயகி பாடிக் கொண்டிருந்தாள்...

காவ்யாவின் மனதிலிருந்த ஆசைகளை அடக்கியாள பிரம்மப் பிரயத்தனங்களை மேற்கொண்டு அவள் அவற்றை அடக்க முயன்று கொண்டிருந்த போது.. கண்ணதாசனின் வார்த்தைகள் அவற்றைத் தட்டி எழுப்பி விட்டன...

துள்ளிக் கொண்டு எழுந்த ஆசைகள் காவ்யாவின் மனதைக் கிள்ளிக் கொண்டாட்டம் போட்டன.. எதற்காக

இந்தக் கொண்டாட்டம் என்று அவள் தனக்குள் கேட்டுக் கொண்டாள்.. அவள்தான் அர்ஜீனின் மனைவியாகப் போவதில்லை... அவனுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.. வாழ்வின் பாதையில் அவனுடன் ஒன்றாகப் பயணிக்கப் போவதில்லையென்று ஆனபின்பு எதற்காக அவள் மனம் இப்படிக் கொண்டாட்டம் போடுகிறது...?

அவன் முகத்தைப் பார்க்கப் போவதில் அவளுக்கு இத்தனை ஆவலா..? ஆசைக் கனலின் சுழற்சியில் சிக்கி அவள் தவித்தாள்... அவனுடன் வாழ்வில் கலக்கப் போவதில்லையென்றான பின்பு எதற்காக இந்த ஆவேசக் காதலை அவன்மீது வைக்கிறாள்...?

*"ஆசையிருக்கு.. உன்மேல் ஆசையிருக்கு...*
*ஆனாலும் கூடக் கொஞ்சம்*
*அச்சமிருக்கு...."*

தொலைக்காட்சியில் பாடல் மாறியிருந்தது... காவ்யா பெருமூச்சுடன் எழுந்து கை கழுவப் போனாள்.. கண்ணதாசன் அவளை அம்புஜத்தின் வீட்டிற்கு அனுப்பி வைத்து விடுவான் என்ற நிச்சயத்தில் அவள் நெஞ்சில் நிம்மதி நிலவியது.. அதை கண்ணதாசனே சொல்லட்டும் என்று ஏதும் அறியாதவளைப் போல அவள் சமையலறைக்குச் சென்று மருக் கொழுந்தின் பக்கத்தில்

நின்றாள்.. தனது பேச்சை மீட்க வந்த தேவதையைப் பார்ப்பதைப் போல அவளை மகிழ்ந்து போய் பார்த்த மருக்கொழுந்து தாழ்ந்த குரலில் அவளிடம் கிசுகிசுத்தாள்..

"என்ன பாப்பா.. சாப்பிட்டயா...?"

"ம்ம்ம்..."

"ருசி எப்படியிருந்துச்சு...? அந்த யமுனா மாமி செஞ்சு கொடுக்கிற பொங்கல விட தூக்கலா இருந்துச்சா.. இல்லையா...?"

"தேன் போல இருந்துச்சு..."

"அதச் சொல்லு... யாருகிட்ட...? இந்த மருக்கொழுந்து கிட்டயேவா...? என் கைப்பக்குவத்துக்குப் பதில் சொல்ல முடியுமா...?"

மருக்கொழுந்து புஜங்களைத் தட்ட ஆரம்பித்த போது கண்ணதாசன் சமையலறைக்குள் எட்டிப்பார்த்தான்.. உடனடியாக மௌனியான மருக்கொழுந்து பதவிசாக அடுப்பிலிருந்த வாணலியை கிண்ட ஆரம்பித்தாள்...

"காவ்யா..."

"அண்ணே...?"

அவன் எதற்கு அழைக்கிறான் என்று தெரிந்திருந்தும் அறியாதவளைப் போல முகத்தை வைத்துக் கொண்டு காவ்யா சமையலறையை விட்டு வெளியே வந்தாள்...

“இப்ப உடம்புக்கு எப்படிம்மா இருக்கு..?”

“மாத்திரை போட்டதில சொடக்கெடுத்து விட்டது போல இருக்குண்ணே...”

“காய்ச்சல் குறைஞ்சிருக்கா...?”

“அது போயே போயிருச்சு...”

“அப்ப.. அம்புஜம் பாட்டி வீட்டுக்கு நீ போய் வந்திரலாமில்ல...?”

“ஏண்ணே... நீதான போக வேண்டாம்ன்னு சொன்ன..?”

“சொன்னேம்மா.. ஆனா அந்தப் பாட்டி பிடிவாதமா உன்னைப் பார்க்கனும்னு சொல்றாங்க.. அவங்க கவலை தீர்ந்துருச்சாம்... அதை உன்கிட்டச் சொல்லனுமாம்.. உன்னைப் பார்க்க அவங்களே வரலாம்ன்னா இன்னைக்குன்னு பார்த்து கால்வலி அதிகமா இருக்காம்.. கெஞ்சறாங்க.. போயிட்டு வந்துரு...”

“நீ சொன்னா சரிதாண்ணே...”

என்னவோ அவளுக்குப் போக விருப்பமில்லாததைப் போலவும்.. கண்ணதாசனுக்காக கிளம்பிப் போகப் போவதைப் போலவும் முகத்தை வைத்துக் கொண்டு கிளம்பினாள் காவ்யா.. காரில் அவள் ஏறும்வரை கூட இருந்த கண்ணதாசன்...

“மாத்திரை எடுத்துக்கிட்டியா...? பத்திரம்மா.. சீக்கிரமா வீட்டுக்கு வந்து ரெஸ்ட் எடு...” என்று கவலையுடன் சொன்னான்..

அவனது கரிசனத்தில் நெகிழ்ந்து போனவள்.. கண்கள் பனிக்க தலையை அசைத்தாள்.. கார் கிளம்பியது.. காலை நேர இளம்காற்று முகத்தில் படிய.. காரின் சீட்டில் சாய்ந்து அமர்ந்தாள் காவ்யா.. மனம் அர்ஜீனிடம் ஓடியது..

அம்புஜம் குதூகலமாக அவளை வரவேற்றாள்...

“தெரியுமா சங்கதி...?” என்று அவள் ஆரம்பித்த போது

‘தெரியுமே...’ என்று சொல்லத் தோன்றியது காவ்யாவுக்கு... அடக்கிக் கொண்டு அறிந்தும் அறியாதவளைப் போல அம்புஜத்தின் முகம் பார்த்தாள்..

“என்ன பாட்டி...?”

“அர்ஜீன் அந்த டீலை முடிச்சுட்டான்...”

அர்ஜீனின் வெற்றியில் அந்தப் பாட்டி அடைந்த சந்தோசத்தைப் பார்த்த காவ்யாவிற்கு நெகிழ்வாக இருந்தது.. இந்த மகிழ்வை ஒருநாள் தாமதமாக அவள் பெறுவதற்கு தான்தானே காரணம் என்ற குற்ற உணர்வில் காவ்யாவின் மனம் வருந்தியது...

“எப்ப பாட்டி..?”

“நேத்தே முடிச்சிட்டானாம்.. நான் சொல்லலை.. இவன் எடுத்த காரியத்தை முடிக்காம விட மாட்டான்னு.. அர்ஜீனா.. கொக்கா.. அது புரியாம இந்த சரவணன்தான் ஐயோ அப்பான்னு புலம்பினான்... இப்ப விசயத்தைக் கேட்டதும் அர்ஜீனை தலையில் தூக்கி வைச்சுக்கிட்டு ஆடறான்...”

“சந்தோசம் இருக்கத்தான செய்யும் பாட்டி...”

“சந்தோசமும் இருக்கனும்... நம்பிக்கையும் இருக்கனும்.. சட்டுன்னு வார்த்தையை விட்டானே... இப்ப விட்ட வார்த்தையை திரும்ப வாங்க முடியுமா...?”

அம்புஜம் காவ்யாவிடம் சொல்லிக் கொண்டிருந்த போதே...

“ஏன் முடியாது...?” என்ற குரல் வாசல் பக்கமிருந்து கேட்டது...

திரும்பிப் பார்க்காமலே அது அர்ஜீனின் குரல் என்பதை முதியவளும்... இளையவளும்... புரிந்து கொண்டார்கள்..

அர்ஜீன் அழுத்தமான காலடியோசையுடன் அவர்கள் முன்னால் வந்து நின்றான்.. காவ்யாவின் மனம் படபடத்தது.. அவனை நிமிர்ந்து பார்க்க அவள் மனம் துடித்தது.. நேற்றுப்போல இல்லாமல் இன்று வெற்றிவாகை

சூடியவனாக அவளுடைய காதலன் நிற்கிறான்.. அவன் முகம் பார்க்காமல் எப்படி அவள் இருப்பாள்...?

இமைகள் படபடக்க அவள் விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள்.. துளைக்கும் பார்வையுடன் அவனும் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.. இருவரின் பார்வைகளும் சந்தித்துக் கொண்டன.. அவன் முகம் இறுகியிருந்தது.. அவளை உறுத்துப் பார்த்தான்...

'எதிரியப் போல பாக்குறான்...' அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

அவளையே பார்த்தபடி அவன் அம்புஜத்திடம் பேச ஆரம்பித்தான்..

"யாரும் பேசனும்னு பேசறதில்லை பாட்டி.. சூழ்நிலைதான் அப்படிப் பேச வைத்துவிடுகிறது.... சித்தப்பாவுக்கு என்னைக் கடிந்து பேசனும்னு வேண்டுதலா இருக்கு...? அவர் சூழ்நிலை அப்படி..."

"ஆயிரம்தான் சொல்லுலே.. அவன் அப்படிப் பேசியிருக்கக் கூடாது..."

"பேசாம என்ன செய்வார் பாட்டி...? பணம் ஒரு விசயமே இல்லை.. அதை நான் கொடுத்து விடுவேன்னு சித்தப்பாவுக்குத் தெரியும்.. அந்தக் கம்பெனி கை நழுவிப் போய்விடக் கூடாது.. அதுதான் அவரோட எண்ணம்..."

“எண்ணத்தில ஒரு குறையுமில்லலே.. அது நிறைவேறுகிறதில ஒரு தடங்கல் வந்தா அந்தப் பாடுபடலாமா...? ஆயிரம்தான் சொல்லு.. உன் சித்தப்பன் செஞ்சது தப்புத்தான்லே...”

“விடுங்க பாட்டி...”

“இப்பப் பாரேன்.. விசயம் தெரிஞ்சதில இருந்து அவன் கள்ளுக் குடிச்ச குரங்காட்டம் துள்ளிக்கிட்டு திரியறான்... காதுக்கு கொடுத்த செல்போனை இறக்கலன்னா பாரேன்... காலையில இருந்து இந்த திருநெல்வேலிச் சீமை பூராத்துக்கும் போனைப் போட்டுச் சொல்லிக்கிட்டு இருக்கான்.. வாய்தான் வலிக்குமோ.. வலிக்காதோ..”

“ஹா... ஹா...”

பலமாக சிரித்த அர்ஜீனை அம்புஜம் பாசத்துடன் பார்க்க... காவ்யா காதலுடன் பார்த்தாள்.. அவனின் பல்வரிசையில் அவள் மனம் கட்டுண்டது..

“அர்ஜீன்..” ஆர்ப்பாட்டமாக உள்ளே வந்தார் சரவணன்..

“என்ன சித்தப்பா...?” நிதானமாக கேட்டான் அர்ஜீன்..

“ஜில்லாவே திகைச்சுப் போயிருச்சுலே.. அவனவன் நிஜமாத்தான் சொல்றேனான்னு ஆச்சரியப் பட்டுப்

போயிட்டானுகன்னா பாரேன்... அப்பவே எனக்குத் தெரியும்லே...”

முதல்நாள் அவர் நடந்து கொண்ட விதத்தை முற்றிலும் மறந்து போனவராக ஆர்ப்பரித்த சரவணனை ஆழமாகப் பார்த்த அம்புஜம்..

“உனக்கு என்ன தெரியும்லே...?” என்று கேட்டாள்..

“ஆர்ஜீன் கிட்ட ஒரு விசயத்தைச் சொன்னா அதை அவன் முடிக்காம விட மாட்டான்னு தெரியும்மா..” அம்புஜத்தின் குரல் மாறுபாட்டை உணராதவராக அவர் சொன்னார்...

“அப்படியாலே...?” கேலிக் குரலில் கேட்டாள் அம்புஜம்...

அவளது கேலியை சரவணன் உணரவில்லை.. அவர் போக்கில் அவர் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தார்...

“இதென்னம்மா.. அப்படியாலேன்னு கேட்கறிங்க.. இது ஊரு உலகத்துக்கே தெரிந்த சங்கதியாச்சே...”

“அப்புறம் எதுக்குலே நேத்து அவனை அந்தக் கேள்வி கேட்ட...?”

அம்புஜம் நெற்றியடியாய் கேட்டு விட்டாள்.. சரவணனால் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.. ஒரு மாதிரி சிரித்துச் சமாளிக்க முயன்றார்.. எப்போதும் அவரைக்

காதலுடன் பார்க்கும் அவர் மனைவி சுமதிக்கே அந்தச் சிரிப்பைப் பார்க்கச் சகிக்கவில்லையெனும் போது மற்றவர்கள் பாவம்.. என்ன செய்வார்கள்...?

“சிரிச்சது போதும்லே.. நிப்பாட்டு.. இருக்கிற ஆளுக பயந்து ஓடிறப் போறாங்க..” கிண்டலுடன் சொன்னாள் அம்புஜம்..

“ஹி.. ஹி.. அம்மாவுக்கு எல்லாமே ஜோக்தான்... இல்லையா அர்ஜீன்...?” கருத்துக் கேட்டும் சாக்கில் சரவணன் அர்ஜீனுடன் ராசியாக விழைந்தார்...

“ஆமாம் சித்தப்பா.. பாட்டிக்கு ஜோக்கடிக்கிற மூட் வந்துட்டா அவங்க முன்னால் இருக்கிறவங்க பாடு திண்டாட்டம்தான்...” அர்ஜீன் பெருந்தன்மையுடன் அவர் நீட்டிய நட்புக் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டான்...

காவ்யாவுக்கு அவனை நினைக்கையில் பெருமையாக இருந்தது...

அதை அவனிடம் சொல்லவும் செய்தாள்...

“பரவாயில்லை... மன்னிக்கிறது பெரிய மனுசங்களோட குணம்... நீங்க இதிலயும் பெரிய மனுசர்ங்கிறதை நிருபிச்சிட்டிங்க...”

எதையோ எடுக்கப் போவதைப் போல அர்ஜீனை பின்பற்றி வேளியே வந்தவள் யாருமில்லாத மாடி ஹாலின்

தனிமையில் அவனிடம் இதைச் சொன்னபோது.. அவன் அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்...

"உனக்கேண்டி அந்தப் பெருந்தன்மை இல்ல..?"

அவன் தொடர்ந்து கேட்ட போது அவளுக்கு வாயடைத்துப் போனது.. இந்தக் கேள்விக்கு அவள் என்ன பதிலைச் சொல்லுவாள்...?

"பேச மாட்டியே.. இதுக்கு மட்டும் பதிலைச் சொல்ல மாட்டியே.. மன்னிக்கிறது தேவ குணம்டி.. நீ தேவதைன்னுதானே நினைச்சுக்கிட்டு இருக்கேன்...?"

அந்தக் கேள்வியில் பொறுமையிழந்தவளாக அவள் வெடித்தாள்..

"இல்லை.. நான் பேய்.. பிசாசு.. ராட்சஸி.."

"காவ்யா..."

"நான் தேவதையில்லை.. தேவதைகிட்ட கேட்டதை-யெல்லாம் கொடுக்கிற சக்தியிருக்கும்.. எனக்கு அந்த சக்தி இருக்கா...? அது அந்த நேகாகிட்டதானே இருக்கு...?"

"ஏய்ய்ய்..."

"உங்க அப்பா அந்த தேவதையை அடையாளம் கண்டுக்கிட்டாரு... அவதான் உங்க வருங்காலப் பொண்டாட்டின்னு மதுரைக்கடையில அடையாளமும்

காட்டிட்டாரு.. அதுக்கப்புறமும் அந்த தேவதை பின்னால போகாம இந்த ராட்சஸி பின்னால எதுக்காக சுத்திச்சுத்தி வர்றீங்க...?”

“அடிதாண்டி வாங்கப் போற...”

“எனக்கு மன்னிக்கத் தெரியாதுங்க.. எதையும் மறக்கவும் தெரியாதுங்க.. அதெல்லாம் பெரிய மனுசங்களுக்குத்தான் கைவந்த கலையாய் வரும்... நான் பெரிய மனுஷியில்லீங்க.. அதனால அதப் போல தேவகுணத்தையெல்லாம் என்கிட்டத் தேடாம... உங்க அப்பா அடையாளம் கண்டுக்கிட்டு இருக்கிற தேவதையை நீங்களும் அடையாளம் காணப் போங்க...”

காவ்யா பொரிந்து தள்ளி விட்டு.. அவசரமாக மாடிப்படிகளில் இறங்கினாள்... எதிரே ஏறிவந்து கொண்டிருந்த கார்த்திக் அவளைக் கண்டதும் முகம் மலர்ந்தான்..

# 150

## அழகான ராட்சசியை... ஆண்டுவிட ஆசை கொண்டேன்...

**கோ**பத்துடன் வேக மூச்சுக்களை விட்டபடி படியிறங்கிக் கொண்டிருந்த காவ்யா கார்த்திக்கைக் கவனிக்கவில்லை... தன் போக்கில் இறங்கிக் கொண்டிருந்தவளை

“காவ்யா..” என்று காதலுடன் அழைத்த கார்த்திக்கின் குரல் திடுக்கிட வைத்து நிறுத்தியது...

இத்தனை காதலுடன் அழைப்பது அர்ஜீனின் குரலில்லையே என்ற கலவரத்துடன் நிமிர்ந்து பார்த்த காவ்யாவின் கண்ணெதிரில் கண்கள் முழுவதும் காதலை நிரப்பிக் கொண்டு நின்றிருந்த கார்த்திக் தென் பட்டான்..

‘இவனெங்கே வந்தான்...’

காவ்யா கலவரத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள்.. அவனிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டோமே என்றிருந்து அவளுக்கு... அது வீடு.. அவன் ஒன்றும்

செய்ய முடியாதுதான்.. ஆனால்.. வாய் நிறைய காதல் வசனங்களைப் பேசித் தள்ளி விடுவானே...

'என்ன கொடுமை இது...'

காவ்யா கைகளைப் பிசைந்தபடி படிகளில் இறங்க முற்பட்டாள்.. கார்த்திக் வழி மறித்தான்...

'இதென்னடா வம்பாப் போச்சு..'

பேசாமல் வந்த வழியிலேயே திரும்பி விடலாமென்று படிகளில் ஏறப் போனாள்... கார்த்திக் இரண்டே எட்டில் அவளுக்கு முன்னால் நின்று அதற்கும் வழிவிட மறுத்தான்...

காவ்யாவுக்கு பயமாக இருந்தது.. அவன் பாட்டுக்கு.. தடுத்து நிறுத்துகிறேன் பேர்வழியென்று அவள் கையைப் பிடித்து இழுத்து விட்டால் அவள் என்ன செய்வாள்...?

கார்த்திக் அந்த அளவுக்குப் போகமாட்டான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாத நிலையில்.. அவள் தவித்துப் போனாள்...

"என்னிடம் எதற்காக பயம் கவ்யா...? நான் உன்னுடையவன் இல்லையா...?"

உல்லாசமாக கார்த்திக் கேட்டபோது காவ்யாவுக்கு சுவரில் தலையை 'ணங்கு' 'ணங்கு' என்று மோதிக் கொள்ளலாம் போல இருந்தது..

“இப்படியெல்லாம் என்கிட்டப் பேசாதீங்க...” அவள் சிடுசிடுத்தாள்...

“ஏன்...? நான் பேசக் கூடாதா...?” அவன் அதற்கும் சிரித்து வைத்தான்

“கூடாது..” காவ்யா முறைப்பாக பதில் சொன்னாள்..

கார்த்திக் அதையெல்லாம் கண்டு கொள்கிற-வனாகவே இல்லை.. பருகு.. பருகென்று காவ்யாவை பார்த்தபடி.. வழியை விடாமல் மறித்து நின்றான்..

யாராவது காப்பாற்ற வந்து விட மாட்டார்களா என்ற ஏக்கத்துடன் காவ்யாவின் விழிகள் நாலாபக்கமும் சுற்றிச் சுழன்றன... யாரையும் காணோம்.. சரவணன் அம்புஜத்திடம் அவர் கலிவரதனின் கம்பெனியை வாங்கி விட்ட பெருமையை சொல்லி மகிழ்ந்து கொண்டிருக்க.. சுமதி அதைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தாள்...

“ஏன் கூடாது காவ்யா...?”

கார்த்திக் பேச்சை முடிக்க விடாமல் இழுத்துக் கொண்டு போகும் முயற்சியில் ஈடுபட்டான்.. அதை கண்டு கொண்டும் மௌனிக்க முடியாத கிடுக்கிப் பிடியில் மாட்டிக் கொண்ட காவ்யா.. வேறு வழியின்றி...

“கூடாதுன்னா கூடாதுதான்... நீங்க எதுக்காக என்கிட்டப் பேசனும்...?” என்று பல்லைக் கடித்தபடி கேட்டாள்...

கார்த்திக் அதையெல்லாம் சட்டை பண்ணிக் கொள்ளவே இல்லை... மிகப் பெரிய நகைச்சுவையை காவ்யா சொல்லிவிட்டதைப் போல.. அவள் பேச்சை ரசித்துக் கேட்டு...

“ஹா.. ஹா..” என்று சிரிக்க வேறு செய்தான்...

‘இது வேறயா...? போச்சுடா..’ மானசீகமாக தலையில் கைவைத்துக் கொண்டாள் காவ்யா...

“குழந்தைத்தனமா பேசற காவ்யா.. யுஸீ.. எனக்கு இந்தக் குழந்தைத்தனம் கூடப் பிடிச்சிருக்கு...”

‘குழந்தைத்தனமா பேசறேனா...? விட்டா என் கையில இவன் ஃபீடிங் பாட்டிலக் கொடுத்து உட்கார வைச்சுருவான் போல இருக்கே...’

“நீ குழந்தைதான் காவ்யா...”

‘அந்த மருக்கொழுந்து ‘பாப்பா’ன்னு கூப்பிட்டாலும் கூப்பிட்டுச்சு வாறவன்.. போறவனெல்லாம் என்னக் குழந்தைன்னு கொண்டாடவே ஆரம்பிச்சுட்டானுக..’

“உன் மனசும் குழந்தை மனசு...”

“விட்டா.. லாலி பாப்பை வாங்கிக் கொண்டாந்து குடுத்திருவானோ...”

“ஐ லைக் இட்...”

‘போடா.. நீயும்.. உன் லைக்கும்..’

“எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு காவ்யா..”

‘வேணாம்டா.. நானே நொந்து போயிருக்கேன்.. நீயும் காதல்வசனம் பேசிக் கொல்லாதே...’

“உனக்கும் என்னைப் பிடிச்சிருக்குன்னு தெரியும்...”

‘எதை வைச்சு இந்த முடிவுக்கு வந்த...? இருந்தாலும் உனக்கு இத்தனை தன்னம்பிக்கை ஆகாது... ஆளு அழகாயிருக்கோம்.. படிப்பு இருக்கு.. பணம் காசு இருக்கு.. அதனால இவளுக்கு நம்மளைப் பிடிச்சுத்தான ஆகனும்னு நினைச்சிட்டியா...?’

“ஆனாலும்... ஏதோ ஒரு வெட்கம்..”

‘உனக்கு இருக்கா...? இதைப் பாருடா...’

“அதனாலதான் என் முகம் பார்த்துப் பேச முடியாம தடுமாறுகிற...”

“அடியாத்தி..! இவன் என்னைச் சொல்றான்.. ஏண்டா.. டேய் உன்னைப் பாத்தா எனக்கு வெட்க.. வெட்கமா வருதுன்னு உன்கிட்ட வந்து நான் சொன்னேனா..?”

“எனக்கு புரியுது காவ்யா...”

‘என்னத்தைப் புரியுது..? என்னடா இவ நம்மளப் பாத்தாலே விளக்கெண்ணையைக் குடிச்சதைப் போல

முகத்தை வைச்சுக்கிறாளே.. இவளா நம்மள காதலிக்கப் போறான்னு நினைக்காம.. இஞ்சி தின்ன குரங்கைப் போல முகத்தை வைச்சுக்கிட்டு வியாக்கினம் பேசறியே.. உனக்கு எந்தப் பொண்ணோட மனசும் புரிஞ்சு தொலைக்காதுடா..'

"ஆயிரம்தான் இருந்தாலும் நீ ஒரு பெண்..."

'ஆஹா...! என்ன ஒரு கண்டு பிடிப்பு...! அட மடச்சாம்பிரானி...! கோடியாய் இருந்தாலும் நான் ஒரு பெண்தாண்டா...'

"சட்டுன்னு உன் மனசில இருக்கிற காதலை என்னிடம் சொல்லி விட முடியாதுதான்.."

'மெதுவாவும் சொல்ல முடியாதுடா.. உன்மேல காதல் இருந்தாத்தான சொல்ல முடியும்..? அந்தக் கருமாந்திரம்தான் இல்லன்னு சொல்றனே..'

"நீயாய் வந்து என்னிடம் உன் மனதில இருக்கிற காதலைக் கொட்டிக் கவிழ்க்கிற வரைக்கும் நான் காத்திருப்பேன் காவ்யா..."

'அதை எதுக்கு தேவையில்லாம பண்ற..? உனக்கு நூறுவயசாகி தடியூண்டி நடக்க முடியாம முடங்கிப் போனாலும் நான் உன்கிட்டக் காதலைச் சொல்லப் போறதில்ல...'

மாடிப்படிகளில் ஏறவும் முடியாமல்.. இறங்கவும் முடியாமல்.. நடுவில் மாட்டிக் கொண்ட காவ்யா.. பேசாமல் படிகளின் மத்தியிலிருந்து கீழே குதித்து விடலாமா என்ற யோசனையுடன் அதற்கும் தயாரானாள்...

'என்ன கழுதை.. கையோ.. காலோ முறியும்.. அவ்வளவுதான..? இங்கே மாட்டிக்கிட்டு இவன் பேசற காதல் வசனத்தைக் கேட்கிற கொடுமைக்கு அது எவ்வளவோ தேவலாம்...'

கார்த்திக் ஒன்றும்.. அவன் காதலைச் சொன்னதினால் காவ்யா கையைக் காலை முறித்துக் கொள்கிற அளவுக்கு மோசமான முக அமைப்புடன் இருக்கவில்லை.. அழகாகவே இருந்தான்.. ஏராளமான சொத்துக்களுக்கு அதிபதியான கோடிஸ்வரனாகவே இருந்தான்.. அவன் காதலை மறுத்துப் பேசும் அப்பா.. அம்மாவாக இல்லாமல்.. அவன் காதலை ஏற்று... ஆராதிக்கும் அப்பா... அம்மாவைப் பெற்றவனாக இருந்தான்.. இது அத்தனைக்கும் மேலாக.. காவ்யாவிடம் அன்பு காட்டிய.. பதிலுக்கு காவ்யா பாசம் வைத்திருக்கும் அம்புஜம் பாட்டியின் சொந்தப் பேரனாக இருந்தான்... இது அத்தனையிருந்தும்.. காவ்யாவின் காதலைப் பெற முடியாதவனாகவும் அவன் இருந்து வைத்தான்...

'குதிச்சுரலாம்....'

வேறு வழியேயில்லையென்று.. கார்த்திக்கின் காதல் வசனங்களை காது கொடுத்துக் கேட்க முடியாதவளாய்.. காவ்யா மாடிப் படியின் கைப்பிடியைத் தாண்டிக் குதிக்க முற்பட்டபோது...

“மேலே வராம அங்கே என்னடா பண்ணிக்கிட்டு இருக்க...?” என்ற அர்ஜீனின் குரல் கேட்டது...

‘உஸ்ஸ்.. அப்பாடி..’

கை.. கால் முறியாமல் தப்பித்து விட்ட நிம்மதியோடு காவ்யா அண்ணாந்து பார்த்தாள்.. மாடிப் படியின் மேல் படியில் அர்ஜீன் நின்றிருந்தான்..

“வந்துட்டானா.. இவன் வேற பூஜை வேளைக் கரடியா வந்து நின்று நின்று தொலைக்கிறான் காவ்யா.. உன்னிடம் நிம்மதியா இரண்டு நிமிசம் பேசவே முடியலை..” கார்த்திக் சன்னமான குரலில் காவ்யாவிடம் முணுமுணுத்தான்...

அந்த வார்த்தைகளைச் சொன்னதற்காகவே அவனை ஒரு வழி பண்ணி விட வேண்டும் என்ற ஆத்திரம் மனதில் மூள.. அவனை எதிரியைப் பார்ப்பதைப் போல பார்த்து வைத்தாள் காவ்யா...

அது தெரியாத பேதமையோடு.. காதல் கடலில் மூழ்கியிருந்த கார்த்திக்.. தொடர்ந்து சன்னமான குரலில் வார்த்தைகளைச் சிதற விட்டுக் கொண்டிருந்தான்...

“அன்னைக்கும் அப்படித்தான்.. தென்னந்தோப்பில.. அந்த ரொமான்ஸான சூழலில... என் காதலைக் கொட்டி விடனும்னு உன்னைத் தேடி வந்தேன்... இவன் பேச விட்டானா...?”

கார்த்திக் ஆதங்கத்தைக் கொட்டிக் கொண்டிருந்த போது... அர்ஜீன் நிதான நடையோடு இறங்கி அவர்களருகில் வந்தான்...

“ஹாய் கார்த்திக்...” ஏதுமறியாதவனைப் போல அவன் சொல்லி வைக்க..

“என்னண்ணா..?” என்று அலுப்புடன் கேட்டு வைத்தான் கார்த்திக்..

“எவ்வளவு பெரிய விசயம் நடந்திருக்கு...! சித்தப்பாவும்.. சித்தியும் பாட்டி ரூமில அதைப் பத்தித்தான் பேசி என்ஜாய் பண்ணிக்கிட்டு இருக்காங்க நீ என்னடான்னா யாருக்கு வந்த விருந்தோன்னு இங்கே நின்னுக்கிட்டு இருக்க.. வாட் ஹேப்பன் மேன்...?”

“நத்திங்ண்ணா...”

“அப்ப மேல வா...”

அர்ஜீன் அன்பாக தோளில் கை போடுவதைப் போல கார்த்திக்கின் தோளில் அழுத்தமாக கை போட்டு இறுக்கிக் கொண்டு... வலுக்கட்டாயமாக அவனை இழுத்தபடி மாடிப்படிகளில் எறலானான்...

‘தப்பிச்சேண்டா சாமி...’

காவ்யா வீட்டுக்குப் போக தயாராகி விட்டாள்.. அவளால் கார்த்திக்கிடம் மாட்டிக் கொண்ட படபடப்பிலிருந்து வெளியே வர முடியவில்லை..

கார்த்திக்கா விட்டு விடுவான்...? அவன் மாடிப்படிகளில் இழுபட்டு ஏறியபடி காவ்யாவை கைகாட்டி.. என்னவோ.. ‘அண்ணா ஐஸ்கிரிம்’ என்று சொல்வதைப் போல...

“அண்ணா.. காவ்யா..” என்று சொல்லி வைத்தான்..

அர்ஜீன் பல்லைக் கடித்தபடி காவ்யாவை முறைத்த முறைப்பில் அவளின் முதுகுத்தண்டு ஜில்லிட்டது..

‘என்ன இப்படிப் பார்க்கிறான்...? நான் என்னவோ இவன் தம்பிகிட்ட காதலைச் சொன்னதைப் போலயில்ல பார்த்து வைக்கிறான்..’

“அவங்க வருவாங்கடா... நீ வர்றப்ப அவங்க வராம இருப்பாங்களா..? ராமன் எங்கேயோ... சீதையும் அங்கேதானடா இருப்பாங்க...”

அவன் பேசியதில் காவ்யா கொலை வெறியாகிப் போக கார்த்திக்கோ மகிழ்ந்து போனான்..

“அசத்தற அண்ணா.. இதையெல்லாம் எங்கேயிருந்து பிடிப்ப...?” அவன் வியந்து போக...

‘என்னவோ கோழி பிடிக்கிறதப் போலயில்ல கேட்டுவைக்கிறான்... இந்த லட்சணத்தில் இவன்

ராமனாம்.. நான் சீதையாம்.. இவன் அண்ணன்காரன் மனசில கோபமிருந்தா என் முதுகில நாலு போடு போட வேண்டியதுதான... அதை விட்டுட்டு... யார் யார் கூடவோ என்னை இணை கூட்டறானே.. என்ன செய்தால் தேவலாம்...' என்று காவ்யா வெறுத்துப் போனாள்..

"வாங்க காவ்யா.."

கார்த்திக் நகராமல் அடம் பிடிக்க...

'இவனும் இவன் அண்ணனக் காப்பியடிக்க ஆரம்பிச்சுட்டானே.. மத்தவங்க முன்னால வாங்க.. போங்கன்னு சொல்றான்.. தனியா மாட்டிக்கிட்டா... 'வா.. போ'ங்கிறான்.. இவன் மனசுக்குள்ள என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கான்...?' என்று காவ்யா கோபமானாள்..

அதை அவனிடம் கேட்டால்.. உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன் என்று நிச்சயமாகச் சொல்வான் என்பதினால்.. அந்த நியாயத்தை அவனிடம் கேட்காமல் படியிறங்கப் போனாள்...

"காவ்யா..."

கார்த்திக் அர்ஜீனின் கைபிடியிலிருந்து நழுவ முயல.. அர்ஜீன் எரிமலையாகி.. காவ்யாவை பொசுக்கும் பார்வையைப் பார்த்தான்...

# 151

## நானிருக்கும் இடத்தினிலே
## அவனிருக்க ஆசை கொண்டேன்....

“நீங்க யாரைப் பார்க்க வந்தீங்க...?”

அர்ஜீனின் கேள்வியில் ‘கார்த்திக்கையா பார்க்க வந்தாய்...?’ என்ற மறைமுகக் கேள்வி பொதிந்து நிற்க.. காவ்யா கொதித்துப் போனாள்...

“நான் யாரையும் பார்க்க வரலை.. பாட்டியைப் பார்க்க வந்தேன்..” எரிச்சலுடன் பதில் சொன்னாள்..

“அப்புறம் எதுக்காக அவங்க ரூமைவிட்டு வெளியே.. வரனும்..?”

அர்ஜீன் விடாமல் கொக்கி போட்டான்...

‘இவனப் பார்க்க வரலை.. உன்னைப் பார்க்கத் தான் வெளியே வந்து தொலைத்தேன்...’ என்பதைச் சொல்ல முடியாதவளாக அவனையே இமைக்காமல் பார்த்து வைத்தாள் காவ்யா..

அவனோ அதற்கெல்லாம் அயர்கின்றவனாகத் தெரியவில்லை..நேகாவுடன் அவனைக் கோர்த்து விட முயன்ற குற்றத்திற்காக அவளை நோகடிக்கத் துடித்துக் கொண்டிருந்தான் அவன்...

“பாட்டி ரூமில இருக்காங்க.. நீங்க மாடிப்படியில நிற்கறிங்க.. அப்ப நான் என்னன்னு நினைப்பேன்..?”

“என்னன்னு நினைப்பீங்க...?”

“இவனைப் பார்த்துப் பேச வந்ததாத்தான் நினைப்பேன்...”

அர்ஜீன் பழிவாங்கி விட.. அப்படியே அவனை மாடிப் படிகளில் உருட்டி விட்டு விடலாமா என்று யோசித்தாள் காவ்யா...

கார்த்திக்கோ மகிழ்ந்து போனவனாக...

“கை கொடு அண்ணா..” என்று அர்ஜீனுக்கு கை கொடுத்து காவ்யாவின் மனதில் எரிந்து கொண்டிருந்த தீயில் எண்ணையை ஊற்றினான்..

“நினைப்பீங்க.. நினைப்பீங்க.. ஏன் நினைக்க மாட்டிங்க..? ஊரான் வீட்டுச் சொத்தே.. எங்க வீட்டு மத்தேங்கிறதைப் போல.. அடுத்தவீட்டுப் பெண்ணைப் பத்தி ஆயிரம் நினைப்பை நினைப்பீங்க.. உங்களுக்கென்ன சார்.. இதுவே உங்க வீட்டுப் பெண்ணாயிருந்தா இப்படி..

நாக்குமேல பல்லப் போட்டு பேசி வைப்பீங்களா...?” வரிந்து கட்டிக் கொண்டு போர்களத்தில் இறங்கினாள் காவ்யா...

“ஊரான் வீட்டுப் பொண்ணுன்னு யார் நினைத்தது..? என் வீட்டுப் பொண்ணுன்னுதான் நான் நினைக்கிறேன்.. எங்கே..? அங்கேதான் இந்த நினைவே மனதில இருக்கிறதைப் போலத் தெரியலையே...”

அர்ஜீன் பேச.. கார்த்திக் யோசனையாகி அவன் முகம் பார்த்து..

“எனக்காகத்தானே இதையெல்லாம் பேசறண்ணா..? ஐ மீன் உன் வீட்டுப் பெண்ணுன்னு சொன்னதுக்கு மீனிங்.. நம்ம வீட்டுப் பெண்ங்கிறதுதானேண்ணா..?” என்று சந்தேகம் கேட்டான்...

அர்ஜீன் பதில் சொல்லாமல் கண்சிமிட்டி சிரித்து வைத்தான்... அதை கார்த்திக் சொன்னதை அவன் ஒப்புக் கொண்டதாக அர்த்தப்படுத்திக் கொண்ட கார்த்திக் நிம்மதியானான்...

“யார் வீட்டுப் பெர்ண்ணாவும்.. யாரும் நினைக்க வேணாம்.. உங்க சோலி உங்களுக்கு.. என் சோலி எனக்கு.. நான் வீட்டுக்குக் கிளம்பறேன்.. பாட்டிகிட்டச் சொல்லிருங்க..” காவ்யா எரிச்சலுடன் படியிறங்கப் போனாள்..

“நானென்ன உங்களுக்கு தூது சொல்லத்தான் வந்திருக்கேனா...? பாட்டியைப் பார்க்க வந்தா.. அவங்க கிட்டச் சொல்லிட்டுக் கிளம்பிப் போங்க.. யார் கையைப் பிடித்து இழுத்தது...?” என்று கேட்ட அர்ஜீன்

“அண்ணா...” என்று கார்த்திக் நெஞ்சைப் பிடித்துக் கொள்ளவும்...

“தட் மீன்ஸ்.. யார் போக விடாமல் நிறுத்தி வைத்ததுன்னு அர்த்தமாகுதுடா..” என்று எடுத்துச் சொல்லி அவனை ஆறுதல் படுத்தினான்...

“அதானே..” கார்த்திக் நெஞ்சை விட்டு கையை எடுத்தான்..

“இந்தாருங்க.. இது மதுரையில்லங்கிறதுக்காக ஆடிப் பாக்க வேணாம்... ஒரு தகவலச் சொல்லி விட்டாப் போதும்.. எங்க ஊரு ஜனங்க.. மாட்டுவண்டி.. சைக்கிளு.. மோட்டார் சைக்கிளு.. டாடா சுமோன்னு அகப்பட்ட வாகனங்களில ஏறி உக்காந்துக்கிட்டு இங்கே கும்பலா வந்து நின்னுருவாங்க.. சொல்லிப்புட்டேன்..” காவ்யா படபடத்தாள்...

“எதுக்கு காவ்யா சண்டைக்கு வர்றீங்க..?” கார்த்திக் புரியாமல் வினவினான்...

“அதுவாடா கார்த்திக்...? அவங்க கையைப் பிடித்து இழுத்திருவேன்னு நான் சொன்னேனில்ல... அதில

கொதிச்சுப் போய் சண்டைக்கு வர்றாங்கடா... என்னதான் இருந்தாலும் இன்னொருத்தனின் கையைப் பிடிக்க வேண்டிய பெண்ணிடம் நான் இப்படிப் பேசியிருக்கக் கூடாதுதான்.. ஸாரிங்க காவ்யா...” தேள் கொடுக்காய் கொட்டினான் அர்ஜீன்...

காவ்யாவுக்கு அழுகையே வந்து விட்டது...

*‘இன்னொரு கைகளிலே...*
*யார்... யார்.... நானா...?’*

அவள் மனம் கண்ணதாசனின் பாடல் வரிகளில் நிலைகொண்டது.. அவன் முன்னால் நின்றால்தானே வம்பு என்று அவள் வேகமாக படியேறி அவனைக் கடந்து அம்புஜத்தின் அறைக்குள் போய்விட்டாள்...

அர்ஜீனின் மனதில் இனம் புரியாத திருப்தி நிலவியது.. கலங்கிய கண்களுடன் போன காவ்யாவை மன நிறைவுடன் பார்த்தபடி இனிக் கார்த்திக்கின் தோள் தழுவி அவனைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்ற நினைவுடன் கையை எடுத்து விட்டான்...

விடுபட்ட கார்த்திக் வீறு கொட் வேங்கையாக அம்புஜத்தின் அறைக்குள் பாய... அங்கே அவனுக்கு முன்னால் போய் நின்று கொண்டிருந்தான் அர்ஜீன்..

‘சிங்கம்டா...’ அவன் பார்வை சொல்லியது..

“இங்கே பாரு.. நம்ம கார்த்திக்கும் வந்துட்டான்.. தெரியுமாலே.. நம்ம அர்ஜீன் சாதிச்சுப் புட்டானில்ல..” சரவணன் ஆர்ப்பரிப்பை கைவிடாமல் மகனிடம் புளகாங்கிதப் பட்டார்...

கார்த்திக்கிற்கு சும்மாவே அர்ஜீனின் சாதனைகளைக் கேட்கப் பிடிக்காது.. இப்போதோ.. காவ்யா அங்கிருந்தாள்.. அவளின் முன்னிலையில்.. அவனைப் பெற்றத் தகப்பனார்.. அவனைவிட்டு விட்டு... அர்ஜீனை சாதனையாளன்... சாதிக்கப் பிறந்தவன் என்றெல்லாம் சொல்லியதில் அவனுக்கு உடன்பாடில்லை...

அதனால் அவன் மௌனம் சாதிக்க.. அதுவும் அவனுக்கு வில்லங்கமாகவே வந்து சேர்ந்தது..

“என்னலே... வாயில பிரியாணியை அதக்கிக்கிட்டு இருக்கிறதைப் போல பேசாம இருக்கிற...? உனக்கு விவரமே தெரியாதா...? சரியாப் போச்சு போ.. இப்படியிருந்தா எப்படிலே இம்புட்டுச் சொத்தையும் கட்டிக் காப்பாத்துவ...?”

“டாடி...”

“ஏன்லே... நினைச்சது நடந்திருக்கு... அதை அர்ஜீன் நடத்திக் கொடுத்திருக்கான்.. நீ ஒரு ஆணியைக் கூடப் பிடுங்கலைன்னாலும் பரவாயில்லை.. அவன் மலையையே

பெயர்த்திருக்கானில்ல.. அதையாவது தெரிஞ்சு வைச்சுக்க வேணாமா...?"

"திஸ் இஸ் எனோஃப் டாடி..."

"போதும்ன்னு சொல்லிட்டா ஆச்சாலே...? நீ அவனைப் பார்த்துக் கத்துக்க வேணாமா..? அவனைப் போல ஆகாயத்தில பறக்கலைன்னாலும் பரவாயில்ல.. பூமியில ஒரு புல்லையாவது நட்டு வைக்கலாமில்ல...?"

"ப்ளீஸ் டாடி..."

"எதுக்குத்தான் ப்ளீஸ் போடறதுன்னு ஒரு விவஸ்தை வேணாமாலே..? எல்லாத்துக்கும் ப்ளீஸ் போடறதா... இதுவே அர்ஜூனைப் பாருலே.. அவன் யார்கிட்டயும் ப்ளீஸ் போட மாட்டான்.. அவனிடம் தான் மத்தவங்க ப்ளீஸ் போடுவாங்க.. நீ அப்படி வைத்துக்கலன்னாலும் பரவாயில்ல.. நீயாவது ப்ளீஸ் போடாம இருக்கலாமில்ல...?"

பரவாயில்லை.. பரவாயில்லை.. என்று சொல்லிக் கொண்டே.. கார்த்திக்கின் காலடியில் அவனைப் பெற்றெடுத்த தகப்பன் பறித்த குழியில் அவன் நொந்து நூலாகிப் போனான்...

இனி 'டாடி' போட்டால் எல்லாம் வேலைக்கு ஆகாது என்ற நிலவரம் அறிந்தவனாக...

“பாட்டி..” என்று கலவர காலத்திலும் கதிகலங்காமல் கை கொடுக்கும் அம்புஜத்தை நோக்கி அபயக் குரலை எழுப்பினான்..

அவள் உடனடியாக மகனை அடக்கி.. பேரனைக் காப்பாற்ற களத்தில் இறங்கி...

“போதும்லே... ” என்ற அதட்டலை சரவணனை நோக்கி அனுப்பி வைத்தாள்...

“அதுக்கில்லம்மா..” சரவணன் அப்போதும் பேச்சை நிறுத்துவேனா என்று அடம் பிடித்தார்...

“அடங்குலே.. இப்ப எதுக்காக உன் மகனை இந்தக் காய்ச்சு காய்சசற...? இவனுக்கு அர்ஜீனோட அருமை பெருமை தெரிந்திருந்ததினாலதான் நேற்றுச் சாயங்காலம் நீ அர்ஜீன் மேலே பழி போட்டப்ப.. இவன் வாயைத் திறக்காம இருந்தான்.. அதை மனதில வைத்துக்க..”

அம்புஜம் போட்ட போட்டில் புஸ்வாணமாகி அடங்கிவிட்ட சரவணன் அர்ஜீனை பரிதாபமாகப் பார்த்து..

“நீ எதையும் மனதில வைத்துக்கலயில்ல அர்ஜீன்..” என்று கேட்டார்...

“இல்லவேயில்லை சித்தப்பா..” அர்ஜீன் உறுதியளித்தான்...

“யாரு நீ...!” சரவணன் நிம்மதியானார்..

“நான் சென்னைக்கு கிளம்பனும் சித்தப்பா..” காவ்யாவை கடைக் கண்ணால் பார்த்தபடி சொன்னான் அர்ஜீன்...

அவன் எதிர்பார்த்ததைப் போலவே முகத்தில் இருள் பரவ அவனை ஏக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் காவ்யா.. அவள் விழிகளில் பிரிவுத்துயர் மண்டிக்கிடந்தது.. அதில் பொங்கி வழிந்த தாபத்தில் கட்டுண்டு போன அர்ஜீனுக்கு நான் போகவில்லை.. உன்னுடனே இருந்து விடுகிறேன் என்று சொல்லத் தோன்றியது...

‘அது மட்டும் போதுமா...’ அவன் மனதைக் கடினப் படுத்திக் கொண்டான்...

அவள் மனதிலிருக்கும் முள்ளைப் பிடுங்கி வெளியில் போடாமல் அவளைக் காதல் செய்வது உசிதமல்ல என்று அவன் எடுத்திருக்கும் முடிவை நினைவு படுத்திக் கொண்டான்..

அவன் பார்த்தால்.. அவள் நிச்சயமாக அவனைப் பார்ப்பாள் தான்.. அவன் தொட்டால் மறுக்காமல் அவன் கைகளில் குழைவாள்தான்... ஆனால் அது மட்டும் போதுமா...? அதைத் தாண்டி.. அவன் வாழ்வில் இணைய அவள் மனதில் மறுப்பிருக்கிறதே..

“என்ன அர்ஜீன்.. திடிர்ன்னு சொல்ற...?” சுமதி கேட்டாள்...

“இல்லை சித்தி... ஆச்சுவலாய் நான் லாஸ்ட் வீக்கே போயிருக்கனும்.. சித்தப்பாவுக்கு இந்த டீலிங்கை முடித்து கொடுக்கனும்ங்கிறதுக்காக வெயிட் பண்ணினேன்.. இப்ப அப்படியில்லை.. நான் வந்த வேலை முடிந்திருச்சு.. இனி இங்கே எனக்கென்ன வேலை...? தோப்பில் ரெஸ்ட் எடுக்க வேண்டிய அளவுக்கு எடுத்தாச்சு.. சென்னையில அர்ஜன்ட் வொர்க்ஸ் எனக்காக காத்துக் கிட்டிருக்கு.. நான் உடனே போயாகனும்..” அர்ஜீன் விளக்கம் சொன்னான்...

“அப்படின்னா.. மதிய லஞ்சுக்கு வெரைட்டியாய் விருந்துக்கு ஏற்பாடு பண்ணு சுமதி...” சரவணன் உத்தரவிட்டார்..

சுமதிபரபரப்புடன் கீழே போனாள்.. வீட்டுக்குக் கிளம்ப வேண்டுமென்று சொன்னதை மறந்து போனவளாக காவ்யா அம்புஜத்தின் அருகிலேயே அமர்ந்து விட்டாள்.. அவள் பார்வை அர்ஜீனின் மீது படிந்து.. படிந்து விலகியது..

அவனும் சரவணன்.. கார்த்திக்.. அம்புஜத்துடன் பேசியபடி காவ்யாவின் பார்வைகளைச் சந்தித்துக் கொண்டேயிருந்தான்... இருவர் பார்வைகளும் சந்தித்து மீண்டபோது.. அவர்களுக்கு மட்டும் புரிந்த ரகசிய மின்னல் அவர்களின் விழிகளில் மின்னி மறைந்தது..

பிரியாணி.. கோழிவறுவல்.. மீன் பொரியல்.. அவித்த முட்டையென்று அசைவ விருந்தில் தூள் பரத்தியிருந்தாள் சுமதி... எல்லோரும் கலகலப்பாக பேசியபடி விருந்தை ஒரு கைபார்க்க.. காவ்யாமட்டும்.. சுரத்தேயில்லாமல்.. சோர்ந்த முகத்தோடு.. பிரியாணியில் விரல்களை அளைய விட்டுக் கொண்டிருந்தாள்...

மதிய உணவுக்குப் பின்னால் ஹாலில் அவர்கள் குழுமிய போது.. அம்புஜம் காவ்யாவை பாடச் சொன்னாள்.. மகிழ்வான மனநிலையுடன் இருந்த சரவணனும்... சுமதியும் அதை ஆமோதித்தார்கள்.. காதல் மனநிலையிலிருந்த கார்த்திக் அதை ஆதரித்தான்...

அர்ஜீன் மட்டும் எதுவும் சொல்லாமல் காவ்யாவை வெறுமையான மௌனப் பார்வையொன்றை பார்த்து வைத்தான்...

'சென்னைக்குப் போகிறானா..?' காவ்யா மனம் தவித்தாள்...

இனி எப்போது அவனைக் காண்பது என்று தெரியாமல் மனம் துடித்தாள்.. ஒரு வார்த்தை கூட அதைப் பற்றிச் சொல்லாமல் கிளம்பிப் போகிறவனை இழுத்து நிறுத்தும் அன்புக் கயிறு அவளிடம் இல்லையா என்று அவள் மனம் கேள்வி கேட்டது...

*“எங்கே நீயோ...*
*நானும் அங்கே...*
*உன்னோடு...”*

அவள் பாட்டை ஆரம்பித்ததும் அம்புஜம் குதூகலமாகி விட்டாள்...

## 152

*பிணைத்திருக்கும் அன்புகயிறை*
*நீ உணர ஆசை கொண்டேன்...*

“**ச**ரவணா.. இது எங்க காலத்துப் பாட்டுடா..”

அம்புஜம் குழந்தைத்தனமாக குதூகலித்தாள்.. அவளின் குதூகலத்தில் சுமதி சிரித்தாள்... சரவணன் அன்புடன் காவ்யாவைப் பார்த்து...

“பாடும்மா.. ஏன் நிப்பாட்டிட்ட...? பாடு..” என்றார்..

அவனுக்காகத்தான் காவ்யா பாடுகிறாள் என்ற நினைவில் கார்த்திக் அவளை ஒரு மார்க்கமாக பார்க்க ஆரம்பிக்க.. இந்தப் பார்வையை சகித்தபடி பாடுவது எப்படி என்று நொந்து போனாள் காவ்யா...

அவளுடைய பாட்டுடைத் தலைவனாகிய அர்ஜீனோ.. ஆழ்ந்த பார்வையுடன் தோரணையாக.. என்னவோ பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை போல கால் மேல் கால் போட்டு அமர்ந்து கொண்டான்... அவனின் அந்த தோரணையில் மயங்கிப் போனவளுக்கு அவனருகே அமர்ந்து.. அவன் முடி கோத வேண்டுமென்ற ஆசை மேலிட்டது.. அந்த ஆசைகளின் அலைகளால் உந்தப் பட்டவளுக்கு.. அந்த அறையிலிருந்த மற்றவர்களைப் பற்றிய நினைவே மறந்து போய் விட்டது... அர்ஜீன் மட்டுமே அவள் கண்ணுக்குத் தெரிய... அவள் ஆசைப்- பட்டவனை தடுத்து நிறுத்தி, தன்னிடம் தக்க வைத்துக் கொள்ளும் வேகத்துடன் பாடினாள்...

*“எங்கே நீயோ – நானும்*
*அங்கே உன்னோடு...*
*இதைத்தானே சொல்லி*
*வந்தேன் என் கண்ணோடு*
*உன் பின்னோடு...*
*எங்கே நீயோ...*
*நானும் அங்கே உன்னோடு....”*

அது அவளுக்கும்.. அவனுக்குமான பாட்டு என்பதை உணராமல் மற்றவர்கள் அதை ரசித்துக் கொண்டிருக்க..

அவனும்.. அவளும் மட்டும்.. ஆசைகளினால் பின்னப்பட்ட அவர்களுக்கு மட்டுமே சொந்தமான ஒரு அந்தரங்க உலகத்துக்குள் பிரவேசித்தார்கள்..

அர்ஜீன் அந்தப் பாட்டைக் கேட்டதில்லை... காவ்யா அறிமுகப்படுத்தி வைத்ததால்.. பழைய பாடல்களைக் கேட்டுப் பழகியவன் அந்தப் பாடலை எப்படித் தவற விட்டான் என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்...

எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு என்றவளுக்கு.. எதுவும் மனதில் பதியவில்லை.. அவளை விட்டுப் போக நினைக்கும் அவனது நினைவு மட்டுமே அவள் நினைவில் இருந்தது.. அவனிடம் ஆசை வைத்தவள் அவனை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்க.. அவனும் அவளும் சந்தித்த ரகசிய சந்திப்புக்களை மறந்து கிளம்பிக் கொண்டிருந்தவனின் மீது அவளுக்குள் ஆத்திரம் அனலாக மூண்டது.. அவனுக்காக அவள் ஏங்கிய ஏக்கத்தையும் நினைக்கும் நினைவுகளையும் அவனுக்கு உணரவைக்க அவள் முயன்றாள்...

*“வாசலிலே உன்*
*காலடியோசை கேட்டிருப்பேன்..*
*வந்த பின்பு உன் ஆசை*
*முகத்தை பார்த்திருப்பேன்...*

*காதல் வந்தால் சேயாவேன்..*
*கருணை வந்தால் தாயாவேன்..*
*கண்ணா உந்தன் நிழலாவேன்..*
*உனக்கென நான் வாழ்வேன்..”*

காவ்யாவின் பாடல் அவனை ஆக்ரமித்ததில் அவனது இரும்பு மனதும் லேசாக அசைந்து கொடுத்தது.. இரும்பையும் இளக்கும் அவள் பாடல் வரிகளில் அவன் தன்னைக் கரைத்துக் கொண்டிருந்தான்...

ஆனால் அதற்காகவெல்லாம் அவனது பயணத்தை அவன் நிறுத்திவிட மாட்டான் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.. அவனுக்குத் தெரியும்... பிரிவுத் துயரில் பாடி மருகுகிறவள்... அருகே நெருங்கினால் அவனுடைய அப்பாவின் கொடும் சொற்களை நினைவுபடுத்தி அவனிடமிருந்து விலகி நிற்பாள் என்பது..

அவளையே சுற்றிச் சுற்றி அவன் வந்து கொண்டிருந்தால் அவள் சந்தோசமாகத்தான் இருப்பாள்.. எட்ட நின்று ஆசைப் பார்வைகளை அள்ளி விட்டுக் கொண்டிருந்தால் ஆனந்த மாகத்தான் இருப்பாள்.. அந்த எல்லைக் கோட்டைத் தாண்டி.. அவளை அவனுக்குரியவளாக ஊரறிய சொல்லி விடும் முயற்சியில் அவன் இறங்கினால் மட்டும் பின்வாங்கி விடுவாள்...

*"காலம் வரும்.. என் கனவுகளெல்லாம்..*
*கனிந்து வரும்...*
*காத்திருப்பேன்.. என் பாதையில்..*
*தெய்வம் இணைந்து வரும்..."*

கனவுலகில் வாழ்ந்து கொண்டிருந்தவள் விழியுயர்த்திக் அவனைப் பார்த்தபோது.. என் பின்னாலே வந்து விடு என்று சொல்லத் தோன்றியது அவனுக்கு...

அவன் கம்ப்யூட்டர் உலகில் வாழ்பவன்.. கனவை நனவாக்கி விடும் வேகம் கொண்டவன்.. அவனுடைய காதலை அவள் ஏற்றுக் கொள்வதற்காக மட்டுமே காத்துக் கொண்டிருந்தவன்...

காவ்யா மட்டும் காலாகாலத்தில் அவன் காதலை ஏற்றுக் கொண்டிருந்தால்.. கனடா போவதற்கு முன்னாலேயே அவளைத் திருமணம் செய்து கொண்டு.. கையோடு அவளை அழைத்துக் கொண்டு தேநிலவு பயணமாக கனடாவுக்குப் போயிருப்பான்..

அவள் அதைச் செய்து தொலைக்கவில்லை.. அவனது காதலுக்குப் பதிலைச் சொல்லாமல் அவனைப் பாடாய் படுத்திக் கொண்டிருந்தாள்.. இன்று போல அன்றும் அவன் பிரிவைச் சொல்லிய போதுதான் அந்த அதிர்வில் அவள் மனதிலிருந்த அவன் மீதான ஆசைகளை அவள் ஒப்புக் கொண்டாள்..

எப்போதுமே பிரிவைச் சொன்னால் மட்டுமே அந்த அழுத்தக்காரியின் மனம் இளகுகிறது என்று புரிந்து வைத்திருந்ததினால்தான் அவன் அடுத்து அந்த அஸ்திரத்தை பிரயோகித்திருந்தான்...

அதையறியாத அந்த பாட்டுக்காரி.. அவனைத் துளைக்கும் பார்வையில் துளைத்தபடி.. பாட்டாலே தொட்டுக் கொண்டிருந்தாள்..

*"கண்ணில் நீரைக் காணாமல்..*
*கவலை ஏதும் கூறாமல்..*
*என்னை எண்ணி வாழாமல்..*
*உனக்கென நான் வாழ்வேன்.*
*எங்கே நீயோ.. நானும்*
*அங்கே உன்னோடு..."*

அவளது வார்த்தைகளின் நிச்சயத்தில் அவன் மனம் பொங்கித் ததும்பியது.. அதை அவனும் அறிந்து வைத்திருந்ததினால்தான் அவளைப் பிரிந்து செல்லும் முடிவுகளை துணிச்சலுடன் எடுக்கிறான் என்பதை அவள் அறிவாளா என்று அவன் தனக்குள் கேட்டுக் கொண்டான்...

"அருமையாப் பாடினம்மா.." சுமதி பாராட்டினாள்...

"நான் கேட்டதேயில்ல.. ஆனாலும்.. காவ்யா பாடினப்ப கேட்க நல்லாத்தான் இருந்தது.." என்றான் கார்த்திக்...

“எங்க காலத்து ஹிட்பாட்டுலே இது.. காவ்யா இதைக் கேட்காமலா பாடியிருக்கா..? உனக்கெல்லாம் பாட்டுக் கேட்கிற ரசனை இருக்காலே...?” அம்புஜம் அதட்டினாள்...

“பாட்டுன்னாலே இனிமைதாம்மா.. இது பழைய காலத்துப் பாட்டு.. இருந்தும் உன்னைப் போல இளைய தலைமுறையும் இதை ரசிச்சுக் கேட்டுப் பாடியிருக்-காங்கன்னா.. உண்மையிலேயே இதைப் பாராட்டத்தான் வேனும்..” தன் பங்குக்கு சரவணனும் பாராட்டிவைத்தார்..

அர்ஜீன் எதையும் சொல்லவில்லை.. அமர்த்தலான பார்வையுடன் எழுந்து கொண்டான்.. காவ்யா மனம் பதறினாள்...

‘கிளம்பிட்டானா..?’

அவன் ஆமாம் என்று அங்கிருந்த அனைவரிடமும் சொன்னான்...

“பிளைட்டுக்கு டயமாச்சு பாட்டி..” காவ்யாவைப் பார்ப்பதை தவிர்த்தான்...

‘போகாதே..’ காவ்யா மனம் துடித்தாள்...

“அப்புறம் அர்ஜீன்.. கலிவரதன் கொடுத்த டாகுமென்ட்ஸ் பேப்பர்ஸில சில டவுட்ஸ் இருக்கு.. அதை கிளியர் பண்ணிக்கனும்...”

சரவணன் அர்ஜீனுக்கு விடை கொடுக்க வேண்டுமென்பதை மறந்து.. கம்பெனி விவரங்களை கேட்க ஆரம்பித்துவிட்டார்..

அவர் கவலை அவருக்கு.. காவ்யாவின் கவலையை பற்றி அவருக்குத் தெரியுமா என்ன..? அதைத் தெரிந்து கொண்டிருப்பவனே அவளைத் திரும்பிப் பார்க்க மாட்டேன் என்கிறானே...

அர்ஜீன் அவர் கேட்ட விவரங்களை உன்னிப்பாக கவனித்துவிட்டு.. அதற்கான பதில்களைச் சொல்லி முடித்தான்...

“போய்விட்டு வரவாசித்தி..” சுமதியிடம் சொல்லிக் கொண்டான்...

“விளையாட்டுத்தனத்தை விட்டுவிட்டு இனி சித்தப்பாவுக்கு தோள் கொடுக்கப் பார் கார்த்திக்...” தம்பிக்கு அறிவுரை சொன்னான்...

மறந்தும் காவ்யாவின் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காமல் அறையை விட்டு வெளியேறி விட்டான்.. காவ்யா விக்கித்து நின்று விட்டாள்...

“கால் வலிக்குது.. இப்பத்தான் நின்னு நின்னு மாடியிறங்கி ஏறி வந்தேன்.. திரும்பவும் போக முடியல.. இல்லைன்னா அவனை வாசல் வரைக்கும் கூடப் போய்

வழியனுப்பி வைத்து விட்டுத்தான் வந்திருப்பேன்...” கால்களைத் தடவியபடி சொன்னாள் அம்புஜம்..

கால்வலியில்லாத சரவணனும்.. கார்த்திக்கும் அர்ஜீனுடன் பேசியபடி கீழே இறங்கிவிட...

“உங்களுக்கு ஏதும் வேணுமா அத்தை..?” என்று கேட்டுவிட்டு..

“எதுவும் வேணாம்மா.. நீயும் அவங்க கூடப் போ...” என்ற அம்புஜத்தின் அனுமதியை வாங்கிக் கொண்ட சுமதி அவசரமாக அவர்களைத் தொடர்ந்தாள்...

இது எதையும் செய்ய முடியாமல் பித்துப் பிடித்ததைப் போல நின்று கொண்டிருந்த காவ்யா.. அம்புஜத்தை மறந்து போனவளாக.. அறையை விட்டு வெளியேறி.. மாடி ஹாலின் முடிவிலிருந்த பால்கனியில் போய் நின்று எட்டிப் பார்த்தாள்..

‘ஒரேயொரு பார்வை பார்த்துவிடு...’

அவள் மனம் ஏங்கியது.. அவளது ஆசைக்குரியவன் அவளை விட்டுப் பிரிந்து போகிறான்.. அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் ஓர் பார்வையில் விடைபெறாமல் அவளைத் துறந்து போகிறான்.. அவளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் விரைந்து போகிறான்.. அவனை தடுக்க வழியின்றி அவள் நிலை குலைந்து நிற்கிறாளே... இதை என்னவென்று சொல்வது..?

வீட்டுக்குள் இருந்து வெளிப்பட்ட அர்ஜீன்.. சரவணனிடம் பேசியபடி.. தோட்டத்தைப் பார்த்தான்.. சுமதியிடம் பேசியபடி வாசலைப் பார்த்தான்.. கார்த்திக்கிடம் பேசியபடி கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.. மறந்தும் அண்ணாந்து மாடி பால்கனியைப் பார்க்கவில்லை...

காற்றில் ஆடிய அவன் முடியில் காவ்யாவின் மனமும் சேர்ந்து ஆடியது.. நிமிர்வாக நின்று சரவணனின் கேள்விகளுக்கு பதில் சொல்லியபடி ஒற்றைவிரலை நெற்றியில் படியவிட்டு வருடிக் கொடுத்தவனின் மீது அவளுக்குள் ஆசை பெருகியது..

அவன் தலையசைத்தான்.. மற்றவர்கள் கையசைக்க.. கார் கதவைத் திறந்து அவன் ஏறப் போன அந்த நொடியில் அவள் மனம் இற்றுப் போனது...

‘என்ன ஏறெடுத்துப் பார்க்கக் கூட வெறுத்துப் போய் கிளம்பி விட்டானா..? என்மேல அவனுக்கிறருக்கிற ஆசையின் அளவு இவ்வளவுதானா..? அவன் மேல எனக்கிருக்கிற ஆசையை அவன் புரிஞ்சுக்கிட்டதும் இவ்வளவுதானா..?’

காவ்யாவின் கண்கள் கலங்கி.. கண்ணீர் துளிகள் அவள் கன்னத்தில் விழுந்து சிதறிய அந்தப் பொன்னான ஓர் நொடியில் அவன் அண்ணாந்து பார்த்தான்..

'பார்த்துட்டான்...'

கண்ணீர் விழிகளோடு நின்றிருந்த காவ்யாவின் கண்கள் மின்னிய அந்த நொடியில் அவன் அவளுக்கு மட்டும் தெரியும் படியான தலையசைவையும்.. கையசைவையும் பரிசளித்துவிட்டு பறந்து விட்டான்..

# 153

*உன் ஒருபார்வையில் நான் உயிர்ப்பதை...*
*நீ உணர்ந்துவிட ஆசைகொண்டேன்...*

**உ**லகமே வண்ணமயமானதாக காவ்யாவுக்கு தோன்றிய அந்த ஒரு நொடியை அவளுக்கு பரிசளித்து விட்டு.. அடுத்த நொடியில் பறந்து விட்டான் அர்ஜீன்...

அவளுக்கு உலகமே வெறுமையானதாக தோன்றியது...

'ஏண்டா வந்த..?' மனதுக்குள் மறுகினாள்...

'காதலை நான் சொன்னதும் பிரிஞ்சு போனவன்.. மறுபடி வந்ததும் என்னவெல்லாம் பேசனும்னு நான் ஏங்கித் தவிச்சேனோ.. அது அத்தனையையும்.. இந்த

திருநெல்வேலிச் சீமையிலே உன்கூடப் பேசித் தீர்த்துட்டேண்டா.. அதுக்காகவா நீ தேடி வந்த..?'

அவளது கண்ணீர் மடைதிறந்த வெள்ளம் போல பொங்கி வழிந்து கொண்டிருந்தது.. அதைத் துடைக்க துடைக்க பெருகிக் கொண்டேயிருந்தது..

'உனக்கும் எனக்குமான சொந்தத்தை நான் ஒப்புக்கிட்ட மறுநொடியே நீ கனடாவுக்கு மறந்து போன.. நீ வரும் நாளுக்காக வழிமேல கண்ணை வைச்சு.. நான் காத்திருந்த காலத்தையெல்லாம் நீ அறிய மாட்ட..' அவள் முகத்தை அழுந்தத் துடைத்தாள்.. கண்ணீர் துளிகள் அதற்கெல்லாம் அடங்குவேனா என்று பொங்கி வரும் காவேரியாக பெருகித் ததும்பிக் கொண்டிருந்தது...

'இங்க உன்னக் கண்டவுடனே என் மனசு எப்படிக் குதிச்சதுன்னு உனக்கு எப்படிடா தெரியும்..? வாழ்க்கை மேல ஆசையில்லாம.. பிறந்த ஊரை விட்டு ஓடிவந்தவ மனசில திரும்பவும் ஆசைத்தீயை பத்த வைச்சு.. மூட்டி விடத்தான் நீ தேடி வந்தயா...?'

காவ்யா... மௌனமாக பக்கத்திலிருந்த குளியலறைக்குள் புகுந்தாள்.. முகம் கழுவித் துடைத்து விட்டு... அம்புஜத்தைத்தேடிப் போனாள்.. அவள் மனம் அரற்றிக் கொண்டிருந்தது...

'நீ மூட்டி விட்டுப் போயிட்ட.. அந்த ஆசைத்தீயில நான் சாம்பலாகிக்கிட்டிருக்கேனே.. அது உனக்குத் தெரியுமா...?'

பெருமூச்சுடன் அம்புஜத்தின் அறைக்குள் நுழைந்த போது அவள் கட்டிலில் கால் நீட்டிப் படுத்திருந்தாள்...

"பாட்டி.. நான் வீட்டுக்குப் போகனும்..." என்ற காவ்யாவின் குரலில் நிமிர்ந்து பார்த்தவள்...

"போகலாம் காவ்யா.. இப்பத்தான் அர்ஜீன் போயிருக்கான்..? உடனே நீயும் கிளம்பினா எனக்கு வெறிச்சுன்னு இருக்கும்.. கொஞ்ச நேரம் கழிச்சுப் போயேன்..."

முடியாது என்று கூவத் தோன்றியது காவ்யாவுக்கு.. அவனில்லாத வீடு... அம்புஜத்திற்கு வெறுமையாய் தோன்றுவதைவிட... அதிக அளவு வெறுமையை காவ்யாவுக்கு தந்து கொண்டிருக்கிறது என்று எப்படி அவளால் சொல்ல முடியும்..?

"இல்லை பாட்டி.. தலையை வலிக்கிறதைப் போல இருக்கு.. நான் போயிட்டு வாரேன்.." என்று மட்டும்தான் அவளால் சொல்ல முடிந்தது...

அம்புஜம் அதைக் காதில் போட்டுக்கொண்டதாகவே தெரியவில்லை.. அவள் ஏதோ ஓர் நினைவில்...

“காவ்யா..” என்று அழைத்தாள்..

“என்ன பாட்டி..?”

“பழைய பாட்டில.. நீ பாடினது ரொம்பவும் பழைய பாட்டு.. கேட்கக் கிடைக்காத பொக்கிசம்.. அதைப் போல ஒரு பாட்டு.. கண்ணனிடம் ராதை கோவித்துக்கிட்டுப் போறதைப் போல.. நீ கேட்டிருக்கியா..?”

காவ்யா கேட்டிருந்தாள்.. அப்போதைய மனநிலையில் அதை வாய்விட்டுப் பாடினால் தேவலையென்று தோன்ற.. வாய் விட்டுப் பாடவும் செய்தாள்...

*“நெஞ்சம் அலைமோதவே..*
*கண்ணும் குளமாகவே..*
*கொஞ்சும் கண்ணன்மேல்..*
*கோபமாய் போகிறாள் –ராதை..*
*கண்ணன் மேல் கோபமாய் போகிறாள்..”*

அதைக் கேட்டதும்.. இது.. இது.. இதைத்தான் நான் எதிர்பார்த்தேன் என்ற ரீதியில் மகிழ்ந்து போனாள் அம்புஜம்...

“இந்தப் பாட்டுத்தான் காவ்யா.. இதே பாட்டுத்தான்.. மொத்தப் பாட்டும் தெரிஞ்சாப் பாடும்மா...”

*“நவநீத ஜோரன்.. குழலூதும் நேரம்..*
*நாடிவந்தாள் ராதை அந்நேரம்..*

*நாதவெள்ளம் தனில் கண்ணன் மூழ்கி..*
*நாடவில்லை அவனே ராதையை..*
*அவன் லட்சியமே பண்ணவில்லை..*
*பாவையை...”*

கண்டு கொள்ளாமல் அவள் காதலன் அவளை விட்டுப் பிரிந்து போன மனத்துயரை கொட்டித் தீர்த்தாள் காவ்யா...

*“பாராமுகம் கண்டு...*
*தீராத்துயர் கொண்டு...*
*ஏமாறி ராதை போகிறாள்..*
*நெஞ்சம் ஏமாறி ராதை போகிறாள்..*
*கொஞ்சும் கண்ணன்மேல்..*
*கோபமாய் போகிறாள்...”*

“அட.. அடா.. பாட்டுன்னா.. இது பாட்டு.. கண்ணனையும்.. ராதையையும் அப்படியே கண்ணுக்கு முன்னாடி கொண்டு வந்து நிறுத்துதில்ல.. நீ பாடும்மா...”

*“தவறு ஏது..? ராதை மீது..?*
*தாமதமே.. நீ செய்தல் தகாது..*
*சாகசம் போதும் நீ..*
*ஜாலம் செய்யாதே கண்ணா..*
*சந்தோசமாகவே பாராய்...”*

காவ்யாவின் குரலில் தொனித்த ஏக்கத்தில்.. அந்தக் கண்ணனே ஓடி வந்து விடுவான் போல இருந்தது... அதை அனுபவித்து உணர்ந்து ரசித்துக் கொண்டிருந்த அம்புஜத்தின் காதுகளில் இசைத்தேன் வெள்ளமாக பாய்ந்து கொண்டிருந்தது...

"என்ன மாதிரியான பாட்டும்மா.. புல்லரிச்சு போகுது.. போ..."

காவ்யா எங்கு போவாள்..? அவளைவிட்டு சென்னைக்குப் போய்விட்ட காதலனை எந்த கயிறைக் கொண்டு இழுத்து நிறுத்துவாள்..? அவளது அன்புக் கயிறரால் அது சாத்தியப் படவில்லையே.. அவன் அவளைத் திரும்பிப் பார்க்காமல் வெளியேறி விட்டானே..

*"பாரா முகம் கண்டு...*
*தீராத்துயர் கொண்டு...*
*ஏமாறி ராதை போகிறாள்..*
*நெஞ்சம் ஏமாறி ராதை போகிறாள்..*
*கொஞ்சம் கண்ணன் மேல் கோபமாய் போகிறாள்..*
*நெஞ்சம் அலைமோதவே.."*

பாடியபடியே பார்வையை உயர்த்திப் பார்த்த காவ்யாவின் பாடல் அப்படியே நின்றது.. அவள் பார்வை பிரகாசித்தது.. அங்கே.. அறைவாசலில்.. முதன் முதலில் திருநெல்வேலியில்.. அந்த வீட்டில் அவனை அவள் பார்த்த

போது எப்படிக் கை கட்டி நின்றிருந்தானோ.. அப்படி கைகட்டி அர்ஜீன் நின்றிருந்தான்...

‘இவனா..?!!..’

ஆனந்த அதிர்வில் காவ்யாவின் பாட்டு நின்றபோது.. அவள் பார்வையைத் தொடர்ந்து பார்த்த அம்புஜம் அலட்டிக் கொள்ளாமல் வெகு இயல்பாக...

“வாலே...” என்று வரவேற்றாள்..

காவ்யாவைப் பார்த்தபடி.. அழுத்தமான காலடிகளுடன் உள்ளே வந்த அர்ஜீன்...

“என் பெட்டியை விட்டுட்டுப் போயிட்டேன் பாட்டி..” என்றான்...

“தெரியும்லே.. இந்தா உன்னோட பெட்டி.. பிளைட் டிக்கெட்டை இதில விட்டுட்டு நீ எப்படிப் பறக்கப் போறன்னு பார்த்துப்புடலாம்ன்னுதான் நான் காத்துக்கிட்டு இருந்தேன்.. நீ கெட்டிக்காரன்.. போன சுருக்கிலயே கண்டு பிடிச்சு திரும்பி வந்துட்ட.. சும்மாவா உன் சித்தப்பா உன்னை தலையில தூக்கி வைச்சுக்கிட்டு ஆடறான்..?”

‘பெட்டிக்காக வந்தானா..?’ காவ்யா ஏமாற்றமாக உணர்ந்தாள்...

அர்ஜீன் அம்புஜத்தின் கட்டிலின் மேலேயிருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியேறப் போனான்...

“ஒரு நிமிசம்லே..” அம்புஜம் அவனைத் தடுத்த நிறுத்தினாள்...

“என்ன பாட்டி..?”

“நீ போற வழியில காவ்யாவ அவ வீட்டில இறக்கி விட்டுட்டுப் போக முடியுமாலே..? பிளைட்டுக்கு டயமிருக்கில்ல..?”

“இருக்கு பாட்டி.. பட்.. இவங்க என் கூட வரனுமே..”

“வருவா.. வருவா.. என்ன காவ்யா.. அர்ஜீன்கூடப் போயிடறயா..? டிரைவரை இந்தச் சரவணன் கலிவரதன் வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கான்.. கம்பெனி இவன் பேருக்கு ரெஜிஸ்டர் ஆகிற வரைக்கும் மத்த எதிலயும் இவன் மனது போகாது.. இல்லேன்னா கார்த்திக்தான் உன்னைக் கொண்டு வந்து விட்டுட்டு வரனும்...”

“அதுகூடப் பெட்டர்தான் பாட்டி.. இவங்களுக்கும் கார்த்திக்கூட டிராவல் பண்றதில கம்பர்டபிள் இருக்கலாம்.. ஐ மீன் அவன் தெரிந்தவன்.. நான் தெரியாதவன்தானே.. அந்த அர்த்தத்தில் சொன்னேன்..”

அர்ஜீன் யாரோ போல பேசிவைக்க.. காவ்யாவுக்குள் கொலைவெறி மூண்டது...

‘நீ எந்த அர்த்தத்தில் சொல்றன்னு எனக்கா தெரியாது..?’

“என்ன காவ்யா.. அர்ஜீன் கூடப் போயிடறயா..?”

“ஆகட்டும் பாட்டி...”

என்னதான் அவன் மேல் கோபமிருந்தாலும்.. பிரிந்து போகிறவனிடம் தனிமையில் பேசக்கிடைத்த வாய்ப்பை இறுகப் பற்றிக் கொண்டாள் காவ்யா..

அர்ஜீன் ஒர் பார்வை வீச்சை அவள் பக்கம் அனுப்பிவிட்டு.. அம்புஜத்திடம் விடை பெறும் வகையில் தலையை அசைத்து விட்டு வேக நடையை நடந்தான்...

“வரேன் பாட்டி...”

அம்புஜத்திடம் சொல்லி விட்டு அவனை பின் தொடர்ந்து ஓடினாள் காவ்யா.. சேர்ந்து வந்து நின்ற இருவரையும் கண்ட சரவணன் புருவங்களை உயர்த்தினார்...

“டிரைவர் இல்லையாமே..?”

“ஆமாம்.. இப்பத்தான் அனுப்பி வைச்சேன்.. காவ்யாவை அது வீட்டில டிராப் பண்ணனும்கிறதை மறந்திட்டேன்..”

“ஹி.. ஹி.. அவங்களை வேற வீட்டுப் பெண்ணாவே டாடி நினைக்கலை அண்ணா.. இந்த வீட்டுப் பெண்ணாத்தான் நினைக்கிறார்.. இல்லையா டாடி.. அதனாலதான் மறந்து போயிட்டார்..”

“கொஞ்சம் பேசாம இரு கார்த்திக்.. அர்ஜீன்.. நீ காவ்யாவை போற வழியில டிராப் பண்ணிடறயா..?”

“யெஸ் சித்தி.. பாட்டி அப்படித்தான் கேட்டுக்கிட்டாங்க...”

“உனக்கெதுக்குண்ணா சிரமம்..? நான் காவ்யாவை டிராப் பண்ணிக்கிறேன்.. உனக்கு பிளைட்டுக்கு நேரமாகிரும்.. நீ கிளம்பு...”

“நானும் அதைத்தாண்டா சொன்னேன்.. ஆனா.. ஆளவந்தார் என்ன செய்கிறார்ன்னு உன் பிரண்ட் மூலமா கேட்டுச் சொல்கிறேன்னு நீ சித்தப்பாவிடம் சொன்னியே.. அந்த வேலை லேட்டாகிருமோன்னு யோசிச்சேன்...”

“யு ஆர் வெரி கரெக்ட் அர்ஜீன்.. கார்த்திக் நீ உன் பிரண்டுக்கு போனை போட்டு ஆளவந்தானைப் பத்தி விசாரி.. அர்ஜீன்தான் போகிற வழியில காவ்யாவை டிராப் பண்ணிடறேன்னு சொல்றானே.. உனக்கு தலைக்கு மேலே வேலையிருக்குலே...”

“அதுவும் சரிதான்.. கார்த்திக்.. நீ டாடி சொன்ன வேலையை கவனி.. அர்ஜீன் காரில காவ்யா கிளம்பட்டும்..”

கார்த்திக்கின் கோரிக்கையை அவனைப் பெற்றவர்கள் வாயினாலேயே நிராகரிக்க வைத்த அர்ஜீன் காரில் ஏறினான்.. சரவணனிடமும்.. சுமதியிடமும் விடைபெற்றுக் கொண்ட காவ்யா கவனமாக காரின் பின்சீட்டில் ஏறினாள்..

கார் கிளம்பியது...

# 154

## *பிரியாமல் என்னுடனே...*
## *நீயிருக்க ஆசைகொண்டேன்...*

இதமான ஏஸியின் குளிர் காருக்குள் பரவியிருந்தது.. காரை ஓட்டிக் கொண்டிருந்த அர்ஜீனை ஏக்கமாகப் பார்த்தாள் காவ்யா.. அவனது இறுகிய முகத்தோற்றம் ஒரு ரோமானியச் சிற்பத்தை நினைவு படுத்தியது.. செதுக்கி வைத்ததைப் போன்ற தீர்க்கமான மூக்கும்.. முக அமைப்பும் அவளை சுண்டியிழுத்தன.. ஸ்டியரிங்கை பற்றியிருந்த அவனது ரோமம் படர்ந்த கைகளின் வலிமை.. அவன் அவளைத் தொட்ட தருணங்களை நினைவூட்டின... அவனது முக இறுக்கத்தில் மனம் தடுமாறினாள் காவ்யா..

‘பேச மாட்டேங்கிறானே...’

லேசாக இருமினாள்.. அப்போதும்.. அவன் அசைந்து கொடுக்கவில்லை.. பொறுமையிழந்தவளாக அவள் வெடித்தாள்..

“திரும்பிப் போகனுமுன்னு நினைக்கிறவரு எதுக்காக இங்கேவந்து நிற்கனுமாம்..?”

அவளது கோபத்திற்கு பலன் இருந்தது.. அவன் திரும்பாமல் பதில் சொன்னான்...

"இது திருநெல்வேலி.. நான் பிறந்த ஊர்.. இங்கே தான் எங்க குடும்பத்தோட பூர்விக வீடும்.. தோப்பும் நிலங்களும் இருக்கு.. இப்பன்னு இல்லை.. டைம் கிடைக்கிறப்பல்லாம்... நான் இங்கே வந்து ஒன்வீக் தங்கியிருந்துட்டு போகிறது வழக்கம்தான்.. அப்படித்தான் நான் வந்தேன்.. வந்த இடத்தில.. என் சித்தப்பா வீட்டில.. அவர் மகன் காதலிக்கிறதா சொன்ன பெண்ணா நீயிருந்த..."

"நான் யாரையும் காதலிக்கல.." கோபத்தில் சொல்லிவிட்ட காவ்யா நாக்கை கடித்துக் கொண்டு..

"நான் ஒன்னும் உங்க சித்தப்பா மகனைக் காதலிக்கல..." என்று திருத்திச் சொன்னாள்...

அவன் அதை கவனித்தானோ.. என்னவோ.. ஓர்நொடி மௌனமாக இருந்துவிட்டு..

"அவன் சொன்னதைச் சொன்னேன்.. யாரோ ஒரு பெண்.. அழகாயிருக்கிறா.. அம்சமா பழகறா.. அவளை நான் உயிருக்குயிரா காதலிக்கிறேன்.. அவ மனதிலேயும் என்மேல காதல் இருக்கு.. நீ வந்து டாடி.. அம்மாவிடம் பேசி.. அவளைப் பெண் கேட்டு மேரேஜை பிக்ஸ் பண்ணச்

சொல்லுன்னு கார்த்திக் சொன்னான்.. நானும் ரெஸ்ட் எடுக்க வருகிறப்ப உன் விசயத்தைக் கவனிக்கிறேன்னு அவனுக்கு பிராமிஸ் பண்ணியிருந்தேன்.. ரெஸ்ட் எடுக்க வந்தேன்.. அவன் மேட்டரைக் கவனிக்க சித்தப்பா வீட்டுக்கு வந்தேன்...”

“மைக்கைப் பிடிக்காத அரசியல்வாதி கணக்கா முழநீளத்துக்கு பேச வேணாம்.. இப்ப எதுக்காக இம்புட்டு விளக்கமாம்..?”

“நீ சொன்னயே.. திரும்பிப் போகனும்ன்னு நினைக்கிறவரு எதுக்காக திருநெல்வேலிக்கு வரனுமின்னு...”

“ஓ.. அப்ப.. உங்க சித்தப்பா மகனுக்காகத்தான் நீங்க வந்தீங்க..? நான் இங்கேயிருக்கிறதைப் பற்றித் தெரிந்திருந்தா இந்தப் பக்கம் தலை வைத்துக்கூடப் படுத்திருக்க மாட்டிங்க.. அப்படித்தானே...?”

“நான் எதுக்காக என் ஊர் பக்கம் தலைவைத்துப் படுக்காம இருக்கனும்..?”

“அப்ப.. உங்க ஊர் பக்கம் நான் தலை வைத்துப் படுத்தது தப்புன்னு சொல்றீங்க..?”

“இது ஜனநாயக நாடு.. எங்கே வேலையிருக்கோ அங்கே குடியிருக்கலாம்.. உன் அண்ணன் இந்த ஊரில் வேலை பார்க்கிறார்.. நீ அவர்கூட துணைக்கு வந்திருக்கிற..

உங்களை இங்கே இருக்கக் கூடாதுன்னு சொல்ல நான் யார்...?"

'நீ எனக்கு யாருமேயில்லையா..?' காவ்யாவின் இதயம் வலித்தது.. அந்த வலியில் அவள் வெடித்தாள்..

"ஏன் இருக்கக் கூடாதுன்னு சொல்லித்தான் பாருங்களேன்..."

"நான் ஏன் சொல்லனும்..?"

"ஹ.. இவர் பெரிய ஜென்டில் மேன்.. மத்தவங்க விசயத்தில தலையிட மாட்டார்.. இவ்வளவு நேரமா உங்க சித்தப்பா மகனோட என்னை சம்பந்தப் படுத்தி பேசின ஆள்தானே நீங்க..?"

"நான் பேசலை.. அவன் பேசினதைச் சொன்னேன்.."

"அவர் பேசினா.. நீங்க உடனே 'ஊம்' போட்டுக் கேட்டுவிடுவீங்களா..? உண்மை எது.. பொய்யெதுன்னு அலசி ஆராய மாட்டிங்களா..?"

"நான் எதுக்காக அதைச் செய்யனும்..?"

அவன் கொஞ்சம்கூட அவளைத் திரும்பிப் பார்க்காமல் நிதானமாகக் கேட்டதில் அவளின் வேகம் அதிகமானது...

"என்ன சார்.. தெனாவெட்டு காண்பிக்கறிங்களா..? திரும்பிக்கூடப் பார்க்காம பதில் சொல்றீங்க.."

“ஹலோ..! இது என்னோட கார்.. நீ என் சித்தப்பா வீட்டுக்கு வந்திருக்கிற கெஸ்ட்.. உன்னை டிராப் பண்ணச் சொல்லி.. அவர் வீட்டில கேட்டுக்கிட்டாங்க.. நானும் போகிற வழிதானேன்னு ஓகேன்னு சொல்லிட்டேன்.. அதுக்காக என்னை டிரைவர் போல ட்ரீட் பண்ண நினைக்காதே.. எனக்கு அது பிடிக்காது..”

“என்னது..? டிரைவர் போல ட்ரீட் பண்றேனா..?”

“யெஸ்.. நான் முன்சீட்டில் டிரைவ் பண்ண.. நீ பின்சீட்டில் உட்கார்ந்துக்கிட்டு கேள்வி கேட்டா என்ன அர்த்தம்..? இதில் நான் உன்னைத் திரும்பிப் பார்த்து வேற பதில் சொல்லனுமா..?”

காவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. சரவணனும்.. சுமதியும் பார்த்துக் கொண்டிருக்கும் போது.. எப்படி அவளால் அர்ஜீனின் பக்கத்தில் உட்கார முடியும்..?

‘இதுக்குத்தான் இத்தனை கோபமா..?’

அவனைச் சமாதானப் படுத்தும் விதத்தில் பேச நினைத்து அவள் வாய்திறந்த போது.. அவன் கடினமான குரலில்..

“உன் அண்ணனின் ஆபிஸ் குவார்ட்டர்ஸ் இருக்கிற ஏரியாவுக்குள்ள வந்தாச்சு.. என்ன செய்ய..? உன் வீட்டு முன்னால் நிறுத்தவா..? இல்லை.. இங்கேயே இறங்கி நடந்து போகிறாயா..?” என்று கேட்டான்...

அவள் விக்கித்துப் போனாள்.. அந்த அளவுக்கு அவன் அவளை வெறுத்து விட்டானா..? மனதால் விலகி விட்டானா..? கொஞ்சம்கூட அவளைப் பிரியும் துடிப்பு அவனுக்கில்லையா..? இப்படி பட்டுக்கொள்ளாமல் அவளிடம் பேச எப்படி அவனால் முடிந்தது..?

“இதுவரை நான் இந்தப் பக்கம் தனியாக வந்ததில்லை...” அவள் துயரத்துடன் பதில் சொன்னாள்..

“உன் வீட்டு வாசலில் டிராப் பண்றதில் எனக்கொன்னும் பிராப்ளம் இல்லை.. பட்.. உன் அண்ணன் பார்த்து விட்டால் நீ தேவையில்லாமல் எக்ஸ்பிளேனேசன் கொடுக்க வேண்டியிருக்கும்.. அதை அவாய்டு பண்ணலாமேன்னு பார்த்தேன்.. என் கெஸ்ஸிங் சரியாக இருந்தால் நீ என்னைப் பார்த்ததைப்பற்றி உன் அண்ணனிடம் இதுவரைக்கும் சொல்லியிருக்க மாட்டாய்.. ஆம் ஐ கரெக்ட்..?”

அவன் சரியாக கணித்து விட்டதில் அவளுக்குள் ஆச்சரியம் எழுந்தது.. ஆனாலும் இவன் எப்படி அவளைக் குற்றம் சொல்வதைப் போலப் பேசலாம் என்ற கோபமும் எழுந்தது...

“எதை வைத்து இப்படியொரு முடிவுக்கு வந்தீங்க..?”

“இன்னும் உன் அண்ணன் என்னை மிரட்ட வரலையே.. அதை வைத்துத்தான் இந்த முடிவுக்கு

வந்தேன்.. இப்ப என்ன செய்யலாம்..? உன் வீட்டு வாசலுக்கே காரை விடவா..?”

வேண்டாம் என்று சொல்ல நினைத்த காவ்யா மனதை மாற்றிக் கொண்டாள்.. அவள் வழியில் இறங்கி வீட்டுக்குப் போகும் போது எதிர்படுபவர்கள் கண்ணதாசனிடம் யதார்த்தமாக வாய்விட்டு விட்டால் அவன் அம்புஜத்தின் மீது கோபப்பட்டு விடுவான்.. எப்படி அவன் தங்கையை வழியிலேயே இறக்கி விட்டுப் போகலாம் என்று போன் போட்டு ஒரு பிடி பிடித்து விடுவான்.. அந்த அவதிக்கு.. வீட்டுவாசலில் போய் இறங்கிக் கொள்ளும் அவதியே சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்த காவ்யா...

“பாதியிலேயே விட்டுவிட்டுப் போகிற பழக்கத்தை இதிலயும் காட்ட வேணாம்.. ஊடே இறக்கி விட்ட பழி உங்களைச் சேராது.. பாட்டியைத்தான் சேரும்.. அதனால இறக்கி விடறதை மட்டுமாவது முழுதா முடிச்சு வையுங்க...” என்று சொன்னாள்..

அதுவரை அவளைத் திரும்பிப் பார்க்காமல் பேசிக் கொண்டிருந்தவன் கண்கள் சிவக்கத் திரும்பிப் பார்த்தான்...

“கொழுப்பாடி..?” அடிக்குரலில் சீறினான்...

அவன் உரிமையுடன் பேசிவிட்டதில் காவ்யாவின் கண்கள் கலங்கிப் போயின...

“ஆமாம்.. கொழுப்புத்தான்.. நீங்க தாலிகட்டி உட்காரவைத்து சோறு போட்டு வளர்க்கறீங்கள்ல..? அந்தக் கொழுப்புத்தான்... ஆடிக்கொருதரம்.. அம்மாவாசைக் கொருதரம்ன்னு எட்டிப் பார்த்துட்டு பேச்சைப் பாரு பேச்சை..”

‘அதென்ன ஆடியும்.. அம்மாவாசையும்..?’

அர்ஜீனுக்கு ஆயாசமாக இருந்தது.. அவன் மனதில் இருந்த ஆயிரம் போராட்டங்களில் அதற்கு விளக்கம் கேட்டு பதில் சொல்ல அவனுக்கு விருப்பமுமில்லை.. நேரமுமில்லை.. அதனால் வேறு ஒன்றைச் சொன்னான்...

“லுக் அட் மீ.. உன்னோட லாங்வேஜைப் புரிந்து பதில் சொல்லனுமின்னா எனக்கு இந்த ஆயுள் முழுவதும் வேண்டியிருக்கும்.. இதுக்காகவெல்லாம் என்னால நேரத்தை செலவு பண்ண முடியாது.. உன்னோட ‘ஆடி’க்கு என்னால பதில் சொல்ல முடியாது.. ஆனா இன்னொன்னுக்கு பதில் சொல்ல முடியும்.. இப்படியே நெல்லையப்பர் கோவிலுக்கு காரை விடறேன்.. உன் கழுத்தில தாலியைக் கட்டிட்டு ரெஜிஸ்ட்ரர் ஆபிசுக்கு போய் பதிவும் பண்ணிட்டு.. என் வீட்டுக்குப் போகலாம்.. அப்புறம் என்ன.. உன்னை உட்கார வைத்து விருந்து போட்டு வளர்க்கிறேன்.. என்ன சொல்ற..? வர்றியா..? காரைத் திருப்பவா..?”

அர்ஜீன் காரைத்திருப்ப முனைந்தான்.. காவ்யா

“வேணாம்.. வேணாம்..” என்று அலறினாள்...

“ஏன்..?” திரும்பிப் பார்த்து உறுமிய அர்ஜீனின் கண்களில் தீப்பொறி பறந்தது...

“எட்ட நின்றா என்னவோ தாலி கட்டின ஹஸ்பெண்டை வம்பிழுக்கிறதைப் போல கொஞ்சி வைக்கிறது... கிட்ட வந்தா அலறி வைக்கிறது... இதுதானடி நீ..? இப்படி இருந்துக்கிட்டு என்னைச் சொல்கிறியா..? உன்னை வேண்டாம்ன்னு ஒருநாளும் நான் சொன்னதில்லை.. இதை நினைவில் வைத்துக்க.. என்னைத்தான் நீ வேண்டாம்ன்னு சொல்லிக்கிட்டு இருக்க.. இதையும் நீ நினைவில் வைத்துக்க...”

காவ்யா பதில் பேச முடியாமல் கண் கலங்கினாள்.. அதற்கெல்லாம் அவன் இளகுகிறவனாக இல்லை.. கோபம் குறையாமல் காரை விரட்டிக் கொண்டிருந்தான்...

மனம் தாளாதவளுக்கு வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை..

“எதுக்கு இத்தனை வேகம்..? எவ்வளவு சீக்கிரத்தில் என்னைத் தல முழுக முடியுமோ.. அவ்வளவு சீக்கிரத்தில தலய முழுகிட்டு போயிடலாம்ன்னு பாக்கறிங்களா..?” என்று சொல்லிவிட்டாள்...

அவ்வளவுதான்.. அர்ஜீன் சாலையோரமாக.. 'கீரிச்' சென்ற சப்தத்துடன் காரை நிறுத்தினான்.. வேகத்துடன் திரும்பி.. சரிந்து.. பின்சீட்டில் உட்கார்ந்திருந்தவளின் கழுத்தில் கையை வைத்து இறுக்கினான்.. அவனது ஒரு கையின் விரல்கள் நெறித்ததில் மூச்சு விட முடியாமல் திணறினாள் காவ்யா...

"செத்துத் தொலைடி.. நீ உயிரோட இருந்துக்கிட்டு பண்ற இம்சைக்கு.. இது எவ்வளவோ தேவலாம்.. போய்த் தொலை.. உன்னை காதலித்த பாவத்திற்கு இன்னும் என்னை என்னவெல்லாம் செய்ய நினைத்திருக்கயோ.. ஒன்று கூடவந்து வாழனும்.. இல்லைன்னா வாயைத் திறந்து என்னை இம்சை செய்யாமலாவது இருக்கனும்.. நீ இரண்டையும் செய்ய மாட்டேன்னு அடம் பிடிக்கற.. என் காதலை நீ மதிச்சிருந்தா.. நான் காதல் சொன்ன அன்றைக்கே நீ உன் பதிலைச் சொல்லியிருக்கனும்டி.. அடுத்தநாள்.. அதற்கடுத்த நாள்ன்னு.. உன் வாய் திறந்து 'ஐ லவ் யு' ன்னு சொல்லிவிட மாட்டியான்னு ஏங்கிக்கிட்டு உன் பின்னாலேயே சுற்றிச்சுற்றி வந்தேனே.. அப்போதாவது சொல்லியிருக்கனும்.. நீ எதையும் செய்யாம இருந்துட்டு.. இப்ப வந்து என்னைக் குற்றம் சொல்கிறியா..?"

காவ்யா பதில் சொல்ல முடியாமல் திணறிக் கொண்டிருக்க விரல்களை விலக்கினான் அர்ஜீன்.. அவன்

முகத்தில் கோபம் குறையவில்லை.. காரைக் கிளப்பினான்.. கார் வேகமெடுத்து அவள் வீட்டின் முன்னால் நின்றது.. அவள் இறங்க முனைந்தபோது.. அவன் பேசினான்..

"எனக்கென்ன வேலையே இல்லைன்னு நினைத்தியா..? அன்றைக்கும் உனக்காகத்தான் கோடிக்கணக்கில் லாபம் வருகிற பிஸினெஸ்ஸை மறந்துட்டு மதுரையில உட்கார்ந்திருந்தேன்.. இன்றைக்கும் உனக்காகத்தான் திருநெல்வேலியில உட்கார்ந்திருக்கேன்.. போதும்டி.. எனக்கு வெறுத்துப் போச்சு.. இனிமே நீ உன் வழியில போ.. நான் என் வழியில போறேன்.. நீ யாரோ.. நான் யாரோதான்.. கார்த்திக்கையாவது சுற்ற விடாம.. காலாகாலத்தில அவன் காதலை ஏத்துக்க.. அவன் டாடி.. என்டாடி போல இல்லை.. நீ இதைத்தான எதிர்பார்த்த..? குட் பை..."

அவள் ஸ்தம்பித்து நின்றாள்.. அவளை இறக்கிவிட்டவன் காரில் பறந்து விட்டான்...

# 155

## சுட்டும் விழிச்சுடரே..! - உன் சூரியனாக ஆசைகொண்டேன்...

மருக்கொழுந்து எட்டிப்பார்த்தாள்.. கண்ணதாசன் தங்கையிடம் எதையோ பேசியபடி அலுவலகம் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தான்..

"இந்தாய்யா.. என்னத்துக்காக இப்புடி நீட்டி முழக்கறாக.. சீக்கிரமா கிளம்பிப் போனாத்தான் என்னவாம்..? எம்புட்டு நேரத்துக்குத்தான் எனக்கு நானே பேசிக்கிட்டு இருக்கிறது..? ம்ஹீம்.. இதையும் செய்யலைன்னா எனக்கு பேச்சே மறந்து போயிடும்ல்ல.. இந்தய்யா ஆபிசுக்கு கிளம்பிப் போனாலாவது காவ்யாப் பாப்பாகிட்டப் பயமத்து நாலு வார்த்தை பேசிப் பழகலாம்.. அதுக்கும் வழியில்லாம இந்தய்யா அடைகோழிகணக்கா வீட்டைக் காவக் காக்குதாரே..." வாய்க்குள் முணுமுணுத்தபடி சமையலறையில் பாத்திரங்களை உருட்டிக் கொண்டிருந்தாள் மருக்கொழுந்து...

“என்ன அங்கே சத்தம்..?” கண்ணதாசன் குரல் கொடுத்தான்...

“இதில ஒன்னும் குறைச்சலில்ல.. பாத்திரம்ன்னா சத்தம் போடத்தான் செய்யும்.. சத்தம் போடாம ஊமையா இருக்கிறதுக்கு அது என்ன மருக்கொழுந்தா..?” சப்தமில்லாமல் முணுமுணுத்தபடி எட்டிப் பார்த்த மருக்கொழுந்து.. ஒன்றுமே இல்லையென்று சைகையில் சொன்னாள்..

‘பேசாம.. பேபே.. பெப்பேன்னு ஆகிறலாமா..?’ அவளுக்குள் யோசனை உதித்தது...

“ஒன்னும் இல்லாததுக்கா பாத்திரத்தை போட்டு உடைக்கிற..? அது அத்தனையும் என் அம்மா கொடுத்து விட்ட பாத்திரங்க.. ஏதாவது நெளிஞ்சு கிளிஞ்சு இருந்துச்சுன்னு வைய்யி.. எங்கம்மாவுக்கு உன்னால பதில் சொல்ல முடியாது.. பார்த்துக்க..” கண்ணதாசன் எச்சரிக்கை விடுத்தான்..

‘பேசவே வழியில்ல.. இதில பதிலைச் சொல்ல முடியாதாம்.. பேச முடிஞ்சாத்தானே.. எப்படிப் பதில் பேசறதுன்னு மலைச்சு நிக்கனும்..? இங்க இட்டிலிக்கே வழியக் காணோம்.. இதில சட்டினிக்கு உப்புக் குறைச்சல்ன்னு சொல்லுதாக.. போங்கய்யா.. நீங்களும்.. உங்க அம்மாவும்...’ மருக்கொழுந்து அசைந்து

கொடுக்காமல் நின்றதில் கண்ணதாசன் யோசனையாக அவளைப் பார்த்தான்...

“என்னம்மா.. பேச்சையே காணோம்..?”

‘அதத்தான் நீங்க ‘சூச்சூ’ன்னு விரட்டி விட்டுட்டீங்களே...’

“பதில் சொல்லாம நிற்கிற..?”

‘பேச முடியாதவ என்ன பதிலைச் சொல்லுவா..?’

“நீ ஒரு முடிவோடதான் இருக்க..”

‘நீங்க நான் வாயைத் திறக்கக் கூடாதுங்கிற முடிவோட இருக்கிறப்ப.. நான் என்னத்தங்கய்யா முடிவெடுக்கிறது..?’

“ஊஹீம்.. நீ சரிப்பட மாட்ட.. காவ்யா.. இந்த மருக்கொழுந்துக்கு கணக்கைப் பார்த்து அனுப்பி வைச்சிரும்மா...”

கண்ணதாசன் போட்ட வெடிகுண்டில் மருக்கொழுந்து மனதுக்குள் நடத்திக் கொண்டிருந்த பேச்சு வார்த்தையைக் கைவிட்டு.. கைகளை ஆட்டி அதை வேண்டாமென்று மறுத்தாள்..

“இப்ப மட்டும் எங்கேயிருந்து பதில் வருது..? இதை அப்பவே செய்யறதுக்கு கென்ன..? பாத்திரம் பத்திரம்.. சொல்லிட்டேன்.. காவ்யா கதவைப் பூட்டிக்கம்மா..”

ஒருவழியாக கண்ணதாசன் அலுவலகத்திற்கு கிளம்பிச் சென்று விட.. சூறாவளியை வழியனுப்பி வைத்ததைப் போல..

“உஸ்ஸ்... அப்பாடா...” என்று வாய்திறந்து பேச முடிகின்ற விடுதலையுணர்வோடு சொல்லிய மருக்கொழுந்து.. வாயெல்லாம் பல்லாக..

“பார்த்தியா பாப்பா...” என்று காவ்யாவைப் பார்த்தாள்..

அவள் மருக்கொழுந்தைப் பார்க்காமல் தொலைக் காட்சியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த கருப்பு வெள்ளைப் பாடல்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

*“இன்ப ஒளி நீங்கி...*
*இருள் சூழும் நேரம்..*
*சந்தடியே யில்லை..*
*யமுனா நதியோரம்..*
*கண்ணன் வேறானான்..*
*ராதை வேறானாள்..*
*இன்னல் புயலாலே..*
*திண்டாட லானார்..*
*என் சொல்வேன் இறைவா..!*
*உன் லீலையை..?”*

அசைவற்று அமர்ந்து பாடல் வரிகளில் தன்னைக் கரைத்துக் கொண்டிருந்த காவ்யாவின் கண்ணீருக்கான

காரணம் எதுவாக இருக்கக் கூடும் என்று மூளையைக் கசக்கிப் பிழிந்து யோசித்து எதுவும் தெரியாமல் ஓய்ந்து போனவளாக அவள் அருகில் அமர்ந்தாள் மருக்கொழுந்து..

'ம்ஹீம்.. சட்டியில இருந்தாத்தான அகப்பையில வரும்..? என் புத்தியில என்ன இருக்கோ அதுதான யோசனையில வரும்..'

நொந்து போனவளாக காவ்யாவின் தோள் தொட்டு அசைக்க முயன்றாள்.. காவ்யாவுக்கு அவள் பக்கத்தில் மருக்கொழுந்து இருக்கிறாள் என்ற நினைவேயில்லை.. அவள் பிரமைபிடித்தவளாக டிவியின் கருப்பு வெள்ளைப் பாடல் காட்சியில் ஆழ்ந்திருந்தாள்...

*"கொஞ்சும் கண்ணனைப்..*
*பிரிந்தே போகிறாள்..*
*ராதை கண்ணனைப்*
*பிரிந்தே போகிறாள்.."*

காவ்யாவின் மனக்கண்ணில் அவளை இறக்கி விட்டுப் பறந்த அர்ஜீனின் தோற்றம் வந்து நின்றது... அவன் மனதில் எவ்வளவு வெறுப்பைச் சுமந்திருந்தால் அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசியிருப்பான்..? காவ்யா கார்த்திக்கின் காதலை ஏற்றுக் கொள்ள வேண்டுமா..?

*"நெஞ்சம் அலை மோதவே..*
*கண்ணும் குளமாகவே..*

*கொஞ்சும் கண்ணனைப்..*
*பிரிந்தே போகிறாள்..*
*ராதை கண்ணனைப்..*
*பிரிந்தே போகிறாள்..”*

தன்னையறியாமல் பாடல் வரிகளுடன் சேர்ந்து பாடிய காவ்யாவின் அழுகையில் தூக்கிவாரிப் போட்டவளாக பதறிப் போன மருக்கொழுந்து..

“பாப்பா.. பாப்பா..” என்று காவ்யாவை உலுக்க...

“அக்கா..!” என்று அவள் தோள்சாய்ந்து அழுதாள் காவ்யா...

மருக்கொழுந்தினால் நம்பவே முடியவில்லை.. பாசமலர் சிவாஜியின் மறுஅவதாரம் என்று அவள் நம்பிக் கொண்டிருக்கும் கண்ணதாசனின் தங்கையா இப்படித் தேம்பி அழுகிறாள்..?

காவ்யா அழுக.. அழுக.. அவளாலும் தாங்க முடியவில்லை.. என்றோ இறந்து போன அவளுடைய தாத்தாவின் நினைவு வந்து சேர.. அவளும் காவ்யாவை கட்டிப் பிடித்துக் கொண்டு...

*“நான் என்னத்தைன்னு சொல்லுவேன்..?*
*ஊம்... ஊம்... ஊம்...*
*ஏதுன்னு சொல்லுவேன்..?*
*ஊம்... ஊம்... ஊம்...*

*பாராளும் ராசா.. என் தாத்தா...*
*பாதியிலே போனாரே...*
***ஊம்... ஊம்... ஊம்...”***

என்று ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்தாள்...

காவ்யா அதையெல்லாம் கண்டு கொள்ளும் நிலையில் இல்லை.. சாய்ந்து அழத் தோள் கிடைத்து விட்ட நிறைவில் பொங்கிப் பொங்கி அழுது கொண்டிருந்தாள்...

வீட்டில் இந்தக் கூத்து நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறியாத கண்ணதாசன்.. அலுவலக ஃபைலை வீட்டிலேயே விட்டுவிட்டு வந்து விட்ட நினைவு வர.. காரைத் திருப்பச் சொன்னான்.. தூரத்திலேயே அவன் வீட்டு வாசலில் கூட்டம் தெரிய.. கார் டிரைவர்...

“என்னன்னு தெரியலையே சார்..” என்றான்...

மடியிலிருந்து லேப்-டாப்பில் எதையோ பார்த்துக் கொண்டிருந்த கண்ணதாசன்...

“என்னத்தை என்னன்னு தெரியலை..?” என்று கேட்டான்...

“உங்க வீட்டு வாசல்ல கூட்டம் நிக்குது சார்.. அதுதான் என்னன்னு தெரியலை...”

“என்னது...?”

அதிர்ந்து போய் நிமிர்ந்த கண்ணதாசன் மடியிலிருந்த லேப்-டாப்பை நழுவ விட்டான்.. அது ‘ணங்’ கென்று காரின் தரைப் பகுதியில் விழுந்து வைத்தது..

“சீக்கிரமா போப்பா..” கண்ணதாசன் பதறினான்..

அவன் சொல்வதற்காக காத்திருக்காமல் டிரைவர் கூட்டிய வேகத்தில்.. அடுத்த நொடியில் கார் அவன் வீட்டு வாசலில் நின்றது.. அவசரமாக கார் கதவைத் திறந்து கொண்டு அவன் இறங்கினான்...

***“சீமையிலே எங்க சீமை...***
***திருநெல்வேலி ஜில்லாச் சீமை..***
***ஊம்... ஊம்... ஊம்...***
***இந்தச் சீமையிலே நீ பிறந்து...***
***தேரோட்டி வாழ்ந்த சீமை..***
***ஊம்.. ஊம்... ஊம்...”***

மருக்கொழுந்தின் குரல் களை கட்டிக் கொண்டிருந்தது.. வாசலில் நின்றிருந்த யமுனா மாமி..

“என்னவாம்..?” என்று கண்ணதாசனிடம் விவரம் கேட்டாள்..

‘வாசல்ல நிக்கிற உங்களுக்குத் தெரியாது.. வண்டியில வந்து இறங்கற எனக்கு மட்டும் தெரிஞ்சிருமா..?’

கண்ணதாசன் கடுப்புடன் அவளுக்குப் பதில் சொல்லாமல் வீட்டுக்குள் விரைந்தான்…

‘இவனுக்குப் போய் நெய் வழியற வெண் பொங்கலா படைச்சேனே.. இவன் என் தாட்சண்யத்துக்காக பதில் சொல்ல வேணாம்.. அந்த வெண் பொங்கலோட தாட்சண்யத்துக்காகவாவது பதில் சொல்லியிருக்க வேணாமோ..’ மாமி மனதுக்குள் சடைத்துக் கொண்டாள்..

உள்ளே போன கண்ணதாசனைக் கவனிக்காமல் ஒப்பாரி பாட்டுக்கு அடுத்த வரியை மனதுக்குள் கோர்த்தபடி.. முந்தானைச் சேலையில் மூக்கைத் துடைத்துக் கொண்ட மருக்கொழுந்து யதார்த்தமாக திரும்பிப் பார்த்தாள்.. பல்லைக் கடித்தபடி நின்ற கண்ணதாசனின் ரௌத்ர தோற்றத்தில் அரண்டு போனவளாக.. அழுகையை மறந்து அப்படியே எழுந்து நின்றாள்…

“இங்கே என்ன நடக்குது..?”

“அதுவந்துங்கய்யா.. என் தாத்தா வந்துங்கய்யா..”

“உன் தாத்தா எங்கே வந்தார்…?”

“அவரு எங்கேய்யா வந்தாரு..?

அந்த சீமையாண்ட மகராசன் போனவருசம்

போய் சேர்ந்துட்டாரே.. ஊம்.. ஊம்…”

அடுத்த வரிகள் கிடைத்து விட்ட மகிழ்வில் மருக்கொழுந்து ஒப்பாரியை தொடர்ந்து ஒலிபரப்ப ஆரம்பிக்க...

“அடச்சீ..” என்று கர்ஜித்தான் கண்ணதாசன்..

“ஐயா..” கைகட்டி வாய்பொத்தி ஒப்பாரியை நிறுத்தினாள் மருக்கொழுந்து....

“போனவருசம் போய் சேர்ந்த உன்தாத்தாவுக்காக ஒப்பாரி வைக்க என்வீடுதான் உனக்குக் கிடைச்சதா..?”

“இல்லீங்கய்யா...”

“இந்தக் கருமத்துக்குத்தான் உன்னை மௌன விரதம் இருந்து தொலைக்கச் சொன்னேன். அப்படி-யிருந்தும்.. நான் அந்தப் பக்கமா ஆபிஸ் போனதும்.. இந்தப் பக்கமா வாயைத் திறந்து நீ ஊரைக் கூட்டியிருக்க..”

“ஊரைக் கூட்டியிருக்கேனா..?”

“ஊம்..? வாசல்ல போய் பாரு.. இந்தக் காலனியே நம்ம வீட்டு வாசல்லதான் வந்து நிக்குது.. நீ வக்கனையாய் வைச்ச ஒப்பாரிக்கு எத்தனை ரசிகர் கூட்டம் பார்த்தியா..?”

“அதில்லங்கய்யா..”

“முதல்ல நீ இடத்தைக் காலி பண்ணு.. உன் புருசனை நான் வரச்சொன்னேன்னு சொல்லு...”

“அவர எதுக்குய்யா கூப்பிடறிங்க...”

“அவார்டு தரலாம்ன்னுதான்.. ஏம்ப்பா.. வீட்டு வேலைக்கு ஆள் வேணும்னு கேட்டா.. வீட்டுக்கு முன்னால கூட்டத்த கூட்டற ஆளக் கொண்டு வந்து சேத்திருக்கயே.. உனக்கு நான் என்னப்பா கெடுதல் பண்ணினேன்னு கேட்கத்தான்...”

“வேணாங்கய்யா...”

“நான் ஏற்கனெவே கொலைவெறியில இருக்கேன்.. ஓடியே போயிரு.. போகிறப்ப வாசல்ல இருக்கற கூட்டத்தையும் கூப்பிட்டுக்கிட்டு போயிரு.. தாத்தாவாம் தாத்தா.. உன் தாத்தாவ நினைச்சு அழுகத்தான் என் வீட்டுக்கு வேலைக்கு வர்றியா...”

“இல்லீங்கய்யா...”

“நடையைக் கட்டு...”

கண்ணதாசனின் கடுமையில் அரண்டு போன மருக்கொழுந்து வாசலுக்கு ஓடினாள்.. கூடியிருந்த கூட்டத்திடம்..

“இங்கே என்ன சினிமாவா காட்டறாங்க..?” என்று அவளின் காட்டத்தைக் காட்டி.. அவர்களை கலைத்து அனுப்பி விட்டாள்.. நிசப்தமான வாசலில் இருந்து அவளது வேலை நிலைக்குமா.. இல்லை நிலைக்காதா என்ற கவலையோடு அவள் வீட்டை நோக்கி நடந்தாள்...

# 156

*உன் நினைவோடு நான்வாழும்..*
*நிலை வரவே ஆசைகொண்டேன்...*

“**அ**துக்குத்தான் அறிவில்லைன்னா உனக்கு என்னம்மா ஆச்சு..? அறிவைக் கடன் கொடுத்திட்டியா..?”

கண்ணதாசன் அதட்டினான்.. கண்களைத் துடைத்துக் கொண்ட காவ்யா தலை நிமிர்ந்து அவனைப் பார்க்க முடியாமல் தலைகவிழ்ந்து நின்றாள்...

“மைக் ஒன்னுதான் இல்ல.. அது வைச்ச ஒப்பாரி.. இந்த ஏரியா முழுசும் ஒலிபரப்பாகிக்கிட்டிருக்கு.. நீ விட்டில இருந்திருகல்ல.. அதட்டி வைச்சிருக்கனுமா.. வேணாமா..? அதை விட்டுட்டு நீயும் கூடச் சேர்ந்து அழுதுக்கிட்டு இருக்கியே.. உனக்கு என்னதாம்மா ஆச்சு..?”

“அண்ணே..” காவ்யா கண்கலங்கினாள்.. கண்ணதாசனால் அதைப் பார்க்க முடியவில்லை..

“சரி.. சரி.. நீதான் யார் அழுதாலும் கூட அழ ஆரம்பிச்சுருவியே.. நம்ம தலைவிதிக்கு வந்த இடத்தில.. இப்படியொரு அரைகுறைதானா வேலைக்குக் கிடைக்கனும்..?”

அவள் அழுததினால்தான் மருக்கொழுந்தும் கூட அழ ஆரம்பித்தாள் என்ற விவரத்தை தமையனிடம் சொல்ல முடியாமல் தவிப்புடன் நின்றாள் காவ்யா.. தலையில் அடித்துக் கொண்ட கண்ணதாசன் அவன் தேடி வந்த ஃபைலை எடுத்துக் கொண்டு அலுவலகத்துக்கு கிளம்பினான்...

“என்னவாம் சார்..?” ஆவலுடன் விசாரித்தான் டிரைவர்...

“எங்க வீட்டுல வேலை செய்ற லேடிக்கு போன வருசம் போய்ச் சேர்ந்துட்ட அவளோட தாத்தா நினைவுக்கு வந்து அழுதுச்சாம்..” கண்ணதாசன் எரிச்சலுடன் விவரம் கூறினான்...

“இவ்வளவுதானா..?”

ஏமாற்றத்துடன் கேட்ட டிரைவரை.. இதற்கு மேலேயும் நீ என்ன எதிர்பார்க்கிறாய் என்ற ரீதியில் முறைத்துப் பார்த்தான் கண்ணதாசன்.. அவன் கன்னத்தில் நான்கு அப்பு அப்பினால் என்ன என்ற ஆவேசம் அவனுக்குள் கிளர்ந்தது...

அவனுடைய அந்த ஆவேசத்தை அவன் கண்கள் பிரதிபலிக்க அவசரமாக வாயை மூடிக் கொண்ட டிரைவர்.. மருக்கொழுந்துக்குப் பதிலாக மௌன விரதத்தை ஏற்றவனாய் போசமடந்தையாகி கார் ஓட்டுவதில் கவனமானான்...

அன்று முழுவதும் கண்ணதாசனுக்கு வேலையே ஓடவில்லை.. அவன் மனதில் ஏதோவொரு மூலையில் கவலை அரித்துக் கொண்டிருந்தது.. காவ்யாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு மருக்கொழுந்து வைத்த ஒப்பாரியை அவனால் மறக்க முடியவில்லை.. மனதில் தீக்கங்குகளாக கனன்று கொண்டிருந்த கோபத்துடன் அவன் வீட்டுக்குத் திரும்பிய போது வீட்டு வாசலில் மருக்கொழுந்தின் கணவன் காத்துக் கொண்டிருந்தான்.. கூடவே அவன் முதுகு மறைவில் ஒளிந்து நின்று எட்டிப் பார்த்தபடி மருக்கொழுந்தும் ஒட்டிக் கொண்டிருந்தாள்..

மௌன முறைப்புடன் வந்த கண்ணதாசனைப் பார்த்ததும்..

“வணக்கம் சார்..” என்றான் அவன்..

“என்ன குமாரு.. உன் பெண்டாட்டி வாய்க்கு ருசியா சமைச்சுப் போடுதோ இல்லியோ.. எட்டூருக்குக் கேட்கிறதைப் போல... வாய் கிழிய ஒப்பாரி மட்டும் வைக்குது.. என்ன விசயம்..? நீ சொல்லிக் கொடுத்து அனுப்பினயா..? இல்ல.. உனக்கு யாரும் சொல்லிக் கொடுத்து அனுப்பச் சொன்னாங்களா..?”

“இது அபாண்டம் சார்.. உங்க வீட்டு உப்பைத் தின்னுக்கிட்டு நானு மத்தவங்க பேச்சைக் கேட்பேனா..? ஏய்ய்.. இங்கே வாடி.. சார் என்னடி சொல்றாரு...”

“அது வந்து.. மச்சான்.. மச்சான்... மச்சான்...”

“கொலைகாரனாக்காம விசயத்தச் சொல்லிப்புடு.. சார் வரச்சொன்னாருன்னு நீ சொன்னதுமே என்ன விசயம்ன்னு நானு கேட்டேனா.. இல்லியா..?”

“கேட்ட மச்சான்..”

“அப்ப ஒன்னுமில்லன்னு சொன்னவ.. இங்க வந்ததும் இந்த பம்மு.. பம்மறேன்னா என்னவோ விசயமிருக்கு.. அது என்னான்னு நீயாச் சொன்னா ஒன்னுமில்ல.. சார் சொல்லி தெரிஞ்சுக்கிட்டா.. உன்ன உண்டு இல்லன்னு பண்ணிருவேன்..”

“கோவிச்சுக்காத மச்சான்.. நம்ம பாப்பா அழுதுச்சா..”

“பாப்பா எப்படி அழுதுச்சு..? அதுபாட்டுக்கு ஸ்கூல் போயிட்டு வந்த டிவியில்லடி பார்த்துக்கிட்டிருக்கு..?”

“நம்ம பாப்பா இல்ல மச்சான்.. காவ்யா பாப்பா..”

இந்த விளக்கத்தைக் கேட்ட குமார் கண்ணதாசனைப் பார்க்க.. அவன்..

“இதுக்காகத்தான் உன் பெண்டாட்டியை மௌன விரதம் இருக்கச் சொன்னேன்.. கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தா இந்நேரம் என் தங்கச்சி கையில ஒரு பாப்பா இருந்திருக்கும்.. அது போய் பாப்பாவா..?” என்று கேட்டான்..

“அறிவு கெட்டவளே.. சாரோட தங்கச்சியை பேரைச் சொல்லிக் கூப்பிடறதுக்கென்ன..?”

“ஒரு பிரியத்தில சொல்றதுதான்.. பாப்பாவே இதுக்கு கோவிச்சுக்கல.. நீயும்.. சாரும் எதுக்காக கோவிச்சுக்கறிங்க..?”

“நீ வில்லங்கத்துக்கு பேர் போனவடி... உங்கிட்ட வாயைக் கொடுத்து மீள முடியாது.. இப்ப அழுதுச்சுன்னு சொன்னியே.. அது நம்ம சாரோட தங்கச்சியா..?”

“ஆமாம் மச்சான்.. அடுப்பாங்கரையில வேலய முடிச்சுட்டு எட்டிப் பாக்கிறேன்.. பாப்பா டிவியில ஓடற பாட்டைப் பார்த்துக்கிட்டு விக்கி.. விக்கி.. அழுகுது.. பதறிப்போயி பக்கத்தில போனா என் தோள்ல சாய்ஞ்சுக் கிட்டு.. கதறிக்கதறி அழுகுது.. வேணாம் பாப்பா.. வேணாம் பாப்பான்னு தேத்தித்தான் பாத்தேன்.. அது அழுகை அடங்கலை.. அதப் பாக்க பாக்க எனக்கும் அழுகை வந்திருச்சு...”

“அட கஷ்ட காலமே.. நல்ல பெண்டாட்டி வந்து வாய்ச்ச போ.. ஏண்டி.. சின்னப் பொண்ணு அழுதா சமாதானப் படுத்துவியா.. அத விட்டுட்டு நீயும் கூட்டுப் போட்டுக்கிட்டு ஒப்பாரி வைச்சியா..?”

“ஆமா மச்சான்.. ஒப்பாரிக்கு தோதா இருக்கட்டுமேன்னு போன வருசம் போய்ச் சேர்ந்த என்

தாத்தாவ நினைச்சுக்கிட்டேனா.. ஒப்பாரிப் பாட்டு தானா வந்திருச்சு.. அதக் கேட்கறதுக்கு கூட்டமும் தானாக் கூடிருச்சு போல.. ஐயா வந்து பார்த்திட்டு சத்தம் போட்டுட்டாரு...”

“பின்ன.. நீ செஞ்சு வைச்ச வேலைக்கு பாராட்டவா செய்வாரு..? உன்ன..”

கையை ஓங்கிக் கொண்டு போன குமாரை...

“பொறு குமாரு..” என்று அடக்கி வைத்த கண்ணதாசன் யோசனையுடன் மருக்கொழுந்தைப் பார்த்தான்...

‘போட்டுக் கொடுக்கிறதையும் போட்டுக் கொடுத்துட்டு இப்ப பொறு குமாருங்கிறாரே.. எதுக்காம்..? இங்க வைச்சு அடிக்காத.. காலனி கூடிரும்.. வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போய் விளாசித் தள்ளுன்னு சொல்லப் போறாரா..?’

மருக்கொழுந்து கவலையாகி.. காயத்துக்கு போட வேண்டிய மருந்து வகைகள் எதுஎதுவென யோசிக்க ஆரம்பித்தாள்...

“காவ்யா அழுதுச்சுன்னா சொல்ற..?” கண்ணதாசன் மருக்கொழுந்திடம் கேட்டான்...

"ஆமாங்கய்யா.." பேச்சு திசை திரும்பி விட்ட சந்தோசத்துடன் பதில் சொன்னாள் மருக்கொழுந்து...

"உன்னப் பாத்து அது அழுகலியா..?"

"சரியாப் போச்சு போங்க.. நீங்க அப்படி நினைச்சுக்கிட்டு இருக்கீங்களா..? பாப்பாவப் பாத்துத்தான் நான் அழுதேங்கய்யா..."

"எதுக்கு அழுதுச்சுன்னு தெரியுமா..?"

"டிவியில கருப்பு வெள்ளப் பாட்டு ஒன்னு வந்துச்சு.. அந்தப் பாட்டுக் கூட பாப்பாவும் பாடிக்கிட்டே விக்கி.. விக்கி.. அழுதுச்சு..."

"அது என்ன பாட்டு...?"

"தெரியலியே.. என்னமோ கண்ணன் வேறாப் போயிட்டான்.. ராதா வேறாய் போயிட்டான்னு வந்துச்சு..."

"சரி... நீ போ..."

கண்ணதாசன் ஒற்றை வரியில் முடித்துவிட மருக்கொழுந்து 'ஆ'வென வாய் பிளந்தாள்..

"ஐயா..?"

"போயி உன் வேலையப் பாக்க ஆரம்பின்னு சொன்னேன்..."

'ஆஹா..' என்று மகிழ்ந்து போன மருக்கொழுந்து அவன் மன்னிக்கும் மனநிலையில் இருப்பதைக் கணித்து விட்டாள்...

"அப்ப.. மௌன விரதங்கய்யா..?" சந்தடி சாக்கில் மௌனவிரதத்திலிருந்து விடுதலை வாங்கி விடும் யுக்தியுடன் கேட்டு வைத்தாள்...

"வேணாம்.. போ.." அவள் எதிர்பார்த்த பதிலைச் சொல்லிவிட்டான் கண்ணதாசன்...

*'விட்டுச் சிறகடிப்பாய் - அந்த*
*மருக்கொழுந்தினைப் போல...'*

என்று பாரதி பாடி வைத்திருப்பதைப் போல.. 'விடுதலை.. விடுதலை..' என்று மனதிற்குள் கூவியபடி விட்டுச் சிறகடித்தவளாக வீட்டுக்குள் புகுந்தாள் மருக்கொழுந்து..

என்னதான் கண்ணதாசன் இருக்கும் தைரியத்தில் மனைவியை தூக்கிப் போட்டு மிதித்தாலும்.. வீட்டுக்குப் போனால் அவள் மண்டகப்படியை அங்கே நடத்தி விடுவாளே என்று மனதிற்குள் உதைப்புடன் நின்று கொண்டிருந்த குமாரு அந்த திடிர் திருப்பத்தில் மனம் மகிழ்ந்து போனான்...

'தப்பிச்சுட்டேண்டா சாமி.. வீட்டுக்குள்ள அவதான் மெஜாரிட்டி பலத்தோட இருக்கா.. என்னதான் அள்ளி அள்ளி கொடுத்தாலும் இந்த புள்ளைக அவ

கூடத்தான் கூட்டணி வைச்சுக்குதுக.. என்ன தனிச்சு நிற்க வைச்சிருதுக.. இன்னைக்கு மட்டும் அவமேல கையை வைச்சிருந்தேன்னா வீட்டுப் பக்கம் நான் போயிருக்க முடியாது..'

மனதிற்குள் இருப்பதை கண்ணதாசன் அறிய மாட்டான் என்ற தைரியத்துடன்.. அவன் சட்டையின் கைப்பகுதியை ஏற்றியபடியே...

"ஏய்ய்.. இருடி.. சாரு சொல்லிட்டதால தப்பிச்சுட்டோம்ன்னு நினைக்கறியா..?" என்று அவளுக்கு கேட்காத வகையில் அடங்கிய குரலில் வீடு கட்டினான்..

"விடு குமாரு..." என்றான் கண்ணதாசன்...

"அப்படியெல்லாம் விட்டுவிடக் கூடாது சார்.. இவளுக்கு குளிர் விட்டுப் போச்சு.. நாலு போடு போட்டாத்தான் அடங்குவா..."

"அதுமேல எந்தத் தப்புமில்ல குமாரு.. நான்தான் தப்பாப் புரிஞ்சுக்கிட்டேன் போல..."

"அப்படியா சார்..?"

"ஆமாம் குமாரு.. நீ வீட்டுக்குப் போ..."

"நீங்க சொன்னதினால பேசாம போறேன்.. இல்லேன்னா நடக்கறதே வேற.." ஏற்றிவிட்ட சட்டையின் கைப்பகுதியை இறக்கி விட்டபடி வீட்டை நோக்கி நடந்தான் குமாரு..

மருக்கொழுந்தின் மீது கை வைத்திருந்தால்...

என்ன நடந்திருக்கும் என்று அவனுக்குத்தானே தெரியும்...

‘இங்கே நாலு மிதியை நான் மிதிச்சா.. நாலு மாசத்துக்கு என் வீட்டுக்குள்ள நான் நுழைஞ்சிருக்க முடியாது.. நல்லவேளை.. அப்படி எதுவும் நடக்கலை.. ஆத்தா.. அங்காள பரமேஸ்வரி.. என்னைக் காப்பாத்திட்ட தாயே.. நெல்லையப்பா.. காந்திமதி.. எனக்கு வீட்டுச் சோறு சாப்பிடற பாக்கியத்த கொடுத்திட்டிங்க.. தெய்வங்களே...’

குமாரு போனதும் கண்ணதாசன் வீட்டுக்குள் நடந்தான்.. ஹாலில் இருந்த நீண்ட சோபாவில் காவ்யா சுருண்டு படுத்திருந்தாள்... வாசலில் நடந்த பேச்சு வார்த்தையை அவள் கவனித்ததாகத் தெரியவில்லை..

கண்ணதாசன் அங்கேயே நின்று தங்கையை அவதானித்தான்.. கண்மூடிப் படுத்திருந்தவளின் கன்னத்தில் வழிந்த நீர்கோடு அவன் நெஞ்சில் பாறாங்கல்லாய் ஏறி அமர்ந்தது...

‘என்ன நடந்திருக்கும்..?’ அவனுக்குள் கவலை எழுந்தது...

சமீப காலமாக காவ்யாவிடம் தென்பட்ட மாறுதலை அவன் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.. ஒருநாள் உற்சாகமாக இருப்பாள்.. மறுநாள் முகம் வாடியிருப்பாள்..

எதனால் இந்த மனப் போராட்டம் என்று அவனால் கண்டு கொள்ள முடியவில்லை...

காவ்யாவின் மனதில் தைத்திருந்த முள்ளை அவன் அறிவான்தான்.. அந்த வேதனையிலிருந்து அவள் மீள வேண்டும் என்பதற்காகத்தானே அவன் சொந்த ஊரை விட்டு மாறுதல் வாங்கி வந்தான்..? திருநெல்வேலிக்கு வந்த பின்னால் காவ்யாவிடம் மாற்றம் வந்திருந்ததே.. அதுவும் அம்புஜம் பாட்டியிடம் பழக ஆரம்பித்த பின்னால் அவள் முகத்தில் சிரிப்பு வந்திருந்ததே..

'அம்புஜம் பாட்டி..' கண்ணதாசனின் மனதில் மின்னலடித்தது...

காவ்யாவின் சோகத்திற்கான காரணத்தை அம்புஜம் பாட்டியினால் சொல்லிவிட முடியும் என்று நம்பினான் கண்ணதாசன்..

"மருக்கொழுந்து.. கொஞ்சம் கதவை மூடிட்டு காவ்யாவைப் பாத்துக்கம்மா.. நான் டவுன் வரைக்கும் போயிட்டு வரேன்..."

நினைத்ததை உடனே செய்து முடித்து விடும் வழக்கத்தைக் கொண்ட கண்ணதாசன்.. புயல் வேகத்தில் அம்புஜம் பாட்டியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்..

அது எதையும் அறியாத காவ்யா.. மௌனக் கண்ணீரை உகுத்தபடி சோபாவில் முடங்கிக் கிடந்தாள்..

# 157

*உன் மனதில் என் மனதை..*
*பதித்து விட ஆசைகொண்டேன்...*

**அ**ந்தி நேரத்தின் குளுமையான காற்று உடலில் படிவதை அனுபவித்தபடி மெதுவாக நடை பழகிக் கொண்டிருந்தாள் அம்புஜம்.. தோட்டத்துச் செடிகளின் பசுமையில் அந்தி வெயிலின் கதிர்கள் படிந்ததில் தெரிந்த புதுவிதமான நிறத்தை ரசித்தபடி நடந்து கொண்டிருந்தவள் காரின் சப்தத்தில் திரும்பினாள்.. கண்ணதாசன் கால்டாக்ஸியிலிருந்து இறங்கினான்.. அம்புஜத்தின் முகத்தில் புன்னகை வந்தது..

“வாப்பா.. கண்ணதாசா.. வா.. வா...”

தோட்டத்திலிருந்து வெளியே வர முயற்ச்சித்தவளின் அருகே இரண்டே எட்டுக்களில் நெருங்கிய கண்ணதாசன்..

“எப்படி இருக்கீங்க பாட்டி..?” என்று நலம் விசாரித்தான்...

“நல்லா இருக்கேன்ப்பா.. வா.. வீட்டுக்குள்ள போய் பேசலாம்..”

“இருக்கட்டும் பாட்டி.. இங்கேதான் குளுகுளுன்னு இருக்கே.. இப்படியே உக்காந்து பேசலாம்...”

அம்புஜத்தின் பதிலை எதிர்பார்க்காமல் அங்கே கிடந்த நாற்காலிகளில் ஒன்றில் கண்ணதாசன் அமர்ந்து விட.. வேறு வழியில்லாமல் அம்புஜமும் அவனருகே அமர்ந்தாள்...

“திடிர்ன்னு வந்திருக்கயே கண்ணதாசா..”

“உங்க நினைப்பு வந்தது.. பார்த்து ரொம்ப நாளாச்சே.. அதான் பார்த்துட்டுப் போகலாம்ன்னு வந்தேன்..”

“ஒருவாரமா காவ்யா வரக் காணோமே.. ஏன்ப்பா..?”

“அதுக்கு உடம்பு சரியில்லை பாட்டி...”

“அடடா.. என்ன ஆச்சு..?”

அம்புஜம் பதறிப் போனவளாக நாற்காலியை விட்டு எழுந்து கொள்ள முனைய.. கண்ணதாசன் அவளை ஆறுதல் படுத்தி உட்கார வைத்தான்..

“பயப்படற மாதிரி எதுவும் இல்லை பாட்டி.. காய்ச்சல் வந்துச்சு.. மாத்திரை போட்டுக்கிட்டதில.. காய்ச்சல் போயிருச்சு.. ஆனாலும் இது சோர்ந்தே உட்கார்ந்திருக்கு..”

“எனக்குத் தெரியாதே.. தெரிஞ்சிருந்தா ஒரு எட்டு வந்து பார்த்திட்டு வந்திருப்பேன்...”

“உங்களுக்கு எதுக்கு பாட்டி சிரமம்..?”

“இதில சிரமப்பட என்ன இருக்கு..? சொல்லு.. எனக்கு கால் வலின்னதும் தினமும் உன்தங்கை வந்து என்னை பார்த்திட்டுப் போகலாம்.. உன் தங்கைக்கு உடம்பு சரியில்லைன்னா நான் வந்து பார்க்க வேணாமா..?”

கண்ணதாசன் பதில் சொல்லாமல் சிரித்தான்... அவன் கேட்க வந்த விவரமே வேறு.. காவ்யாவின் திடிர் அழுகைக்கும்.. கண்ணீருக்குமான காரணத்தைக் கண்டறிய அவன் வந்திருக்கிறான்.. திருநெல்வேலியில் காவ்யாவுக்கு யாரையும் தெரியாது.. அவள் வீடு வரை வந்து.. வீடு வரை அழைத்துப் பழகிய ஒரே நபர் அம்புஜம் பாட்டி மட்டும்தான்.. மற்றபடி காலனியில் குடியிருப்பவர்கள் ஒரே அலுவலகத்தில் வேலை செய்பவர்களின் குடும்பங்கள் என்ற முறையில் பழகிக் கொண்டாலும் அடுத்த வீட்டிற்குக் கூட காவ்யா போய் வந்ததில்லை.. அம்புஜம் பாட்டியிடம் பேசுவதைப் போல மனம் விட்டுப் பேசியதில்லை.. அவர்கள் பேசினால் பதிலுக்குப் பேசி சிரிப்பதோடு நிறுத்திக் கொள்வாள்..

அந்த அம்புஜம் பாட்டியிடம்தான் அவன் விவரம் கேட்க முடியும்.. ஆனால் எப்படிக் கேட்கப் போகிறான்..?

அவன் மன உளைச்சலைப் பற்றி அறியாத அம்புஜம் செல் போனில் சுமதியை அழைத்து கண்ணதாசன் வந்திருக்கும் விவரத்தைச் சொன்னாள்.. இரண்டே நிமிடங்களில் காபி.. டிபன் கொண்ட டிரேயை கையில் பிடித்த வேலையாள் பின் தொடர அங்கே வந்து விட்டாள் சுமதி...

“வாங்க தம்பி.. வாங்க..”

அவள் கைகுவிக்க.. பதிலுக்கு கைகுவித்த கண்ணதாசனின் மனதில் விசாரணையின் நடுவில் தடங்கல் வருகின்றதே என்ற சலிப்புத்தான் ஏற்பட்டது..

“சாப்பிடுங்க..” சுமதி உபசரிக்க.. விதியே என்று காபிக் கப்பை எடுத்துக் கொண்ட கண்ணதாசன் டிபனை மறுத்து விட்டான்...

‘இங்கே காபி டிபன் சாப்பிடவா வந்தேன்...?’

அவன் சலிப்பைப் பற்றி யார் கண்டது..? சுமதி கலகலப்பாக பேசியபடி அங்கே உட்கார்ந்து விட்டாள்..

“காவ்யா வராம வீடே.. வீடா இல்லை தம்பி.. அத்தையும்.. நானும் அவளைப் பார்க்க உங்க வீட்டுக்கு வர்றதா இருந்தோம்...”

“அப்படிங்களா..?”

“அமைதி.. அடக்கம்.. அழகுன்னு சொல்லிக்கிட்டேப் போகலாம்.. இப்படிப்பட்ட பொண்ணை தேடித்தான் பிடிக்கனும்...”

‘இவங்களுக்கு காவ்யா எப்படியெல்லாம் வாயடிப்பான்னு தெரியுமா..?’ என்று நினைத்துக் கொண்டான்...

‘இதுக்குத்தான் வெறும் பார்வையிலேயே யாரையும் எடை போட்டுறக் கூடாதுங்கிறது...’

லேசான சிரிப்புடன் காலிக் கோப்பையை அவன் நீட்ட.. வேலைக்காரி அந்த இடத்திலிருந்து அகன்றாள்..

கண்ணதாசனுக்கு என்ன பேசுவதென்று தெரிய வில்லை.. அவன் அம்புஜத்திடம் தனித்துப் பேச விரும்பினான்.. அதையுணராத சுமதி அங்கிருந்து நகரும் உத்தேசமில்லாமல் பேசிக் கொண்டேயிருந்தாள்..

“பாட்டு.. பேச்சு.. சிரிப்புன்னு.. காவ்யா வந்துட்டாலே வீடு களைகட்டும்...”

“அப்படிங்களா...?”

“வெளிப் பெண்ணுண்ணே நாங்க நினைத்ததில்ல.. எங்க வீட்டுப் பெண்ணாத்தான் அவளை நினைத்துக்கிட்டு இருக்கோம்...”

“கேட்கவே சந்தோசமா இருக்கு...”

“எங்க அர்ஜீன் கூடச் சொன்னான்.. என்ன சித்தி.. எப்பவோ ஒரு தடவை வந்து பேகிற உங்க செல்ல மகன் வந்திருக்கேன்.. நீங்க என்னைக் கண்டுக்காம அந்தப் பெண்ணை மட்டும் கண்டுக்கறிங்களேன்னு...”

‘அர்ஜீனா...?’

கண்ணதாசன் அதிர்ச்சியுடன் சுமதியைப் பார்த்தான்.. அவன் இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்த்திருக்கவில்லை.. காவ்யாவின் மன வருத்தத்திற்கான காரணத்தை அவன் தெரிந்து கொள்ள வந்திருந்தாலும்.. அந்தக் காரணத்தின் பெயர் ‘அர்ஜீன்’ என்று இருக்கக் கூடும் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை...

‘அர்ஜீன்னா.. யாரைச் சொல்றாங்க...? அவன் எப்படி இவங்க வீட்டுப் பிள்ளையா இருக்க முடியும்..? ஒரு வேளை அந்தப் பெயரைக் கேட்டதும் இவளுக்கு பழைய நினைவுகள் ஞாபகத்திற்கு வந்து அழுகிறாளோ..’

கண்ணதாசனால் சரியாக கணிக்க முடியவில்லை...

“அர்ஜீன்னா சொன்னீங்க..?” அவன் சந்தேகம் கேட்டான்...

“ம்ம்.. அர்ஜீன்தான்.. ஏன் இப்படிக் கேட்கறிங்க..?”

“இல்லை.. பெயர் சரியாக காதில் விழுகலை.. இவர் யாருங்க...? உங்க சொந்தமா...?”

“ம்ம்... என் மச்சினரோட மகன்...”

“வீட்டுக்கு வந்திருந்தாரா...?”

“ம்ம்.. அவன் வந்து பதினைந்து நாளா இங்கேதானே இருந்தான்..? காவ்யா உங்ககிட்ட சொல்லலையா..?”

சொல்லவில்லை என்ற நினைவில் கண்ணதாசன் முகம் இறுகிப் போனான்.. அவன் தங்கை அவனிடம் அந்த விவரத்தைச் சொல்லவில்லை.. அவள் தினமும் பகல் பொழுதைத் கழிக்கும் அம்புஜத்தின் வீட்டிற்கு ‘அர்ஜீன்’ என்ற பெயருடன் ஒரு விருந்தாளி வந்திருக்கிறான்.. பதினைந்து தினங்களாக அந்த வீட்டில் அவனும் இருந்தான் என்ற விவரத்தை அவள் அவளுடைய அண்ணனிடம் சொல்லவேயில்லை....

“சொல்லியிருக்கும்.. நான் மறந்திருப்பேன்...”

“அதைச் சொல்லுங்க.. நீங்க யாரு.. ஸ்டேட் கவர்ன் மென்டில பெரிய ஆபிசர்.. உங்களுக்கு வொர்க் லோடு அதிகமா இருக்கும்.. இதில மத்ததெல்லாம் நினைவில் இருக்காதுதான்...”

“உங்க மச்சினர் மகன்னா.. அவர் எங்கேயிருக்கார்..?”

“சென்னையில.. ஆனா அங்கேயும் நிலைச்சு உட்காராம பாரின் பக்கமே பறந்துக்கிட்டு இருப்பான்...”

‘அவனாய் இருக்குமோ...’ கண்ணதாசனின் மனதில் சந்தேகத்தின் விதை விழுந்தது..

எவனது நினைவுகளின் துரத்தலில் இருந்து தப்பிப்பதற்காக அவனுடைய தங்கை பிறந்த ஊரே வேண்டாம் என்று கதறினானோ.. அந்த அர்ஜீன் திருநெல்வேலியிலும் வந்து நின்று விட்டானா...?

"ஏன் அப்படிச் சொல்றீங்க..?"

"அவன் பிஸினெஸ் அப்படி... இந்தத் திருநெல்வேலிதான் எங்க மச்சினருக்குப் பூர்விகம்.. இங்கே அவனுக்கு வீடிருக்கு... பக்கத்தில தோப்பு.. தோட்டம்.. வயல்ன்னு இருக்கு.. அர்ஜீன் அந்தத் தோப்பையும் தோட்டத்தையும் விஸ்தீரணமாக்க பக்கத்தில இருந்த நிலத்தையெல்லாம் வாங்கிப் போட்டான்.. தோப்புக்குள்ளே பங்களாவையும் கட்டினான்.. அவனுக்கு வொர்க் லோடில டென்சன் வந்தா ரிலாக்ஸ் பண்ணிக்க தோப்பு பங்களாவுக்குத்தான் வருவான்... நாங்க கூட போனவாரம் அவன் தோப்புக்குத்தான் பிக்னிக் போல போய் வந்தோம்.. காவ்யாவும் வந்தாளே..."

'காவ்யா இதையும் சொல்லலை...' கண்ணதாசனுக்கு மனம் வெறுத்துப் போனது...

என்னதான் பார்த்துப் பார்த்துச் செய்தாலும்.. பாசத்தில் உருகினாலும் அவன் வேறு.. அவன் தங்கை வேறுதானா..? அவனிடம் அவள் மனம் திறந்து பேசவே மாட்டாளா...?

"ரொம்ப நாளைக்குப் பின்னால வந்திருக்கார் போல.."

“ஆமாமாம்.. அவன் இங்கே வந்து ஒரு வருசத்துக்கும் மேலே ஆகிப் போச்சு.. கம்யூட்டர் கம்பெனியை வைச்சிருக்கிறவன் மதுரையில கம்யூட்டர் விற்கிற கடையொன்னை வாங்கிப் போட்டானாம்... அங்கே வந்து போயிருக்கிறான்.. இங்கே வரலை... அதில எனக்குக் கோபம்தான்...”

‘அவனேதான்..’

கண்ணதாசனுக்கு நிச்சயமாக தெரிந்து விட்டது.. காவ்யாவின் கண்ணீருக்கான காரணத்தை அவன் கண்டு பிடித்து விட்டான்... ஆனால் இந்தப் பதினைந்து தினங்களாக கண்ணீர் உகுக்காதவள் இப்போது மட்டும் எதற்காக கண்ணீரை உகுத்து வைத்தாள்...?

“அட.. எங்க ஊரில அவர் கடை வாங்கியிருக்காரா..!” அவன் போலியாக ஒரு ஆச்சரியக்குறியை போட்டு வைத்தான்..

“ஆமாமில்ல.. மதுரை உங்க ஊரில்ல.. இது எனக்கு மறந்து போச்சே.. என்ன அத்தை...?”

“சரியாச் சொன்ன சுமதி.. காவ்யாவை திருநெல்வேலிப் பெண்ணாவே நினைச்சிட்டோமா.. இவங்க சொந்த ஊரு மதுரைங்கிறது... மறந்துதான் போகுது...”

மாமியாரும் மருமகளும் மகிழ்ந்து போக.. இதில் மகிழ்ந்து போக என்ன இருக்கிறது என்ற நினைவில் பல்லைக் கடித்தான் கண்ணதாசன்..

அவன் இருக்கும் இருப்பென்ன...? இவர்கள் இங்கே சந்தோசம் கொண்டாடுவதென்ன...?

"அவர் இப்ப இங்கேதான் இருக்காரா...?"

அவனை நேருக்கு நேர் பார்த்து நான்கு வார்த்தைகள் கேட்டு விட வேண்டும் என்ற மனத்துடிப்புடன் கேட்டான் கண்ணதாசன்...

"அவன் போனவாரமே சென்னைக்குப் போயிட்டானே.. ஊருக்குப் போகிறப்ப காவ்யாவை அவன்தான் உங்க வீட்டில வந்து டிராப் பண்ணிட்டுப் போனான்.. நீங்க பார்க்கலையா...?"

இன்னும் எத்தனை விவரங்கள் கொட்டக் கூடுமோ என்றிருந்தது கண்ணதாசனுக்கு...

இப்படியா அவன்தங்கை எல்லாவற்றையும் மறைத்து அவனைப் பேச விடாமல் செய்வாள்...?

***'என்ன தவம் செய்துப் புட்டோம்..***
***அண்ணன் தங்கை ஆகிப்புட்டோம்...'***

எரிச்சலுடன் மனதுக்குள் வந்த பாடலை ஓடு.. ஓடு.. என்று வன்பாடுபட்டு ஓட்டிவிட்டான் கண்ணதாசன்..

போனவாரம் சென்றவனை நினைத்து இந்த வாரம் ஏன் காவ்யா அழுகிறாள் என்ற கேள்வி அவன் நெஞ்சில் எழாமல் இல்லை..

‘அதான் டிவியில் பிளாக் அன்ட் வொயிட் படத்தில வந்த கண்ணா.. ராதாங்கிற பாட்டைப் பாத்து அழுதுச்சுன்னு மருக்கொழுந்து சொல்லுச்சே...’

மனதில் எழுந்த கேள்வியும் அவன் ஓட்டி விடுவதற்கு முன்பே ஓடிவிட.. வந்த வேலை முடிந்தது என்ற நினைவுடன் எழுந்து கொள்ளப் போன கண்ணதாசன் மனதில் நிரடிய அந்தக் கேள்வியை கேட்டுவிட்டான்..

“உங்க மச்சினர் மகன்னா.. நம்ம பாட்டிக்கு சொந்த பேரன்னு சொல்றீங்களா...? அதாவது.. உங்க மச்சினர் பாட்டியோட மூத்த மகனா..?”

அதைக் கேட்காமல் அவனால் இருக்க முடியவில்லை.. அன்பு நிறைந்த அம்புஜம் பாட்டியின் வயிற்றில் உதித்த மகனுக்கா அந்த குறுக்கு வழிகள் தோன்றின..?

அதையறியாமல் அந்த இடத்தை விட்டு அவனால் அகல முடியவில்லை..

“இல்லையில்ல.. அவர் அத்தையோட அக்கா மகன்.. அர்ஜீன் பெரியத்தையோட பேரன்.. அத்தைக்கு அக்கா பேரன்...”

அங்கே சுற்றி.. இங்கே சுற்றி.. கதை இப்படி வந்து முடிகின்றதா என்றிருந்தது கண்ணதாசனுக்கு.. ஒளியத் தெரியாதவன் போலிஸ் கமிசனரின் வீட்டில் ஒளிந்த கதையாக.. அந்த அர்ஜீனைப் பற்றிய நினைவுகளிலிருந்து தங்கை தப்பிக்கட்டும் என்று அந்த அர்ஜீனின் சின்னப் பாட்டியின் வீட்டுக்கு அவளைக் கண்ணதாசன் அனுப்பி வைத்தானா…?

'என்னடா இது..'

கண்ணதாசனுக்கு தலைவேதனையாக இருந்தது.. காதல் இந்த அளவுக்கு சுழல்களைக் கொண்டதா என்று நினைக்கும்போதே அவன் மனதில் தேன்மொழியைப் பற்றிய நினைவு ஏனோ எழுந்தது..

# 158

*எங்கே நீ சென்றாலும்.. என்*
*நினைவால் உனைத்தொடர ஆசை கொண்டேன்..*

**க**ண்ணதாசனுக்கு ஒர் அலையடித்தது..

'இந்த நேரம் பார்த்து அவ நினைப்பு ஏன் வருது…?'

அவன் கலவரத்துடன் தேன்மொழியின் நினைவை விரட்டிவிடாமல் போய் வா என்று இதமாக அனுப்பி வைத்து விட்டு எழுந்தான்...

“அப்ப நான் கிளம்பட்டுமா..?”

என்னவோ அந்தக் காலத்தில் நான் உத்தரவு வாங்கிக்கட்டுமா என்று கேட்டுவிட்டு கை கூப்புவார்களே.. அந்தப் பாணியில் கை கூப்பியவனைப் பார்த்து.. அம்புஜமும் சுமதியும் தாங்களாகவே எழுந்து கொண்டார்கள்..

“வீட்டுக்குள்ள வந்துட்டுப் போகலாமே..” சுமதி உபசாரமாக சொன்னாள்..

“இருக்கட்டும்.. இன்னொரு நாள் வர்றேன்.. பாட்டியை விசாரிக்க வந்தேன்... இப்பக் கொஞ்சம் வேலையிருக்கு..”

நாசுக்காக சுமதியின் கோரிக்கையை மறுத்து விட்டு காத்திருந்த கால் டாக்ஸியை நோக்கி நடந்தான் கண்ணதாசன்... அவன் வீட்டுக்குத் திரும்பியபோது மருக்கொழுந்து இரவுச் சமையலை முடித்து வைத்து விட்டு வீட்டுக்குப் போக தயாரானவளாக வாசலிலே நின்று கொண்டிருந்தாள்.. காலையில் நடந்த கனேபரத்தைப் பற்றி விசாரித்த எதிர் வீட்டு பாமாவிடம்...

“ஏம்மா.. இதக் கவனிக்கிறதுதான் உங்க வேலையா..? வீடுன்னு இருந்தா சிரிச்சுக்குவோம்..

அழுதுக்குவோம்.. எல்லாத்தையும் வந்து வீடு வீடா விளக்கம் சொல்லி விளக்கிக்கிட்டிருக்க முடியுமா...? டிவியில தாத்தா ஒருத்தரக் காட்டினாங்க... எனக்குச் செத்துப் போன என் தாத்தனப் பத்தின நினப்பு வந்துருச்சு.. ஒப்பாரி வைச்சுட்டேன்... அது ஒரு குத்தமாம்மா..? மனுசக் கழுதைக்கு அழுகக்கூட இந்த ஊரில உரிமை கிடையாதா...? ஆத்தி... அங்காள பரமேஸ்வரி.. நெல்லையப்பா.. காந்திமதி.. இதை ஏன்னு கேக்க மாட்டிங்களா...?" என்று ஊரிலிருந்த தெய்வங்களையெல்லாம் உதவிக்கு அழைத்து ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தாள்...

காற்றுவாங்க வாசல் படியில் உட்கார வந்த பாமா.. காற்றை வீட்டுக்குள் போய் மின் விசிறியைச் சுழல விட்டு வாங்கிக் கொள்ளலாம் என்ற முடிவுடன் வீட்டுக்குள் ஓடி விட்டாள்...

'யாரு கிட்ட...?'

ஜான்ஸி ராணியின் திருவுருமாக திரும்பிப் பார்த்த மருக்கொழுந்து கண்ணதாசனைக் கண்டதும்.. கைகட்டி.. வாய் பொத்தாத குறையாக உடலை கேள்விக் குறிபோல வளைத்து நின்று அடிமைப் பெண்ணின் திருவுருவமாக மாறினாள்..

கண்ணதாசன் அந்த நடிப்பையெல்லாம் கண்டு கொள்கிறவனாக அப்போது இல்லை... தங்கையின் நினைவைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லாதவனாக

“வேலை முடிஞ்சிருச்சுன்னா கிளம்ப வேண்டியது தான...” என்று மருக்கொழுந்துக்கான அனுமதியை மறைமுகமாய் வழங்கி விட்டு வீட்டுக்குள் நுழைந்தான்...

காவ்யா அப்போதும் சோபாவில்தான் முடங்கியிருந்தாள்.. தங்கையை கூர்மையாக பார்த்தபடி அவளுக்கு எதிரே உட்கார்ந்த கண்ணதாசன்..

“காவ்யா..” என்று அழுத்தமான குரலில் அழைத்தான்..

அவன் அழைப்பில் தன் நினைவுக்கு திரும்பிய காவ்யா அவசரமாக கண்களைத் துடைத்தபடி

“அண்ணே...” என்று எழுந்து அமர்ந்தாள்...

கண்ணதாசன் அவளையே இமைக்காமல் பார்த்ததில் அவளக்கு ‘திக்’ கென்று ஆகி விட்டது.. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்க.. தடுமாறினாள்..

“ஏண்ணே...?”

எதற்காக இப்படிக் குற்றவாளியைப் பார்க்கிறதைப் போலப் பார்த்து வைக்கிறாய் என்று நேரடியாகக் கேட்க முடியாமல் தடுமாறும் தங்கையின் நிலை கண்ட கண்ணதாசனின் மனம் வலித்தது...

'எப்படி இருந்தவ...'

என்றைக்கும் போல அன்றைக்கும் நினைத்தவன்..

"ஏம்மா.. சொல்லலை...?" என்று நேரடியாக கேட்டு விட்டான்...

"அண்ணே..." காவ்யா திகைத்து விழித்தாள்...

"அர்ஜீன் இந்த ஊருக்குள் கால் பதிச்சிருக்கான்.. நீ பாட்டி.. பாட்டின்னு பாசம் கொண்டாடற அந்த அம்புஜம் பாட்டியின் வீட்டில் பதினைஞ்சு நாளாத் தங்கியிருக்கான்.. நீ அவனைப் பார்த்திருக்க.. பேசியிருக்க.. அவனோட தோப்புல நடந்த விருந்துக்கு போய் வந்திருக்க.. ஆனா இதைப்பத்தி எங்கிட்ட மூச்சுக்கூட விடலை.. ஏம்மா...?"

"அண்ணே..."

அந்த நேரடிக் கேள்வியில் சுக்கு நூறாக நொறுங்கி விட்டாள்.. காவ்யா.. எந்த அண்ணன் அவள் சோர்ந்து விழுந்த போது தாயின் மடியாக அவளைத் தாங்கிக் கொண்டானோ.. அந்த அண்ணனுக்குத் தெரியாமல் அவள் அர்ஜீனின் வரவைப் பற்றிய விவரங்களை மறைத்து விட்டாள்..

எந்த அண்ணன் அவள் செய்யாத குற்றத்திற்காக பதில் சொல்ல வேண்டிய நிலை வந்து பதறி நின்றபோது.. லட்சக் கணக்கான ரூபாய்களை சில நிமிடங்களில் புரட்டிக்

கொண்டு வந்து கொட்டி.. அவளை அக்குற்றத்திலிருந்து விடுவித்தானோ... அந்த அண்ணனுக்குத் தெரியாமல் அவள் அர்ஜீனின் மீதான காதல் உணர்வுகளில் மூழ்கி விட்டாள்..

எந்த அண்ணன் அவள் சொன்ன வார்த்தைக்காக.. பிறந்த ஊரையும்.. பெற்ற தாய், தந்தையையும்.. சொந்த பந்தங்களையும்.. பழகின வட்டாரங்களையும் துறந்து.. திருநெல்வேலிக்கு மாறுதல் வாங்கிக் கொண்டு வந்தானோ.. அந்த அண்ணனிடம் அவள்.. அவனுடைய காதலனின் உறவினரின் வீடுதான்... அவள் பழகும் அம்புஜம் பாட்டியின் வீடு என்ற உண்மையைச் சொல்லாமல் விட்டு விட்டாள்...

எந்த அண்ணன் அவள் பற்றிய விவரங்களை தாய், தந்தையிடம் கூடச் சொல்லாமல் மறைத்து அவளைக் காப்பாற்றினானோ.. அந்த அண்ணனிடம்.. அவளுடைய காதலனின் தோப்பில் நடந்த விருந்துக்கு அவள் போய் வந்தாள் என்ற செய்தியைச் சொல்லாமல் மனதுக்குள் புதைத்து விட்டாள்...

‘ஏம்மா...?’

ஓராயிரம் கோடி அர்த்தங்களைச் சுமந்து வந்த அஸ்திரமாய் அவள் நெஞ்சினில் பாய்ந்த அந்தக் கேள்வியில் காவ்யா மனம் வலிக்கக் கதறி விட்டாள்...

அது ஒற்றைச் சொல்லைக் கொண்ட.. ஒற்றைக் கேள்விதான்.. ஆனால்.. அது சுமந்து வந்த அர்த்தங்களும்.. உணர்வுகளும் வானளாவிய தன்மைகளைக் கொண்டது.. அதற்குப் பதில் சொல்வது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல...

'ஏம்மா...?'

அவன் எளிதாகக் கேட்டுவிட்டான்.. ஒற்றைக் கேள்வியில் அவள் நெஞ்சை இற்று விழச் செய்து விட்டான்.. கல்லாலே அடிக்காமல் அவன் சொல்லாலே அடித்து விட்டான்..

அதற்குப் பதில் சொல்ல முடியாத குற்ற உணர்வோடு.. அவன் காலில் தஞ்சமடைந்தது அந்தத் தங்கையின் உள்ளம்...

'ஏம்மா...?'

ஏனென்று அவன் கேட்டு விட்டான்... அவள் என்னவென்று பதில் சொல்வாள்...?

பல மாதங்கள் கடந்து.. இனிக் காணமாட்டோம் என்று நினைத்திருந்த காதலனை கண் முன்னால் கண்டதும்.. அந்த நொடிகளை இழுத்துப் பிடித்து நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற தாபத்தில் அதை மறைத்தாளா...?

*'கண்ணன் வரும் நாளில்*
*கன்னி இருப்பேனோ...*
*காற்றில் மறைவேனோ...'*

என்று ஏங்கி அழுதவள் வழி திறந்த போது.. எதிரே அவன் நின்று கொண்டிருந்த விந்தையை எப்படித்தமையனிடம் சொல்வது என்று அதை மறைத்தாளா...?

அவனுடன் வாழ முடியாது என்று ஆகி விட்ட பின்பு... அவள் வாழ்வில் அவன் வந்து போகும் ஒவ்வொரு நொடிகளையும் சேகரித்து அவள் நெஞ்சகத்தின் பெட்டகத்தில் போட்டுப் பூட்டிக் கொள்ளும் வேகத்தில் அதை மறைத்தாளா...?

அவனோடு... அவள் கழிக்கப் போகும் அந்த மணித்துளிகளை அண்ணன் மறுத்துவிடுவானோ என்ற பதைப்பினில் அதை மறைத்தாளா...?

அவள் எப்படிப் பதில் சொல்வாள்..? காதலின் தளைகளில் கட்டுண்டு விட்ட பின்னால்.. அனைத்தும் மறந்து போகுமே..அதில் அண்ணனையும் மறந்து போனாளே என்ற அவள் நிலையை அவள் சொல்வாளா..?

"மன்னிச்சிருண்ணே..."

காவ்யா.. கண்ணதாசனின் கால் பற்றி அழுதாள்.. கண்ணதாசனின் இமைகள் துடித்தன.. அன்று போல

இன்றும் கதறி அழுகும் தங்கையின் வேதனையைக் காணச் சகிக்காமல் அவளை எழுப்பி உட்கார வைத்தான் அவன்..

“சொல்லு... என்ன நடந்தது...? வந்திருந்தது அவன்தானா..?”

“ம்ம்ம்...”

“அம்புஜம் பாட்டியோட அக்கா பேரனாமே...?”

“ம்ம்ம்...”

“பதினைந்து நாளா இங்கேதான் இருந்தானா..?”

“ம்ம்ம்...”

“அவன் தோப்புக்கு பாட்டி வீட்டில விருந்துக்கு போனாங்களாம்... நீயும் கூடப் போனாயாமே...?”

“அது அவன் வீட்டுத் தோப்புன்னு எனக்குத் தெரியாதுண்ணே...”

“ஓஹோ... தெரிஞ்சிருந்தா நீ போயிருக்க மாட்டியா..?”

கண்ணதாசனின் கூர்மையான கேள்வியில் அதிர்ந்து நிமிர்ந்தாள் காவ்யா... அவள் விழிகளில் கலக்கம் தெரிந்தது...

அர்ஜீனின் தோப்புக்குத்தான் அவர்கள் போகப் போகிறார்கள் என்று காவ்யாவுக்குத் தெரியாதுதான்..

தெரியாமலே அவள் அந்த தோப்பு வீட்டில் நடந்த விருந்தில் கலந்து கொள்ள சென்று விட்டாள்தான்...

ஆனால்.. கண்ணதாசன் கேட்டதைப் போல.. அதைப் பற்றி அவளுக்குத் தெரிந்திருந்தால்.. அவள் என்ன செய்திருப்பாள்..? வரமாட்டேன் என்று மறுத்திருப்பாளா..?

“தெரியலைண்ணே...”

அவள் உண்மையைச் சொல்லி மலங்க மலங்க விழித்தாள்.. கண்ணதாசனுக்கு அதைக் காணச் சகிக்கவில்லை.. எந்த ஒன்றையும் அலசி, ஆராய்ந்து.. தீர்மானமான.. தீர்க்கமான.. முடிவை எடுக்கும் அவன் தங்கையா இதைச் சொல்லுகிறாள்...?

அவன் மனம் வலித்தது.. அவனறிந்த அவன் தங்கை இதைப் போல விழிக்க மாட்டாள்.. ‘இது’ இல்லா விட்டால்.. ‘அது’ என்று தெளிவாக குறிப்பிட்டுச் சொல்லி விடுவாள்..

இப்படி... இதுவா.. அதுவா.. என்று குழம்பிப் போய் இமை கொட்ட மாட்டாள்..

“இந்தக் கதையெல்லாம் என்கிட்டச் சொல்லா-தேண்ணே.. எவளாவது காதில மதுரை மல்லியை முழம்.. முழமா சுத்தியிருப்பா... அவகிட்டப் போய் சொல்லு.. கேப்பையில நெய் வடியுதுண்ணா.. அப்படியான்னு நம்பிக்கிட்டு.. கிண்ணத்தைத் தூக்கிக்கிட்டுப் போற கேணச்சிறுக்கி நானில்ல..”

மனதுக்குள் பழைய காவ்யா வந்து நின்று படபடவென்று பொரிந்து தள்ளினாள்...

‘அவளா.. இவள்..?’

கண்ணதாசன் இரக்கத்துடன் தங்கையின் தலையை வருடினான்.. காவ்யா தமையனின் கால்களில் முகம் புதைத்தாள்..

“உங்க தங்கை என்னை மறக்க மாட்டா..”

அர்ஜீன் விட்ட சவால் அவன் நெஞ்சில் எதிரொலித்தது.. இதோ.. அதற்கான சாட்சியாக.. அந்த அர்ஜீனை மறக்க முடியாமல்.. அவனைப் பற்றிய விவரங்களை மறைத்து விட்டு.. அதைப்பற்றி.. அண்ணன் கேள்வி கேட்டவுடன் கதறி அழுகிறாளே... காவ்யா.. இதற்கு மேல் வேறு சாட்சி வேண்டுமா...?

கண்ணதாசன் பெருமூச்சு விட்டபடி ஜன்னலைப் பார்த்தான்.. இருள் சூழ்ந்த இரவை அது காட்டியது.. வானத்தில் நட்சத்திரங்கள் ஒளிர்ந்தன.. ஆரஞ்சுப் பழத்தின் சுளையினைப் போல.. பிறைநிலா வானில் எழுந்திருந்தது..

அவனுக்கு ஏனோ ‘மூன்றாம் பிறை’ திரைப் படத்தின் நினைவு வந்தது... அதிலும் அந்தக் கதாநாயகன் அவனுடைய காதலி அவனை மறக்க மாட்டாள் என்ற

நிச்சயத்துடன்தான் இருந்தான்.. இருந்தும் அவள் மறந்து போனாள்.. அவனைத் துறந்து போனாள்.. அவள் 'அம்னீஷியா'வில் இருந்த போது அவன் காதலித்திருந்ததினால் அது அவளுக்கு சாத்தியமானது..

காவ்யாவுக்கு அப்படியில்லையே...

தெளிந்த மனத்தோடு.. நிறைந்த நினைவோடு.. ஓர் நாள்.. ஓர் பொழுதேனும்.. அர்ஜீனை அவள் உண்மையாகக் காதலித்து விட்டாளே... அந்தக் காதலின் உணர்வுகள் அவள் மன ஆழத்திலே புதைந்து உறைந்திருக்கும் போது அம்னீஷியாவே வந்தாலும்.. அர்ஜீனைப் பற்றிய நினைவுகளை அவளால் மறக்க முடியுமா...?

## 159

*நினைவாலே உனையழைக்க...*
*நெடுநாளாய் ஆசை கொண்டேன்...*

*"நினைவோ ஒரு பறவை..*
*விரிக்கும் அதன் சிறகை..*
*பறக்கும்.. அது கலக்கும்...*
*தன் உறவை..."*

இளையராஜாவின் இன்னிசை ஒலித்துக் கொண்டிருந்தது.. காவ்யாவின் முன்னால் தட்டை வைத்து பரிமாறினான் கண்ணதாசன்.. தட்டில் வைக்கப்பட்ட தோசைகளைக் கண்டவள் குற்ற உணர்வுடன் எழுந்து கொள்ள முயன்றாள்..

“என்னம்மா...?”

“உன்னைப் பாத்துக்கன்னு அம்மா என்னை இங்க அனுப்பி வைச்சிருக்கு.. இங்கே என்னடான்னா நீ என்னைப் பாத்துக்கற.. வீட்டு வேலைக்குத்தான் ஆளிருக்குன்னா.. உனக்குத் தட்டெடுத்து பரிமாறக் கூடவா நானில்லாம போயிட்டேன்...? நீ உட்காருண்ணே...”

காவ்யா.. கண்ணீரை மறந்தவளாக சுறுசுறுப்புடன் சமையலறைக்குச் சென்று அங்கிருந்த சட்னி.. சாம்பார் கிண்ணங்களைக் கொண்டு வந்து சாப்பாட்டு மேஜையில் பரத்தினாள்... கண்ணதாசனுக்கு தட்டை வைத்து தோசைகளை எடுத்து வைத்தாள்.. சட்னி.. சாம்பாரை அதற்கான சின்னக் கிண்ணங்களில் ஊற்றி அவனருகில் வைத்தாள்... சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த தங்கையின் முகத்தைப் பார்த்தபடியே தோசையை விண்டு.. வாயில் போட்டுக் கொண்ட கண்ணதாசன்...

“நீயும் உட்காரும்மா.. சேர்ந்து சாப்பிடலாம்..” என்றான்

காவ்யாவும் சாப்பிட உட்கார்ந்தாள்.. அப்போதுதான் பசியை உணர்ந்தவளாக அவள் வேகத்துடன் தோசையைக் காலி செய்ய அதை அனுதாபத்துடன் பார்த்தவன்..

“அவனை உன்னால மறக்க முடியலைல்ல...?” என்று ஆழ்ந்தகுரலில் கேட்டான்...

‘விசுக்’கென்று தலை தூக்கிப் பார்த்த காவ்யாவின் விழிகளில் கலக்கம் சூழ்ந்தது.. பதில் சொல்லாமல் மீண்டும் தலை கவிழ்ந்து தட்டுக்குள் புதையல் இருக்கிறதா என்று ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்தாள்...

“காவ்யா.. எதுவா இருந்தாலும் மனசு விட்டுப் பேசிரும்மா...”

“எதைப் பேசன்னுதான் எனக்குத் தெரியலைண்ணே..”

“நம்ம ஊரில இருந்தா அவன் நினைப்பு வருதுன்னுதான நாம ஊரு விட்டு ஊரு வந்தோம்...? இங்கேயும் அவன் வந்திருக்கான்... நீ உண்மையாவே அவன விட்டு விலகனும்னு நினைச்சிருந்தா என்ன செய்திருக்கனும்...? அவன் இருக்கிற வீட்டுப் பக்கம் தலை வைச்சுப் படுக்காம ஒதுங்கியிருக்கனும்... நீ அவன் வந்ததைப் பற்றி என்கிட்டச் சொல்லனும்கூட அவசியமில்ல.. நீ ஒதுங்கி நின்னிருந்தா.. அவனும் ஒதுங்கிப் போகிறவன்தான்.. எனக்கு அவனப் பத்தி

நல்லாவே தெரியும்.. அவன் நியாயமானவன்.. நீ அதைச் செய்யலையே.. ஏம்மா..?"

"அதுதான் எனக்கும் தெரியலைண்ணே..."

"சரி.. அதை விடு.. அவன் உன்னிடம் பழைய உரிமையில் பேசினானா...?"

"ம்ம்ம்..."

"கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு சொன்னானா...?"

"ம்ம்ம்..."

"நீ என்ன சொன்ன..?"

"முடியாதுன்னு சொன்னேன்..."

இந்தப் பதிலை மட்டும்.. தெளிவான.. பிசிறில்லாத குரலில் சொல்லும் தங்கையை என்ன செய்தால் தேவலாம் என்ற தலைவேதனை கண்ணதாசனுக்கு வந்தது..

"அவன் வந்ததை மறைச்ச.. அவன் போனதும் அவன் நினைப்பில அழுகற.. இருந்தும் அவனைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு சொல்லி அனுப்பியிருக்க... உன்னை என்னால புரிஞ்சுக்கவே முடியலை காவ்யா.." கண்ணதாசன் அலுத்துக் கொண்டான்...

"நான் உனக்கு பாரமா போயிட்டேனில்ல...?" ஏக்கத்துடன் தளர்ந்த குரலில் கேட்டாள் காவ்யா..

“அடிதான் வாங்கப் போற..” கண்ணதாசனுக்கு கோபம்வந்தது...

“தெரிஞ்சுதான் பேசறயா...? மரத்துக்கு பூ பாரமாகுமா...? நீ எனக்கு என்னைக்குமே பாரமில்லடா.. நான் உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்ப்பா... நீ புரிஞ்சுக்காம பேசாத...” கனிவானகுரலில் சொன்னான்..

அவனின் அந்த பாசத்தில் நெக்குருசிப் போனாள் காவ்யா...

“இல்லைண்ணே.. என்னால அவனை மறக்க முடியலதான்.. ஆனா.. அவனோட அப்பா செஞ்ச அத்தன.. கொடுமைகளையும் சேத்தே மறக்க முடியலையேண்ணே..”

காவ்யாவின் குமுறலில் கண்ணதாசனுக்கு அவள் மனம் புரிந்து விட்டது.. முள் காலில் குத்தினால் பிடுங்கிப் போடலாம்.. வலியைத் தாங்கிக் கொள்ளலாம்.. மனதில் குத்தினால்.. பிடுங்கிப் போடுவதும்.. வலியைத் தாங்கிக் கொள்வதும் சாத்தியமாகுமா..?

அப்படியென்றால் தங்கையின் வாழ்வு..? அது கேள்விக் குறியா..? ஒன்று அவள் அர்ஜீனுடன் சேர்ந்து வாழ வேண்டும்.. இல்லையென்றால் அவனை மறக்க வேண்டும்.. இரண்டில் ஒன்றை அவள் செய்தால்தான் அவள் வாழ்வை வாழ முடியும்..

“காவ்யா.. என் கூட வேலை பார்க்கிற ஆபிசர்.. என் கூடத்தான் டிரெயினியா இருந்தான்.. சுத்தி வளைச்சு நம்ம சொந்த பந்தத்திலயும் வர்றான்.. அவனுக்கு ரொம்பநாளா உன்னப் பெண் கேக்கிறாங்க.. நீ இப்படிக் காதலில் விழுந்து வைச்சிட்ட.. அதனால பதில் சொல்லாம நாளைக் கடத்தினேன்.. இப்ப அங்கே சரின்னு சொல்லிரலாம்ன்னு தோணுதும்மா...”

அவள் பதிலை எதிர்பார்க்காமல் அவன் முடிவைச் சொல்லிவிட அவள் அதிர்ந்து நிமிர்ந்தாள்..

“அண்ணே...”

“என்னம்மா...?”

“என்னண்ணே இப்படிப் பேசற...?”

“ஒரு தங்கச்சிக்கு அண்ணனாப் பிறந்திருக்கவன் எப்படிப் பேசறானோ அப்படித்தான் நான் பேசறேன்.. இது ஒரு குத்தமாப்பா..?”

“குத்தமில்லயாண்ணே..? என்னால எப்படிண்ணே இன்னொருத்தன கல்யாணம் பண்ணிக்க முடியும்...?”

“அப்ப... அந்த அர்ஜீன்கிட்ட நான் பேசவா...?”

“என்னத்தைப் பேசப் போற..?”

“கல்யாணத்தைப் பத்தித்தான்.. ஏன்ப்பா.. அவன் மாட்டேன்னு சொல்லிருவான்னு நினைக்கறியா...? அவன்

கையைக் காலைக் கட்டித் தூக்கிட்டு வந்து உன் முன்னாலே போட்டுற மாட்டேன்..?"

கண்ணதாசன் வேண்டுமென்றேதான் வீரம் பேசினான்.. அவனுக்கு அவன் தங்கையின் மனதை ஆய்வு செய்ய வேண்டியிருந்தது.. அதுநாள்வரை அவனுடைய தங்கை காதலைப் பற்றிய நினைவுகளால் புண்பட்டுப் போயிருக்கிறாள்.. அந்தக் காயத்தை ஆற்றி அவளைப் பழையபடி சிரிப்பும்.. குறும்புமான பழைய காவ்யாவாக மாற்ற வேண்டும்.. அதன் பின்னால் அவளை ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான் அவனது நினைவாக இருந்தது..

அந்த நினைவை உடைத்து விட்டாள் காவ்யா.. அவளால் எந்தக் காலத்திலும் அர்ஜீனைப் பற்றிய நினைவுகளை மறக்க முடியாது என்பதை அவனுக்கு உணர்த்தி விட்டாள்.. அடுத்து அவன் என்ன செய்ய வேண்டும் என்று அவன் தீர்மானிக்க வேண்டிய கட்டாயத்திற்குள் அவனைத் தள்ளி விட்டு விட்டாள்..

கண்ணதாசன் எடுத்து வைக்கும் அடிகளை கவனமாக எடுத்து வைக்க வேண்டியிருந்தது... அவன் தங்கையின் மனதை அறிந்து.. அதற்கு ஏற்றாற்போல அவனது செயல்பாடுகளை மாற்றிக் கொள்ள

வேண்டியிருந்தது.. அதற்காகவே அவன் தங்கையின் ரோசத்தைத் தூண்டி விட்டான்.. அவளும் ரோசத்துடன் அவன் விரித்த வலையில் சிக்கிக் கொண்டாள்...

“அவனொன்னும் ஏப்பை.. சாப்பையான ஆளில்ல.. நீ கையைக் காலைக் கட்டுறதுக்கு அவன் கையைக் காலைக் குடுத்துக்கிட்டு நிக்க மாட்டான்...”

“இதப் பார்றா... அவன் அப்பேற்பட்ட வீராதி வீரனா..?”

“ஆமான்னு உனக்கே தெரியும்.. இன்னும் சொல்லப் போனா நம்ம வீடு புகுந்து என்னைத் தூக்கிக்கிட்டுப் போயி தாலி கட்டற அளவுக்கு அவனுக்கு தெனாவெட்டு இருக்கு..”

“அப்பேற்பட்ட சூராதி சூரன்... ஏன்ப்பா.. சொல்லிக்காம ஊர விட்டுப் போறான்...? வந்து உன் கழுத்தில தாலியைக் கட்டிக் கூப்பிட்டுக்கிட்டுப் போக வேண்டியதுதான...?”

“என் சொல்லுக்கு கட்டுப் பட்டு போயிருக்கான்.. மத்தபடி என்னக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிட்டுப் போகலை.. நான்தான் அவனக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லி அனுப்பி வைச்சிருக்கேன்..”

“அதுவும்.. சரிதான்.. போயிட்டு போறான் போ.. நீயே வேண்டாம்ன்னு சொல்லிட்ட பின்னால அவன் பேச்சு நமக்கு எதுக்குப்பா..? அது வேணாம்... நீ நான் சொன்ன மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டு... இவன் உன்னை மகாராணி போல வாழ வைப்பான்ப்பா.. அதுக்கு நான் கேரண்டி..”

காவ்யாவுக்கு கோபம் வந்து விட்டது... அவளை இன்னொருவன் கூட இணைத்துப் பேசுவதை இந்த அண்ணன் நிறுத்தவே மாட்டானா..?

“ஏண்ணே... இங்கேயென்ன விளம்பரப்பட சூட்டிங்கா நடக்குது..? என்னமோ நான் கேரண்டி.. நான் கேரண்டின்னு சொல்லிக்கிட்டு இருக்க.. வர்றவன்.. போறவனுக் கெல்லாம் கேரண்டி கொடுக்கிற வேலய நீ எப்போதிருந்து செய்ய ஆரம்பிச்ச..? ஆபிசர் வேலையை மட்டும் பாருண்ணே.. இந்தக் கேரண்டி கொடுக்கிற வேலையெல்லாம் உனக்கெதுக்கு..?”

“இல்லடா.. உன் கல்யாணத்தப் பத்தி எனக்கும் கனவு இருக்குமில்ல...”

“எனக்கே கனவு கலைஞ்சு போச்சு.. நீயேன் அதைப் பிடிச்சுக்கிட்டு தொங்கற...? வேணாம்ண்ணே.. விட்டிரு.. உன் கல்யாணத்தைப் பத்திக் கனவு காணு.. இனி அது மட்டும்தான் நம்ம வீட்டில நடக்கும்..”

காவ்யா முடிவைச் சொல்லி விட்டாள்.. கண்ணதாசன் அதிர்ந்தான்..

"காவ்யா..."

"ஆமாண்ணே.. அவனை மறந்து தொலைக்கவும் முடியல.. அவனோட அப்பா பேசின பேச்சையும்.. என்னைப் பாடாய் படுத்தினதையும் மறந்து தொலைக்க முடியல.. ரெண்டுக்கும் நடுவில நான் அல்லாடறேண்ணே.. என் வாழ்க்கையில அவன் மட்டும்தான்.. ஆனா.. அவனுக்கு பெண்டாட்டியானா.. அவன் அப்பாவுக்கு நான் மருமகளா ஆவேனே.. வாழ்நாள் பூராவும் அவர் பேசின பேச்சுக்களோட நினப்பை மறந்துட்டு.. மதிப்பும்.. மரியாதையுமா.. அவன் வீட்டில அவனுக்குப் பெண்டாட்டியா நான் வாழ்ந்திர முடியுமா..?"

"அதுக்காக..?"

"எனக்கு கல்யாணமே வேண்டாம்ண்ணே.. நான் காலம் முழுவதும் உனக்குத் தங்கச்சியா.. நம்ம அம்மா அப்பாவுக்கு மகளா.. உன் நிழலிலேயே வாழ்ந்துட்டுப் போறேன்.. நீ கல்யாணம் பண்ணிக்கண்ணே.. மருமகனையும்.. மருமகளையும் பெத்துக் கொடு.. நான் வளர்க்கிறேன்.. அதுகளை வளர்த்து ஆளாக்கினாப் போதும்ண்ணே.. எனக்கு வேற எதுவும் வேணாம்..."

இதைக் காது கொடுத்துக் கேட்பதற்காகத்தான் அவன் காத்திருந்தானா...? அவளுக்காக சேர்த்து வைத்த நகைகள்.. சேமித்து வைத்திருக்கும் ரொக்கம்.. கட்டிக் கொண்டிருக்கும் வீடு.. இவை அனைத்தும் யாருக்காக..? இந்த கோர்வைக்குப் பின்னால் அவன் கோர்த்து வைத்திருக்கும் தங்கையின் திருமணத்தைப் பற்றிய கனவுகளை அவன்தங்கை அறிவாளா...?

*"கல்யாணச் சாப்பாடு போடவா..*
*தம்பி கூடவா..*
*இந்த ஊருக்கெல்லாம்*
*பாக்கு வைச்சு*
*மேளம் கொட்டவா..?"*

சின்னத்திரையின் பாடல் வரிகள் அவன் கண்களில் கண்ணீரை வரவழைத்தன...

*"பத்துப் பிள்ளை*
*தங்கச்சிக்கு பொறக்கனும்..*
*நான் பாவாடை சட்டை*
*தைச்சுக் கொடுக்கனும்..*
*மாமான்னு அழைக்கனும்..."*

அவனால் அதற்கு மேல் கேட்க முடியவில்லை.. பட்டென்று டிவியை அணைத்து விட்டான்..

அவன் தங்கையின் பிள்ளைகள் அவனை மாமாவென்று அழைக்கும் நாளுக்காக அவன் காத்துக் கிடக்க.. அவன் தங்கையோ அவன் பிள்ளைகள் அவளை அத்தையென்று அழைக்கும் நாளுக்கு காத்திருப்பதாக கூறுகிறாள்.. அவர்களை வளர்த்து ஆளாக்கும் பேறு கிடைத்தால் மட்டும் போதும் என்கிறாள்...

# 160

*நிலாக்காயும் நேரத்திலே...*
*நீ வரவே ஆசை கொண்டேன்..*

**க**ண்ணதாசன் தூங்காமல் நடை பழகிக் கொண்டிருந்தான்.. மனதிலிருந்ததையெல்லாம் கொட்டிக் கவிழ்த்து விட்டதாலோ என்னவோ காவ்யா அயர்ந்து உறங்கி விட்டாள்..

அவள் அறையின் வாசலில் நின்று அவள் உறங்குவதையே பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்கள் பனித்தன..

‘என்னவெல்லாம் பேசிப் புட்டா...’

அவன் தூங்க நெடு நேரமானது.. அவன் காதில் இடைவிடாமல் காவ்யா பேசிய பேச்சுக்களே எதிரொலித்தன..

“உன் பிள்ளைகளுக்கு இந்த அத்தையின் மடிதாண்ணே.. அதுகளைப் பார்த்து என் துக்கத்தை ஆத்திக்குவேன்.. நீ சீக்கிரமா அம்மா ஆசைப்படறதைப் போல கல்யாணத்தைப் பண்ணீக்கண்ணே...”

“சாப்பிட்டாச்சில்ல... போய் தூங்கு..”

“ஆகட்டும்.. அதுக்கு முன்னால இதையும் கேளு.. நாம நம்ம ஊருக்கே போயிரலாம்..”

“என்னாச்சு..?”

“இனிமே எதுக்காக ஓடி ஒளியனும்..? அதான் அவனுக்கு நானில்ல... எனக்கு அவனில்லன்னு ஆகிப் போச்சில்ல... இனி அவன் மதுரைக்கு வந்தா எனக்கென்ன..? வா.. நம்ம ஊருக்கே போயிரலாம்..”

“ஏம்பா.. நினைச்சவுடனே நெய்க்காரன் குதிரையில ஏறிட முடியுமா..? இது ஆபிஸீப்பா.. மாறுதலுக்கு எழுதிப் போடனும்.. அது கிடைக்கனும்.. அதுக்குப் பின்னாலதான் நாம நகர முடியும்..”

“எதையோ செய்யி.. எனக்கு இங்கிருந்தது போதும்..”

இந்த வார்த்தைகளை அர்ஜீன் திருநெல்வேலியில் இருக்கும் போது அவள் சொல்லியிருப்பாளா என்று நினைத்துக் கொண்டான் கண்ணதாசன்..

வாழ்க்கை முழுவதும் ஒருவனது நினைவில்.. திருமணமே செய்து கொள்ளாமல் வாழும் அளவிற்கு அவள் மனதில் காதல் இருக்கிறது... அவன்மேல் ஆசையிருக்கிறது.. .

ஆனால் அந்த இரண்டையும் நெருஞ்சிமுள்ளைப் போன்ற நெருடல் அல்லவா பிணைத்துக் கொண்டிருக்கிறது..?

மறுநாள் பொழுது விடிந்து வெகு நேரமாகியும் காவ்யா எழுந்து கொள்ளாமல் உறங்கிக் கொண்டிருந்தாள்.. வீட்டு வேலைக்கு மருக்கொழுந்தும் வந்து விட்டாள்.. அவள் கொடுத்த காபியுடன் பேப்பரும் கையுமாக உட்கார்ந்தவனிடம்..

“பாப்பா இன்னும் எழுந்திருக்கலையாய்யா...?” என்று கேட்டுவிட்டு அவனது பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானாள் மருக்கொழுந்து..

“பாப்பாவக் கேட்டா.. இந்தய்யா எதுக்காக இம்புட்டுக் கோவம்.. கோவிச்சுக்கிறாரு..” முணுமுணுத்தபடி காவ்யாவின் அறைக்குள் எட்டிப் பார்த்தவள்..

“என்ன பாப்பா.. இன்னுமா தூங்கற..?” என்று ஒரு சப்தம் கொடுத்து அவளை எழுப்பி விட்டாள்..

முகம் கழுவி... காபிக் கோப்பையுடன் கண்ணதாசனின் முன்னால் சென்று அமர்ந்தவள்.. அவன் கையிலிருந்த பேப்பரில் ஒரு தாளை உறுவிப் படிக்க ஆரம்பித்தாள்..

பேப்பரை அவளிடம் கொடுத்த கண்ணதாசன் அவளை உற்றுப் பார்த்தான்.. நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்க்காமல் பேப்பரில் பார்வையை பதித்திருந்தவள்.. விழிகளை உயர்ந்தாமலே..

“என்ன விசயம்..?” என்று கேட்டாள்...

“ஒன்னுமில்லப்பா...”

“அத ஓட்டப் பானயில நண்டை விட்டதப் போல லொடலொடன்னு பேசிக்கிட்டு.. அடுப்படியில சாமான் சட்டை உருட்டிக்கிட்டு இருக்காளே மருக்கொழுந்து.. அவகிட்டச் சொல்லு.. நம்புவா.. என்கிட்டச் சொல்லாதே...”

“நிசமாவே ஒன்னுமில்லடா..”

“ரொம்ப நேரமா தூங்கிட்டேன்னு பார்த்தியா..?”

“ஊஹீம்.. ஒரு வாரத் தூக்கத்தையும் ஒட்டு மொத்தமா ஒரே நாளில் தூங்கினா சீக்கிரமா எழுந்திருக்க முடியாதுன்னு எனக்கும் தெரியும்ப்பா...”

"ஒரு வாரத் தூக்கமா..? அதென்ன.. ஒரு வாரக் கணக்கு..?"

"அந்த அர்ஜீன் ஊருக்குப் போயி ஒரு வாரமாச்சாமேப்பா..."

கண்ணதாசன் இயல்பாக சொல்லி விட்டு எழுந்து கொள்ள.. காவ்யா அசைவற்று பேப்பரையே பார்த்துக் கொண்டிருந்தாள்..

அவள் விழிகளில் நீர் திரையிடுவதைக் கவனித்தபடி கண்ணதாசன் குளிக்கப் போய் விட்டான்.. அலுவலகம் செல்லத் தயாராகி அவன் வெளியே வந்த போது.. காவ்யா சுறுசுறுப்பாக சமையலறையில் எதையோ கிண்டிக் கொண்டிருந்தாள்..

கைகள் இயங்கும் வேகத்தில் அவள் வாயும் இயங்கிக் கொண்டிருக்க... பேச்சு மழையில் நனையும் உற்சாகத்தில் மருக்கொழுந்தும் சளசளத்துக் கொண்டிருந்தாள்...

"அங்கே என்னப்பா பண்ற..?" கண்ணதாசன் அதட்டினான்..

"நெய்சாதம்ண்ணே.. அம்புஜம் பாட்டி வீட்டில செஞ்சாங்க.. நான் கத்துக்கிட்டேன்.."

"அதை பரிசோதனை பண்ணிப் பாக்க நான்தான் கிடைச்சேனா...? ஏம்மா மருக்கொழுந்து இதுக்கா உனக்கு

சம்பளம் கொடுத்துக் கிட்டிருக்கேன்.. நீ எதுக்கும் உன் புருசனை சாயந்திரமா வந்து என்னைப் பாக்கச்சொல்லு...”

“அது என்னத்துக்குய்யா.. தேவையில்லாத சோலி.. நானு நம்ம பாப்பா வேலை செய்யறத பாத்துக் கிட்டு இருப்பேனா..? பாதிக்கு மேலே நாந்தான் செஞ்சேங்கய்யா..”

“மீதி பாதியை யாரு செஞ்சது...? உன் பாட்டியா..?”

“அது பாவம்.. தலையை ஆட்டிக்கிட்டு பட்டிக் காட்டில கிடக்குது... அதை எதுக்காக காலம் போன கடைசியில வம்புக்கு இழுக்கறிங்க.. பாப்பா.. நீ முதல்ல வெளியே போ..”

“அண்ணே... இது என்ன..?”

“எதைப்பா கேக்கற..?”

“மருக்கொழுந்துக்கும் எனக்கும் ஆயிரம் இருக்கும்..”

“ஆயிரத்து ஒன்னு கூட இருக்கட்டும்..”

“நீ எதுக்கு ஊட வர்ற..?”

“எப்ப வந்தேன்..?”

“இப்ப வந்தியே.. சாயங்காலமா குமாரு அண்ணன எதுக்காக வரச் சொல்ற..? மருக்கொழுந்து மேல பிராது கொடுக்கிறதுக்கா..?”

"ஏம்பா.. வேற வேலைக்கு நான் வரச் சொல்லியிருக்கக் கூடாதா...?"

"நீதானே.. அந்த அண்ணனை இந்த ஒத்த விசயத்துக்குத்தான வரச் சொல்லுவ.. எனக்கு உன்னைத் தெரியாதா..?"

காவ்யா கலகலப்புடன் பேசியபடி கண்ணதாசனுக்கு இட்லியை எடுத்து வைத்தாள்.. மதிய உணவுக்கு அவள் செய்து வைத்திருந்த நெய் சாதத்தை கேரியரில் நிரப்பித் தந்தாள்.. மறந்து விடாமல் மாறுதலுக்கு விண்ணப்பித்து விடும்படி வாசல்வரை வந்து நினைவூட்டினாள்..

அவள் வலியப் போட்டுக் கொண்டிருந்த வேடம் அது என்று கண்ணதாசனுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.. அவளால் அர்ஜீனை மறக்க முடியாது.. இதை அறிந்த பின்னால் சும்மாயிருக்க... அவன் ஒன்றும் துரியோதனன் பெற்றெடுத்த தேவராஜன் இல்லையே... சிவதாணு பெற்றெடுத்த கண்ணதாசனாயிற்றே.. கூடப் பிறந்தவளை சந்தோசமாக வாழ வைக்காவிட்டால் அவனெல்லாம் என்ன அண்ணன்..?

அந்த மனப் போராட்டத்துடன் ஒரு வாரம் ஓடிப் போனது.. அந்த வார இறுதியில் கண்ணதாசன் அர்ஜீனுக்கு போனைப் போட்டான்..

“ஹலோ...” மறுமுனையில் அர்ஜீனின் குரல் ஒலித்தது..

“திமிராடா மாப்பிள்ளை..?” என்று கேட்டான் கண்ணதாசன்..

ஒரு நொடி மௌனமாக இருந்த மறுமுனை..

“யார்...? கண்ணதாசனா..?” என்று அடையாளம் கண்டு கொண்டது..

“பரவாயில்லையே.. கண்டு பிடிச்சிட்டயே.. கொட்டிக்காரன்தான்..” மெச்சினான் கண்ணதாசன்..

“என்னை வாடா.. போடான்னு கூப்பிடற தைரியம் இந்த உலகத்தில் என் அப்பா.. அம்மா.. பாட்டி.. சித்தப்பா.. சித்தி.. அக்காவுக்கு அடுத்தபடியா உங்ககிட்டத்தான இருக்கு.. கண்டு பிடிக்கிறதில என்ன கஷ்டம்..?”

“செம விவரம்தான்.. அப்படியில்லாமலா.. ஒன்னும் தெரியாத சின்னப் பெண்ணின் மனதைக் கலைச்சு.. காதல்ன்னு சொல்ல வைச்சுட்டு.. ஊரை விட்டு ஓடிப் போய் பம்மாத்து காட்டுவ.. நீ எதையும் கண்டு பிடிப்ப...”

“காவ்யாவின் மனதை நான் கலைக்கலை கண்ணதாசன்..”

“மனச்சாட்சியில்லாம பேசாதேடா.. ஜெயிச்-சுட்டோம்கிற திமிரில பேசறயா..?”

"ஜெயிச்சுட்டேனா..? நானா..? இல்லை கண்ணதாசன் என்னால தொழிலை ஜெயிக்க முடிந்தது.. வாழ்வை ஜெயிக்க முடிந்தது.. உங்க தங்கையோட மனதை மட்டும் ஜெயிக்க முடியல.. நான் தோற்றுப் போய்த்தான் ஊரை விட்டு ஓடி வந்திருக்கேன் கண்ணதாசன்.. உங்க தங்கையை கை விட்டுட்டு ஓடி வரலை..."

அவன் குரலில் தெரிந்த வலியை இனம் கண்டு கொண்ட கண்ணதாசனின் மனம் திருப்தி கொண்டது.. அது காதல் கொண்டவனின் இதயம் வலிக்கும் வலி..! அந்த வலியை கண்ணதாசனின் தங்கை அனுபவித்துத் துடித்துக் கொண்டிருக்கிறாள்.. அதை அவளுக்கு உணர்த்தியவன் மட்டும் நிம்மதியாக இருந்து விடுவதா..?

அவன் அப்படியில்லை என்று அறிந்ததில் உருவான நிம்மதியை கண்ணதாசனே அறிவான்...

"இதை நம்பச் சொல்றியா..?"

"நம்புவதும்.. நம்பாததும் உங்க விருப்பம்.. நான் உண்மையைச் சொன்னேன்..."

"நீ பெரிய உண்மை விளம்பிதான்.. உன் முகத்தில் விழிக்கப் பிடிக்காமத்தான.. நானும் என் தங்கையும் திருநெல்வேலிப் பக்கம் வந்தோம்...? இங்கேயும் எதுக்குடா வந்து என் தங்கச்சியின் நிம்மதியைக் குலைச்ச..?"

“மைன்ட் யுவர் வெர்டுஸ் மிஸ்டர் கண்ணதாசன்... உங்க தங்கை அங்கேயிருக்கிறது எனக்குத் தெரியாது...”

“தெரிஞ்சிருந்தா...? இங்கே வந்திருக்க மாட்டியா..?”

இதற்கான பதிலை கண்ணதாசன் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.. காவ்யா திருநெல்வேலியில் இருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் அர்ஜீன் வந்து விட்டதாகச் சொல்கிறான்...

அவள் அங்கிருப்பதை அவன் முன் கூட்டியே அறிந்திருந்தால் என்ன செய்திருப்பான்..?

காவ்யாவின் கண்ணீரையும்.. துடிப்பையும்.. அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் கண்ணதாசனுக்கு இதற்கான விடையைத் தெரிந்து கொள்ளாமல் எந்த வேலையையும் செய்ய முடியாது என்று இருந்தது...

“நிச்சயமா வந்திருப்பேன்..” என்றான் அர்ஜீன்...

கண்ணதாசனின் மனதில் மீண்டும் திருப்தி நிரம்பியது...

“எவ்வளவு தைரியமிருந்தா என்கிட்டயே இதைச் சொல்வ..?” அவன் கோபப்பட்டான்...

“இதைச் சொல்ல தைரியம் எதுக்கு கண்ணதாசன்.. மனதில் உண்மையான காதலிருந்தா போதாதா..?”

"உன் மனசில் அது இருக்கா..? போடா.. டேய்.."

"என் மனதில் மட்டுமில்லை.. காவ்யாவின் மனதிலும் அது இருக்கு.. அவ என்னை என்னைக்குமே மறக்க மாட்டா..."

"அந்தத் திமிர்தான உனக்கு..?"

"இல்லைன்னு சொல்ல மாட்டேன்.."

"அவ உன்னை மறக்க மாட்டான்னா சொல்ற..?"

"நானும் அவளை மறக்க மாட்டேன்னு சொல்றேன்.."

"ஒருவேளை.. நான் பாக்கிற மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்ட அவ சம்மதிச்சுட்டான்னா.."

"ஒருநாளும் அதைச் செய்ய மாட்டா..."

"நீ உருப்பட மாட்டடா.. என் தங்கை மனசில வேதனையை விதைச்சுட்டு.. திமிர் காட்டறியேடா.. அவ மனசில ஆசையை விதைக்காதே.. வளர்க்காதேன்னு தலைப்பாடா அடிச்சுக்கிட்டேன்.. என் பேச்சை நீ கேட்டயா..? கட்டிக்கிற திறமிருக்கனும் அப்ப நீ அவ மனசில ஆசையை விதைச்சதில நியாயமிருக்கும்... நீதான் அவள விட்டுட்டு ஓடுறதுலயே குறியாய் இருக்கிறவனாச்சே.. நீயெல்லாம் எதுக்காகடா அவ மனசில ஆசையை வளர்த்த..?"

"கண்ணதாசன்.."

“பேசாதேடா... அவ கழுத்தில தாலியைக் கட்டத் துப்பில்ல.. நீயெல்லாம் பேச வந்திட்ட.. ஆசைப் படறதுக்கும் ஒரு யோக்கியதை இருக்கனும்டா.. விட்டுப்புட்டு ஓடற உனக்கெல்லாம் எதுக்குடா காதல்..?”

# 161

*நீ சொன்ன வார்த்தைகளில்...*
*நான் நிலைகொள்ள ஆசைகொண்டேன்...*

அர்ஜீன் பல்லைக் கடித்தான்.. அவன் முகத்தில் ரத்தம் பாய்ந்து ஜிவு.. ஜிவு.. வென ஆனது...

அது போன்ற வார்த்தைகளை அவன் அதற்கு முன்னால் கேட்டதில்லை.. அவனிடம் அப்படிப் பேசும் தைரியத்தை யாருக்கும் அவன் கொடுத்ததில்லை... முதன் முறையாக ஒருவன் அர்ஜீனுக்குப் போன் போட்டு அடாவடியாகப் பேசுகிறான்.. அதைக் கேட்டுக் கொண்டு அர்ஜீன் சும்மா இருக்கிறான் என்றால் அது யாருக்காக..?

காவ்யாவுக்காக.. அவள்மேல் அவன் கொண்டுள்ள காதலுக்காக.. ஆசைக்காக.. அவள் நிழல் சார்ந்த அனைத்தையும் அவன் நேசிக்கிறான் என்பதற்காக...

"இதைப் பேசறது நீங்களாப் போயிட்டிங்க கண்ணதாசன்..."

"வேற யாரும் பேசுறதுக்கு இருக்காங்களா..? அடப்பாவி.. என் தங்கச்சி என்னவோ.. உன்னப் போயி உத்தம புருசன்னு சொல்லிக்கிட்டு இருக்காளே.. அது பொய்யா..?"

'உத்தம புருசன்...'

அந்த வார்த்தைகளில் அர்ஜீனின் மனதில் தென்றலடித்தது.. அவன் அவளுக்குப் புருசன்தான்.. அதை ஊரறியச் சொல்ல விடாமல் பாடாய் படுத்திக் கொண்டிருப்பவள் அவனுடைய உத்தமப் பெண்டாட்டி தானே...

அந்த நினைவு தந்த மெல்லிய சிரிப்புடன் அவன் பதில் சொன்னான்.. அந்தச் சிரிப்பை கண்ணதாசனும் கவனித்து விட்டான்...

"இல்லைங்க.. மெய்தான்..."

"ஓ.. இதைச் சொல்றப்ப சாருக்கு சிரிப்பாணி பொத்துக்கிட்டு வருது..?"

"என்ன ஆணி..?"

அர்ஜீன் இப்போது பலமாகவே சிரித்து விட்டான்.. இதே வார்த்தை பிரயோகத்தை காவ்யாவும் அடிக்கடி

பிரயோகிப்பாள் என்ற நினைவில் அவன் சிரிப்பு வலுத்தது.. அதைக் கேட்டுக் கொண்டிருந்த கண்ணதாசனின் முகம் விகசித்தது...

அவன் நினைத்ததைப் போல எதுவும் நடந்து விடாது என்ற நினைவில் அவன் மனதில் அமைதி சூழ்ந்தது.. காவ்யாவுக்கும் அர்ஜீனுக்கும் இடையில் இருக்கும் இடைவெளியை இட்டு நிரப்பி காவ்யாவை விட்டுக் கொடுக்காமல் அர்ஜீன் கைபிடித்து விடுவான் என்ற நிம்மதி அவன் நெஞ்சில் நிறைந்தது...

அர்ஜீன் தெளிவாக இருந்தான்.. தெளிவாகப் பேசினான்.. கண்ணதாசனின் மரியாதைக் குறைவான விளிப்புகளை பொறுத்துக் கொண்டு மரியாதையுடன் பதில் சொன்னான்.. மறந்தும் அவன் குரலில் எரிச்சலைக் காட்டவில்லை...

கண்ணதாசனுக்கு அதுவே போதுமானதாக இருந்தது.. அவன் மனதில் விரவிய நிம்மதியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கடுமையாக அவன் பேச்சைத் தொடர்ந்தான்..

“என்ன...? எங்க பேச்சைக் கேலி செய்றியா..?”

“தோடா..! அதை எதுக்கு நான் தேவையில்லாம செய்யப் போறேன்..? புரியாத லாங்வேஜை கேள்வி கேட்டுத் தெளிவு படுத்திக்கிறதில தப்பொண்ணுமில்லையே..”

"அட.. எங்க ஊரு லாங்வேஜ் உனக்குப் புரியாதா..? இப்ப ஒன்னைச் சொன்னியே.. 'தோடா'ன்னு.. அது என்னப்பா..? தோடா..? மூக்குத்தியா..? எங்க ஊரில காதில போடற கம்மலத்தான் 'தோடு'ன்னு சொல்லுவோம்.. நீ சொல்ற 'தோடா'வக் கேட்டா.. உன் காதில போட்டிருக்கது.. தோடா.. இல்ல ஜிமிக்கியான்னு கேக்கிறதப் போலயில்ல இருக்கு.. இத நான் கேட்டேனா..?"

"இப்ப நம்ம லாங்வேஜ் பிராப்ளத்தப் பத்திப் பேசத்தான் நீங்க என்னைக் கூப்பிட்டிருக்கீங்களா..?"

"இல்லன்னு உனக்கே தெரியும்..."

"அப்புறம் எதுக்காக அதைப் பிடித்துக்கிட்டு இருக்கீங்க..?"

"தொங்கிக்கிட்டு இருக்கேன்னு சொல்ற..."

"வேணாம் கண்ணதாசன்.. நான் இதுக்கும் விளக்கம் கேட்டால் வம்பு வந்துதான் சேரும்.. நீங்க எப்படியோ போசிக்கிட்டு போங்க.. ஐ டோன்ட் கேர்..."

"நீ எதைத்தான் 'கேர்' பண்ணியிருக்க..? உன் மேல ஆசை வைச்சவளயே 'கேர்' பண்ணிக்காம விட்டுவிட்டு ஒடினவன்தான் நீ..? இதையா 'கேர்' பண்ணப் போற..?"

"என் பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு கண்ணதாசன்..."

“நீ எல்லையே வைச்சுக்காம உலகம் சுத்தற வாலிபன்னு கேள்விப் பட்டேனே.. அது பொய்யா..?”

“இப்ப உங்களுக்கு என்னதாங்க வேணும்..?”

“என் தங்கச்சி மனசை உடைச்சிருக்கியே.. அதுக்கு ஒரு பதில் வேணும்..”

கண்ணதாசனின் கோபத்தில் அர்ஜீன் இமைமூடி தன்னை கட்டுப் படுத்திக் கொண்டான்.. பொங்கிய உணர்வலைகளை கட்டுக்குள் கொண்டு வந்த பிறகு பேச ஆரம்பித்தான்...

“அந்தக் குற்றத்தை நான் செய்திருக்கேன்தான்... ஆனால் கண்ணதாசன் ஒருவேளை நான் காதல் சொன்னவுடனே உங்க தங்கை என் காதலை ஏற்றுக்கிட்டு இருந்தா.. இந்த நிலைமை வந்திருக்காது..”

“ஓ.. உன் நினப்பு அப்படிப் போகுதா..? உன் மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்க..? நீ பெரிய மன்மத ராசா.. நீ உன் காதலச் சொன்னதும்.. தாவிக் குதிச்சுக்கிட்டு.. நானும் உன்னைக் காதலிக்-கிறேண்டான்னு என் தங்கை சொல்லியிருக்கனுமா..? ஒரு பொண்ணோட காதல்ங்கிறது உனக்கு அவ்வளவு எளிதாப் போயிருச்சா..?”

“கை காட்..! எதையும் வில்லங்கமாகவே புரிந்துக் கிட்டால் எப்படி கண்ணதாசன்.. ஆறு மாதங்களுக்கும்

மேலா.. உங்க தங்கையின் பதிலுக்காக நான் காத்துக்கிட்டு இருந்தேன்.. அவ பதிலே சொல்லாம என்னைக் கலங்கடிச்சுட்டு.. நான் கனடா போகிறதுக்கு முதல் நாள் காதலைச் சொல்லி என்னை வழியனுப்பி வைத்தா நான்தான் என்ன பண்ணுவேன்..?”

“அதான் உனக்குப் பதிலா.. உன் அப்பாவும்.. உன் வருங்காலப் பொண்டாட்டியும் கூட்டணி போட்டுக்கிட்டு என் தங்கச்சிக்கு நிறையச் செய்துட்டாங்களே.. போதும்.. போதும்கிற அளவுக்கு அள்ளி.. அள்ளி கொடுத்துட்டாங்களே.. அது உனக்குப் போதாதா..?”

“நேகா என் வுட்பி யில்லை கண்ணதாசன்..”

“உன் அப்பா அப்படித்தான் சொல்லியிருக்கார்... போதாக்குறைக்கு அவளுக்கு ஆரத்தி எடுத்து உள்ளே கூப்பிட்டுக்கச் சொல்லி என் தங்கச்சிக்கே ஆர்டர் போட்டிருக்காரே.. ஏண்டா டேய்.. உங்களுக்கெல்லாம் மனசே இல்லையாடா..? அங்கே இரும்புதான் இருக்குதா..? பிடிச்சா கட்டிக்கனும்.. பிடிக்கலைன்னா விலகிப் போன்னு சொல்லிரனும்.. அத விட்டுட்டு மனசுல எதுக்குடா ஆணியக் கொண்டு அடிச்சு சித்திரவதை பண்றிங்க..?”

அர்ஜீன் மீண்டும் இமை மூடித் திறந்தான்.. அவன் வாழ்நாள் பூராவும் இந்தக் கேள்வி அவனைத் துரத்தப் போகிறது என்று அவனுக்குத் தோன்றியது.. அவன் மேல்

ஆசை வைத்த பாவத்திற்காக ஒரு அறியாப்பெண் மனதளவில் துன்பப் பட்டிருக்கிறாள்.. அந்த மன வலியால் அவனுடன் சேர்ந்து வாழ முடியாது என்று விலகியும் நின்று விட்டாள்.. அவன் இதற்கு என்ன பரிகாரம் செய்யப் போகிறான்..?

“எனஃப் கண்ணதாசன்...”

“போதும்ன்னு நீ சொல்லிட்டா நான் பேச்சை நிறுத்திக்கணுமா..?”

“நீங்க பேசறதில உங்க மனது ஆறும்ன்னா பேசுங்க.. நான் கேட்டுக்கிறேன்.. அது ஆறாதுன்னு உங்களுக்கே தெரியும்.. அதுக்குப் பின்னால எதுக்காக அதைப் பற்றியே பேசனும்..?”

“விட்டுப்புட்டா உனக்கு வசதிதான..?”

“எனக்கு எது வசதின்னு உங்களுக்குத் தெரியாது கண்ணதாசன்.. ஒருநாள் அதைத் தெரிந்துக்குவீங்க.. நான் தெரிய வைப்பேன்...”

“ஹா.. ஹா...”

“எதுக்கு இந்த சிரிப்பு..?”

“நீ பேசினா ஜோக்கு.. ஜோக்காவே இருக்குடா மச்சான்.. அத்தைக்கு மீசை முளைக்கும்ன்னு நம்ப வைக்கிறதில நீ மன்னன்டா.. இப்படித்தான் அன்னைக்கு

கனடாவில இருந்து வந்ததும்.. உன் குடும்பத்தோட வந்து என் தங்கச்சியை பொண்ணுக் கேப்பன்னு சொன்ன.. நான் அப்பவே சொன்னேனா இல்லியா..? அத்தைக்கு முதல்ல மீசை முளைக்கட்டும்டா.. அதுக்கப்புறமா அதை சித்தப்பான்னு... கூப்பிடறதா.. இல்ல.. பெரியப்பான்னு கூப்பிடறதான்னு நான் தீர்மானம் பண்ணிக்கறேன்னு... நீயும் கனடாவில இருந்து வந்த.. வந்த அன்னைக்கு என்ன நடந்துச்சு...”

அன்று நடந்த நிகழ்வை நினைத்துப் பார்த்த அர்ஜீனின் மனதில் வேதனை சூழ்ந்தது.. எப்படிப்பட்ட நிகழ்வு அது...? யாரை அழைத்துக் கொண்டு வந்து கண்ணதாசனின் தங்கையைப் பெண் கேட்கிறேன் என்று அவன் சவால் விட்டானோ.. அந்தத் தந்தையே.. கண்ணதாசனின் தங்கையை ‘திருடி’ யென்று சொல்லிக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியிருந்தார்.. அதைக் கண்ட பின்னால் கண்ணதாசன் அர்ஜீனைச் சொல்லிக் காட்டாமல் இருப்பானா.. என்ன..?

“மச்சானுக்கு வாயடைச்சுப் போயிருமே.. இவ்வளவு நேரமா வியாக்கினம் பேசின வாயில இப்ப மட்டும் எப்படி மச்சான் பூட்டு வந்து தொங்குது...?”

“இப்ப என்னால பேச முடியலைதான் கண்ணதாசன்.. பட்.. இப்படியே காலம் போய் விடாது.. ஓர்நாள் நானும்

பேசுவேன்.. அப்ப இதுக்கெல்லாம் சேர்த்து வைத்து என் பதிலைச் சொல்றேன்...”

“அப்பச் சொல்ற பதில இப்பச் சொன்னா ஆகாதா..? ஏன்..? இன்னைக்கு நாள் நல்லாயில்லையா..?”

“ஒரு வகையில் அப்படித்தான் கண்ணதாசன்.. நம்ம எல்லோருக்குமே ‘நல்லதான நாள்..’ ஒருநாள் வரும்.. அது வந்தே தீரும்.. அப்ப வேண்டிய மட்டும் பேசிக்கலாமே..”

“இனி நீயும்.. நானும் பேசி என்ன ஆகப் போகுது..? அதான் எந்தங்கச்சி மனசை சுக்கு நூறா உடைச்சு நொறுக்கிட்டியே.. உனக்கு ஒன்னு சொல்றேன்.. கேட்டுக்க..”

“சொல்லுங்க...”

“இதுவரைக்கும் நீ செய்ததெல்லாம் போதும்.. இனிமே என் தங்கச்சி பார்வையில படாதே...”

கண்ணதாசனின் கடுமையில் அர்ஜீன் உதட்டைக் கடித்தான்... இந்த உத்திரவாதத்தை எப்படி அர்ஜீனால் கொடுக்க முடியும்..?

“டிரை பண்றேன்...”

“டிரை பண்ணாதே.. டிசைட் பண்ணு...”

“ஊஹீம்.. டிரைதான்.. பை கண்ணதாசன்...”

அர்ஜீன் போனை அணைத்து விட்டான்.. திரும்பவும் கண்ணதாசன் அழைப்பானோ என்ற யோசனையுடன் தாடையைத் தடவியபடி சுழல் நாற்காலியில் சுழன்றபடி காத்திருந்தான்.. போன் ஒலிக்கவில்லை.. கம்ப்யூட்டரின் பக்கமாக சுழன்று திரும்பி.. வேலையில் ஆழ்ந்தான்..

இருள் பரவிய வேளையில் அவன் எழுந்தபோது.. போன் ஒலித்தது.. எடுத்துப் பார்த்தான்.. ஆனந்தி அழைக்கிறாள் என்று செல்போனின் சின்னத்திரை ஒளிர்ந்து அறிவித்தது...

“அக்கா..” என்றான்...

“அர்ஜீன்.. நைட் உனக்கு என் வீட்டில் டின்னர் அரேன்ஜ் பண்ணியிருக்கேன்.. வந்துட்டுப் போ..”

“என்ன விசேசம்..?”

“நீ சாப்பிட வர்ற.. அதுதான் விசேசம்...”

அது இல்லையென்று அர்ஜீனுக்குத் தெளிவாகவே தெரிந்தது.. காரணம் இல்லாமல் ஆனந்தி அவனைத் தொந்தரவு செய்ய மாட்டாள்.. இரவு உணவுக்காக.. அவள் வீட்டுக்கு அவள் தம்பி வந்து போகும் அந்த நேரத்தில் வேறு பல வேலைகளை முடித்து விடுவான் என்று அவளுக்கு மிக நன்றாகவே தெரியும்.. அது தொழில் ரீதியான பார்ட்டிகளாக இருக்கலாம்.. இல்லையென்றால்

இரவு உணவை அருந்திய படியே அவன் வியாபார ஒப்பந்தங்களை பேசி முடிக்க வேண்டியிருக்கலாம்.. அதற்காக அவன் நட்சத்திர ஓட்டலுக்கும் போக வேண்டியிருக்கலாம்..

அவனைக் கேட்காமல்.. அவனுக்கான விருந்தினை அதுவரை ஆனந்தி முடிவு பண்ணியதே இல்லை...

# 162

*நான் சொல்லாத என்மனதை..*
*நீ புரிந்துகொள்ள ஆசைகொண்டேன்...*

***"நேற்று இந்த நேரம்...***
***ஆற்றங்கரை யோரம்...***
***தென்றல் வந்து..***
***உன்னைத் தொட்டு...***
***என்னைத் தொட்டு...***
***பாடும் ராகங்கள்.. கீதங்கள்..***
***ஆஹா.. நேற்று இந்த நேரம்..."***

**மெ**லிதான இன்னிசை காருக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.. காரை சீரான வேகத்துடன் கடற்கரை

சாலையில் செழுத்திக் கொண்டிருந்தான் அர்ஜீன்.. கண்ணுக்கு எட்டிய தொலைவில்.. இரவு நேரத்து அலைகடலின் அலைகள்.. வெண்மைநிற ரிப்பன்களைப் போல.. வளைந்து.. நெளிந்து.. தவழ்ந்து.. விலகி.. ஓடிக் கொண்டிருந்தன.. கடற்கரையின் மணல் வெளியில்.. கிராமத்து திருவிழாக் கொண்டாட்டத்தை நினைவு படுத்துவதைப் போலக் கடைகளின் அணிவகுப்பும்.. அவற்றின் விளக்குகளின் ஒளிர்வும் காட்சியளித்தன.. கடலின் மேலே எழுந்த முழுநிலவில் அவன் பார்வை படிந்தது...

'இன்னைக்கு பௌர்ணமியா..?' அவன் தனக்குள் கேட்டுக் கொண்டான்...

*"பௌர்ணமி இரவில்...*
*என் கோட்டின் மீது..*
*உனதுகோடு படிந்தது..."*

காருக்குள் ஒலித்த பாடலும் பௌர்ணமி நிலவைக் குறி வைக்க.. அதை ரசிக்கும் மனநிலையில் இல்லாத அர்ஜீன் சூள் கொட்டிக் கொண்டான்.. இது போன்ற பால் வரிகள் அவனுக்குள் எழுப்பி விடும் கிளர்ச்சியான நினைவலைகள் அவனை விட்டுப் பிரிந்து நிற்பதைப் போல அவனுக்குத் தோன்றியது...

இந்தப் பாடல்களை ரசிக்கும் வழக்கத்தை அவனுக்குள் காவ்யாதான் ஏற்படுத்தி வைத்தாள்... மதுரை... மல்லிகையின் மணத்தை மட்டும் அவனுக்கு உணர்த்த வில்லை.. பாடல்களையும் அதன் ஆழ்ந்த மெல்லிசையையும் அவனுக்கு உணர்த்தியிருந்தது...

'அவதான் தள்ளி நிற்கிறாளே...' அவன் பெருமூச்சுவிட்டான்...

கண்ணதாசனின் கோபத்தில் அவன் மனம் நைந்து போயிருந்தது.. அதுபோன்ற ஆழ்ந்த பிணைப்பை அவன் அரிதாகத்தான் காண்கிறான்.. காவ்யாவிடம் கண்ணதாசன் காட்டும் பரிவையும்.. அதனால் அர்ஜீன்மீது அவன் காட்டும் கோபத்தையும் நினைத்துப் பார்க்கும் போது.. இவன்தான் எப்படிப்பட்ட உடன்பிறப்பாக இருக்கிறான் என்று அர்ஜீனின் மனம் வியந்தது...

அந்த வியப்போடு.. ஆனந்தியின் வீடு இருந்த தெருவுக்குள் அவன் காரைத் திருப்பினான்...

"வாடா அர்ஜீன்..." ஆனந்தி போர்டிகோவின் அருகில் நின்று வரவேற்றாள்..

"என்னக்கா.. திடிர்ன்னு டின்னர் அரேன்ஜ் பண்ணியிருக்க..?"

"ஏண்டா.. உனக்கு நான் ஒரு நேரமாவது சாப்பாடு போடக் கூடாதா..?"

“அட.. நீ கூட அம்மா மாதிரியே பேசக் கத்துக்கிட்டியே.. எப்படிக்கா..?”

“தினமும் அம்மாவிடம் டியுசன் எடுத்துக்கறேன்.. பிரைவேட் கிளாஸீம் உண்டு...”

“வெரிகுட்.. இப்ப இதுவேற நடக்குதா..? என்பாடு திண்டாட்டம்தான்னு சொல்லு...” அர்ஜீன் பயப்படுவதைப் போல பாவனை செய்ய..

“போடா அரட்டை..” என்று அவன் முதுகில் செல்லமாக அடித்து வைத்தாள் ஆனந்தி...

அவர்கள் வீட்டுக்குள் சென்றபோது.. ஹாலின் சோபாவில் உட்கார்ந்து பள்ளிப் பாடங்களை படித்துக் கொண்டிருந்த சரணும்.. சாராவும்.. சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.. ஏறக்குறைய கட்டிப் புரண்டு சோபாவின் விளிம்பிலிருந்து உருண்டு அவர்கள் தரையில் விழப் போகும் நிலையில் தாவிப் பிடித்துக் கொண்டான் அர்ஜீன்...

கைக்கு ஒருவராக.. இரண்டு கைகளிலும் அவர்களைத் தூக்கிக் கொண்டவன்..

“ஏய்ய்.. வாலுகளா.. என்ன இங்கே கலாட்டா..?” என்று விசாரிக்க ஆரம்பித்தான்...

“பாருங்க அங்கிள்.. இவன் என் நோட்புக்கில கிறுக்கிட்டான்..” சாரா புகார் செய்தாள்..

"போடி.. பொய் சொல்லாத.. இவதான் என் நோட் புக்க எடுத்து வைச்சுக்கிட்டு இவளோடதுன்னு சொல்ற.. அங்கிள்..." என்று சரண் சண்டைக்கு வந்தான்...

அவ்வளவுதான்.. சாரா.. சிலிர்த்துக் கொண்டு சண்டைக்கு வந்து விட்டாள்...

"போடா.. சீட்டிங்..."

"போடி... பொய்சொல்லி..."

"நானாடா பொய்சொல்லி..?"

"நானாடி சீட்டிங்..?"

அவர்கள் இருவரும் அர்ஜீனின் கைகளில் அடங்காமல் எகிறி எகிறி சண்டை போட ஆரம்பிக்க..

"கல்ஃப் வார் தோத்தது போ..." என்று ஆனந்தியிடம் சொன்னான் அர்ஜீன்...

"இதுக இப்படித்தாண்டா.. கொஞ்ச நேரத்தில வீட்டையே இரண்டாக்கி பானிபட் வாரை நடத்தி முடிச்சிருவாங்க..." ஆனந்தி சிரித்தாள்..

"நீ என்ன பண்ற..? சண்டையைத் தீர்த்து வைக்க வேண்டியதுதானே..."

"நீ வேற... இந்தியாவும்.. பாகிஸ்தானும் கூட ஒற்றுமையா அகிடுவாங்க.. இதுக மட்டும் சமாதானத்துக்கு வரவே வராதுக..."

“அப்ப.. எப்பப் பார்த்தாலும் இதே சிச்சுவேசன் தானா...?”

“ஊஹீம்.. இதுகளைக் கண்டுக்கிட்டாத்தான் இந்த எகிறு எகிறுவாங்க... கண்டுக்காம விடு.. கொஞ்ச நேரத்திலேயே தோள்மேல கையைப் போட்டுக்கிட்டு சமத்தா கார்ட்டூன் பார்க்க ஆரம்பிச்சுருவாங்க..”

“இப்படியொரு டெக்னிக் இருக்கா..?”

அர்ஜீன் வியந்தபடி குழந்தைகளை இறக்கி விட்டு.. அவர்களுக்காக வாங்கி வந்திருந்த சாக்லெட் வகையறாக்களை கவனமாக பிரித்து அவர்களிடம் தந்தான்..

“என்னே.. உன் முன்னெச்சரிக்கை...” ஆனந்தி கை விரல்களை விரித்துப் பாராட்டினாள்..

“பின்னே..? இதைச் சாக்கா வைச்சு.. அடுத்த வார் ஆரம்பிச்சுருமே..” என்று சமர்த்தாக காரணம் சொன்னான் அர்ஜீன்..

“பிய்த்து உதற்றடா அர்ஜீன்...”

ஆனந்தி தம்பியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு டைனிங் டேபிளுக்குப் போனாள்.. வரிசையாக தட்டுக்கள் கவிழ்த்தி வைக்கப்பட்டிருக்க.. டேபிளின் மத்தியில் மூடப்பட்ட பீங்கான் கிண்ணங்கள் அணி வகுத்திருந்தன..

“உட்காருடா...”

தம்பியின் தோள்களைப் பிடித்து அழுத்தி உட்கார வைத்தாள் ஆனந்தி.. அவன் சுற்று முற்றும் பார்த்தான்..

“யாரைத் தேடற...?”

அவனுக்கு தட்டை வைத்து பரிமாறியபடி கேட்டாள் ஆனந்தி...

“அத்தானும்.. குழந்தைகளும் வர வேணாமா...?”

“அத்தான் இன்னைக்கு லேட்டாத்தான் வருவார்.. குழந்தைக சாப்பிட்டு முடிச்சிட்டுத்தான் ஹோம் வொர்க் பண்ணப் போணாங்க...”

“தனியாச் சாப்பிடத்தான் வரச் சொன்னயா...?”

“அப்படி ஏன் நினைக்கிற..? என் தம்பியை மட்டும் தனியாக் கவனிச்சு.. சாப்பிட வைக்கிறதில எனக்கு ஒரு சந்தோசம்ன்னு நினைச்சுக்கயேன்..”

ஆனந்தி இயல்பாக பேசியபடி அவனுக்கு எதிரே அமர்ந்தாள்.. அர்ஜீன் தட்டிலிருந்த பிரைட் ரைஸ்யையும்.. சில்லி சிக்கனையும் பார்த்தான்.. பசியெடுப்பதைப் போலத் தோன்றியதில் ஸ்பூனை எடுத்து சாப்பாட்டை அள்ள ஆரம்பித்தான்..

“அர்ஜீன்..” ஆனந்தி மெதுவான குரலில் அழைத்தாள்...

“சொல்லு...” என்றான் அர்ஜீன்...

“எதைச் சொல்லச் சொல்றடா..?”

“எதைச் சொல்லனும்னு என்னை டின்னருக்கு வரச்சொன்னியோ.. அதைச் சொல்லு...”

தம்பி புத்திசாலியென்பதை ஆனந்தி அறிவாள்.. அதனால் அவனின் அந்த யூகத்தில் வியந்து போகாமல் மெல்லச் சிரித்தாள்..

“அம்மா ஃபீல் பண்றாங்கடா...”

“டாடியைப் போல ஒரு ஹஸ்பெண்ட் கிடைச்சா ஃபீல் பண்ணாம என்ன பண்ணுவாங்க..?”

“நீ பேசறது சரியில்லை அர்ஜீன்..” ஆனந்தி உண்மையிலேயே கோபம் வந்து விட்டவளாக தம்பியைக் கண்டித்தாள்...

“ஹி இஸ் அவர் டாடி.. ரிமம்பர் இட்.. அர்ஜீன்...”

“அதுக்காக அவர் செய்கிற எல்லாத்தையும் நான் டாலரேட் பண்ணிக்கனுமா..? நெவர்.. அவர் செய்கிற எதுவுமே சரியானதாக இல்லை.. அப்புறம் வேற எப்படி நான் பேசுவேன்னு எதிர்பார்க்கிற..?”

“அது அம்மாவோட பிராப்ளம்.. அவங்களுக்கும்.. டாடிக்கும் நடுவில எந்த மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்கும்

இதுவரைக்கும் வந்ததில்லை.. அப்படி இருக்கிறப்ப நீ அவங்களோட லைஃபை கிண்டல் பண்றதைப் போலக் கமெண்ட் பண்றது ரொம்பத் தப்பு அர்ஜீன்.. உனக்கு அதுக்கான ரைட்ஸ் இல்லை..."

"ஷ்யூர்.. அம்மா டாடியோட பெர்ஸனலில் இன்டர்பியர் ஆகறதும்.. அதைக் கமெண்ட் பண்றதும் தப்புத்தான்.. பட்.. அம்மா டாடியைக் கேள்வியே கேட்காம இருந்துக்க பழகிக்கிட்டாங்க.. அவங்களோட அத்தனை புராப்பர்ட்டியையும் டாடி பெயருக்கு மாற்றிக் கொடுத்துட்டு அவங்களை அடையாளமில்லாதவங்களா மாத்திக்கிட்டாங்க.. அப்புறம் எப்படி டாடிக்கும் அவங்களுக்கும் நடுவில மிஸ் அண்டர்ஸ்டாண்டிங் வரும்..? அதான் டாடி அவங்களை ஒரு பொம்மையா மாத்தி வீட்டுக்குள்ள பூட்டி வைச்சிட்டாரே.. அவங்க சாவி கொடுத்தா மட்டும் பேசற பொம்மை.. அந்தச் சாவியும் டாடி கையில இருக்கு..."

அர்ஜீனின் பேச்சில் தெரிந்த உச்சகட்ட தார்மீக கோபத்தை அளவிட்டாள் ஆனந்தி.. இதுவரை அவன் இதைப்போன்ற பார்த்தசாரதியைப் பற்றிய வெளிப்படையான எதிர்மறை விமரிசனங்களைப் பேசியதில்லை.. அவனுக்கும் அவருக்கும் நடுவில் இடைவெளி இருந்ததுதான்.. சுந்தரியிடம் காட்டும் அன்பையும்..

உரிமையையும் பார்த்தசாரதியிடம் அவன் காட்டியதில்லை தான்.. தாயிடம் எடுத்துக் கொள்ளும் சலுகைகளை.. தகப்பனிடம் அவன் எடுத்துக் கொண்டதில்லைதான்... சுந்தரிக்கான அவனது குமுறலில் நியாயம் இருந்தாலும் அதை அவன் இதுநாள்வரை கோடிட்டு மட்டுமே காட்டி வந்தான்.. பட்டவர்த்தனமாக சொல்லிக் காட்டியதில்லை...

தாயின் சொத்துக்களில் உரிமை கொண்டாடி... அதை அபகரிப்பது தன் பிறப்புரிமை என்று அவற்றைக் கைப்பற்றிக் கொண்ட தந்தையின் செயலை அவனால் ஆதரிக்க முடியவில்லை..

“இது நான் உருவாக்கின கம்பெனி...”

பெருமையுடன் பார்ட்டிகளில் அவர் மார்தட்டிக் கொள்ளும் போது.. அதற்கான பணத்தைக் கொடுத்த சுந்தரி.. ஏதோ ஒரு மூலையில் அமைதியாக நின்று கொண்டிருப்பாள்.. ஒரு பேச்சுக்காகக்கூட.. என் வெற்றிக்குப் பின்னால் என் மனைவி இருக்கிறாள் என்று பார்த்தசாரதி சொன்னதேயில்லை..

அர்ஜீனுக்கு கொதிப்பாக இருக்கும்.. என்னதான் மனைவியென்றாலும்.. அவளுடைய சொத்துக்களை அவளுக்கு உரிமையில்லாததாக ஆக்கி விட்டு.. தனக்கான உரிமையாக அவற்றை மாற்றிக் கொண்ட பார்த்தசாரதியின் சுயநலமிக்க செயல்பாடுகளை அவன் வெறுத்தான்...

அந்த ஒரு காரணத்திற்காகவே அவன் பார்த்த சாரதியின் கம்பெனியில் பொறுப்பேற்க மறுத்தான்... தன் காலில் நிற்க விழைந்தான்.. உழைத்து முன்னேறுவதன் ருசி எப்படியிருக்கும் என்று தகப்பனுக்கு உணர்த்த அவன் ஆசைப்பட்டான்.. அவரிடம் கடனாக வாங்கிய பணத்தை வட்டியும்.. முதலுமாக திருப்பிக் கொடுத்தான்.. அவனுடைய சுய உழைப்பில்.. சுய முயற்சியில்.. விண்ணைத் தொட்டுக் காண்பித்தான்...

அவனது அந்த வெற்றியில் பார்த்தசாரதி பாடம் படிப்பார் என்று அவன் எதிர் பார்க்க.. அவரோ அந்த வெற்றியை விலை பேச ஆரம்பித்து விட்டார்.. அதற்கான தடையாக மகன் மனதில் ஆசையின் வித்துக்களை விதைத்த பெண்ணின் மனத்தை நொறுக்க முடிவு செய்து.. அவன் இந்தியாவில் இல்லாத நேரம் பார்த்து அதை செயல் படுத்தியும் விட்டார் எனும்போது அர்ஜீனின் ரத்தம் கொதிக்காதா..?

# 163

## விண்ணைத் தொட்ட மன்னவனே...
## என்னைத் தொட ஆசைகொண்டேன்...

**ஆ**னந்தி தம்பியின் முகத்தில் பிரதிபலித்த உணர்வலைகளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. அவளுக்கு வருத்தமாக இருந்தது.. இந்த அளவுக்கு அவன் கொதிப்படைந்து அவள் இதுவரை பார்த்ததில்லை..

“கூல்டவுன் அர்ஜீன்..” என்றாள்...

“மனதுக்குள்ள தீ எரியுதுக்கா... எப்படி கூலா இருக்கிறது...?”

“என்னன்னு என்னிடமாவது சொல்லு அர்ஜீன்...”

தம்பியின் முகத்துக்கு நேரே குனிந்து பரிதவிப்புடன் கேட்ட ஆனந்தியின் முகத்தைப் பார்த்த அர்ஜீனின் முகத்தில் ஓர் இறுக்கம் இருந்தது.. அவன் மறுப்பாக தலையசைத்தான்...

“ஸாரிக்கா.. எல்லாத்தையும் உன்னிடம் ஷேர் பண்ணியிருக்கேன்.. பட்.. இதை ஷேர் பண்ண என்னால முடியாது...”

“ஏண்டா..? நான் உன் அக்கா மட்டுமில்லை அர்ஜீன்...”

“ஐ நோ இட் வெரி வெல்.. யு ஆர் மை பெஸ்ட் பிரண்ட்.. ஆனாலும் அக்கா.. பெஸ்ட் பிரண்டிடம் கூட ஷேர் பண்ணிக்க முடியாத சிலது இருக்கு.. என்னை ஃபோர்ஸ் பண்ணாதே..”

“ஓகே.. லீவ் இட்...”

உடனடியாக அதிலிருந்து வெளிவந்தாள் ஆனந்தி.. அதுதான் அவள்.. தம்பியாக இருந்தாலும்.. அவனாக பகிர்ந்து கொள்ளாத எதையும் தூண்டித் துருவிக் கேட்க மாட்டாள்.. அவள் கடைபிடித்த நாகரிகம் அத்தகையது...

“இன்னும் கொஞ்சம் போட்டுக்க அர்ஜீன்...”

“சமைச்ச மொத்தத்தையும் என் தட்டில தள்ளிட்டா அத்தானுக்கு என்ன இருக்கும்..?”

“அவருக்கு உள்ளே எடுத்து வைத்திருக்குடா..”

“அதானே பார்த்தேன்.. அவருக்கு ஸ்பெசலா...?”

பேச்சு மாறியதில் அர்ஜீன் பழையபடி இயல்பான கலகலப்புக்கு திரும்பி விட்டான்.. பொதுவான விவரங்களைப் பேசிக் கொண்டிருந்த ஆனந்தி.. திடிரென்று அந்தக் கேள்வியைக் கேட்டாள்...

“அந்த நேகா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டியை நீ மேரேஜ் பண்ணிக்கிறதா இருக்கியாமே..?”

இதைக் கேட்டதும்.. இயல்பாக இருந்த அர்ஜீனின் முகத்தில் மீண்டும் ரத்தம் பாய்ந்தது.. கண்கள் சிவக்க...

“அப்படின்னு யார் சொன்னது..?” என்று கேட்டான்...

“ஊரே சொல்லுது...”

“உன் தம்பி நான் சொன்னேனா..?”

“இல்லைதான்..”

“அப்ப அதுவும் இல்லை...”

“அர்ஜீன்..”

“சொல்லு..”

“அம்மாவும் இதையே சொல்றாங்களேடா...”

“அப்ப அம்மாவையே மேரேஜ் பண்ணிக்கச் சொல்லு..”

“டேய்..! என்னடா பேசற..?”

“வேற என்ன பேசச் சொல்ற..? என்னைக் கேட்காம அம்மாவா எப்படி இதைப் பேசலாம்..?”

“அவங்க தானாப் பேசறவங்களாடா..? இப்பத்தானே நீ சொன்ன.. அவங்க டாடி சாவி கொடுத்தா ஆடுற பொம்மைன்னு...”

“எல்லாத்துக்கும் ஆடக் கூடாதுக்கா..”

“அவங்களும் இஷ்டப்பட்டு ஆடறதைப் போலத் தெரியலை...”

“அவங்களை விடு.. உனக்கு இஷ்டமா..?”

அர்ஜீனின் கேள்வியில் ஆனந்தியின் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.. அவளைச் சரியாக கணித்து வைத்திருக்கும் தம்பியின் மீது எப்போதும் போல அப்போதும் பிரியம் ஏற்பட்டது...

அவள் தலையை ஒரு பக்கமாக சாய்த்து.. தம்பியைப் பார்த்து இமை மூடித் திறந்து சிரித்தாள்.. அர்ஜீனின் முகத்திலும் அந்தச் சிரிப்பு தொற்றிக் கொண்டது.. இருவரும் சேர்ந்து சிரித்த சிரிப்பு சப்தத்தில் சாரா வந்து எட்டிப் பார்த்து விட்டுச் சென்றாள்...

“உன் பொண்ணு வந்து விசிட்டடிச்சுட்டுப் போறா பாரு...” என்றான் அர்ஜீன்...

“நாம சிரிச்சோமில்ல.. அதான் வந்து எட்டிப் பாத்துட்டுப் போறா...” ஆனந்தி சிரிப்பை நிறுத்தாமல் சொன்னாள்...

“உனக்கே இஷ்டமில்லை.. ஆனா ஊர் பேசுதுங்கிறதுக்காக நான் என் லைஃபை பணயம் வைக்கனும்.. என்னே உன் நியாயம்..!” விளையாட்டாக மெச்சினான் அர்ஜீன்..

“சீச்சீ.. என்ன வார்த்தை பேசறடா.. லைஃபை பணயம் வைக்கிறதா..? விளையாட்டுக்குக் கூட நீ இப்படிப் பேசலாமா..? அந்தப் பெண்ணுக்கும் நமக்கும் என்னடா சம்பந்தம்..?”

“இதை உன் டாடியிடம் கேளு...”

“அவர் உனக்கும் டாடிதான் அர்ஜீன்...”

“ம்ப்ச்.. பிடிக்காத எதையும் பிள்ளையின் தலையில் கட்டப் பார்க்கிறது நல்ல தகப்பனுக்கான அடையாள மில்லையக்கா..”

“ஐ நோ அர்ஜீன்...”

“அப்ப இதை அவரிடம் சொல்ல வேண்டியது தானே...?”

“சொல்லாமல் இருப்பேன்னு நினைத்தியா..? ஆல்ரெடி பல தடவை இதைப்பத்தி சொல்லியாச்சு.. அவர் நிறுத்தனுமே...”

“அப்ப நானும் நிறுத்த மாட்டேன்...”

“எதை..?”

“அது சஸ்பென்ஸ்...”

“இதுவரைக்கும் டாடி பிடிவாதமா இருந்ததில் எனக்கொன்னும் பிரச்னையில்லை அர்ஜீன்.. அது அவரோட

குணம் நமக்கென்னன்னு என்னால இருக்க முடிஞ்சது.. ஆனா இப்ப அந்தப் பிடிவாதம் உன்னைத் தொட்டு நிற்கும் போது என்னால பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியலைடா...”

“அக்கா.. அவர் சொற்பேச்சு கேட்கிற ரகமில்லை.. இவரையெல்லாம் வேற வழியிலதான் மீட் பண்ணனும்..”

“எப்படிடா..?”

“அது அப்படித்தான்.. பார்த்துக்கிட்டே இரு.. நான் வைக்கிற ‘செக்’கில இவர் ஆட்டத்தை விட்டே ஓடனும்.. யாருகிட்ட இவர் விளையாட்டை விளையாடிப் பார்க்கிறாரு..?”

“இப்படி தகப்பனும்.. மகனும் எதிரும் புதிருமா நின்றா அம்மா மனசு என்ன பாடுபடும்ன்னு யோசிச்சுப் பார்த்தியா..?”

“அதுக்காகத்தான் இத்தனை நாளும் பொறுமையா போனேன்.. என்னை மீறி எதுவும் நடக்காதுங்கிற நினைப்பு.. அந்த நினைப்பிலயும் இவர் மிளகாய் பொடியை அள்ளிப் போட்டுட்டார்.. இனியும் சும்மா இருந்தா நான் ஆண்பிள்ளைன்னு சொல்லிக்கிறதுக்கே அர்த்தமில்லாம போயிரும்க்கா..”

“அர்ஜீன்...”

“இவருக்கு மட்டும் மகாலட்சுமியப் போல எங்க அம்மா வேணும்.. எனக்கு மட்டும் ஊர் சுற்றி.. அடங்காப் பிடாரி.. அகங்காரியை கை காட்டுவாரா..?”

அர்ஜீன் கொதித்துக் கொண்டிருக்க...

“டேய்ய்..” என்று வாய் பொத்திச் சிரித்தாள் ஆனந்தி...

அப்போதுதான் உள்ளே வந்த சத்தியமூர்த்தி மனைவியின் சிரிப்பை ரசனையுடன் பார்த்தபடி.. மைத்துனனை வரவேற்க வேண்டுமென்பதை மறந்தவனாக..

“எதுக்கு உங்க அக்கா இப்படிச் சிரிக்கிறா..?” என்று அர்ஜீனிடம் கேள்வி கேட்டான்...

“ஊம்.. நீங்களும்.. எங்க டாடியும் கொடுத்து வைத்தவங்கன்னு சொன்னேன்.. அதுக்குத்தான் இந்தச் சிரிப்பு...” என்று அர்ஜீன் சொன்னான்..

“எதைடி கொடுத்து வைத்திருக்கிறோம்..?” சத்தியமூர்த்தி புரியாமல் கேட்க...

“ஐயோ.. அம்மா.. முடியலையே..” என்று ஆனந்தி வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்...

அவ்வளவுதான்.. மனைவி சிரிக்கும் அழகில்.. மைத்துனனை முற்றிலுமாக மறந்து போன சத்தியமூர்த்தி ஆனந்தியின் பக்கத்தில் உட்கார்ந்து விட்டான்...

“நீ மட்டும் சிரிச்சா எப்படி அனும்மா.. எனக்கும் அதைச் சொன்னா நானும் சேர்ந்து சிரிக்க மாட்டேனா..?”

அவன் கொஞ்ச.. வெட்கத்தில் முகம் சிவந்து போன ஆனந்தி தம்பியின் பக்கமாக கண்ஜாடை செய்து கணவனைக் கட்டுப் படுத்தினாள்.. அதற்குப் பின்னால் தான் மைத்துனனை இன்னும் வரவேற்கவில்லை என்ற உணர்வு வரப் பெற்ற சத்தியமூர்த்தி.. அர்ஜீனைப் பார்த்து..

“ஹி.. ஹி.. வாங்க..” என்று வரவேற்று வைத்தான்..

“வந்து டின்னர் சாப்பிட்டு முடிச்சாச்சு..” கைகழுவ எழுந்தபடி பதில் சொன்னான் அர்ஜீன்...

“நீங்க வருவீங்கன்னு இவ சொன்னா..”

“எவ சொன்னா..?”

“உங்க அக்காதான்..”

“அதை முதலிலேயே சொல்லலாமில்ல..?”

“எனக்கு இப்படிச் சொல்லித்தான் பழக்கம்...”

“கொடுத்து வைத்த பிறவி..”

“யாரைச் சொல்றீங்க..?”

“வேற யாரைச் சொல்லுவேன்..? உங்களைத்தான் சொன்னேன்..”

“ஏங்க.. நானும் வந்ததிலிருந்து பார்க்கிறேன்..”

“கேட்கிறேன்னு சொல்லுங்க அத்தான்..”

“இதிலயும் ஒரு குற்றம் கண்டு பிடிச்சாச்சா..? அருமையான மைத்துனர்தான்... ஓகேங்க.. கேட்கிறேன்னே சொல்லிட்டா போச்சு.. அது என்ன.. என்னைப் பார்த்து கொடுத்து வைத்திருக்கேன்.. கொடுத்து வைத்திருக்கேன்னே சொல்கிறீங்க.. எதைத்தான் கொடுத்து வைத்திருக்கேன்..?”

“அதை நான் போன பின்னால அக்காவிடம் கேளுங்க அத்தான்...”

அர்ஜீன் கிளம்பிவிட.. மனைவி பதில் சொல்வாளா என்று பார்த்தான் சத்தியமூர்த்தி.. அவளோ அவனுக்கான தட்டை எடுத்து வைத்து..

“சாப்பிட வர்றீங்களா..?” என்று அழைத்தாள்..

“ஏண்டி.. நானென்ன கேட்கிறேன்.. நீயென்ன பதில் சொல்ற.. எதுக்குடி உன் தம்பி எதுக்கெடுத்தாலும் என்னைப் பார்த்து நான் கொடுத்து வைத்தவன்னு சொன்னாரு..”

“உங்களை மட்டுமா சொன்னான்..? எங்க டாடியையும் சேர்த்துத்தானே சொன்னான்..?”

“சரிடி.. அதைத்தான் எதுக்குச் சொன்னாரு..”

"அதுவா..?" என்றவளுக்கு.. திரும்பவும் சிரிப்பு வந்துவிட.. சத்தியமூர்த்தி காதலுடன் மனைவியை நெருங்கினான்..

"நீ சிரிக்கிறப்ப பூவைப் போல இருக்கிறடி..."

அவள் முகத்தில் அவன் முகத்தைஉரச.. அவன் சட்டையின் பட்டனைத் திருகியபடி ஆனந்தி சிணுங்கினாள்...

"போதும் கொஞ்சினது.. போய் குளிச்சுட்டு வாங்க.."

"விரட்டறதிலேயே குறியாய் இரு..."

மனைவியின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு சத்தியமூர்த்தி மாடிப்படியேறினான்.. அவன் குளித்து விட்டு வந்த போது.. ஆனந்தி குழந்தைகளைத் தூங்கச் செய்துவிட்டு இறங்கி வந்தாள்..

கணவனும் மனைவியும் சேர்ந்து அமர்ந்து கதை பேசியபடி இரவு உணவை உண்ண ஆரம்பித்தார்கள்.. சத்தியமூர்த்தி எதையோ சொல்ல.. அதை ரசித்துச் சிரித்தாள் ஆனந்தி.. சற்று முன்பும் இதைப் போலதானே சிரித்தாள் என்ற நினைவில் சத்தியமூர்த்தி அதைப் பற்றி வினவினான்..

"அதுவா..?" ஆனந்தி மீண்டும் சிரிப்பிற்கான ஆயத்தத்தை ஆரம்பிக்க..

“வேண்டாம்டி.. சஸ்பென்ஸ் தாங்கலை..” என்று ஏறக்குறைய கெஞ்சினான் சத்தியமூர்த்தி..

“டாடியும்.. நீங்களும்.. மகாலட்சுமியப் போலப் பெண்களாப் பார்த்து மேரேஜ் பண்ணிக்கிட்டிங்களாம்..”

“பாருடா.. இதுக்குக் கூடவா பொறாமைப் படுவாங்க..?”

“பின்னே..? அவனுக்கு மட்டும் ஊர்சுற்றி.. அடங்காப்பிடாரி.. அகங்காரியைக் கை காட்டி விட்டா.. அவன் உங்களைப் பார்த்தும்.. டாடியைப் பார்த்தும் பொறாமைப்பட மாட்டானா..?”

“யாரைக் காட்டி விட்டாராம்..?” யோசனையில் ஆழ்ந்த சத்தியமூர்த்தி.. முகத்தில் வெளிச்சம் பரவ நிமிர்ந்தான்...

“அந்த நேகாவைச் சொல்கிறாரா..?”

“அவளைத்தான் சொல்கிறான்...”

“சரியாத்தான் சொல்லியிருக்கார்.. நானே சொல்லனும்னு நினைச்சேன் அனு.. அத்தையோட அமைதியான குணத்துக்கும் நேகாவோட டாமினேட்டிங் கேரக்டருக்கும் சரிப்பட்டு வருமான்னு யோசிச்சேன்.. பட்.. உன் தம்பிக்கு இதுதான் விருப்பம்ன்னா நாம எதையும் சொல்லக் கூடாதுன்னு பேசாம இருந்திட்டேன்...”

"அர்ஜீனுக்கு இதில் விருப்பமில்ல..."

"பின்னே எதுக்காக மாமா ஊர் பூராவும் இப்படிச் சொல்லிக்கிட்டு இருக்காரு..?"

"அதுக்குத்தான் அவன் கோபப்படறான்..."

அர்ஜீனின் கோபம் எத்தகைய வேகம் கொண்டது என்பதை அவள் நன்கு அறிவாள்.. இது எதில் போய் முடியுமோ என்ற கவலை அவளை வாட்ட ஆரம்பித்தது...

## 164

*என் நிழலையும் நீ பாதுகாக்கும்...*
*நிலை வரவே ஆசைகொண்டேன்...*

**அ**லங்கார விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்த அந்தத் தோட்டத்திற்குள் அர்ஜீன் பிரவேசித்த போது அனைவரின் பார்வையும் அவன் மேல் திரும்பின..

"ஹேய்.. ஹி இஸ் அர்ஜீன்... ஆர்ச் கம்யூட்டர் கம்பெனிஸீன் எம்.டி.."

நேகாவின் அருகிலிருந்த இளம் பெண் கண்களில் பிரதிபலித்த மயக்கத்துடன் அவளின் அருகிலிருந்த இளம் பெண்ணிடம் ஜொள்ளினாள்..

"வாவ்..! வட் எ ஹேண்ட்சம் மேன்ய்யா.."

அந்தப் பெண் தோழியை விட அதிகமாக ஜொள்ளினாள்..

நேகாவிற்குள் லேசான எரிச்சல் தோன்றினாலும்.. அதையும் மீறிய பெருமித உணர்வு எழுந்து நின்றது...

'இவன் என் வருங்காலக் கணவன்...'

இது போன்ற பார்ட்டியில் அர்ஜீனின் தோள் தொற்றி அவனது மனைவியாக வந்து நின்றால் எப்படியிருக்கும் என்று அவளுக்குள் கற்பனை எழுந்தது..

'அப்போ இந்தப் பெண்கள் என்னைப் பார்த்து பொறாமைப் படுவாங்க..'

அவளுக்கு அந்த பொறாமையுணர்வு வேண்டியிருந்தது.. மற்றவர்களுக்கு எட்டாக் கனியாக இருப்பவன் அவளுக்கு எட்டும் கனியாக இருக்க வேண்டும்.. அவனை எட்டிப் பிடிக்க அவள் என்ன வேண்டுமென்றாலும் செய்வாள்...

நேகா ஒரு வெற்றிகரமான தொழிலதிபர் என்பதை விட.. வெற்றிகரமான தொழிலதிபரின் மகள்.. வியாபார நுணுக்கங்களை சிறு வயதிலிருந்தே அவளது தந்தை சொல்லிக் கொடுக்க... கற்றுக் கொண்டு வளர்ந்தவள்.. என்று சொல்லாம் அதுதான் அவளுக்குப் பொருந்தும்.. அதுவே உண்மையும் கூட...

அவள் தீதையாளனின் மகள்.. அதுவே அவளது வெற்றிகான படிக்கட்டுக்களை அவள் முன் கொண்டு வந்து நிறுத்தியது.. அர்ஜீன் அப்படியில்லை.. அவன் தந்தையின் நிழலை விட்டு வெளியேறி தனித்து நின்று ஜெயித்துக் காட்டியவன்.. அவனது உயரத்தை நேகாவினால் எட்டித் தொட முடியவே இல்லை... அவள் அண்ணாந்து பார்க்கும் உயரத்தில்.. வெகுதொலைவில்.. ஒரு புள்ளியாக அவன் தெரிந்தான்...

நேகாவும் வெற்றிகளை ஈட்டினாள்தான்.. ஆனால் அதற்கு அவள் கையாண்ட வழிமுறைகள் மாறுபட்டவை.. அவளால் அர்ஜீனைப் போல.. உழைப்பையும்.. திறமையையும் கொண்ட வெற்றிகளை ஈட்டவே முடியவில்லை..

அவள் ஒரு வெற்றிகரமான தொழிலதிபராக வர்த்தக வட்டாரத்தில் அறியப்பட்டாள்.. இருந்தும்.. அர்ஜீனுக்கு கிடைக்கும் மரியாதையில் நூற்றில் ஒரு பங்கு கூட அவளுக்குக் கிடைக்கவில்லை...

அவள் அழகானவள்.. நேகா குருப் ஆப் கம்பெனிஸீக்கு ஒரே வாரிசு... அதன் எம்.டி.. அவளைச் சுற்றும் கோடிஸ்வர வாலிபர்களின் கூட்டம் உண்டு..

ஆனால்.. அந்தக் கூட்டத்தில் அர்ஜீனைப் போன்ற நட்சத்திர அந்தஸ்தைக் கொண்ட எந்த இளம் தொழிலதிபனும் இல்லை..

எவ்வளவு பெரிய பார்ட்டியாக இருந்தாலும்.. அங்கே அர்ஜீன் நுழைந்து விட்டால் அனைவரின் கண் பார்வையும் அவன் பக்கம்தான் திரும்பும்.. வயதில் பெரியவர்கூட அவனிடம் அறிமுகம் செய்து கொண்டு பேசிப் பழக விரும்புவார்கள்.. இளம் வயது வாலிபர்கள் பொறாமையை மறைத்துக் கொண்டு.. அவனுக்கு தெரிந்தவன் என்ற உரிமையைப் பெற போட்டி போடுவார்கள்... இளம்பெண்களோ.. அவனது கடைக் கண் பார்வைக்காக ஏங்குவார்கள்...

அப்படிப்பட்ட ஸ்டார் இமேஜை உடைய அர்ஜீனை கை பிடிப்பதுதான் உண்மையான வெற்றியென்று நேகா நினைத்தாள்.. அவன் மேல் விழும் பார்வை அவள் மீதும் விழ வேண்டும்.. இப்போது

“ஹேய்.. அவன் அர்ஜீன்ய்யா...” என்று ஜொள்ளும் இளம் பெண்களின் கூட்டம்..

“ஹேய்.. ஷி இஸ் நேகாய்யா.. அர்ஜீன்ஸ் வொய்ஃப்..” என்று பொறாமையுடன் சொல்ல வேண்டும்..

நேகா அந்த ஒன்றிற்காகவே அர்ஜீனை கரம் பிடிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள்...

அவளைப் பொறுத்தவரைக்கும் அவன் ஒரு ஹீரோ.. அவள் விரும்பியது அவனது அந்த ஹீரோ இமேஜைத்தான்.. அவனது ஸ்டார் அந்தஸ்த்தைத்தான்..

அவன் மட்டும் மற்றவர்கள் வியந்து பார்க்கும் அளவிற்கு வெற்றியாளனாக இல்லாமலிருந்தால்.. அவள் அவனைத் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டாள்..

"ஹவ் ஆர் யு நேகா..." பார்த்தசாரதி அவளருகில் வந்தார்...

"ஃபைன் அங்கிள்..." நேகா அருகிலிருந்த பெண்களை கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டாள்...

'பார்.. நீ 'ஆ'வென்று வாய் பிளந்து பார்த்த அந்த அர்ஜீனைப் பெற்ற அப்பா என்னைத் தேடி வந்து பேசுகிறார்..'

அவளது கடைக் கண்ணின் பார்வை சொல்லாமல் சொல்லிய செய்தியை உணர்ந்த அந்த இளம்பெண்கள் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்..

அது நிச்சயமாக தன்னைப் பற்றிய செய்தியாகத்தான் இருக்கும் என்ற நினைவில் நேகாவின் முகம் மலர்ந்தது.. அந்த மலர்ச்சியை இன்னும் கொஞ்சம் அதிகப் படுத்திக் கொள்ள அவள் விரும்பினாள்...

"அர்ஜீன் எப்ப வந்தார் அங்கிள்...?"

"லாஸ்ட் வீக்..."

"அஃப்ராட் போயிருந்தாரா...?"

"நோ.. நோ.. திருநெல்வேலி வரைக்கும் பேயிருந்தான்.."

“ஓ.. அங்கே என்ன வேலையாம்...?”

“உனக்குத் தெரியாதா..? அதுதான் எங்க நேடிவ் பிளேஸ்.. அங்கே எங்களுக்கு வீடு இருக்கு.. யு நோ.. அங்கே அர்ஜூன் ஃபார்ம் ஹவுஸ் ஒன்னை ஃபார்ம் பண்ணியிருக்கான்...”

“ஈஸிட்..?”

“யெஸ்.. நேகா.. எங்க பூர்விக நிலத்துக்கு பக்கத்தில இருந்த நிலத்தையெல்லாம் வாங்கி ஒன்னாச் சேர்த்துட்டான்.. பெரிய ஃபார்ம் ஹவுஸ் அது.. தோப்பும்.. தோட்டமுமா சிலுசிலுன்னு இருக்கும்.. அர்ஜூனுக்கு ரிலாக்ஸ் பண்ணிக்கனும்னு தோணினா அங்கே போயிருவான்..”

“ஹெள நைஸ்... எனக்கும் பார்க்கனும் போல இருக்கு..”

“அது உன்னோட புராப்பர்ட்டி.. எப்ப போகனும்னாலும் போய் பார்க்கலாம்.. இதைச் சொல்லனுமா என்ன..? நீ எங்கவீட்டு மருமகள்... அர்ஜூனோட வுட் பி..”

பார்த்தசாரதி சொல்லச் சொல்ல.. நேகாவின் அருகிலிருந்த பெண்களின் முகத்தில் ஒளி மங்கிக் கொண்டேயிருந்தது.. நேகாவின் அதை கண்டு கொண்ட கடைக்கண் பார்வையின் மலர்ச்சி விரிவடைந்து கொண்டேயிருந்தது..

அவளுக்கு அதுதான் வேண்டியிருந்தது.. அதை மறக்காமல் பார்த்தசாரதி வலியுறுத்திக் கொண்டே-யிருந்தார்.. கலந்து கொண்ட பார்ட்டிகளிலெல்லாம் அவரும் நேகாவும் உறவு கொண்டாடிப் பேசி.. மாமனார்.. மருமகள் உறவு முறையை உரக்கச் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள்.. அதற்கு அர்ஜீனின் அனுமதி வேண்டும் என்று அவர்கள் நினைத்துப் பார்க்கவேயில்லை..

“ஹீ செட்..?”

அர்ஜீனின் உரத்த குரலில் அனைவரும் திரும்பிப் பார்க்க.. அர்ஜீன் அழுத்தமான நடையுடன் பார்த்த சாரதியின் அருகில் வந்தான்... நேகாவை அவன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை..

“யார் சொன்னது...?”

முதலில் கேட்டதையே தமிழில் திருப்பிக் கேட்டவனுக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் தடுமாறிப் போனார் பார்த்தசாரதி...

எப்போதுமே அர்ஜீன் சபை நாகரிகம் பார்ப்பவன்.. அவனுக்கும் பார்த்தசாரதிக்கும் இடையே ஆயிரம் மன வேற்றுமைகள் இருந்தாலும் அதை வெளியுலகத்திற்கு அவன் தெரிய விட்டதில்லை.. எந்த இடத்திலும் பார்த்தசாரதியை விட்டுக் கொடுத்து அவன்

பேசியதில்லை.. மற்றவர்கள் முன்னால் அவர் பேச்சிற்கு மறுபேச்சை பேச மாட்டான்..

அந்தத் துணிவில்தான் பார்த்தசாரதி.. நேகாதான் அர்ஜீனின் வருங்கால மனைவி என்ற பொய்யை மிக தைரியமாக பரப்பி வந்தார்.. அதைப் பற்றிக் கோபப் பட்டால் மகன் தனிமையில்தான் கோபப் படுவான்.. மற்றவர்கள் முன்னால் அவர் வார்த்தையை மறுத்துப் பேச மாட்டான் என்ற ஒன்றே அவரின் மிகப் பெரிய பலமாக இருந்தது.. நேகாவும் அந்த பலத்தின் நிழலில்தான் அது நாள் வரை குளிர் காய்ந்து கொண்டிருந்தாள்..

அன்று அது உடைந்து விட்டது.. அது உடைபடும் என்று எதிர்பார்த்திருக்காத அந்த இருவரும் வெலவெலத்துப் போய் விட்டார்கள்...

“டெல் மி டாட்... இவங்கதான் என் வருங்கால மனைவின்னு யார் சொன்னது..? நான் சொன்னேனா..?”

அர்ஜீனின் அழுத்தமான நெற்றியடியைப் போன்ற அந்தக் கேள்வியில் குன்றிப் போய் விட்டாள் நேகா... சற்று நேரத்திற்கு முன்னால் அவளைப் பொறாமையோடு பார்த்த அந்த இளம்பெண்களின் விழிகளில் தெரிந்த கேலியில் அவள் பொசுங்க ஆரம்பித்தாள்...

உடனடியாக தன் மதிப்பைக் காத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நேகாவுக்கு ஏற்பட்டு விட்டது..

“வாட் இஸ் திஸ் அங்கிள்..? அர்ஜீன் என்ன சொல்கிறார்..? அவருக்கு இந்த மேரேஜ் புரொபசலைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாதா..?”

தடாலடியாக அவள் கேட்டு வைத்ததில் பார்த்த சாரதிக்கு மூச்சுத் திணறலே ஏற்பட்டு விட்டது..

‘யு டு புருட்டஸ்..?!’ என்ற பாவனையில்

‘யு டு நேகா..?!’ என்று அவர் பார்த்து வைக்க அந்தப் பார்வைக்கு அயர்வேனா என்று ஒன்றும் தெரியாத பெண்ணைப் போல இமை கொட்டி அவரை நோக்கினாள் நேகா...

இது போன்ற எத்தனை ‘யு டு...?!’ க்களை அவள் பார்த்திருப்பாள்...?

“கேட்கிறாங்கள்ல.. சொல்லுங்க.. எதை வைத்து இவங்க என் வுட் பின்னு நீங்க சொன்னீங்க டாட்...?” அர்ஜின் விடாமல் கேள்வி கேட்டான்...

அங்கே குண்டூசி விழுந்தால் கூடக் கேட்கும் அளவிற்கு நிசப்தம் நிலவியது.. எல்லோரும் அவர்களையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார் பார்த்தசாரதி..

“இவங்க மிஸ் நேகா.. அது மட்டும்தான் எனக்குத் தெரியும்.. அதுகூட இவங்க நேகா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி ங்கிற முறையில மத்தவங்க

சொல்லித்தான் எனக்குத் தெரியும்.. கேட்டுப் பாருங்க.. இது நாள் வரைக்கும் நான் இவங்களிடம் நின்று இரண்டு வார்த்தை பேசியிருப்பேனான்னு...”

‘இது ஒன்றே போதும்...’ நேகாவுக்கு தலை வேதனையாக இருந்தது... அது நாள்வரைக்கும் மிகவும் சிரமப்பட்டு அவள்தான் அர்ஜீனை மணக்கப் போகிறவள் என்று அவள் உருவாக்கி வைத்திருந்த பிம்பம் பொடிப்பொடியாக நொறுங்கிச் சிதறுவதை வேதனையுடன் அவள் உணர்ந்தாள்..

“இவங்களை நான் திரும்பிக் கூடப் பார்த்ததில்லை.. நீங்க என்னடான்னா... இவங்கதான் என் வுட் பின்னு என்னுடன் இணைத்துப் பேசறிங்க.. நோ டாட்.. ஐ டோன்ட் லைக் திஸ்...”

அர்ஜீன் ‘ஐ டோன்ட் லைக் திஸ்’ என்று சொன்னது பார்த்தசாரதி பேசிய பேச்சுக்களையா... இல்லை... பார்த்தசாரதி சுட்டிக் காட்டிய நேகாவையா என்று மற்றவர்கள் பட்டிமன்றம் நடத்த ஆரம்பித்ததை கவனித்தாள் நேகா...

முதலாவதுதான் என்று மிகச் சொற்பமான... விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் இரண்டே நபர் மட்டும் சொல்ல... மற்ற அனைவரும் ஏகமனதாக.. இரண்டாவதுதான் என்று முடிவு செய்து அறிவித்தார்கள்..

பெரும்பான்மையான முடிவை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ள.. தன் வாழ்வின் மிகப் பெரிய தோல்வி அது என்பதை உணர்ந்தாள் நேகா..

“மேரேஜ்ங்கிறது வாழ்க்கையில் ஒர்முறை தான் நடப்பது.. இவங்க எப்படியோ.. நான் அப்படித்தான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்.. அந்த மேரேஜ்.. யாருடன் நடக்கனும் என்பதை நான்தான் தீர்மானிக்கனும்.. என் மனைவியாக வரப் போகிறவளைப் பற்றி எனக்குள்ளே சில கற்பனைகள் இருக்கு.. அதில் ஒன்றில் கூட இவங்க பொருந்தி வரலை...”

அர்ஜீனின் புறக்கணிப்பு பட்டவர்த்தனமாக அந்த சபையில் வெளிப்பட அதைத்தாங்க முடியாத நேகாவின் விரல்கள் நடுங்க ஆரம்பித்தன...

## 165

*எனக்காக இவ்வுலகை...*
*நீவெல்ல ஆசை கொண்டேன்....*

**அ**ர்ஜீன் அதைச் செய்வான் என்று நேகா கொஞ்சம் கூட எதிர்பார்த்திருக்கவில்லை.. அவனது மறுப்பை அவன்

தனிமையில்தான் சொல்லுவான்.. கூட்டத்தின் மத்தியில் வெளிப்படுத்த மாட்டான் என்று அவள் நினைத்திருந்தாள்.. அந்த எதிர்பார்ப்பு.. அன்று சிதைந்து விட்டது..

அர்ஜீன் மணிமணியான கேள்விகளைக் கேட்டு அதைச் சிதைத்துக் கொண்டிருந்தான்..

"என் வாழ்க்கையை வாழப் போகிறவன் நான்.. எனக்கு மனைவியாக வரப் போகிறவள் என் மனதுக்குப் பிடித்தவளாக இருக்க வேண்டும்.. அது இவங்க இல்லை.." அர்ஜீன் பேசிக் கொண்டே போக..

"ஸ்டாப் திஸ்..." என்று கிறிச்சிட்டாள் நேகா..

அவளின் அந்த சப்தத்தில் தீனதயாளன் பரபரப்பாகி அவளருகில் வந்தார்...

"நேகா.. ஈஸிம்மா.."

"எதை ஈஸியா எடுத்துக்கச் சொல்கிறிங்க டாட்.. இந்த பார்த்தசாரதி நம்மை ஏமாத்திட்டார்.. அதை ஈஸியா எடுத்துக்கச் சொல்கிறிங்களா..?"

"பார்த்தசாரதி... என்ன இதெல்லாம்..? நீங்க சொல்லித்தானே நாங்க எங்க சர்க்கிளில் இந்த மேரேஜைப் பற்றிப் பேச ஆரம்பித்தோம்..? உங்க சன் சம்மதிச் சுட்டார்ன்னு தானே நீங்க சொன்னிங்க..? இப்ப ஏன் இவர் மாற்றிப் பேசுகிறார்...?"

“ஹலோ.. மிஸ்டர் தீனதயாளன்.. யாரும் இங்கே மாற்றிப் பேசலை.. உங்க பெண்ணுக்காக என்னை மாப்பிள்ளை கேட்டு என் டாடியை நீங்க அப்ரோச் பண்ணியிருக்கீங்க.. சரியான வழிமுறைதான்... அந்தச் சமயத்திலே நான் இந்தியாவிலேயே இல்லை... கனடாவில் இருந்தேன்.. நான் திரும்பி வந்தவுடன் இதைப் பற்றி என் முடிவு என்னன்னு நீங்க கேட்டுத் தெரிந்துக்கிட்டிங்களா..?”

“அது.. அது வந்து.. உங்க டாடிதான் இதில் விருப்பம் போலப் பேசினாரே...”

“ஓகே.. நீங்க சொல்றதிலயும் ஒரு பாயிண்ட் இருக்குன்னே வைத்துக் கொள்ளலாம்...”

“இதுதான் பாயிண்ட் டாடி.. இதில இவர் வைத்துக் கொள்ள என்ன இருக்கு..?”

“மிஸ்டர் தீனதயாளன் பேச்சு உங்களுக்கும்... எனக்கும்தான் உங்க டாட்டரோடு பேச நான் பிரியப்படலை..”

“நேகா.. கொஞ்சம் பொறும்மா.. நீங்க இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க அர்ஜீன்..?”

“உங்க பெண்ணை பெண் பார்க்கன்னு நான் உங்க வீட்டுக்கு வந்திருக்கிறேனா தீனதயாளன்...?”

"இல்லை.. பட்... பார்ட்டிகளில் நீங்க இவளைப் பார்த்திருப்பீங்கதானே..."

"பார்ட்டிகளில் ஆயிரம் பேர் வருவாங்க.. போவாங்க.. அவர்களையெல்லாம் நினைவில் வைத்துக்க முடியுமா தீனதயாளன்..? உங்க வீட்டுக்கு... உங்க மகளை முறைப்படி பெண் கேட்டு.. பெண் பார்க்கன்னு.. எங்க குடும்பத்தோடு நான் வந்திருக்கிறேனா...?"

"இல்லை.. பட்.. அதற்கான பார்ட்டி ஒன்றுக்கு உங்க பேரண்ட்ஸ் வந்தாங்க.. நேகாவைப் பார்த்தாங்க..."

"நான் கேட்பதே வேறு... நான்... அதாவது... அர்ஜீனாகப் பட்ட நான்.. என்னைப் பெற்றவங்களோடு.. உங்க வீட்டிற்கு... உங்க மகளைப் பெண் கேட்டு வந்தேனா..?"

"இல்லை.. பட்.. உங்க டாடி..."

"டாடியை விடுங்க.. நான் என்னைப் பற்றித்தான் பேச முடியும்.. டாடியைப் பற்றிப் பேச முடியாது... உங்க வீட்டுக்கு பார்ட்டிகளில் கலந்துக்கன்னு கூட நான் வந்ததில்லை.. இப்படியிருக்கிறப்ப.. உங்க மகளை நான் பெண் பார்த்து முடிவே செய்து விட்டதைப் போல எப்படி நீங்க பேசலாம்..?"

“இதை உங்க டாடியிடம் நீங்க கேளுங்க அர்ஜீன்.. அவர்தான் எங்களுக்கு நம்பிக்கை கொடுத்தார்...”

“அதைத்தான் நான் செய்து கொண்டிருந்தேன் தீனதயாளன் என் டாடியிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தேன்.. உங்க டாட்டர்தான் தேவையில்லாம இன்டர்பியர் ஆனாங்க..”

“எப்படி டாடி...? பார்ட்டி நடக்கிற இடத்தில இவர் சத்தம் போட்டு இவர் டாடியைக் கண்டிப்பார்... அதனால் என் இமேஜ் பாதிக்கப் பட்டா நான் ஏன்னு கேட்கக் கூடாதா..?”

“வெல் செட்.. இது நாள் வரைக்கும் இவங்க கலந்துக்கிட்ட பார்ட்டிகளிலெல்லாம் என்னோட வுட்பின்னு என் பெர்மிசனை எதிர்பார்க்காம சொல்லிக் கிட்டு இருந்திருக்காங்க... அதனால என் இமேஜ் பாதிக்கப்பட்டதை விட.. அதிகமாவா இப்ப இவங்க இமேஜ் பாதிக்கப் பட்டிருக்கு...?”

“அதை நான் மட்டும் சொல்லலை டாடி.. இவரோட டாடியும் சேர்த்துத்தான் சொன்னார்...”

“கேட்கவே ஆச்சரியமா இருக்கு... நேகா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டியா இருக்கிற லேடிக்கு.. ஒரு செய்தியை அறிவிக்கிறதுக்கு முன்னால் அதை உறுதிப் படுத்திக்கனும்.. அதற்கான அனுமதியை சம்பந்தப்

பட்டவங்களிடமிருந்து வாங்கிக்கனும்கிற அடிப்படை அறிவு கூடஇல்லையா...?”

“இவரோட டாடிக்கும் இவருக்கும் சம்பந்தம் இல்லையா..?”

“இதைப் போல.. நீங்க சொல்கிற வார்த்தையை மட்டும் வைத்துக்கிட்டு இங்கேயிருக்கிற யாராவது ஒருத்தர் மிஸ் நேகாதான் அவரோட வருங்கால மிஸஸ்.. அவர் தான் நேகாவோட வுட் பின்னு சொல்லிக்கிட்டிருந்தா மிஸ்நேகா சும்மாயிருப்பாங்களா.. மிஸ்டர் தீனதயாளன்...?”

‘வழியைச் சொல்லிக் கொடுக்கிறானே..’ நேகாவுக்கு திக்கென்று இருந்தது..

ஏற்கனவே தீனதயாளன் சில தொழிலதிபர்களின் வாரிசுகளுக்கு நம்பிக்கை கொடுத்து வைத்திருந்தார்.. ‘இது’.. இல்லாவிட்டால் ‘அது..’ என்று அவர் கைவசம் சில மாப்பிள்ளைகளை பார்த்து வைத்திருக்க.. நேகாதான்.. இதுவும் வேண்டாம் அதுவும் வேண்டாம்.. அர்ஜீனின் நட்சத்திர இமேஜ் மட்டுமே வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றாள்.. இருந்தாலும் தீனதாயளனின் கையிருப்புக்களை மறுத்துப் பேசவில்லை... நான்கு பேர் அவளுக்காக ஏங்கினால்தான் மதிப்பு என்ற எண்ணமுடையவள் அவள்..

அவர்களில் யாராவதோ.. இல்லை.. அவர்கள் அனைவருமோ.. அர்ஜீன் சொன்னதைப் போல பேச ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளை பிடித்துக் கொண்டது..

“திஸ் இஸ் நாட் ஃபேர் மிஸ்டர் அர்ஜீன்...”

“தீனதயாளன்.. உங்க டாட்டரிடம் நேரடியாப் பேச எனக்கு விருப்பமில்லைன்னு சொல்லிட்டேன்.. இவங்க செய்ததும் செய்கிறதும் மட்டும் நல்லாயிருக்கா..?”

“என் பெண் ஹை பொஸிசனில் இருக்கிறவ மிஸ்டர் அர்ஜீன்.. அவளோட இமேஜிக்கு குறைவு வருகிறதைப் போல நீங்க பேசறதை நான் அனுமதிக்க முடியாது...”

“ஓ.. இவங்க ஹை பொஸிசனில் இருக்கிற-வங்களா..? இந்த ஹை பொஸிசனில் இருக்கிற லேடி என்ன பண்ணினாங்கன்னு தெரியுமா..? மதுரையில் எனக்கு ஒரு கடையிருக்கு.. கம்யூட்டர் சேல்ஸ் பண்ற கடை... அந்தக் கடையில் நான் இல்லாத சமயத்தில் வந்து... அங்கே சேலரி கொடுக்க பேங்கிலிருந்து டிராப் பண்ணிக்கிட்டு வந்த பணத்தை எடுத்து இவங்க ஹேண்ட் பேகில் வைத்துக்கிட்டாங்க...”

இதை மிக தாழ்ந்த குரலில் தீனதயாளன் நேகா.. பார்த்தசாரதிக்கு மட்டும் கேட்கும்படி சொல்லிய அர்ஜீன்..

“இதைச் சத்தமா.. இந்த இடத்தில் சொல்ல என்னால் முடியும் மிஸ்டர் தீனதயாளன்... உங்க முகத்துக்காக பார்த்துத்தான் அமைதியாப் போகிறேன்.. என்னை சீண்டி விட வேண்டாம்ன்னு உங்க டாட்டரிடம் சொல்லுங்க...” என்று அடிக்குரலில் சீறினான்...

நேகா முகம் வெளுத்துப் போனாள்.. அதை மட்டும் அர்ஜீன் உரத்த குரலில் சொல்லி விட்டால் என்ன ஆகும் என்ற நினைவில் நடுங்கிப் போனவள்.. தீனதயாளனைப் பார்த்து தீனமான குரலில்..

“டாடி..” என்றாள்...

மகளின் குரலைக் கேட்கச் சகிக்கவில்லை தீனதயாளனுக்கு.. அவர் கோபத்தின் உச்சத்தில் இருந்தார்.. ஒரே மகள் என்று அவர் செய்த அத்தனை காரியங்களையும் பொறுத்துக் கொண்டு போனது தவறோ என்று காலம் கடந்து அவர் யோசிக்க ஆரம்பித்தார்...

“வாட் இஸ் திஸ் நேகா...” அடிக்குரலில் அவரும் சீறினார்..

“நத்திங் டாட்.. அங்கிள் மதுரையில் இருந்தப்ப நான் மதுரைக்கு விசிட் பண்ணினேனில்லையா..? அப்ப இவரோட அந்தக் கடைக்குப் போயிருந்தேன்.. நான்

போன சமயம் பார்த்து.. அந்தக் கடையில் வேலை செய்கிற பெண் பணத்தை எடுத்து என் ஹேண்ட்பேகில் மறைத்து வைத்து விட்டு.. பணத்தைக் காணோம்ன்னு சொல்லிட்டா.. இவங்க அதை நம்பிவிட்டால் அவ அந்தப் பணத்தை அபேஸ் பண்ணிக்கலாம்கிறது அவ ஐடியா.."

நேகா கதையை மாற்ற.. அர்ஜீன் கொதித்துப் போனான்... தீனதயாளனை நோக்கி ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்து விட்டான்.. அவன் குரலும் உயர்ந்து விட்டது.. கூட்டத்தினரின் காதுகளில் அவன் பேசியது தெளிவாக விழ ஆரம்பித்து விட்டது...

"திஸ் இஸ் தி லிமிட் மிஸ்டர் தீனதயாளன்... உங்க டாட்டர் என் லைஃபில் இன்டர்பியர் ஆகிறதை இத்துடன் நிறுத்திக்கனும்.. இது கன்டினியூ ஆனா நடக்கிறதே வேற.. யார் பணத்தை அபேஸ் பண்ணப் பார்த்தது...? அந்தப் பெண்ணா...? அவ இம்மீடியட்டா அந்தப் பணத்தை அவ கைப் பொறுப்பிலிருந்து கட்டிட்டா.."

"என் மகள் கோடிஸ்வரி மிஸ்டர் அர்ஜீன்.. இவளோட ஒரு நாள் ஷாப்பிங் செலவு நீங்க சொன்ன தொகையை விட பல மடங்கு அதிகம்..."

“இதை எதுக்காக இப்ப சொல்கிறிங்க தீனதயாளன்...?”

“இவ எதுக்காக அந்தப் பணத்தை எடுக்கனும்..? அது அந்தப் பெண்ணுக்கு வேண்டும்னா பெரிதா இருக்கலாம்.. இவளுக்கு ஐஸ்ட் லைக் தட்...”

“ஸோ.. நீங்களும் அடங்க மாட்டிங்க.. உங்க மகளையும் அடக்க மாட்டிங்க..?”

“இதைப் போல என் மகள் மீது பழி போட்டா இந்தக் கூட்டத்தில இருக்கிற யாரும் அதை நம்ப மாட்டாங்க அர்ஜீன்.. இது சின்னக்குழந்தைக்குக் கூடத் தெரியும்.. உங்களைப் போல சக்சஸ்புல் பிஸினெஸ் மேனுக்கு அது தெரியாமல் போனது ஆச்சரியம்தான்.. என் மகளோட ஸ்டேட்டஸ்க்கு அவ அந்தக் கடைக்கெல்லாம் வந்திருக்கவே கூடாது...”

“அப்புறமும் எதற்காக அவளை அங்கே அனுப்பி வைத்தீங்க மிஸ்டர் தீனதயாளன்...?”

“உங்க டாடி இன்வைட் பண்ணியிருக்கார்...”

“எங்கே சுற்றினாலும் என் டாடியிடம் தான் கொண்டு வந்து நிறுத்துவீங்க போல இருக்கு... உங்க டாட்டர் மேல ஒரு தப்பும் இல்லை.. செய்ததெல்லாம் என் டாடின்னு பழி போடறிங்க.. வெல்.. இவருக்கு இது

வேணும்தான்.. பட் ஒன் கொஸ்டின் மிஸ்டர் தீனதயாளன்.. என்னதான் வருங்கால மாமனார்ன்னு உங்க டாட்டர் நினைத்துக்கிட்டிருக்கவர் இன்வைட் பண்ணினாலும்.. மேரேஜீக்கு முன்னாடியே விருந்து கொண்டாட உங்க மகளை மட்டும் தனியா அனுப்பி வைத்து விடுவீங்களா..? ஏன் கேட்கிறேன்னா.. எங்க வீட்டிலயும் பெண்பிள்ளையை வளர்த்தோம்.. என் அக்கா ஆனந்தியை தனியே எங்கேயும் நாங்க அனுப்பியதில்லை.. எங்க வளர்ப்பு அப்படி..”

அர்ஜீன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் ஈட்டியின் கூர்மையோடு தீனதயாளனின் இதயத்தில் பாய்ந்தன.. அவர் வேதனை தாங்க முடியாமல் இமை மூடித்திறந்தார்...

அவர்களைச் சுற்றி நின்ற கூட்டத்தவரின் பார்வையில் இப்போது வித்தியாசம் வந்திருந்தது.. தீனதயாளனை பிரமிப்பாய் பார்த்தவர்கள் இப்போது கேலிப்பார்வை பார்த்தார்கள்...

# 166

**உன் கைவிரல்கள் என்விரல் பிடிக்க
என் மனதில் ஆசை கொண்டேன்...**

**தீ**னதயாளனின் முகம் கன்றி விட்டது.. அவர் சங்கடமாக உணர்ந்தார்.. அது வரை அவரிடம் பேசிக் கொண்டிருந்தவர்கள்.. அவர் பார்வையைத் திருப்பி அவர்களைப் பார்த்ததும்.. எங்கே அவர் பேச வந்து விடுவாரோ என்ற பயத்துடன் அவசரமாகத் திரும்பித் தங்களுக்குள் பேச ஆரம்பித்ததைக் கண்டவருக்கு மனம் பதறியது..

“உங்க சன் இப்படி பிஹேவ் பண்ணுவாருன்னு நான கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்கலை பார்த்தசாரதி..” என்று பார்த்தசாரதியிடம் சீறினார்...

“அர்ஜீன்..” பார்த்த சாரதி எதையோ சொல்ல முயல..

“ஷட் அப் டாடி...” என்றான் அர்ஜீன்..

வாழ்நாள் முழுவதும் அவன் கட்டிக் காப்பாற்றி வந்த பொறுமை ஒரு நொடியில் காற்றில் பறந்துவிட...

அதே நொடியில் மகனின் மீதான பார்த்தசாரதியின் அதிகாரமும் பறந்து விட்டது.. அதுவரை நேருக்கு நேர் நின்று முகம் பார்த்துப் பேசியிருக்காத மகன் அத்தனை பேரின் முன்னிலையில் 'வுட் அப்' என்று எடுத்தெறிந்து பேசிவிட்டதை பார்த்தசாரதியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

தீனதயாளனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.. பார்த்தசாரதியிடம் முறையிடலா மென்றால்.. அவரையே அர்ஜீன் 'ஷட் அப்' என்று சொல்லி விட்டான்.. மலையையே சாய்த்து விட்டவனுக்கு மயிலறகு எம்மாத்திரம்...?

அதனால் அவனிடம் மோதுவது உசிதமில்லை யென்று தீனதயாளன் கிளம்ப முனைந்தார்... நிலைமையை புரிந்து கொண்டு நேகாவும் அவருடன் போயிருக்கலாம்.. அதை விட்டு விட்டு.. அவள் அர்ஜீனிடம் சண்டைக்குப் போனாள்...

"ஃபாரின் போனா மட்டும் போதாது..."

"ஓ.. வேற என்ன வேணுமாம்..?"

"பிஹேவியரையும் தெரிந்திருக்கணும்..."

"அதை நீங்க எனக்குச் சொல்கிறிங்களா...? நேரம்..."

"என்னை மேரேஜ் பண்ணிக்க ஒரு கியூவே நீண்டிருக்கு.."

"இருந்துட்டுப் போகட்டும்.. அந்த கியுவில் தான் நான் இல்லையே.. அதனால.. உங்க கடைக்கண் பார்வையை கியூ பக்கம் திருப்புங்க.. என் பக்கம் திருப்பற வேலையெல்லாம் வேண்டாம்..."

"சக்சஸ் புல் பிஸினெஸ் மேன்னு சொல்லிக் கிறாங்களே.. நாமும் சக்சஸ்புல்லா பிஸினெஸ்ஸை ரன் பண்றவங்களாச்சே.. இரண்டும் சேர்ந்தா பெட்டரா இருக்குமேன்னுதான் யோசித்தோம்..."

"இது என்ன பிஸினெஸ் டீலிங்கா..? மேரேஜ்ங்க.. பிஸினெஸ் வேற.. வாழ்க்கை வேற.. நீங்க இரண்டையும் போட்டுக் குழப்பிக்கறீங்கன்னு நினைக்கிறேன்.."

"நீங்க மனிதர்களை மதிக்கத் தெரியாதவர்ன்னு இப்பத்தான் தெரிஞ்சுக்கிட்டோம்.."

"பேசாம போயிருங்க.. இல்லைன்னா நான் ஏதாவது சொல்லிருவேன்.. மனிதர்களை மதிக்க எனக்குத் தெரியும் மிஸ் நேகா.. அதை இங்கேயுள்ள எல்லா மனிதர்களிடமும் கேட்டுப் பாருங்கள்.. உங்களை மதிக்காததிற்கு என்ன காரணம்ன்னும் நீங்களே நினைத்துப் பாருங்க.. இதற்காக.. நீங்க மனிதப் பிறவியில்லைன்னு நான் சொல்லமாட்டேன்.."

‘சொல்ல மாட்டேன்.. சொல்ல மாட்டேன்னு சொல்லிக்கிட்டே எல்லாத்தையும் சொல்லிட்டானே..’

தீனதயாளனுக்கு தாங்க வில்லை.. அவர் மகளை முறைத்துப் பார்த்தார்.. அதுவரை அது போன்ற முறைப்புக்களுக்கு ஆளாகியிராத நேகாவிற்கு தலை வேதனையாக இருந்தது..

“கிளம்பு நேகா...” தீனதயாளன் கடுமையாக அழைத்தாள்...

“ஒன் மினிட் டாடி...”

நேகா அப்போதும் கிளம்பாமல் அர்ஜீன் பக்கமாகத் திரும்பி எதையோ சொல்ல முயல தீனதயாளனுக்கு கோபம் வந்துவிட்டது...

“ஆர் யு மேட்...? இத்தனைக்கு பின்னாலும் நீ இங்கே நின்று அர்ஜீனிடம் பேச டிரை பண்ணினால் என்ன அர்த்தம்..? வாழ் நாள் முழுவதும் மறக்க முடியாத அளவுக்கு அர்ஜீன் பேசித் தள்ளியாச்சு... அதை மறக்கறது எப்படின்னு நான் கலங்கிப் போய் நிற்கிறேன்.. நீ என்னடான்னா.. கிளம்பாம அழிச்சாட்டியம் பண்ற.. கிளம்பு நேகா...”

“ஐ வான்ட் டு டெல் ஹிம் சம் ஒன் டாடி...”

“இது வரைக்கும் உன்னை அடிச்சதில்லை நேகா.. இந்த வயசில.. இப்படிப்பட்ட உயரமான பொஸிசனில நீ

இருக்கிற நிலையில.. பார்ட்டியில் இத்தனை பேருக்கு முன்னால.. உன்னை அடிக்க வைச்சிராதே நேகா...”

“டாடி...?!”

“இன்னும் ஒரு செகண்டில் நீ கிளம்பலைன்னா இங்கே அதுதான் நடக்கும்...”

‘வரலாறு காணாத வீழ்ச்சி’ என்று தொலைக்காட்சியின் செய்திகளில் நேகா கேட்டிருக் கிறாள்.. முதன் முறையாக அவள் வாழ்வில் அதை உணர்ந்தவளாக பேசாமல் தீனதயாளனைப் பின் பற்றி நடந்தாள்..

அவர்கள் போனதும்.. அதற்காகவே காத்திருந்ததைப் போல.. பார்ட்டிக்கு வந்திருந்தவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்...

“வெல் செட் மிஸ்டர் அர்ஜீன்..”

“வாட் ஹேப்பன்.. அர்ஜீன்...?”

“ஷி இஸ் யுவர் வுட்பின்னு கேள்விப் பட்டேனே.. அது பொய்யா...?”

“போன வாரம் நடந்த பார்ட்டியிலயும் இவங்க அதைத்தான் சொன்னாங்க.. உங்க ஃபாதரும் இருந்தாரே..”

“என்ன மிஸ்டர் பார்த்தசாரதி..? உங்க சன் எவ்வளவு பெரிய பிஸினெஸ் மேக்னெட்...! அவருடைய மேரேஜில்

போய் பிளே பண்ணலாமா...? இதை நான் உங்களிடம் எதிர் பார்க்கலை பார்த்தசாரதி...”

நான்கு பேர் நான்கு விதமாக கேள்வி கேட்க.. அதற்குப் பதில் சொல்ல முடியாமல் பார்த்தசாரதி அல்லாடிப் போனார்.. அர்ஜீன் பதில் சொல்லியபடி அவரை விட்டு அகன்றுவிட்டான்.. சற்று நேரத்தில் அந்த இடத்தை விட்டும் அகன்று விட்டான்.. என்றும் அதுதான் அவனது வழக்கமென்றாலும் அன்று பார்த்தசாரதியின் மனதில் பள்ளம் விழுந்து விட்டது.. அவர் வீட்டுக்குப் போனபோது அர்ஜீன் அவனது அறைக்குப் போய் விட்டிருந்தான்...

“எங்கேடி அவன்...?” கதவைத் திறந்து விட்ட மனைவியிடம் அவர் கேட்டார்..

“தூங்கப் போயிட்டான்.. நீங்க என்ன..? சாப்பிட வர்றீங்களா..? இல்ல.. தூங்கப் போறிங்களா..?” கொட்டாவியை நாசுக்காக அடக்கியபடி கண்களை சுழற்றும் தூக்கத்தை விரட்டியடித்தபடி கேள்வி கேட்டாள் சுந்தரி..

“அவன் சாப்பிட்டானா...?”

“ஊஹீம்.. பார்ட்டியில் சாப்பிட்டுட்டானாம்.. நீங்களும் அதே பார்ட்டிக்குத்தானே போனிங்க..?”

“இப்ப உனக்கு என்ன வேணும்..? நானும் சாப்பிட்டாச்சுன்னு சொல்லனும்.. அவ்வளவுதானே..

எனக்கும் டிபன் வேணாம்.. போதுமா.. போ.. போய் எந்த ராஜா எந்தக் காட்டுக்குப் போனால் எனக்கென்னன்னு இழுத்துப் போர்த்திக்கிட்டு படுத்துத் தூங்கு...” பார்த்தசாரதி எரிந்து விழுந்தாள்..

“இந்த மிட்நைட்டில தூக்கம் வராம என்னங்க செய்யும்..? அதுக்குப் போய் இவ்வளவு கோபமா..? அர்ஜீனைப் பார்த்திங்களா...? உங்களைப் போல ஏதாவது பேசறானா...? அமைதியாத் தூங்கப் போகலை..? அதைப் போல நீங்களும் தூங்க வந்தா என்னவாம்...?”

“அவன் அமைதியாத் தூங்குவாண்டி.. அவன் தூக்கத்துக்கு என்ன அதான் மத்தவங்க தூக்கத்தை யெல்லாம் விரட்டி விட்டுட்டானில்ல...? இவன் நிம்மதியாத்தான் தூங்குவான்...”

அது நேரம்வரை கொட்டாவியை ஒட்டி விடுவதில் மட்டும் குறியாக இருந்த சுந்தரி கணவரின் பேச்சில் தெரிந்த வித்தியாசத்தை கவனித்து விட்டாள்.. அவளது தூக்கம் சொல்லாமல் கொள்ளாமல் விடை பெற்று விட.. புருவங்கள் முடிச்சிட கணவரைப் பார்த்தாள்...

“என்ன ஆச்சு..? ஏன் என்னவோ போல பேசறிங்க..?”

“இப்பவாவது அதைக் கவனிச்சியே.. அந்த மட்டிலும் ரொம்ப சந்தோசம்.. எங்கே உன் மகனைப் போல நீயும் மாறிட்டயோன்னு நினைச்சேன்...”

கணவருக்கும்.. மகனுக்குமிடையில் ஏதோ யுத்தம் மூண்டிருக்கிறது என்பதை சில மாதங்களாகவே கவனித்துக் கொண்டிருந்த சுந்தரி...

"அர்ஜீன் மாறிட்டானா...?" என்று கேட்டாள்...

"சும்மாவும் மாறலை.. செமத்தியா மாறிட்டான்.. இன்னைக்கு நடந்த பார்ட்டியில அவன் சொன்னானே.. ஆஹா.. ஒரு வாசகம்ன்னாலும் அது திருவாசகம் சந்தரி..."

"என்னதான் சொன்னான்னு சொல்லுங்களேன்..."

"ஷட் அப்ன்னு சொன்னான்டி.."

"என்னது...?!"

மகனைச் செல்லம் கொஞ்சம் சுந்தரியே அதைக் கேட்டு அதிர்ந்து விட்டாள்..

"இல்லையில்லை.. அவன் அப்படிச் சொல்லி யிருக்கவே மாட்டான்.. நீங்கதான் தப்பா எதையோ கெஸ் பண்ணிக்கிட்டு வந்து சத்தம் போடறிங்க.. எதுக்கும் தூங்கி எழுந்திருங்க.. விடிந்த பின்னால பேசிக்கலாம்..."

"ஆமாண்டி.. எனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கு.. உன் மகன் சொல்லாத வார்த்தையை அவன் சொன்னதா சொல்லிக்கிட்டு இருக்கேன்.. அதனால நீ என்னைத் தூங்க வைத்து என் மூளையை குளிர வைச்சுட்டு விடிந்து

எழுந்திருச்சதும் விவரம் கேட்கப் போகிற.. போடி இவளே.. உன் மகன்.. நட்டு நடு பார்ட்டி ஹாலில.. ஊரில இருக்கிற பெரிய மனுசங்க குழுமியிருந்த இடத்தில நின்னுக்கிட்டு என்னைப் பார்த்து ‘ஷட் அப்’ ன்னு சொண்ணான்டி...”

அவர் அவ்வளவு சொல்லியும் அதை மனதில் வாங்கிக் கொள்ளாதவளாக சுந்தரி தன்போக்கில்

“எதுக்கு அப்படிச் சொன்னான்..?” என்று கேட்டு வைத்தாள்..

“ஏண்டி கேட்க மாட்ட.. என் குடும்பம்.. என் குடும்பம்ன்னு நான் உயிரை விட்டு உழைச்சதுக்கு கை மேல பலனை அள்ளித்தருகிறிங்கடி.. உன் மகன் ஏன் கேட்டான்கிற கேள்வி உன் வாயில இருந்து வருதா...? எதுக்குக் கேட்டான்னு கேட்டு வைக்கிற.. நீ எனக்குப் பெண்டாட்டியா என்பக்கமா பேசலை சுந்தரி... உன் மகனுக்கு அம்மாவா உன் மகன் பக்கமா பேசற...”

“நான் ஒன்றைக் சொன்னா.. நீங்க வேற அர்த்தத்தில எடுத்துக்கறிங்க.. என்ன நடந்துச்சுங்கிறதைத்தான் இந்த லட்சணத்தில் கேட்டு வைச்சிட்டேன்.. போதுமா...?”

“உன் மகன் பெரிய மனிதனா ஆகிட்டான் சுந்தரி.. அவன் மேரேஜை அவன்தான் தீர்மானிப்பானாம்.. எனக்கு அந்த உரிமையில்லையாம்.. அத்தனை பேருக்கு நடுவில அவன் சொல்கிறான்.. தீனதயாளன் எப்பேற்பட்ட பெரிய

மனிதர்... அவரைப் பார்த்து நீ பெண்ணை வளர்த்தது சரியில்லைன்னு சொல்கிறாண்டி...”

‘ஓ..! அந்த நேகாவோட மோதல் வந்திருச்சா..? இன்னைக்கு இவன் நேருக்கு நேரா மோதிட்டானா..?’

விவரம் அறிந்த பின்னால் சுந்தரியின் மனம் நிம்மதியாக ஆகிவிட்டது.. போன தூக்கம் வந்துவிட.. அவள் கொட்டாவியை விரல் சொடுக்கி வரவேற்றபடி..

“ஹாவ்... நிங்க தூங்க வாங்க.. எதுவா இருந்தாலும் காலையிலே பேசிக்கலாம்...” என்று சொல்லிவிட்டு அவர்களின் படுக்கையறைக்குள் நுழைந்து விட்டாள்...

## 167

*செல்லரிக்கும் என் ஆசைகளை*
*நீ சிறை மீட்க ஆசை கொண்டேன்...*

**கா**லை நேர ஜாகிங் முடிந்து வீட்டுக்கு திரும்பியிருந்த அர்ஜீன் மாடிப் படியில் காலை வைத்த போது.. அது நேரம் வரை அவன் வரவுக்காக காத்திருந்த பார்த்த சாரதி...

"அர்ஜீன்.." என்று அழைத்தார்..

அந்த அழைப்பை எதிர்பார்த்திருந்த அர்ஜீன் திரும்பிப் பார்த்தான்... ஹால் சோபாவில் நிமிர்ந்து அமர்ந்து.. காபியை உறிஞ்சியபடி பேப்பரில் பார்வையைப் பதித்திருந்தார் பார்த்தசாரதி.. அர்ஜீனின் முகம் இறுகியது..

"சொல்லுங்க.."

அவன் மாடிப் படியிலிருந்து காலை எடுக்காமல் கேட்டான்..

"உன்னிடம் பேசனும்.."

"இஸ் இட்...? அப்புறம் எதுக்காக பேப்பரை வைத்து முகத்தை மூடியிருக்கீங்க..? பேச வேண்டியதுதானே..?"

"உட்கார்ந்து பேசனும்.."

"இப்ப உட்கார்ந்துதான இருக்கீங்க..?"

அர்ஜீன் இருந்த இடத்திலிருந்து நகராமல் கேள்வி கேட்க.. பொறுமையிழந்தவராக பேப்பரைப் படிக்கும் பாவனையை கை விட்ட பார்த்த சாரதி... அதை மடித்து டீப்பாயில் தூக்கி கடாசினார்.. கோபத்துடன் மகனைப் பார்த்தார்..

"நான் உட்கார்ந்துதான் இருக்கிறேன் அர்ஜீன்.. நீ தான் உன் ரூமுக்கு ஓடறதிலேயே குறியாய் இருக்கிற..."

“எனக்கு வேலையிருக்கு டாட்...”

“நானும் சும்மாயில்லை அர்ஜீன்...”

ஆயிரம்தான் இருந்தாலும் அவர் அவனுடைய அப்பா.. அதற்கான மரியாதையை அவன் கொடுத்துத்தானே ஆக வேண்டும்..

அர்ஜீன் தோள்களை குலுக்கியபடி பார்த்தசாரதிக்கு எதிரே உட்கார்ந்தான்.. உள் பக்கமாக திரும்பி..

“அம்மா.. காபி..” என்று குரல் கொடுத்தான்... பார்த்த சாரதி கடாசியிருந்த பேப்பரைப் பிரித்து அதில் விழி பதித்தான்...

பார்த்தசாரதி பல்லைக் கடித்தார்.. மகனின் செயல்பாடு அவருக்குள் எரிச்சலைக் கிளப்பியது.. இதை அவரால் ஏனென்று கேட்க முடியாது.. கேட்டால் பேச விரும்பியத நீங்கள்தானே.. நானில்லையே என்று கேட்பான்..

அவர் சுந்தரியின் வரவுக்காக காத்திருந்தார்.. அவருக்கும் அவனுக்குமான இணைப்புப்பாலம் அவளும்... ஆனந்தியும்தான்... அவர்களை ஊடே வைக்காமல் அர்ஜீனிடம் பேசும் எந்தவொரு பேச்சும் தோல்வியில் தான் வந்து முடிந்திருக்கின்றது என்ற அனுபவ பாடத்தை நன்கு கற்றிருக்கிறவர் அவர்..

காபியின் மனம் நாசியைத் துளைத்ததில் அவர் நிம்மதியாக நிமிர்ந்து அமர்ந்தார்...

'அப்பாடி.. சுந்தரி வந்துட்டா...'

அவருடைய பேச்சு.. மனைவியிடமும்.. மகளிடமும் மட்டும்தான் செல்லுபடியாகிறது என்பதில் அவருக்குள் வருத்தம் மேலோங்கியது...

எந்த இடத்தில் அர்ஜீனுக்கும் அவருக்கும் இடையில் இருந்த பாச இழை அறுபட்டு போனது என்று அவர் கடந்த கால நிகழ்வுகளை திரும்பிப் பார்த்து தேடி ஓய்ந்து போனார்..

"காபின்னா கேட்டா... காபியை மட்டும்தான் பார்க்கனும்..."

சுந்தரி மகனின் கையிலிருந்த பேப்பரை பிடுங்கி விட்டு காபிக்கோப்பையை அவன் கையில் திணித்தாள்.. அவளின் உரிமையான அந்தச் செயலை பார்த்தசாரதி பொறாமையுடன் பார்த்தார்... அவரால் ஏன் அதைச் செய்ய முடியவில்லை...?

சுந்தரி மகனின் அருகில் உட்கார்ந்து கொள்ள.. அவன் அவளிடம் ஆனந்தியின் வீட்டைப் பற்றி ஏதோ சொன்னான்.. அதை ரசித்துச் சிரித்த அவள் பதிலுக்கு எதையோ சொன்னாள்... அவன் இப்போது பலமாக சிரித்தான்..

பார்த்த சாரதி என்ற ஒருவர் அங்கே இருக்கிறார் என்பதை மறந்து போனவர்களாக அவர்கள் பேசிச் சிரிக்க ஆரம்பிக்க.. தனிமைப் பட்டுப் போன பார்த்தசாரதி கடுப்பாகிப் போனார்..

"உன்னிடம் பேசனும்னு சொன்னேன் அர்ஜீன்.." அவனுக்கு நினைவு படுத்தினார்...

"அதுக்காகத்தானே இங்க உட்கார்ந்தேன் டாடி..? நீங்க பேசற வழியைக் காணோமே..."

"என்ன பேசனுமாம் அர்ஜீன்...?"

"என்னிடம் கேட்டா.. எனக்கென்னம்மா தெரியும்..? டாடி உங்க முன்னாலதான உட்கார்ந்திருக்கார்..? அவரிடமே கேளுங்க..."

"என்ன விசயம்ங்க..?"

அவள் அப்பாவியாய் கணவரை நோக்க.. பார்த்தசாரதிக்குள் கோபம் பீறிட்டு எழுந்தது...

அவர் முதல் நாள் இரவு முழுவதும் விடிய.. விடிய.. அர்ஜீனைப் பற்றியும்.. அவரை மதிக்காத அவனின் செயல்பாடுகளைப் பற்றியும்.. அந்தச் செயல்பாடுகளினால் தீனதயாளனின் மனதை அவன் புண்படுத்திவிட்டதைப் பற்றியும்.. அதைவிட.. நேகாவை அவன் வேண்டாமென்று உதறித் தள்ளிவிட்டு விட்டதைப் பற்றியும்.. புலம்போ..

புலம்பென்று புலம்பித் தள்ளிக் கொண்டிருந்தாரே.. அதையெல்லாம் அவருடைய தர்ம பத்தினி மறந்து போனாளா..?

"என்னடி நினைத்துக்கிட்டிருக்க..? விடிய விடிய ராமாயணம் கேட்டு விட்டு.. விடிந்தபின்னால்.. ராமனுக்கு சீதை என்ன உறவாகனும்னு இல்ல கேட்டு வைக்கிற.."

"விடிய விடிய கேட்டேனா..? எதைக் கேட்டேன்..?"

"நான் பேசினதை நீ கேட்கவே இல்லையா..?"

"நீங்க பேசினிங்களா..? யார்கிட்டப் பேசினீங்க..?"

சுந்தரி கண்களை விரிக்க.. பார்த்தசாரதிக்கு பற்றிக் கொண்டு வந்தது.. பூட்டிய படுக்கையறைக்குள்.. அவரும் அவளும் மட்டும்தான் இருந்தார்கள்... அப்படியிருக்கும் போது விடிய விடிய அவர் அவளிடம் பேசாமல் வேறு யாரிடம் பேசியிருப்பார்..?

இப்படிப்பட்ட புத்திசாலித்தனமான கேள்வியைக் கேட்கும் மனைவியை என்ன செய்தால் தகும் என்ற கோபம் அவருக்குள் பொங்கி எழுந்தது...

எதிரே.. தாய்க்கு அணைவாக அமர்ந்திருக்கும் மகன் அவருடைய கோபத்தை அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற நினைவில் அவருடைய

கோபத்தை அவர் அடக்கிக் கொண்டு லேசாக புன்னகைக்க முயன்றார்..

"ஜோக்கடிக்காதே சுந்தரி... உன்னிடம்தான் பேசினேன்.."

"அப்படியா..? ஸாரிங்க.. நீங்க பார்ட்டியில இருந்து வந்தப்பவே மிட்நைட் தாண்டிருச்சு.. அந்த லேட் நைட்டில நீங்க எதைப் பேசினாலும் என் காதில் ஏறுமா..? தூக்கம் தான் வரும்.. அது என் தப்பில்லை.. ரியலி ஐ ஆம் வெரி ஸாரி..."

முறைத்துக் கொண்டிருக்கும் மகனின் முன்பாக அவனுடைய அன்னையை அவரால் முறைக்க முடியுமா..? அதானல் வேறு வழியின்றி...

"போகட்டும் விடு.." என்று பல்லைக் கடித்தபடி.. பல்லிடுக்கில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினார்..

"அப்படின்னாச் சரி.. அர்ஜீன் உனக்கு காலை டிபனுக்கு என்ன வேணும்..?"

சுந்தரி எழுந்து கொள்ள முயல.. பார்த்தசாரதி மகனுக்காக அடக்கி வைத்திருந்த கோபத்தைக் கட்டுப் படுத்த முடியாமல் வெடித்து விட்டார்...

"இப்ப அதுவாடி முக்கியம்..?"

“வேற எதுதாங்க முக்கியம்..? என் பிள்ளையே வருசத்திலே ஒரு மாதமோ.. இரண்டு மாதமோ வீடு தங்கறான்.. அந்த நாள்களிலாவது அவனுக்குப் பிடிச்ச மாதிரி சமைச்சுப் போட்டாத்தானே எனக்கு மனசு ஆறும்..?”

“உன் மனசைப் பத்தியே நீ யோசி சுந்தரி.. என் மனசை நினைச்சும் பார்த்துராதே...”

“உங்க மனசுப் பிரகாரம்தான் எல்லாத்தையும் நடத்திக்கிட்டு இருக்கீங்களே.. இதில உங்க மனசை நினைச்சுப் பார்க்க என்ன இருக்கு..?”

“இருக்குடி.. நிறைய இருக்கு.. இப்ப என்ன விசயம்ன்னு நீ கேட்டியா.. இல்லையா..?”

“ஆமாம்.. கேட்டேன்.. அதுக்கென்ன இப்ப..?”

“அதுக்கான பதிலை நான் சொல்லி நீ கேட்டுட்டியா..?”

“இல்லைதான்.. எங்கே..? நீங்கதான் அதைச் சொல்லாம விடிய விடிய ராமாயணம் சொன்ன கதையை சொல்லிக்கிட்டு இருந்தீங்களே..”

“சுந்தரி...”

மகனை முன்னால் வைத்துக் கொண்டு மனைவியிடம் கோபித்துக் கொள்ள முடியாத சங்கடத்துடன் பார்த்தசாரதி பற்களை நறநறத்தார்.. அவரின்

முக பாவனைகளையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த அர்ஜீன்.. முகத்தில் கண்டிப்புடன்..

“இப்ப எதுக்காக அம்மாவை அதட்டறிங்க டாடி..? என்னிடம் பேசனும்னா நேராப் பேசுங்க.. அதை விட்டுட்டு.. என்மேல இருக்கிற காண்டை அம்மா மேல காட்ட வேணாம்.. நான் அதைப் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டேன்..” என்றான்..

“இப்ப இவளை என்ன சொல்லிட்டேன்னு நீ சண்டைக்கு வர அர்ஜீன்..?”

“உங்களுக்கு என்னதான் பிரச்னை டாடி..? டெல் மீ..”

“உனக்கு நேகாவை மேரேஜ் பண்ணிக்க விருப்ப மில்லைன்னா அதை நாகரிகமா என்னிடம் சொல்லியிருக்கலாம்.. நேகாவிடம் சொல்லியிருக்கலாம்.. ஏன்.. தீனதயாளனிடம் கூடச் சொல்லியிருக்கலாம்.. அதை விட்டுவிட்டு.. நேற்று நைட் நடந்த பார்ட்டியில்... அத்தனை பேரின் முன்னாடியும் அவங்களை நீ இன்சல்ட் பண்ணியது தப்பு அர்ஜீன்.. அவங்க மனது எவ்வளவு வேதனைப் பட்டிருக்கும்..?”

கோபத்துடன் கேட்ட பார்த்தசாரதியின் விழிகளுக்குள் தெரிந்த உணர்வலைகளை ஊன்றிப் பார்த்த அர்ஜீனின் முகம் பாறையைப் போல கடினமாக இறுகியது...

“மனசுங்கிறது அவங்களுக்கு மட்டும்தான் இருக்கா டாடி..? மத்தவங்களுக்கு இல்லையா..?”

அவன் எங்கே வருகிறான் என்பதை அவன் கேள்வியிலிருந்து புரிந்து கொண்ட பார்த்தசாரதியின் முகம் கருத்தது...

“ஸோ.. நீ வேண்டும்ன்னே இதைச்செய்திருக்க..”

“அஃப் கோர்ஸ்...”

“நேற்று நைட் நடந்த பார்ட்டி எவ்வளவு இம்பார்டண்டான பார்ட்டின்னு உனக்கு நல்லாவே தெரியும் அர்ஜீன்.. இந்த சென்னையில இருக்கிற டாப் மோஸ்ட் பிஸினெஸ் மேன்ஸ் மட்டுமில்லாம.. மும்பை.. டெல்லி.. கல்கத்தா.. பெங்களூர்.. ஹைதராபாத்துன்னு அத்தனை சிட்டிகளிலும் இருந்த டாப்மோஸ்ட் பிஸினெஸ் மேன்ஸ் கலந்துக்கிட்ட பார்ட்டி அது.. அந்த இடத்தில போய் தீனதயாளனைப் பார்த்து எப்படியெல்லாம் பேசிவிட்ட அர்ஜீன்.. அவரால் இதை மறக்க முடியுமா..?” பார்த்தசாரதி நியாயம் கேட்க...

“மறக்கக் கூடாதுங்கிறதுக்காகத்தான் அப்படிப் பேசினேன்...” என்று நிதானமாக பதில் சொன்னான் அர்ஜீன்...

“அர்ஜீன்..?..” பார்த்தசாரதி திகைத்து விட்டார்..

"யெஸ் டாட்.. நான் ஒருத்தியைக் காதலிச்சேன்... மனசார அவளை நேசிச்சேன்.. அவ மட்டும்தான் என் வாழ்க்கைன்னு நினைச்சேன்.. அவ என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டா.. எதுக்காகன்னு தெரியுமா டாடி.."

அர்ஜீன் கண்கள் சிவக்க கேட்டதில் சுந்தரி பதட்டமாகிப் போனாள்.. இது அவளுக்கு புதிய செய்தி.. பழைய செய்தியாய் அதை அறிந்திருந்த பார்த்தசாரதியோ மகனின் முகத்தைப் பார்க்க முடியாமல் ஜன்னல் திரைகளைப் பார்த்தார்..

"என் கையால தாலி வாங்கிக்கிட்டு.. எனக்கு வொஃய்பா இந்த வீட்டுக்குள்ள அவ வந்தா.. உங்களுக்கும்.. அம்மாவுக்கும் அவ மருமகளா ஆகி விடுவாளாம்.. அவளுக்குத் திருட்டுப் பட்டம் கட்டின மனிதரோட மருமகளா இந்த வீட்டுக்குள் காலடி வைக்க அவளால் முடியுமான்னு அவ கேட்டா டாடி.." அர்ஜீன் குமுற..

"அர்ஜீன்.." சுந்தரி பதறினாள்..

"யாருடா அது..? நீ என்னடா சொல்ற..?"

"உங்களுக்குத் தெரியாதில்ல அம்மா..? விடிய விடிய உங்களிடம் ராமாயணம் சொன்ன டாடி இதைப்பற்றி ஒரு வார்த்தைகூட உங்களிடம் மூச்சு விடல்லைல்லம்மா..?"

“இல்லையேடா..”

“எனக்கொரு காதலி இருக்காம்மா.. எனக்கு மேரேஜ்ன்னு ஒன்னு நடந்தா அது அவ கூட மட்டும்தான்.. எனக்கு வொஃய்பா ஒருத்தி என் வாழ்க்கையில வர முடியும்ன்னா அது அவ மட்டும்தான்.. இது உங்களுக்குத் தெரியாதும்மா.. டாடிக்கு நல்லாவே தெரியும்...”

அர்ஜீனின் கரை உடைந்த கோபத்தில்.. சுந்தரி பரிதவித்துப் போனாள்.. பார்த்தசாரதி கையும் களவுமாக மாட்டிக் கொண்டவராக கைகளை பிசைந்தார்..

## 168

*சொல்லில் அடங்கா ஆசைகளை..*
*சொல்லி விடத்தான் ஆசைகொண்டேன்...*

“**அ**ர்ஜீன் என்னங்க சொல்கிறான்..?”

அந்தக் கேள்வியை சுந்தரி அழுத்தம் திருத்தமாக கேட்கிறாள் என்பதை மனதில் குறித்துக் கொண்டார் பார்த்தசாரதி.. அதுவரை அவள் அப்படிப்பட்ட தொனியில் அவரிடம் எந்தக் கேள்வியையும் கேட்டதில்லை..

முதன் முறையாக அன்றுதான் அது போன்ற அழுத்தமான கேள்வியை அவர்மீது அவள் வீசுகிறாள்..

“எனக்கும் புரியலை சுந்தரி.. அர்ஜீனுக்கு காதலி இருக்காளா..?”

“டாட்.. நடிக்காதீங்க.. ஐ டோன்ட் லைக் திஸ்...”

“லுக் அர்ஜீன்.. நீ எதை மனதில் வைத்துக்கிட்டுப் பேசறன்னு எனக்குத் தெரியாது.. நீ டாப் மோஸ்ட்டில இருக்கிற ஒரு சக்சஸ்புல் பிஸினெஸ் மேன்.. உனக்கான மனைவி உனக்கு இணையானவளா.. சொஸைட்டியில நாம சொல்லிக்கிட்டா நம்ம அந்தஸ்து கூடுகிற அளவுக்கு தகுதியானவளா இருக்கனும்னு நான் ஆசைப்பட்டேன்.. அது தப்பா..?”

“பட் டாட்.. நான் என் மனசுக்குப் பிடிச்ச ஒருத்திமேலே ஆசைவைத்துட்டேனே... அது தப்பா..?”

“அர்ஜீன்.. ஆசை வைக்கிறதையும் தகுதி பார்த்துத்தான் நாம் வைக்கனும்.. பொன் பாத்திரத்துக்குப் பக்கத்தில மண் பாத்திரத்தை வைக்கக் கூடாதுப்பா..”

“நீங்க என்னை ஒரு பாத்திரமா.. ஐ மீன்.. உங்களிடம் இருக்கிற ஒரு பொருளா பார்க்கறிங்க டாடி.. அதனால் வந்த வினைதான் இத்தனையும்.. நான் மனிதன்.. எனக்கும் மனம் இருக்கு.. அதில் தனிப்பட்ட உணர்வுகள் இருக்குங்கிறதை நீங்க அனலைஸ் பண்ணலை..”

"உனக்கான லைஃப் பார்ட்னரா என்னால நேகாவை மட்டும்தான் தீர்மானிக்க முடியுது அர்ஜீன்.. ஐ ஆம் ஸாரி ஃபார் ஸே திஸ்.. டு யு.."

"எனக்கும் இதைச் சொல்ல வருத்தமாத்தான் இருக்குடாடி.. பட்.. நோ அதர் வே.. நான் இதைச் சொல்லித்தான் ஆகனும்.. என் வாழ்க்கையை தீர்மானிக்க நீங்கள் யார்..?"

"அர்ஜீன்..."

பார்த்தசாரதி அதிர்ந்து போனவராக மனைவியைப் பார்த்தார்.. அவள் கோபப்படுவாள்.. எப்படி உன் அப்பாவைப் பார்த்து இப்படியொரு கேள்வியை உன்னால் கேட்க முடிந்தது என்று கேட்பாள் என்றெல்லாம் அவர் எதிர் பார்த்தார்...

சுந்தரி அசையவே இல்லை.. உதட்டைக் கடித்தபடி மகனின் முகத்தில் மாறிமாறி பிரதிபலிக்கும் உணர்ச்சிக் கலவைகளை உற்று நோக்கியபடி அசையாமல் அமர்ந்திருந்தாள்..

"நீங்க என் டாடியா இருக்கலாம்.. ஆனால்.. அதுக்காக என் வாழ்க்கையை தீர்மானிக்கும் உரிமையை நீங்க கையில் எடுத்துக்க கூடாது.. நான் உங்கள் மகன்தான்.. உங்க அடிமையில்லை.. இது என்னுடைய வாழ்க்கை..

இதை எப்படி வாழனும்.. யார்கூட வாழனும்கிறதை நான்தான் தீர்மானிப்பேன்.. அதில் தலையிட உங்களுக்கு உரிமையில்லை...”

“அர்ஜீன்.. நான் உன் எதிரியில்லை...”

“நண்பனாவும் இல்லையே டாடி...”

“அவசரப்பட்டு அப்படியொரு முடிவுக்கு நீ வந்து விடாதே அர்ஜீன்.. நான் உன் நல்லதுக்காகத்தான் சொல்கிறேன் அர்ஜீன்.. புரிஞ்சுக்க...”

“ஸ்ஸ்ஸ்... கடுப்பைக் கிளப்பாதீங்க.. டாடி.. நீங்க புரிஞ்சுக்கன்னு சொல்லிப் புரிய வைக்கிறதுக்கு நானென்ன எல்.கே.ஜி. பாடிக்கிற பையனா...? எனக்கு எது நல்லது.. எது கெட்டதுன்னு எனக்குத் தெரியும்.. ப்ளீஸ்.. மைன்ட் யுவர் பிஸினெஸ்..”

“ஹார்டு வெர்டுஸ் யூஸ் பண்ற அர்ஜீன்...”

“என்னால உங்ககிட்ட எப்படி டாடி ஸாப்டா பேச முடியும்...? என் காதலிங்கிற ஒரே காரணத்துக்காக ஒரு நேர்மையான பொண்ணின் மேல திருட்டுப் பட்டம் கட்டினீங்களே... அதை அவ மன்னிக்கவும்.. மறக்கவும்.. தயாராயில்ல.. உங்க மகன்ங்கிற ஒரே காரணத்துக்காக என்னையும் அவ மன்னிக்க மாட்டேன்னு சொல்லிட்டா.. என்னால எப்படி உங்ககிட்ட கொஞ்சிப் பேச முடியும்..?”

சுந்தரியின் புருவங்கள் முடிச்சிடுவதையும் அவளது கூர்மையான பார்வை அவர்மீது திரும்புவதையும் உணர்ந்த பார்த்தசாரதி.. சங்கடமடைந்தார்.. மனைவியின் மனதில் அவருக்கான மதிப்பு சரிந்து விடக் கூடாது என்ற அவசரத்துடன் நிலைமையை சமாளிக்க முயன்றார்..

“லுக் அர்ஜீன்.. நீ பேசறது கொஞ்சம் கூட நல்லாயில்ல.. சொல்லிட்டேன்..”

“ஓ..! நீங்க செய்தது மட்டும் நல்ல செயலா...?”

“அது நான் வாங்கின கடை அர்ஜீன்...”

“அதுக்கான பணத்தை நான் கொடுத்துட்டேன்.. யு ரிமம்பர் ஒன் திஸ் டாடி.. என் பிஸினெஸ் என் சொந்த இன்வெஸ்ட்மென்டில் நடந்துக்கிட்டு இருக்கு.. நான் சுயமாய் உருவானவன்.. யாரோட பக்க பலத்திலயும்.. யாரோட பண பலத்திலயும் உருவானதில்ல.. உங்களிடம் கடனா வாங்கின பணத்தை.. மத்தவங்களிடம் நீங்க வாங்கக் கூடிய வட்டித் தொகையை விட அதிகமான தொகையை சேர்த்து நான் திருப்பிக் கொடுத்துட்டேன்.. என் பிஸினெஸ்ஸில் வரும் வருமானத்தில் ஒற்றை ரூபாயின் மீது கூட உங்களுக்கு உரிமையில்லை.. அதைப் போலத்தான்.. அந்தக் கடையை வாங்க நீங்க கொடுத்திருந்த பணத்தையும் வட்டியும்.. முதலுமா

உங்களுக்கு திருப்பிக் கொடுத்துட்டேன்.. அது என்னுடைய கடை.. அதன்மேல உங்களுக்கு உரிமையில்லை...”

“அதை நான் மதுரைக்குப் போன பின்னாலதான் நீ திருப்பிக் கொடுத்த அர்ஜீன்.. அது வரைக்கும் அது என் கடைதானே...? நான் வாங்கின கடைக்கு நான் ஃபீல்டு விசிட் போனேன்.. அது தப்பில்லையே...”

“நீங்க கெட்டிக்கார பிஸினெஸ் மேன் டாடி.. வாழ்க்கை வேற.. பிஸினெஸ் வேறன்னு நினைக்கிறவன் நான்.. நீங்க வாழ்க்கையையும்.. பிஸினெஸ்யையும் ஒன்னாப் பார்க்கிறவர்.. இதைப் போல ஜாலம் பேச உங்களுக்கு சொல்லியா கொடுக்கனும்..? நீங்க மதுரைக் கடையில கால் வைத்த அடுத்த செகண்டிலேயே உங்க பணத்தை உங்க அக்கவுண்டில் நான் கிரெடிட் பண்ணிட்டேன்.. அதுக்கப்புறமும் நீங்க எதுக்காக அங்கே இருந்தீங்க...?”

“அதுதான் ஃபீல்டு விசிட்டுன்னு சொன்னேனே...”

“என் கடையை விசிட் பண்ண எனக்குத் தெரியுமே..”

“மகன் கடைக்கு டாடி விசிட் அடிக்கக் கூடாதா..?”

“தாராளமா விசிட் பண்ணலாம்.. பட்.. அங்கே வேலை செய்கிறவங்களோட சீட்டை

மாத்தியமைச்சிருக்கக் கூடாது.. அவங்க வேலையையும் மாத்தியிருக்கக் கூடாது... போதாக்குறைக்கு என் கடைக்கு கொஞ்சம் கூட சம்பந்தமில்லாத நேகாவை.. என் கடைக்குள் வரவைத்திருக்கக் கூடாது.. அப்படி வந்தவளுக்கும் எனக்கும் கொஞ்சம்கூட சம்பந்த மில்லைன்னு உங்க மனச்சாட்சிக்கு தெரிந்திருந்தும் அவளை என் வருங்கால மனைவின்னு கடையில இருந்தவர்களுக்கு அறிமுகப் படுத்தியிருக்கக் கூடாது.. இத்தனைக்கும் மேலா எவளை நான் உயிருக்குயிரா காதலிக்கிறேனோ.. அவளிடமே நேகாவுக்கு ஆரத்தி எடுத்து கடைக்குள்ளே அழைத்துக்கன்னு சொல்லியிருக்கக் கூடாது..."

அர்ஜீன் கொதிக்கக் கொதிக்க.. அந்தக் கொதிப்பு சுந்தரிக்குள் இறங்கிக் கொண்டிருந்தது.. காதலனின் வருங்கால மனைவியென்று வந்து நிற்பவளுக்கு.. ஆரத்தி எடு என்று சொன்னால் அந்தக் காதலியின் மனது என்ன பாடுபட்டிருக்கும் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது..

ஒரு பெண்ணின் உணர்வுகளை இன்னொரு பெண்ணால்தானே புரிந்து கொள்ள முடியும்..?

அந்தக் கொதிப்பில் அவளிருக்க.. அது புரியாத பார்த்தசாரதி...

“நான் ஆரத்தி எடுக்கச் சொன்னேன்தான்... ஆனா அவ ஆரத்தி எடுத்தாளா...? மாட்டேன்னு சொல்லிட்டாளே.. நீ அதை ஏன்னு கேட்டியா..?” என்று கேட்டு.. மனைவியின் பலத்த கண்டன பார்வைக்கு ஆளானார்..

‘ஆஹா.. வாயை வைத்துக்கிட்டு சும்மா இருக்காம நியாயம் கேட்கிறேன் பேர்வழின்னு வாயை விட்டுட்டேனோ...’

காலங்கடந்த ஞானோதயத்தில் அவர் வாய் மூடிக் கொள்ள அர்ஜீன் எரிமலையானான்...

“கேட்டுக்கிட்டிங்களாம்மா.. தி கிரேட் நியு எக்ஸ்போர் கம்பெனியின் எம்.டி... என்ன மாதிரியான வேலையில் இறங்கியிருக்கார்ன்னு கேட்டிங்களா.. ஆரத்தி எடுக்கனுமாம்.. யாருக்கு..? இவரோட வருங்கால மருமகளுக்கு.. சென்னை எங்கேயிருக்கு...? மதுரை எங்கேயிருக்கு..? இங்கேயிருந்து இவரும் போயி.. நேகாவையும் அங்கே வர வைச்சு... நான் ஆசைப்பட்ட பெண்ணைக் கூப்பிட்டு அந்த நேகாவுக்கு ஆரத்தி எடுக்கச் சொல்லியிருக்காரு.. இவர் செய்கிற வேலையாம்மா இது...?”

அர்ஜீன் பேசப் பேச.. முகம் இறுகிப் போன சுந்தரி கணவரையே இமைக்காமல் பார்க்க.. அந்தப் பார்வையில் கதிகலங்கிப் போனார் பார்த்தசாரதி...

“அப்படிப் பார்க்காதே சுந்தரி.. நம்ம வீட்டுக்கு வரப் போகிற மருமகளாச்சேன்னு நினைச்சேன்...”

“வீட்டுக்கு வர வேண்டிய மருமகளை சென்னையில இருக்கிற நம்ம வீட்டுக்கு கூப்பிட்டுக்கிட்டு வர வேண்டியதுதானே..? மதுரையில இருக்கிற கடைக்கு ஏன் கூப்பிட்டுக்கிட்டு போனீங்க....?”

“அது அர்ஜீன் ஆசையாய் வாங்கிய கடையாச்சே.. அதை நேகாவுக்கு காட்டலாமேன்னு நினைச்சேன் சுந்தரி...”

“இப்பத்தானே அது நீங்க வாங்கின கடைன்னு சொன்னீங்க...?”

“அர்ஜீன் பணம் கொடுத்துட்டதா சொன்னானே சுந்தரி..”

“அது இப்ப... நான் சொல்றது அப்ப... நீங்க மதுரைக்குள்ள கால் வைத்தப்ப அது உங்க கடையாத்தானே இருந்தது...?”

மனைவிகள் புத்திசாலிகளாக இருக்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டார் பார்த்தசாரதி.. ஒரு மனிதனை இப்படியெல்லாம் கிடுக்கிப்பிடி போட்டு கேள்வி கேட்டால்.. அவன் பாவம் என்ன செய்வானென்று நினைத்துப் பார்க்க வேண்டாமா...?

“ஏதோ.. கடையை வாங்கினதில இருந்து ஒரு தடவை கூட அதைப் பார்க்கலையேன்னு நினைத்தேன்.. அதைபார்க்கப் போனேன்.. இது ஒரு குற்றமாடி...”

“இது குற்றமில்லை.. நீங்க பார்க்கப் போனது பத்தாதுன்னு அந்த நேகாவையும் பார்வையிட அழைப்பு வைச்சீங்களே.. அதுதான் குற்றம்...”

“அவ மதுரையை சுற்றிப்பார்க்க வந்தா சுந்தரி..”

“மதுரையைச் சுற்றி பார்க்க வந்தவளுக்கு என் கடையில என்ன வேலைன்னு கேளுங்கம்மா... அதிலும் அவ என் சீட்டில உட்கார்ந்து கடையில அராஜகம் பண்ணியிருக்கா... இது யார் கொடுத்த தைரியம்ன்னு கேளுங்கம்மா.. அதுவும் ஒருநாள்.. இரண்டு நாளில்ல.. ஒரு மாதத்துக்கும் மேலா அந்த நேகா என் கடையில வேலை செய்கிறவங்களை ஆட்டிப் படைச்சிருக்கா.. அதுக்கான பவரை அவளுக்கு யார் கொடுத்ததுன்னு கேளுங்கம்மா...”

“கேட்கறானில்ல...? பதில் சொல்லுங்க...”

“அங்கே கடையில அட்மினிஸ்ட்ரேசனே சரியில்லை சுந்தரி.. இவன் கனடாவில இருந்தான்.. அந்தப் பொண்ணு பெரிய கம்பெனிகளுக்கு எம்.டி பொறுப்பில இருக்கிற

பொண்ணு... நம்ம வுட் பி யோட கடையாச்சேன்னு அதிகப்படியா அக்கறை காட்டிச்சு... இப்படிப் பட்ட பெண்ணோட மனதைத்தான் உன் மகன் நோகடிச்சுட்டு வந்திருக்கான்.. அதை நீ ஏன்னு கேட்டியா...?"

அடாது மழை பெய்தாலும் விடாது பார்த்த சாரதி குடையைப் பிடித்தார்... சுந்தரியும்.. அர்ஜீனும் மாறி மாறி கேள்வி கேட்டும் அவர் தான் பிடித்த முயலுக்கு ஒற்றைக் கால்தான் என்று சாதித்தார்.. அர்ஜீன் பல்லைக் கடித்தான்...

## 169

*சித்திரத்தின் பொற்சிரிப்பை...*
*சேகரிக்க ஆசை கொண்டேன்...*

**அ**ர்ஜீனின் முகக்குறிப்பு அந்த வீட்டைவிட்டு வெளியேறி விடும் உத்தேசத்தில் அவன் இருப்பதை அறிவுறுத்த.. சுந்தரி பொறுமையை கைவிட்டாள்..

"சும்மா வுட் பி.. வுட் பின்னு சொல்லாதீங்க... அப்ப என்னடான்னா.. வருங்கால மருமகள்ன்னீங்க.. இப்ப வுட் பியில வந்து நிற்கறிங்க.. அந்த நேகாதான் இந்த

வீட்டு மருமகளா வரப் போகிறான்னு நீங்களா முடிவு கட்டிக்கிட்டா எப்படிங்க...? அதை நானும் சொல்ல வேண்டாமா..?"

சுந்தரியின் உரிமைக் குரலில் பார்த்தசாரதியின் மனம் விழித்துக் கொண்டது...

'உஷார்...' அவர் மனம் அபாய அறிவிப்பை அறிவித்தது..

'இவ உரிமையைப் பற்றிப் பேசவே கூடாதே..' அவர் அவசரமாக களம் இறங்கினார்...

"நீ வேறு.. நான் வேறா சுந்தரி..? என் பேச்சுக்கு மறு பேச்சு பேசாத உத்தம பத்தினியாச்சே நீ..."

"அப்ப.. உங்க பேச்சுக்கு நான் எதிர் பேச்சைப் பேசினா உத்தம பத்தினியில்லைன்னு ஆகிருவேனா..?"

சுந்தரியின் நிதானமான கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் அவர் திணறிப் போனார்..

'இவ இப்படிக் கூட பேசுவாளா...?'

சுந்தரியின் யோசிக்கும் திறனை நினைத்து அவருக்குள் அச்சம் மேவியது.. அது நாள்வரை அவரிடம் கேள்வி கேட்காமல் குடும்பம் நடத்திய மனைவி.. கேள்வி கேட்க ஆரம்பிப்பது அவருக்கு நல்லதல்ல என்று அவரின் அடிமனம் வலியுறுத்தியது...

“சேச்சே.. என்ன பேச்சுன்னு இதைப் பேசற.. போய் வாயைக் கழுவு...”

“குளித்து முடித்து... பூஜை பண்ணிட்டு வந்து உட்கார்ந்திருக்கேன்... நான் வாயைக் கழுவனும்கிற அவசியமில்லை.. அதை நீங்கதான் செய்யனும்..”

“எனக்கு அது தெரியாதா சுந்தரி.. நீ யாரு...?”

“உங்க பெண்டாட்டி.. அர்ஜீன்.. ஆனந்திக்கு அம்மா.. இத்தனைக்கும் மேலா என் பெயர் சுந்தரி...”

பார்த்தசாரதிக்கு மனைவியின் ஆரம்ப அறிமுகம் பிடித்திருந்தது... அடுத்த அவளின் அறிமுகத்தை அவர் சுத்தமாக விரும்பவில்லை... அவளின் அந்த சுய அறிமுகத்தை அவர் அதுநாள்வரை மறக்க வைத்திருந்தார்..

‘புதுசா இது எங்கேயிருந்து முளைச்சு வந்திருக்கு...?’

“நீ குடும்பமே உன் உலகம்ன்னு நினைக்கிற பத்தினித் தங்கம்டி.. இது நாள்வரைக்கும் என் பேச்சுக்கு எதிர் பேச்சை நீ பேசியிருப்பியா..? என் நினைப்புக்கு எதிர் நினைப்பை நீ நினைத்திருப்பியா..? நான் கோடு கிழிக்க வேண்டிய அவசியமேயில்லாம.. நீயா கோடு கிழிச்சு அதுக்குப் பின்னாலே நின்னுக்கிற மாதர் குல மாணிக்கமாச்சேடி நீ...”

“ஓ...”

"உன்னை நினைக்கும் போது என் நெஞ்சம் நெகிழ்ந்துரும் சுந்தரி..."

"அப்படியா...?"

"நீ எப்பவும் இப்படியே இருக்கனும்டி.. எனக்கு அது போதும்.. வேற எதுவும் வேணாம்..."

"கொடுக்க என்னிடமும் வேறு எதுவும் இல்லையே.."

"என்னடி சொல்கிற...?"

"அதுதான் என்பெயரில் இருந்த அத்தனை புராப்பர்ட்டியையும் உங்க பெயருக்கு எழுதிக் கொடுத்துட்டேனே.. இனிக்கொடுக்க என்ன இருக்கு..?"

"சுந்தரி..."

"சும்மா அதட்டாதீங்க.. நான் அடையாளமில்லாம என்னை ஆக்கிக்கிட்டேன்தான்... அதுக்காக நீங்க என் பிள்ளையோட வாழ்க்கையில விளையாடுவதை நான் வேடிக்கை பார்த்துக்கிட்டு இருப்பேன்னு மட்டும் நினைச்சிராதீங்க..."

"என்னடி.. பேச்சு ஒரு தினுசா இருக்கு..."

"இருக்கத்தான் செய்யும்.. உங்களுக்கு ஜால்ரா தட்டிக்கிட்டே இருந்தா நான் மாதர்குலத் திலகம்.. இல்லைன்னா.. அந்தப் பட்டத்தை தூக்கிப் பரணில போட்டிருவீங்களா...? எனக்கு அந்தப் பட்டமே வேண்டாம்.."

"இப்ப எதுக்காக இப்படியெல்லாம் பேசற...?"

"எனக்கு அந்த நேகாவைப் பிடிக்கலைன்னு உங்களிடம் சொல்லியிருந்தேனா இல்லையா...? அதுக்கப்புறமும் எப்படி நீங்க அவளை இந்த வீட்டோட வருங்கால மருமகள்ன்னு சொல்லலாம்...?"

"புத்தியோடுதான் பேசறயா சுந்தரி..? நீ கொண்டு வந்த புராப்பர்ட்டியெல்லாம் என்ன புராப்பர்ட்டி...? அவ பெயரில் இருக்கிற கம்பெனிகளின் மதிப்பு எத்தனை கோடின்னு உனக்குத் தெரியுமா...?"

"என் மகனிடம் இருக்கிறதை விட அதிகமா இருக்காதுன்னு எனக்குத் தெரியும்..."

"இருக்கட்டுமே.. அவ கோடிஸ்வரியா.. இல்லையா.. அதைச் சொல்லு.. பணம்.. பணத்தோடுதான் சேரனும் சுந்தரி..."

"ஊஹீம்.. மனசும்.. மனசும் ஒன்னு சேரனும்.. அதுதான் கல்யாணம்.. என் மகன் மனசு.. அந்த நேகாவோட மனசோட சேர மாட்டேங்குதே.. ஒரு சந்தேகம்.. அந்த நேகாவுக்கு மனசுன்னு ஒன்னு இருக்கா..? ஏன் கேட்கிறேன்னா.. அவ ஜெயிக்கனும்ன்னா... யாரை வேண்டும்னாலும் அழிப்பாளாமே.. ஆனந்தி சொல்லியிருக்கா..."

“அவளுக்கு என்னடி தெரியும்..? உலகத்தைத் தெரிந்துக்காம குண்டுச் சட்டியில குதிரையை ஒட்டறவதானே நம்ம ஆனந்தி...? எத்தனை ஃபாரின் மாப்பிள்ளைக அவளை பெண் கேட்டு வந்தாங்க... மாட்டேன்னு சொல்லிட்டு சத்திய மூர்த்திக்கு கழுத்தை நீட்டினவளாச்சே அவ.....”

“மாப்பிள்ளையைப் பத்தி நீங்க எதையும் பேசக் கூடாது... எவளோ ஒரு பெண் உங்களுக்கு இனிமே மருமகளா வரனும்கிறதுக்காக... ஏற்கனெவே நம்ம வீட்டுக்கு மருமகனா ஆகி.. இரண்டு குழந்தைகளுக்கு அப்பாவாகவும் ஆகிட்ட மாப்பிள்ளையைப் பற்றிக் குறை சொல்வீங்களா..? இது மட்டும் ஆனந்திக்குத் தெரிந்தா அவ உங்க முகத்திலேயே விழிக்க மாட்டா.. சொல்லிட்டேன்..”

சுந்தரியின் கோபத்தில் ஆடிப் போய் விட்டார் பார்த்தசாரதி... மகனுடன் முகத்தை முறித்துக் கொண்டிருக்கும் நிலையில் மகனிடமும் பிணக்கு வந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவரை பிடித்துக் கொண்டது...

“இதோ பார் சுந்தரி...” அவர் மனைவியை சமாதானப் படுத்தும் முயற்சியில் இறங்கிய போது...

“அம்மா.. எனக்கு கம்பெனிக்கு நேரமாகுது...” என்று பார்த்தசாரதியின் முகத்தைப் பார்க்காமல் சொல்லி விட்டு மாடியேறிவிட்டான் அர்ஜீன்...

‘இவன் கம்பியை நீட்டிட்டானே...’

மகனுடனான விவாவதம் முற்றுப் பெறவில்லையே என்ற ஏக்கத்துடன் பிடித்து வைத்துக் கொள்ள முடியாத மகனை அவர் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்த போது...

“சரோஜா... டிபனை ரெடி பண்ணு.. அர்ஜீன் குளிக்கப் போயாச்சு...” என்று குரல் கொடுத்தபடி சுந்தரி சமையலறையை நோக்கிப் போய் விட்டாள்...

‘அடடா..! அந்தப் பக்கம் அவனைப் பார்த்தா.. இந்தப் பக்கம் இவளும் கம்பியை நீட்டிட்டாளே...’

மனைவியையும் மகனையும் இழுத்துப் பிடித்து மீண்டும் ஒரு விவாதத்தை ஆரம்பிக்க முடியாத நிலையில் அவரும் வேறு வழியின்றி அவருடைய கம்பெனிக்கு கிளம்பத் தயாரானார்...

‘டைனிங் டேபிள்ள அவனை மடக்கிப் பிடிச்சுரனும்..’

அரக்கப் பரக்கக் கிளம்பி அவர் டைனிங் டேபிளுக்கு ஓடிவந்த போது... சுந்தரி டேபிளை சுத்தம் பண்ணிக் கொண்டிருந்தாள்...

“எங்கேடி அவன்...?” அவர் கோபாவேசமானார்..

“ம்ம்ம்.. கம்பெனிக்கு கிளம்பிப் போயிட்டான்....” அவர் முகம் பார்க்காமல் பதில் சொன்னாள் சுந்தரி...

“கிளம்பிப் போயிட்டானா...? எங்கிட்டச் சொல்லாமலா..?”

“இதென்ன புதுக் கேள்வி..? அவன் என்னைக்கு உங்களிடம் சொல்லிட்டுப் போயிருக்கான்...? அவன் எல்.கே.ஜி படிச்சப்பவே அவன் பாட்டுக்குத்தான் ஸ்கூலுக்கு கிளம்பிப் போவான்.. இப்ப அப்படியுமில்ல.. அவ்வளவு பெரிய கம்பெனியை நிர்வாகம் பண்றவன்.. உங்களுக்கு டாட்டா சொல்லிட்டா போக முடியும்...?”

“வேற ஒன்னுமில்லைடி.. பருந்துக்கு இறக்கை முளைச்சிருச்சு.. அது பறந்து போயிருச்சு...”

“சகிச்சலை.. சாப்பிட வாங்க...”

சாப்பிடும்போது... தட்டில் பரிமாறப் படுவது எதுவென்று உணராமலே அவர் யோசனையுடன் அதை உள்ளே தள்ளினார்..

“தோசை...! நல்லாயிருந்துச்சா...?”

சுந்தரி அழுத்தம் கொடுத்து கேள்வி கேட்க... அவர் யோசனையிலிருந்து மீண்டு அவளை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தார்.. அப்போதாவது அவள் ஏன் இப்படிக்

கேட்கிறாள் என்று அவர் யோசித்திருக்கலாம்.. அதை விட்டுவிட்டு.. விட்ட யோசனையை தொடர்ந்தபடி...

"ம்ம்ம்..." என்று தலையாட்டி விட்டார்...

"நினைச்சேன்.. பூரியையும் கிழங்கையும் மொக்கிட்டு தோசை நல்லாயிருக்குன்னு சொல்கிற ஆள் இந்த உலகத்திலேயே நீங்களாத்தான் இருப்பீங்க.. ஒரு மார்க்க மாத்தான் இருக்கீங்க.. ஊஹீம்.. இந்தக் கண்டிசன்ல நீங்க காரையோட்டினா அவ்வளவுதான்..."

சுமதி வாசலுக்கு வந்தாள்.. போர்டிகோவில் நின்றிருந்த காரைத் துடைத்துக் கொண்டிருந்த டிரைவரைப் பார்த்தாள்...

"வரதா..."

"அம்மா..."

"இன்னைக்குப் பூராவும் ஐயா கையில கார் சாவியைக் கொடுத்திராதே... கார் உன் கண்ட்ரோலில் இருக்கட்டும்.. எந்தத் காரணத்துக்காகவும் அவர் காரை ஓட்டக் கூடாது.."

"ஆகட்டும்மா..."

"ஐயாவுக்கு உடம்பு சரியில்லை வரதா.. ஒரே ஜீரம்... பிடிவாதமா மாத்திரையை போட்டுக்கிட்டு கம்பெனிக்கு கிளம்பறாரு... நீதான் பார்த்துக்கனும்..."

“ஆகட்டும்மா...”

புதிதாக கிடைத்த பாதுகாவலன் பொறுப்பில் வரதன் உற்சாகமாகி விட்டான்.. மனைவி சொல்வதைக் கேட்டபடி அங்கே வந்த பார்த்தசாரதி அவளை முறைத்தார்..

“பெரிசா கரிசனம் இருக்கிறதைப் போல வேசம் போடறயா...?”

அவர் மனைவியின் காதருகில் கடுகடுக்க... அவளோ அதை கண்டு கொள்ளாதவளாக...

“அப்போ.. போயிட்டு வர்றீங்களா..? பத்திரம்...” என்று அவருக்கு டாட்டா சொல்லத் தயாரானாள்...

‘அந்த அர்ஜீன் பய கூடச் சேர்ந்து இவளுக்கும் குளிர் விட்டுப் போச்சு.. மகன் இருக்கிற தைரியத்தில துள்ளிப் பார்க்கிறா...’

மனைவியிடம் தெரிந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் ஜிவுஜிவுத்த முகத்தோடு காரில் ஏறினார் பார்த்தசாரதி.. அந்த ஜிவுஜிவுப்பை காய்ச்சலின் வேகம் என்று எண்ணி விட்ட வரதன்.. மனதுக்குள்..

‘ஐயோ பாவம்.. முதலாளியா இருந்தாலும்.. ஒரு காய்ச்சல் வந்தா உட்காந்து ஓய்வெடுக்க முடியலையே.. என்ன கொடுமை சார் இது..’ என்று பரிதாபப்பட்டுப் போனான்...

அதே ஜிவுஜிவுப்புடன் கம்பெனிக்குள் பிரவேசித்த பார்த்தசாரதி எதிர்படுபவர்களின் தலையசைவை கவனிக்காமல் அவர் அறையை நோக்கி வேகமாக நடந்தார்.. சுழல் நாற்காலியில் அமர்ந்த பின்னாலும் அவர் கோபம் தீரவில்லை.. அன்றைய மெயில்களைக் கவனிக்க கம்யூட்டரை உயிர்ப்பித்த போது மேஜை மேலிருந்த இன்டர்காம் அலறியது.. கோபத்துடன் பட்டனை அழுத்தி...

“வாட்...?” என்று உறுமினார்...

“சர்.. மிஸ்டர் தீனதயாளன்... உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்...” அவருடைய செகரட்டரி லிஸி அறிவித்தாள்..

பார்த்தசாரதி தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.. தீனதயாளனை எப்படி அவர் சந்திப்பார்...? என்ன சமாதானம் சொல்லுவார்...?

# 170

*நெஞ்சகத்தில் நிம்மதியே...*
*நிறைந்துவிட ஆசைகொண்டேன்...*

இப்போது அவர் என்னசெய்ய வேண்டும்..? தீனதயாளனை சந்திக்க முடியாது என்று அவரால் கூற முடியுமா..? வந்திருப்பவரை அவர் சந்தித்துத்தானே ஆக வேண்டும்..?

“வரச்சொல்..” உத்தரவிட்டவர் முகத்தை துடைத்துக் கொண்டார்...

அந்த ஏஸி அறையில் அவர் முகத்தில் வியர்வை பெருகியது.. தீனதயாளனை நிமிர்வாக எதிர்கொள்ள முடியாத சங்கடத்தில் அவர் தவித்தார்.. தீனதயாளன் உள்ளே வந்தார்.. எழுந்துநின்று கை நீட்டிய பார்த்தசாரதியின் கை பிடித்துக் குலுக்காமல் மௌனமாக அவரெதிரே அமர்ந்தார்..

குலுக்கப்படாத நீட்டிய கையை மடக்கிய போது பார்த்தசாரதி உதட்டைக் கடித்துக் கொண்டார்..

எதனால் இந்தப் புறக்கணிப்பு என்று அவர் மனம் கோபப்பட்டது..

'அர்ஜீன் மட்டும் இந்த சம்பந்தத்துக்கு ஓகே சொல்லியிருந்தா..?' அவர் மனம் கேள்விகேட்டது..

இப்படி நடந்திருக்காது.. தீனதயாளன் காட்டிக் கொண்டிருந்த மரியாதையை இன்னமும் அதிகப்படுத்தியிருப்பார்.. இப்படிப் புறக்கணித்திருக்க மாட்டார்...

பார்த்தசாரதியின் வியர்வை அதிகமானது... தீனதயாளனின் முன்னால் அதைத் துடைத்துக் கொள்ள அவரால் முடியவில்லை.. ஏஸி அறையில் இத்தனை வியர்வையா என்று அவர் கேட்பார்..

'பேசாம இதையே காரணமாச் சொல்லி... நெஞ்சுவலின்னு சரிஞ்சுரலாமா..?'

அவர் மனம் அவசரத் திட்டம் தீட்டியது.. அதை மிகச்சரியான திட்டமென்று அவர் அறிவு ஆமோதித்தது.. அதன்மூலம் அர்ஜீனை அவர் வசப்படுத்தலாம்.. புதிதாக உரிமைக் குரலை எழுப்பிக் கொண்டிருக்கும் சுந்தரியை மீண்டும் அடிமைத் தளைக்குள் இழுத்து மாட்டலாம்...

யார் கண்டது..? தகப்பனின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அர்ஜீன் தன் காதலைத் தியாக செய்யவும் முன்வரக் கூடும்.. அவர் நினைத்தபடி நேகாவுடன் அர்ஜீனின் திருமணம் நடந்தும் விடலாம்...

அந்தத் திட்டம் மனதில் வந்தவுடன் பார்த்தசாரதியின் முகம் மலர்ந்தது.. நினைத்ததை செயல்படுத்த முகத்தில் வலியின் வேதனையை கொண்டு வர முயன்றார் அவர்.. அதன் மூலம் தீனதயாளனின் கோபத்தையும் நிறுத்தி வைத்து விடலாமே.. அவரது அனுதாபத்தையும் பெற்று விடலாமே..

நடிகர் திலகமாக அவர் மேற்கொண்ட முயற்சிகளை தீனதயாளன் கண்டு கொள்வதாகவே இல்லை...

“லுக் மிஸ்டர் பார்த்தசாரதி..” என்று ஆரம்பித்தார்...

‘முதலில் என்னை லுக் விட்டுத் தொலைடா..’

பார்த்தசாரதி மனதுக்குள் திட்டித் தீர்த்தார்.. எத்தனை நேரம்தான் அவரும் வலி வந்ததைப் போல நடித்துக் கொண்டிருப்பார்..? முகத்தில் வலியின் சுருக்கங்களைக் கொண்டு வருவது அவ்வளவு எளிதா என்ன..? கொஞ்சமாவது அதைப் பற்றிய நினைவு தீனதயாளனுக்கு இருக்கிறதா..?

“ஐ ஆம் நாட் வெல் தீனதயாளன்..” வேறு வழியில்லாமல் தானாகவே முன்வந்து நோயைச் சொன்னார் பார்த்தசாரதி..

‘ஐயோ... என்ன ஆச்சு..’ என்ற பதட்ட வார்த்தைகளை அவர் எதிர்பார்த்து காத்திருக்க...

“வாட் ஃபார் இட்..? ஐ டோன்ட் கேர்..” என்ற வார்த்தைகளை கொஞ்சம் கூட இரக்கப்படாமல் சிநேகிதமில்லாத முகத்துடன் உதிர்த்தார் தீனதயாளன்..

‘அடப்பாவி...!’

போட்டிருந்த நோயாளி வேடத்தினாலும் யாதொரு பலனும் ஏற்படப் போவதில்லையென்பதில் இடிந்து போய் விட்டார் பார்த்தசாரதி...

“ஆக்சுவலா.. எனக்கு அர்ஜன்ட் வொர்க் இருந்தது.. அதனாலதான் கம்பெனிக்கு வந்தேன்.. சுந்தரிக்கு அனுப்பவே மனமில்லை.. நான் அவ சொன்னதைக் கேட்டிருக்கனும்.. இங்கே வந்த பின்னால்தான் நெஞ்சுவலி அதிகமாகியிருக்கு..”

தன் முயற்சியை கைவிடாமல் பார்த்தசாரதி பேசிக் கொண்டிருக்க..

“எனஃப்..” என்று முகம் சுளித்தார் தீனதயாளன்...

“உங்க நோயைப் பற்றி உங்க வீட்டுக்குச் சொல்லுங்க மிஸ்டர் பார்த்தசாரதி.. எனக்கு அது தெரிய வேண்டாம்.. நான் சொல்ல வந்ததைச் சொல்லிட்டு சீக்கிரமாவே கிளம்பி விடுவேன்.. நீங்க ஹாஸ்பிடலுக்குப் போனாலும் சரி.. இல்லை.. உங்க வீட்டுக்குப் போனாலும் சரி.. அது உங்க விருப்பம்...”

“ஆனாலும் தீனதயாளன் இந்த உடல் நிலையில் நீங்க பேசவந்ததை என்னால் எப்படிக் கவனிக்க முடியும்..?”

“எல்லாம் முடியும்.. இவ்வளவு நேரமா எப்படி உங்களால் கோர்வையாய் பேச முடிந்ததோ.. அப்படி நான் பேசறதையும் உங்களால் கவனிக்க முடியும்...”

“நான் சொல்ல நினைக்கிறதே வேறு தயாளன்.. நாம் இன்னொரு நாள் ஃப்ரீயாய் உட்கார்ந்து பேசலாமே...”

“இனியொரு முறை உங்களைச் சந்தித்து உட்கார்ந்து பேசக் கூடாதுங்கிற முடிவோடுதான் நான் வந்திருக்கிறேன் பார்த்தசாரதி.. உங்களைச் சந்திக்கன்னு உங்க இடத்துக்கு நான் வருகிறது இதுதான் கடைசி முறையாய் இருக்கும்...”

“தயாளன்..?!”

“யெஸ் மிஸ்டர் பார்த்தசாரதி.. உங்க சன் பெரிய பிஸிசென்ஸ் மேக்னெட்டா இருக்கலாம்...

ஸ்டார் இமேஜோட இருக்கலாம்.. அவரை மேரேஜ் பண்ணிக்கனும்னு என் டாட்டர் கனவு காணலாம்.. இதற்காகவெல்லாம் என் சுயமரியாதையை நான் விட்டுக் கொடுக்க முடியாது...”

“நடந்ததை சரி பண்ணப் பார்க்கலாம் தயாளன்..”

“எதைச் சரி பண்ண முடியும் பார்த்தசாரதி..? உங்க மகன் பேசின ஒவ்வொரு பேச்சும் என் மனதில ரணமா இன்னும் இருக்கு.. இனி அவரைப் பார்க்கிற ஒவ்வொரு முறையும் அவர் என்னையும் நேகாவையும் பேசின பேச்சுக்கள் தான் மனதுக்குள் எதிரொலித்துக்கிட்டு இருக்கும்.. அந்த ரணத்தோடு அவரை ஃபேஸ் பண்ண என்னால் முடியாது.. ஸோ.. நாம இந்த மேரேஜ் புராபொசலை முறித்துக்கலாம்..”

தீனதயாளன் இறுகின முகத்துடன் உறுதியான குரலில் சொல்லி விட்டார்.. பார்த்தசாரதி அதிர்ந்தார்...

“அவசரப் படாதீங்க தயாளன்... நேகாவுக்கு அர்ஜீனைப் பிடித்திருக்குன்னு நீங்கதானே சொன்னீங்க..?”

“சொன்னேன்தான்.. அது உங்களுக்கு மட்டும் தான் தெரியும்.. பட்.. அர்ஜீனுக்கு நேகாவைப் பிடிக்கலைங்கிறது இந்த ஊருக்கே.. ஏன்.. நேற்றுநைட் பார்ட்டிக்கு வந்திருந்த

இன்டர்நேஷனல் பிஸினெஸ்மேன்ஸ் மூலமா இந்த உலகத்துக்கே தெரிந்திருச்சே.. இனியும் உங்க மகனுக்கு என் டாட்டரை மேரேஜ் பண்ணிக் கொடுக்கனும்னு நான் பேசினா.. என் நிழல் கூட என்னை மதிக்காது...”

“கடுமையான வார்த்தைகளைப் பேசறிங்க தயாளன்...”

“இதைவிடக் கடுமையான வார்த்தைகளை உங்க சன் என் டாட்டரைப் பார்த்தும்.. என்னைப் பார்த்தும் பேசினார்.. பார்த்தசாரதி...”

“நான் அவனைக் கண்டித்தேன் தயாளன்...”

“குட் ஜோக்.. உங்களால் அவரைக் கண்டிக்க முடியாதுன்னு எனக்கு நல்லாவே தெரியும் பார்த்தசாரதி..”

“எனக்கு உடம்பு சரியில்லைன்னு நான் ஹாஸ்பிடலில் அட்மிட் ஆனா அவன் இளகிருவான் தயாளன்.. டாக்டரை விட்டு எனக்கு அதிர்ச்சி தருகிறபடியான செய்திகளை அவாய்டு பண்ணனும்னு சொல்ல வைத்திரலாம்.. நோ அதர்வேன்னு அர்ஜீன் நேகாவை மேரேஜ் பண்ணிக்க சம்மதிச்சுருவான்...”

எங்கே தீனதயாளன் எழுந்து போய் விடுவாரோ என்ற பதைப்பில் பார்த்தசாரதி தன் திட்டத்தை கொட்டிக் கவிழ்க்க.. தீனதயாளன் எரிச்சலுடன் அவரைப் பார்த்தார்..

"நிறைய சினிமாப் பார்ப்பீங்களோ..?"

"தயாளன்.."

"நோ அதர்வேன்னு மேரேஜ் பண்ணிக்கிற அளவுக்கா நேகா தாழ்ந்து போயிட்டா..?"

"அப்படியில்லை தயாளன்...."

"இப்படித்தானே திட்டம் போட்டு மதுரையில் ஒரு பெண் மேல பொய்ப் பழியை சுமத்தினீங்க..? அதுக்கு என் டாட்டரையும் பகடைக்காயா ஆக்கிட்டிங்களே பார்த்தசாரதி..."

"தயாளன்.."

பார்த்தசாரதி வாயடைத்துப் போனார்.. தீனதயாளன் இப்படியொரு கேள்வியைக் கேட்பார்.. நடந்த விவரத்தை நுணுக்கமாக புரிந்து கொள்வார் என்று அவர் எதிர்பார்த்திருக்கவில்லை...

"நேகாவோட குணத்தை அனலைஸ் பண்ணி வைத்திருக்கீங்க பார்த்தசாரதி.. அர்ஜீன்மேல அவளுக்கு இருக்கிற ஈர்ப்பைப் பத்தி தெரிந்து வைத்திருக்கீங்க.. அர்ஜீனை தக்க வைத்துக் கொள்ள அவள் ஏதாவது ஒரு குறுக்கு வழியைக் கண்டு பிடித்துருவான்னு

உங்களுக்கு நல்லாவே தெரியும்.. அதுக்காகத்தானே அவளை மதுரைக்கு வர வைத்தீங்க..?"

"இல்லையில்லை.. அவ மதுரையை சுற்றிப் பார்க்கட்டும்ன்னுதான் வரச்சொன்னேன்.."

"ஒரு மாதமாவா சுற்றிப் பார்த்தா..? உங்க வொய்பும் மதுரைக்கு வரவில்லை.. நீங்க மட்டும் அங்கே இருந்துக்கிட்டு நேகாவை வர வைத்திருக்கீங்களே.. அவளுக்கு ஒரு பெண் துணை இருக்கனும்னு உங்களுக்குத் தோணலைல்ல...?"

இந்தக் காலங்கடந்த விசாரணை எதற்காக என்று எரிச்சல் பட்டார் பார்த்தசாரதி.. இதையெல்லாம் அவர் மகள் மதுரைக்கு கிளம்பி வந்தபோதே தீனதயாளன் கேட்டிருக்க வேண்டாமா என்ற நினைவு அவருக்குள் ஓடியது..

"நேகா என் மகளைப் போல தீனதயாளன்.. ஆனந்திவேறு.. நேகாவேறுன்னு நான் நினைத்த தேயில்லை.. ஆனந்தி மதுரைக்கு வந்தா என்ன பாதுகாப்பை ஏற்பாடு பண்ணுவேனோ.. அதே பாதுகாப்பை நேகா வந்தப்ப நான் செய்து கொடுத்தேன்.. தனியான கெஸ்ட் ஹவுஸ்.. துணைக்கு அந்த வீட்டோடு இருந்த வேலைக்காரி.. செக்யூரிட்டின்னு எதிலயும் நான் குறை

வைக்கலை.. பார்த்துப் பார்த்துக் கவனித்துக்கிட்டேன்..” உண்மையாக சொன்னார் பார்த்தசாரதி..

அதை உணர்ந்தவராய் ஓர்நொடி மௌனம் சாதித்தார் தீனதயாளன்.. பின்பு ஒரு பெருமூச்சுடன் அவரை நிமிர்ந்து பார்த்தார்...

“என்ன செய்து என்ன பண்ண பார்த்தசாரதி.. உங்க வீட்டுப் பெண்ணைப் போல நீங்க பார்த்துக்கிட்டிங்க தான்.. அதில ஒரு குறையுமில்லதான்.. ஆனா ஊர் என்ன சொல்லும்..? நேற்று உங்க சன் என்ன சொன்னார்..?”

“அவன் கோபத்தில பேசறான் தயாளன்..”

“எதுக்காக அந்த கோபம் வந்தது பார்த்தசாரதி..? அவரோட கடையில் வேலை பார்க்கிற பெண்மீது நேகா எதற்காக திருட்டுப் பழியை போட்டா..? நீங்க எதுக்காக அதுக்கு உடந்தையா இருந்தீங்க..?”

“அந்தப் பெண் உண்மையிலேயே பணத்தை மறைத்துவைத்து விட்டாள் தயாளன்.. நேகாமேல் குற்றமில்லை...”

இதைக்கேட்ட தீனதயாளன் கசப்புடன் சிரித்தார்.. அவர் சிரிப்பில் வேதனை இருந்தது...

"என் மகளை எனக்குத் தெரியும் தயாளன்.. நல்லாவே தெரியும்.. அவ நினைத்தது நடக்கனும்னா எந்த எல்லைக் கோடையும் அவ தாண்டுவா.. இதைத் தெரிந்துக்கிட்டுத் தானே உங்க மகனின் காதலியை விரட்டியடிக்க.. இவள்தான் சரியான ஆள்ன்னு நேகாவை மதுரைக்கு வரவைத்தீங்க..?"

"தயாளன்..."

"நீங்களும் நேகாவும் ஒரே கேட்டகிரிதான் பார்த்தசாரதி.. அதனாலதான் அவ உங்களுக்கு மருமகளாய் வரனும்ன்னு ஆசைப்படறிங்களோ என்னவோ.. நேற்று நைட் அர்ஜீன் நேகாமேல குற்றம் சொன்னபோது அவள் கண்களைப் பார்த்தேன் பார்த்தசாரதி.. என்னை நேர் கொண்ட பார்வை பார்க்க முடியாம அவ வேறுபக்கமா முகத்தைத் திருப்பிக்கிட்டா.. அப்பவே எனக்கு தெரிஞ்சு போச்சு.. அதுக்கப்புறமா நான் பேசினதெல்லாம் என் மகளை விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னு நான் பேசின பேச்சுக்கள்தான்.."

தீனதயாளன் பேசப்பேச.. பார்த்தசாரதி முகம் மாறாமல் இருக்கப் போராடினார்..

# 171

## ஒடுகின்ற நதி நீரைப்போல – உனைத் தேடிவர ஆசைகொண்டேன்...

“நேகா மற்றவங்களிடம் தைரியமா பொய் சொல்லுவா... என்னிடம் சொல்ல மாட்டா... அவளால அது முடியாது.. அப்படிச் சொல்ல வேண்டி வந்தா என் முகத்தை அவ பார்க்க மாட்டா...”

தீனதயாளன் கைவிரல்களை கோர்த்தபடி யோசனையுடன் பேசினார்.. அவரது அறிவார்ந்த கண்டு கொள்ளலுக்கு முன்னால் என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்துப் போனார் பார்த்தசாரதி..

“இது வரைக்கும் நேகா ஆசைப்பட்ட எல்லாத்தையும் அவளுக்கு கொடுத்துட்டேன் பார்த்தசாரதி.. உங்க மகனைத்தான் கொடுக்க முடியலை.. ஏன்னா.. நான் விலைக்கு வாங்க முடியாத உயரத்தில் அவரிருக்கார்...”

பார்த்தசாரதிக்கு என்னவோ போல இருந்தது.. அர்ஜீனை அவர் மகனாக நினைக்கவில்லை.. உடைமைப்

பொருளாக நினைக்கிறார்.. அவனை விலை பேசி விற்கப் பார்க்கிறார் என்ற அர்ஜீனின் குற்றச்சாட்டை தீனதயாளனும் உறுதி படுத்துகிறாரே...

“இனி அவரே மனமிரங்கி நேகாவை மேரேஜ் பண்ணிக்க முன்வந்தாலும்.. என்னால் அதுக்கு சம்மதிக்க முடியுமா..? வாழ்நாள் முழுவதும் அவர் என்னையும்.. நேகாவையும் மதிக்காம பேசின பேச்சுக்கள் நினைவில நின்னு துரத்தாதா..? அதை எத்தனை பேர் கேட்டாங்க.. அவங்க அதையெல்லாம் மறப்பாங்களா..? என்னைக் கேள்வி கேட்டு ஒருவழி பண்ணிவிட மாட்டாங்களா..?”

“நீங்க எதையெதையோ நினைத்து மனதை உழப்பிக்கறிங்க.. கொஞ்ச நாளைக்கு இந்த விவரத்தை ஆறப் போடுவோம்.. திரும்பவும் முதலில் இருந்து ஆரம்பிப்போம்.. என்ன சொல்கிறிங்க தயாளன்..?”

“முடியாதுன்னு சொல்றேன்.. இனிமேல் அர்ஜீனின் முகத்தைப் பார்க்கும் போதேல்லாம் எனக்கு நேற்று நடந்த பார்ட்டிதான் நினைவுக்கு வரும்.. அதில் அவர் பேசின பேச்சுக்கள்தான் நினைவுக்கு வரும்.. அதை மறந்து உங்க மகனிடம் மாமனார் மருமகன்ங்கிற உறவைக் கொண்டாட என்னால முடியாது.. எனக்கிருக்கிறது ஒரே மகள்.. அவளோட ஹஸ்பெண்ட்தான் எனக்கு மகனாவும்

இருக்கனும்.. அர்ஜீனால அப்படியிருக்க முடியாதுன்னு தெரிந்து போச்சு.. ஸோ.. நாங்க நேகாவுக்கு வேற இடம் பார்க்கப் போகிறோம்..”

பார்த்தசாரதி பதறிப் போனார்.. நேற்றுவரை நேகாதான் அவர் வீட்டுக்கு மருமகளாக வரப் போகிறாள் என்று அவர் நினைத்து வைத்திருந்த நினைவெல்லாம் கனவா..?

“அவசரப் படாதீங்க தயாளன்.. நேகா மனதில அர்ஜீன் மேல ஆசையிருக்கு.. அதை நினைத்துப் பாருங்க..”

“ஊஹீம்.. நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டு இருக்கீங்க.. நேகா மனதில அர்ஜீன் மேல ஆசையில்லை.. அவரோட ஸ்டார் இமேஜ்மேலதான் ஆசையிருக்கு.. உங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்லட்டுமா மிஸ்டர் பார்த்தசாரதி.. அர்ஜீனிடம் மட்டும் இந்த ஸ்டார் இமேஜ் இல்லாமல் இருந்திருந்தா.. நேகாவுக்கு அவர் மேல் ஆசையே வந்திருக்காது...”

தீனதயாளன் எழுந்து கொண்டார்.. போகிறாரே என்ற பரிதவிப்புடன் பார்த்தசாரதியும் எழுந்து நின்றார்.. போவது தீனதயாளன் மட்டுமா..? அவருடைய நேகா குருப் ஆஃப் கம்பெனிஸீம் சேர்ந்தல்லவா போகிறது..?

‘எனக்கு மகனா பிறந்துட்டு.. இப்படிப் பிழைக்கத் தெரியாம இருப்பானா..?’ மனதுக்குள் அர்ஜீனை திட்டித் தீர்த்தார் அவர்..

‘லட்டுப் போல கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு வாரிசா ஒரு பெண் கிடைத்தா அதை அறிவிருக்கிறவன் கை நழுவ விடுவானா..? அந்தப் பெண்ணின் மனதிலிருக்கிற ஆசையைப் புரிந்து வைத்துக்கிட்டு அவளோட புராப்பர்ட்டீஸை இவன் பெயருக்கு மாற்றில்ல காட்டுவான்..? நான் அப்படித்தானே செய்தேன்..? சுந்தரியோட சொத்தும்.. பணமும் இல்லாமலிருந்தா என்னால நியு எக்ஸ்போர்ட் கம்பெனியைப் பற்றி நினைத்துக் கூடப் பார்த்திருக்க முடியுமா..?’

அவர் மனம் அங்கலாய்த்தது.. பேசாமல் தீனதயாளனின் கைகளைப் பிடித்து இழுத்து உட்கார வைக்கலாமா என்ற அவசர ஆலோசனையில் அவர் மனம் இறங்கியது...

அதை அறிந்தவரைப் போல தள்ளியே நின்ற தீனதயாளன்..

“வெல் மிஸ்டர் பார்த்தசாரதி.. எது எப்படியோ.. உங்க சன் ஒரு நல்ல வேலையைச் செய்திருக்கார்.. இந்த கேமை

ஒரு முடிவுக்கு கொண்டு வந்திருக்கார்.. அதற்காக என் நன்றியைச் சொன்னேன்னு அவரிடம் சொல்லுங்க...”

‘இது வேறா..? அடப் போங்கப்பா...’

“அர்ஜீன் உயரத்தில் இருக்கிறவர்தான்.. அவருக்கு அடுத்த நிலையில் நிறையப்பேர் இருக்காங்க.. அவங்க நேகாவை மேரேஜ் பண்ணிக்க போட்டி போடறாங்க.. அவங்களில் ஒருத்தரை செலக்ட் பண்ணி கூடிய சீக்கிரத்தில் நேகாவுடைய மேரேஜை நடத்தி முடிச்சிடுவேன்.. இன்விடேசன் கொடுக்கிறேன்.. மறக்காம வந்திருங்க..”

‘அதுக்குத்தானே காத்திருக்கேன்.. ம்ஹீம்...’

“பை...”

தீனதயாளன் போயே போய் விட்டார்.. பார்த்தசாரதி உக்கிர சாரதியாகி அன்று முழுவதும் அலுவலக ஊழியர்களை வறுத்தெடுத்தார்.. என்னதான் விவரமென்று மண்டை காய்ந்து போன ஊழியர்கள் வரதனுக்கு டிபன் வாங்கிக் கொடுத்து விவரத்தை கறக்க முயன்றார்கள்.. அவனும் அவர்கள் வாங்கிக் கொடுத்த டிபன் வகையறாக்களை மொக்கோ.. மொக்கென்று மொக்கி விட்டு முதலாளிக்கு உடல்நிலை சரியில்லையென்ற

விவரத்தை சொல்லி வைத்தான்.. அவருக்கு உடல்நிலை சரியில்லையென்றால் அவர் மருத்துவ மனைக்கு போக வேண்டும்.. அதை விட்டுவிட்டு.. அவரிடம் வேலை பார்ப்பவர்களை மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டுமா என்ற கேள்வியை அவர்கள் கேட்டு வைக்க.. அதுதானே என்று இவனும் கேட்டு வைத்தான்...

எது எப்படியோ.. அன்று முழுவதும் பார்த்தசாரதியின் உபயத்தால் அவனுக்கு.. வாயாறவும்.. வயிறாரவும் உணவு பதார்த்தங்கள் கிடைத்துக் கொண்டேயிருந்தன...

மாலையில் வீடு திரும்பியதும் அவர் மனைவியிடம் கேட்ட முதல் கேள்வியே அர்ஜீன் வந்து விட்டானா என்பதுதான்...

“இவ்வளவு சீக்கிரத்தில என்றைக்கு அவன் வீடு திரும்பியிருக்கான்..?” என்று கேட்டு வைத்தாள் சுந்தரி...

“அப்ப உன் மகனுக்குத்தான் வேலையிருக்கு.. நான் வேலை வெட்டியில்லாம கம்பெனியில ஈயோட்டிட்டு வந்திருக்கேன்னு சொல்றியா..?”

“நீங்க ஈயை ஓட்டினீங்களோ.. இல்லை குருவியை ஓட்டினீங்களோ.. எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது.. அர்ஜீன் வந்தாச்சான்னு கேட்டிங்க.. நான்

அதுக்கான பதிலை மட்டும்தான் சொன்னேன்.. காபி குடிக்கறிங்களா..?"

"கேட்டுட்டுத்தான் குடுப்பியா..? வேணாம்னா விட்டுருவியா..?"

"அடடா.. இதென்னங்க வம்பாப் போச்சு.. யார் மேலேயோ இருக்கிற காண்டைக் கொண்டு வந்து என் தலைமேல கொட்டறிங்க..."

"யார்மேலேயோ இருக்கிற காண்டில்லைடி.. உன் மகன் மேல இருக்கிற காண்டு..."

பார்த்தசாரதியின் கோபமான பதிலில் அவர் முகத்தை உற்றுப் பார்த்த சுந்தரி...

"வேணாம்ங்க.." என்று மட்டும் சொன்னாள்...

அவள் முகம் பாறையைப் போல கடினமாகி விட்டிருந்தது.. அதற்கெல்லாம் அஞ்சுகிறவரா திருவாளர் பார்த்தசாரதி..? அவர் உன்னையும் கண்டிருக்கேன்.. உன் கோபத்தையும் கண்டிருக்கேன் என்ற ரீதியில் முகத்தை வைத்துக் கொண்டு சுந்தரியை முறைத்தார்...

"எதுடி வேண்டாம்..? நான் உங்களுக்கெல்லாம் வேண்டாதவனா ஆகிட்டேனா..? அந்த அளவுக்கு வந்துருச்சா.."

“நீங்க சண்டை போடற மூடில இருக்கீங்க அதுக்கான ஆள் நானில்லை...”

சுந்தரி உள்ளே போகத்திரும்பினாள்.. பார்த்தசாரதி அவள் தோளைப் பிடித்து நிறுத்தினார்.. அவர் முகத்தில் பொங்கி வழிந்த ரௌத்ரத்தைக் கண்டு அவளுக்கு கொஞ்சம்கூட அச்சம் ஏற்படவில்லை.. அமைதியாக.. இமைக்காமல் அவர் முகம் பார்த்தாள்...

“இது ஹால்.. வீடு பூராவும் வேலையாள்க இருக்கிறாங்க.. நாம எதைப் பேசினாலும் அது அவங்க காதில் விழுந்து வைக்கும்.. இதை யோசிக்காம காலையிலே ஹாலில் உட்கார்ந்து நீங்க நடத்தி முடித்த பட்டி மன்றம் போதும்.. ரூமுக்கு போங்க...”

“எனக்கே நீ அட்வைஸ் பண்றயா..?”

“ஏன் பண்ணக் கூடாதா..?”

“பண்ணுவடி.. நீ பண்ணுவ.. உனக்கு உன் புருசன் முக்கியமில்ல.. மகனோட சப்போர்ட் இருந்தாப் போதும்ன்னு நினைக்கிற.. அதனால என்னை உட்காரவைத்து அட்வைஸ் பண்ணுவ...”

“எனக்கு யாரோட சப்போர்ட்டும் தேவையில்லை..”

“ஓ.. நீ மகாராணியாச்சே.. நான் அதை மறந்துட்டேனே.. உனக்கு என் சப்போர்ட் தேவைப் படாதில்ல..?”

சுந்தரி அவள் தோளின் மீது படிந்திருந்த அவரின் கைகளை தள்ளிவிட்டாள்.. முகத்தில் எந்தவித உணர்வுகளையும் பிரதிபலிக்காமல் அதே கடினமான தன்மையுடன் அவர் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தாள்...

“ஆமாம்.. எனக்கு யாரோட சப்போர்ட்டும் தேவைப்படாது.. என்னோட எல்லாச் சொத்தையும் உங்க பேருக்கு மாத்திக் கொடுத்துட்டேன்.. ஆனா காஞ்சிபுரத்தில இருக்கிற என் பிறந்த வீட்டையும்.. ஷாப்பிங் காம்ளெக்சையும் உங்க பெயருக்கு மாற்றிக் கொடுக்கலை.. நினைவில வைத்துக்கங்க..”

“அதைத்தான் உன்னோட அப்பா அம்மாவுக்குன்னு சொல்லிட்டயேடி.. அதை அவங்க எழுதி கொடுக்க மாட்டேன்னுட்டாங்களே..”

“அதானே.. அதை நீங்க மறப்பீங்களா..? யாரு நீங்க.. ம்ஹீம்.. உங்ககிட்ட போய் சொத்து விவரத்தை நினைவு படுத்தறேனே.. இன்னைக்கு கேட்டுக்கங்க.. அந்த வீட்டையும்.. ஹாப்பிங் காம்ளெக்ஸையும் என் பெயருக்கு அப்பா மாற்றி எழுதி ரொம்ப வருசமாகுது...”

“என்னது..?!” அதிர்ச்சியுடன் கேட்டார் பார்த்தசாதி..

“எதுக்கு இந்த ‘என்னது..?’ என்னவோ உங்க அப்பா வீட்டுச்சொத்தை என் பெயருக்கு எழுதி வாங்கிக் கிட்டதைப் போலல்ல இத்தனை ரியாக்சன் காட்டறிங்க...”

“என்ன சுந்தரி.. வாய் நீளுது...”

“பின்னே..? எப்பவுமே நான் அடங்கியே இருப்பேன்னு கனவு கண்டீங்களா..? ஒரு பெண்ணுக்கு புருசனும்.. பிள்ளைகளும்தான் சொத்து.. அதனாலதான் நீங்க கேட்டதும் நான் என் பெயரில் இருந்த அத்தனை சொத்தையும் உங்க பெயருக்கு மாற்றிக் கொடுத்தேன்..”

“அப்படி நினைக்கிறவ இந்த இரண்டையும் எப்படி விட்டு வைத்தே..?” கொதிப்பாக கேட்டார் பார்த்தசாரதி..

“என் அப்பா அம்மாவின் மரியாதையை விட்டு வைக்கனும்னுதான்..” அமைதியாகப் பதில் சொன்னாள் சுந்தரி...

“வாட்..?”

“யெஸ்.. மகள் பெயரில் இருக்கிற சொத்துக்களை அவங்க அனுபவிக்கலாம்.. மருமகன் பெயரில் இருக்கிற சொத்தை அவங்க அனுபவிக்க கூடாது.. அனுபவிக்கவும் மாட்டாங்க...”

"என்ன சுந்தரி.. இப்படிப் பேசற..? நானென்ன அவங்களிடம் மருமகனைப் போலவா நடந்துக்கிட்டேன்..? மகனைப் போலயில்ல நடந்துக்கிட்டேன்..."

"ஆமாமாம்.. எந்த வீட்டிலாவது மாமனர் சொத்துக்கு மருமகன் வாரிசாவாரா..? அப்பா சொத்துக்குத்தானே மகன் வாரிசாவார்.. அந்த வகையில் நீங்க அவங்களுக்கு மகன்தான்.. மருமகன்னு யாரும் சொல்லவே முடியாது.."

"சொல்லிக் காட்டறியா சுந்தரி..?"

"ஊஹீம்.. சொல்லிக் காட்டறதா இருந்தா இத்தனை வருசத்திலே எத்தனையோ முறை அதை செய்திருப்பேன்.. இந்த சுந்தரி சொல்லால் அடிக்கிறவ இல்ல... அன்பால் வசப்படுத்தறவ.. அந்த அன்பில என் பிள்ளைக வசமாகிட்டாங்க.. நீங்கதான் வசப்படலை.. எனக்குன்னு என் பிறந்தவீடு எப்போதும் காத்திருக்கு.. உங்க தயவிலேயோ.. இல்லை உங்க மகனின் தயவிலேயோ நான் வாழனும்ங்கிற அவசியம் எனக்கில்லை..."

பொங்கி வரும் கங்கை நதியை சங்குக்குள்ளே யாராலும் அடக்கி வைக்க முடியாது.. அதை அன்று பார்த்தசாரதிக்கு உணர்த்திவிட்டாள் சுந்தரி..

# 172

*பெண் மனதின் உணர்வுகளை...*
*நீ புரிந்து கொள்ள ஆசைகொண்டேன்...*

**பெ**ண் அனைத்தையும் அறிந்தவள்.. இருந்தும் எதையும் அறியாத அறியாமையின் நிழலோடு அவள் வாழக் கற்றுக் கொண்டிருக்கிறாள்...

அவளுக்குத் தெரியும்.. அவளுடைய சுதந்திரம் அவளுடைய பிறப்புரிமை என்று...

இருந்தும் அவள் அவளுடைய சுதந்திரத்தை பிறர் கைகளில் இருந்து யாசகமாத்தான் பெற்றாள்... அதன் மூலம் குடும்பத்தின் அமைதியை அவள் நிலை நாட்டினாள்..

சுந்தரியும் அப்படித்தான்.. அவளுக்குத் தெரியாத எதுவுமில்லை.. பார்த்தசாரதியின் மனப் போக்கைப் பற்றி அவள் நன்கு அறிவாள்.. அது குறித்த அவளின் பெற்றோரின் கவலைகளுக்கு..

“சொத்து யார் பேரில் இருந்தால் என்ன..? அவர் முன்னேறி யாருக்கு சம்பாதித்துக் கொடுக்கப் போகிறார்..? எனக்கும் எங்க பிள்ளைகளுக்கும்தானே கொடுக்கப் போகிறார்..?” என்று கேள்வி கேட்பாள்..

“இருக்கட்டும் சுந்தரி.. உனக்குன்னு ஒரு மதிப்பு வேண்டாமா..?”

“அது எதுக்குப்பா..? குடும்பம் அமைதியா இருந்தாப் போதும்.. வேறு எதுவும் எனக்கு வேணாம்..”

சுந்தரியின் இந்த தியாகத்தையும்.. பெருந்தன்மை-யையும்.. பார்த்தசாரதி என்றுமே உணரமாட்டார்... பொருட் படுத்த மாட்டார் என்பதை அவளின் பெற்றோர் மிக நன்றாக கணித்து வைத்திருந்தார்கள்.. அதனால் தான் பூர்விக வீட்டையும்.. சுந்தரியின் தந்தை முதன் முதலாக ஆரம்பித்த ஷாப்பிங் காம்ளெக்சையும் அவள் பெயருக்கு மாற்றி எழுதி வைத்த போது.. அவள் காலம் முடிகிற வரைக்கும் அவற்றை வேறு யார் பெயருக்கும் மாற்றி எழுதக் கூடாது என்று அவளிடம் சத்தியம் வாங்கியிருந்தார்கள்..

அன்று அதை சுந்தரி சொன்னபோது பார்த்தசாரதியின் முகத்தில் ஈயாடவில்லை...

“என்னைப் பெத்தவங்க வார்த்தை எனக்கு முக்கியம்.. அவங்களுக்கு நான் சத்தியம் பண்ணிக் கொடுத்துட்டேன்.. அவங்க மன நிம்மதிக்காகத்தான் அன்னைக்கு அதைச் செய்தேன்.. இப்ப நினைச்சுப் பார்க்கும் போது அவங்க ‘தீர்க்கதரிசி..’ன்னு எனக்குத் தோணுது.. என்னைக்காவது ஒருநாள் அவங்க மகள் மதிப்பைத்தேடி வீட்டை விட்டு வெளியேறுவான்னு அவங்க தெரிஞ்சு வைச்சிருக்கனும்.. அதனாலதான் அந்தச் சத்தியத்தை அவங்க என்னிடம் கேட்டு வாங்கிக்கிட்டாங்க... கொடுத்துப் பழக்கப் பட்டவள்ல.. அதான்.. நீங்க கேட்டதும் சொத்தைக் கொடுத்தேன்.. அவங்க கேட்டதும் சத்தியத்தைக் கொடுத்துட்டேன்...”

பார்த்தசாரதியின் ரௌத்ரம்.. ரௌத்ரமாக இருக்க.. அவர் புதிதாக தெரிய வந்திருக்கும் அந்த சொத்துக்களை மனைவியிடமிருந்து கைப்பற்றும் மார்க்கத்தைப் பற்றிய பலத்த யோசனையில் ஆழ்ந்தார்...

அவர் மனதுக்குள் புகுந்து அந்த யோசனையை படித்தவளாக சுந்தரி லேசான சிரிப்பு இழையோடப் பேசினாள்...

“நான் சத்தியத்துக்கு கட்டுப்பட்டவ.. உங்களுக்கு இதைப்பற்றி நல்லாவே தெரியும்.. என் அப்பா அம்மா

ஆசைப்படி.. என் காலம் வரைக்கும் அந்தச் சொத்துக்களை யார் பேருக்கும் நான் மாற்றிக் கொடுக்க மாட்டேன்.. என் காலத்துக்குப் பின்னாலே அதை சமமா பிரித்து அர்ஜீனுக்கும்.. ஆனந்திக்கும் கொடுக்கனும்னு உயில் எழுதி வைச்சிருக்கேன்.. நீங்க அடிக்கடி சொல்வீங்கள்ல.. நீங்க சம்பாதிச்சு வைத்திருக்கிற சொத்தெல்லாம் நீங்க கொடுத்து உங்க பிள்ளைகளுக்குப் போய் சேரப் போகுதுன்னு.. நான் கொடுக்க ஏதாவது எனக்கு மிஞ்ச வேண்டாமா..?”

நெற்றியடியாய் இது போன்ற கேள்விகளைக் கேட்கவும் சுந்தரியால் முடியும் என்று அந்த நொடியில் அவள் நிருபித்தாள்.. பார்த்தசாரதிக்கு உண்மையிலேயே நோய் வந்து விடும்போல இருந்தது...

‘இவ என்ன இப்படியெல்லாம் ஆட்டம் காட்டறா..’

அவர் அயர்ந்து போய் நிற்கும் போதே அடுத்த குண்டைத் தூக்கிப் போட்டாள் சுந்தரி...

“பேசாம என் பெயரில இருக்கிற காஞ்சிபுரம் வீட்டுக்குப் போய் அக்கடான்னு என் அம்மா அப்பாவோட இருந்துடலாம்ன்னு இருக்கேன்.. சாப்பிடறதுக்கு ஷாப்பிங் காம்ளெக்ஸ் வருமானம் இருக்கு... கும்பிடறதுக்கு காமாட்சியம்மனும்... வரதராஜப் பெருமாளும் இருக்காங்க..

பஞ்ச பூதங்களில நிலத்துக்கான கடவுளா சிவபெருமான் காஞ்சியிலதான் குடியிருக்கார்.. என் மிச்ச காலத்துக்கு இது போதும்...”

“என்னவோ வாழ்ந்து முடிச்சிட்டதைப் போலவே பேசறியேடி...”

“போதும் சாமி.. வாழ்ந்த வரைக்கும் போதும்.. என்னால முடிஞ்சதை இந்தக் குடும்பத்துக்கு நான் செய்துட்டேன்.. என் மகளை வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கி.. கல்யாணமும் பண்ணிக் கொடுத்துட்டேன்.. என் மகனுக்கான வாழ்க்கையை அவன் பார்த்துக்குவான்.. அவன் சிங்கம்.. யாரோட குள்ளநரித்தனமும் அவன் வாழ்க்கையை கெடுத்து விட முடியாது...”

‘இவ குள்ள நரின்னு யாரைச் சொல்கிறா.. என்னையா..?’ அதற்கு விடைதெரியாமல் தலை வெடித்து விடும் போலத் தோன்ற பார்த்தசாரதி மனைவியை முறைத்தார்...

“இப்ப குள்ள நரின்னு யாரைடி சொல்ற...? என்னையா..?”

“சொன்னாலும் தப்பில்லை.. அந்த நேகாகூட கூட்டுச் சேர்ந்து அவ புத்தி உங்களுக்கும் தொற்றியிருக்கே...”

'அப்பாடி.. இவ குள்ள நரின்னு என்னைச் சொல்லலை.. நேகாவைச் சொல்லியிருக்கா...'

வான் கோழி மணலுக்குள் தலையை நுழைத்துக் கொண்டு தப்பித்து விட்டதாக நினைக்கும் நினைவை நினைத்து தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டார் பார்த்தசாரதி..

"எப்ப என் மகன் ஆசைப்படற பொண்ணுன்னு தெரிந்தும் அவ வீட்டுக்குப் பெண் கேட்டுப் போகாம அவ மேல திருட்டுப்பழி போட அந்த நேகாவுக்கு உடந்தையா இருந்தீங்களோ... அதுக்கப்புறமும் இந்த வீட்டில் கட்டாயம் நான் இருந்தே ஆகனுமா..?"

"ஏய்ய்.. என்னடி சொல்ற..? எதுக்கும்.. எதுக்கும் முடிச்சுப் போடற...?"

"ம்ப்ச்.. போதுங்க.. எனக்குத் தாங்கலை... பணத்தின் மேலயும் அந்தஸ்தின் மேலயும் ஆசை இருக்க வேண்டியதுதான்.. அது வெறியாய் மாறக் கூடாது... உங்க மனசில வெறி வந்துகுச்சு... அதனாலதான் மகன் வாழ்க்கை கெட்டாலும் பரவாயில்லைன்னு இப்படிப்பட்ட பாதகத்தை நீங்க செய்துட்டு வந்து நிற்கறிங்க... எப்ப இப்படிப்பட்ட பாதகத்தை ஒரு பெண்ணுக்கு நீங்க செய்யத் துணிஞ்சீங்களோ.. இதுக்கு மேலேயும் நான்

பொறுமை காத்தா என் மகன் காலாகாலத்துக்கும் என்னை மன்னிக்கவே மாட்டான்...”

காபி குடிக்கறிங்களா என்று கேட்டவள் அதைக் கொடுக்க வேண்டும் என்பதை மறந்து போனவளாக கோபத்துடன் போய்விட... ‘காபி போச்சே...’ என்று கவலைப்பட்டுப் போன பார்த்தசாரதி...

‘அவ குடிக்கறிங்களான்னு கேட்டப்பவே வாங்கிக் குடிச்சிருக்கனுமோ...’ என்ற அடுத்த யோசனையில் ஆழ்ந்தார்...

“இந்தாங்கய்யா...”

காபியின் நறுமணத்துடன் சரோஜாவின் குரலும் சேர்ந்து வர அவர் நிமிர்ந்து பார்த்தார்.. கையில் காபிக் கோப்பையுடன் அவள் நின்றிருந்தாள்...

‘அப்பாடி.. காபி வந்திருச்சு...’

காபி போகவில்லை என்ற சந்தோசத்துடன் அவசரமாக காபிக் கப்பை கைப் பற்றினார் அவர்..

“அம்மா கொடுத்து விட்டாளா...?”

என்னதான் கணவன் மீது கோவமிருந்தாலும் அவனுக்கு காபி கொடுக்க மறக்காத பத்தினித் தங்கமான மனைவியை நினைத்துப் பெருமைப் பட்டபடி கேட்டாள் பார்த்தசாரதி...

‘சும்மாவா.. பாரதி.. காணி நிலத்தோட கேணியும் தென்னை மரத்தையும் கேட்டு வாங்கிக்கிட்டு.. அங்கே கூடிக் குழாவிட ஒரு பத்தினிப் பெண்ணையும் சேர்த்துக் கேட்டான்..?’

அவர் மெச்சிக் கொண்டிருந்த போதே...

“இல்லீங்கய்யா.. நானாத்தான் கொண்டு வந்தேன்..” என்று அவரின் காணி நிலக் கனவைக் கலைத்தாள் சரோஜா..

“ஏன்...? அவ எங்கே போனா...?”

“தெரியலைங்கய்யா... தோட்டத்துப் பக்கமா போனாங்க... நான்தான் ஐயா சத்தம் போட்டுக்கிட்டு இருந்தாரே... தொண்டை வறண்டு போயிருக்குமேன்னு காபியை கலந்து கொண்டு வந்தேன்...”

சரோஜா சொன்ன விவரத்தில் அவருக்கு புரையேறிவிட்டது..

‘இவ சத்தத்தை மட்டும் கவனிச்சாளா.. அந்த சத்தத்தில் வந்த பேச்சையும் சேர்த்துக் கவனித்தாளா..?’

மனைவி சொன்னதைக் கேட்டுக் கொள்ளாமல் ஹாலில் நின்று வாய் வளர்த்த தன் மடத்தனத்தை நினைத்து நொந்து கொண்டார் பார்த்தசாரதி...

'இப்ப நடந்த சத்தத்தை மட்டும் இவ கவனிச்சாளா.. இல்லை.. காலையில நடந்த சத்தத்தையும் சேர்த்துக் கவனிச்சாளா...?'

சரோஜாவின் பார்வை அவள் அனைத்தையும் அறிந்தவள் என்பதைச் சொல்லாமல் சொல்லியதில் பார்த்தசாரதிக்கு காபி கசந்தது..

"இந்த கப் போதுங்களா.. இல்ல.. இன்னொரு கப் காப்பி கொண்டு வரட்டுங்களா..?" சரோஜா அனுதாபத்துடன் வினவினாள்...

"போதும்.. போதும்..." அவளது அனுதாபத்தை சகித்துக் கொள்ள முடியாமல் அவசரமாக அதை மறுத்தார் பார்த்தசாரதி...

'இவ எங்கே போனா...?'

சிந்தனையுடன் அவர் குளிக்கப் போனபோது அர்ஜீன் வீட்டுக்குத் திரும்பியிருந்தான்.. போர்டிகோவில் காரை நிறுத்தி விட்டு இறங்கியவன்.. தோட்டத்தில் தனியாக நடை பழகும் சுந்தரியைக் கண்டதும் புருவங்கள் முடிச்சிட அங்கே போனான்...

"அம்மா..."

மகனின் அழைப்பில் திரும்பிப் பார்த்த சுந்தரியின் முகம் சிவந்து கண்கள் லேசாக கலங்கியிருந்தன...

அது நாள் வரை தாயை அப்படிப்பட்ட மனநிலையுடன் பார்த்திராத அர்ஜீன் பதறிப் போனவனாக அவளருகில் சென்றான்..

“என்னாச்சும்மா...?”

“உனக்கு உன் அம்மா இருக்கிறா அர்ஜீன்.. அதை எதுக்கு மறந்து போனடா..?” சுந்தரி நழுதழுத்தாள்..

“அம்மா..” அர்ஜீனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. தாயின் மனத்துயரம் அவனை பாதித்தது..

“நீ ஒரு பெண் மேல ஆசைப் பட்டிருக்க.. அவளைக் காதலிச்சிருக்க.. இது உன் டாடிக்குத் தெரிஞ்சிருக்கு.. எனக்குத் தெரியலை.. ஏண்டா...?”

“அம்மா டாடிக்கு நான் சொல்லலை... அவர் எப்படியோ கண்டு பிடிச்சிருக்கார்...”

“என்னால அது முடியாது அர்ஜீன்.. அதனாலதானே என்னைச் சுத்தி எது நடக்குதுன்னு தெரியாம நான் இருட்டுக்குள்ள இருந்திருக்கேன்...?”

“ப்ளீஸ்ம்மா.. இப்படியெல்லாம் பேசாதீங்க... நான் அவமேல ஆசைப் பட்டேன்தான்... என் காதலைச் சொன்னேன்தான்.. ஆனா அவ உடனடியா என் காதலை ஏத்துக்கலைம்மா...”

“என்னது...?”

சுந்தரியால் அவள் காதுகளை நம்ப முடியவில்லை..

அர்ஜீனைப் போன்ற.. அழகான.. படித்த.. கோடிஸ்வர வாலிபன் காதலைச் சொல்லியும் அவள் உடனடியாக அவன் காதலை ஏற்றுக் கொள்ளவில்லையா...?

“ஏண்டா...?”

“அவ கட்டுப்பாடான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவம்மா.. படிப்பில இன்ட்ரெஸ்ட் ஜாஸ்தி.. பட்.. அதிகம் படிச்சா.. அதுக்கேத்ததைப் போல மாப்பிள்ளை தேடமுடியாதுன்னு அவ வீட்டில டிகிரிக்கு மேல அவளை படிக்க விடலைன்னா பார்த்துக்கங்க...”

“என்னது..?!”

அடுத்த என்னதுவை போட்டாள் சுந்தரி.. அவளுக்கு ஆச்சரியத்துக்கு மேல ஆச்சரியமாக இருந்தது...

# 173

*ஊர் பார்க்க உன்னுடனே..*
*உலா வரவே ஆசை கொண்டேன்..*

**சு**ந்தரியும் டிகிரி வரைதான் படித்திருந்தாள்... ஆனால் அவள் மேலே படிக்க ஆசைப்பட்டிருந்தால் அவள் வீட்டில் நிச்சயமாக அதை தடை செய்திருக்க மாட்டார்கள்.. அதற்குள் பார்த்தசாரதி அவளைப் பெண் கேட்டு வந்து விட.. இவளுக்கு அவரைப் பிடித்து விட்டது.. மனதில் கல்யாண ஆசை வந்து விட.. மேலே படிக்கும் ஆசை தானாக விடைபெற்றுப் போய் விட்டது.. அவளது படிப்பை அவள்தான் தீர்மானித்தாள்.. அவள் வீட்டில் தடை சொல்லவில்லை...

ஆனந்தியும் அப்படித்தான்... விசுவல் கம்யூனிகேசன் தான் பிடிக்கிறது என்று அதைப் படித்தாள்... சத்திய மூர்த்தியுடன் திருமணம் நிச்சயம் ஆனதும் படிப்பை மறந்து அவன் பின்னால் சென்று விட்டாள்... ஆனந்தி படிக்க ஆசைப்பட்டிருந்தால்... அவள் விரும்பும்

வரைப் படிக்க வைக்க பார்த்தசாரதி தயாராகத்தான் இருந்தார்..

இங்கே ஒரு பெண் படிக்க ஆசைப்பட்டும் அவளால் மேலே படிக்க முடியவில்லை... அவள் பெற்றோர் வீட்டில் வசதி வாய்ப்பு இருந்தும் பெண்பிள்ளை என்ற ஒரே காரணத்தினால் அவள் படிப்பை மறுத்திருக்கிறார்கள்...

“என்னடா அர்ஜீன் சொல்கிற... இப்படியும் இருப்பாங்களா...?”

“இவ வீட்டில் இருக்காங்களே... வேலைக்குப் போகவும் அவங்க பெர்மிசன் கொடுக்கலை.. இவளோட அண்ணன் தங்கை மேல பாசமா இருக்கிறவன்..”

“ஓ... அவளுக்கு அண்ணன் இருக்கானா..?”

“இருக்கிறான்.. நிறையப் படித்தவன்.. ஸ்டேட் கவர்ண்மென்டில பெரிய ஆபிசர்...”

“பரவாயில்லையே...”

“அவன்தான் தங்கைக்கு ஆதரவாப் பேசி... மேரேஜ் முடியற வரைக்கும் வேலைக்குப் போய் வரட்டும்ன்னு சொல்லி அவங்க குடும்பத்துக்கு தெரிஞ்சவங்க கடைன்னு நாம வாங்கியிருக்கிற கடைக்கு வேலைக்கு அனுப்பியிருக்கான்...”

“ஓ... இதில இத்தனை இருக்கா..? அவ அப்பா என்ன செய்கிறார்...?”

“அவரும் ஸ்டேட் கவர்ண்மென்ட்டில வொர்க் பண்றவர்தான்...”

“அம்மா..”

“ஹவுஸ் வொய்ப்.. பட்... அவளோட அண்ணனை மட்டும்தான் நான் பார்த்திருக்கேன்... அவ அம்மா அப்பாவை இது வரைக்கும் பார்த்ததில்லை...”

“என்னடா அர்ஜீன் இப்படிச் சொல்ற..? நீ வேஸ்டுடா.. அவனவன் காதலிக்கிற பெண்ணோட வம்சாவழி வரைபடத்தை கையில வைத்துக்கிட்டு அலைகிறான்க... நீ என்னடான்னா அவளைப் பெத்தவங்களைப் பற்றிக் கூடத் தெரியாம இருக்க.. எப்படிடா..? இத்தனை மாதங்களா மதுரையில உட்கார்ந்து என்னத்தைக் கண்டு பிடிச்ச...?”

“அந்தக் கொடுமையை ஏம்மா கேட்கறிங்க.. அந்த மகராசி இருக்காளே... என்னைக் கலங்கடிக்கன்னே பூமியிலே அவதரித்து வந்திருக்காம்மா.. காதலைச் சொன்னா கண்டுக்கவே மாட்டேனுட்டா...”

“உன்னைப் பிடிக்கலையோ என்னவோ...”

சுந்தரி விளையாட்டாக மகனை வம்புக்கு இழுத்தாள்.. அர்ஜீன்...

"அம்மா..." என்று ஆட்சேபக் குரலை எழுப்பினான்..

"பின்னே எதுக்காகடா அவ உன்கூட கண்ணா மூச்சி விளையாடினா...?"

"கொழுப்பும்மா.. வேற என்ன...? மகராசிக்கு என்னை ரொம்பப் பிடிக்கும்.. பார்த்தாலே மெல்ட் ஆகிருவா.."

"இதைப் பாருடா... அவ்வளவு கான்பிடென்ஸா உனக்கு...?"

"யெஸ் மாம்.. அவளுக்கு என்மேல ஆசை அதிகம்மா.. ஆனாப் பாருங்க.. அதை ஒப்புக்கறதில பயம்.. இழுத்தடிச்சா.. நானும் பொறுமையா அவ பதிலுக்காக மாதக் கணக்கில் வெயிட் பண்ணினேன்..."

"கடைசியில் எப்பத்தான் அவ பதிலைச் சொன்னா..?"

"நான கனடா கிளம்பப் போறேன்னு தெரிஞ்சதும்.. நான் கிளம்பறதுக்கு முதல் நாளில் அவ பதிலைச் சொன்னா... அவ மனசில இருந்த ஆசையை ஒப்புக்கிட்டா..."

"ஓ..."

அதனால்தான் மகனால் விவரம் சொல்ல முடியாமல் போய் விட்டது என்பதை உணர்ந்து கொண்டாள் சுந்தரி...

அர்ஜீன் மறைத்துப் பேசுகிற ஆளில்லை.. அவன் எதைச் செய்தாலும் மிகத் தைரியமாக அதை செய்து முடிப்பவன்.. தனித்து தொழில் தொடங்க முடிவு செய்த போது அதைத் தடுக்க முனைந்த பார்த்த சாரதியின் எதிர்ப்பை லட்சியம் பண்ணாமல் தன் காலில் நின்று வென்று காட்டியவன்.. அவனாவது.. அவன் காதலைப் பற்றி வீட்டில் மறைப்பதாவது...

"எனக்கு டைம் இல்லைம்மா.. அவ முதல்நாள் காதலை ஒப்புக் கொள்கிறா.. மறுநாள் நான் கனடாவுக்கு பறக்கிறேன்.. இதில் எப்படி அவளைப் பற்றி உங்களிடம் சொல்ல...? எனக்கு வேலை இருந்ததும்மா.. மூச்சு விட நேரமில்லை.. இதையெல்லாம் ஓடுகிற ஓட்டத்தில் சொல்லி விட முடியுமா...? சில உணர்வுகளுக்குன்னு ஒரு மரியாதை இருக்கும்மா.. அதைக் கட்டாயமா நான் கொடுத்தேதான் தீரனும்..."

"புரியுதுடா..."

புரிந்து கொள்ளலுடன் சொன்ன தாயை தோழமையுடன் பார்த்தான் அர்ஜீன்.. இந்தப் புரிந்து

கொள்ளலை சுந்தரியும்... ஆனந்தியும் தான் அவனிடம் காண்பித்தார்கள்.. பார்த்தசாரதி ஒரு நாளும் அதைக் காண்பித்ததில்லை.. மாறாக அவருக்கான புரிந்து கொள்ளலைத்தான் அவனிடம் எதிர்பார்த்தார்...

“கனடாவில இருந்து வந்ததும் என் குடும்பத்தோட வந்து அவளைப் பெண் கேட்பேன்னு அவளுக்கு பிராமிஸ் பண்ணியிருந்தேன்ம்மா.. பட்... அந்த பிராமிஸை நிறைவேத்த முடியாம டாடி பண்ணிட்டார்...”

“அர்ஜூன்.. இது எதுவும் எனக்குத் தெரியாதுடா...”

“நீங்க இதைச் சொல்லனுமா..? எனக்கே அது தெரியுமே... நான் கனடாவில் இருந்தபோதே டாடி மதுரைக்கு போய் விட்டார்... போன முதல் நாளிலேயே காவ்யாவின் சீட்டை மாற்றிட்டார்...”

“காவ்யாங்கிறதுதான் அந்தப் பெண்ணின் பெயரா..?”

சுந்தரி அன்புடன் கேட்க.. ஆமென்ற பாவனையில் தலையை அசைத்த அர்ஜூனின் முகத்தில் மென்மை குடி கொண்டிருந்தது.. அதை ரசித்துப் பார்த்தாள் சுந்தரி...

“பாருடா.. அவ பெயரைச் சொல்கிறதில இத்தனை கிக்கா...? நடந்துடா...”

“கேலி பண்ணாதீங்கம்மா...”

"காவ்யாவை அப்பா டீஸ் பண்ணிட்டாரா...?"

"ம்ம்ம்.. அவ சீட் என் ஆபிஸ் ரூமில் இருந்தது.. அங்கேதான் ஷேப்டி லாக்கரும் இருந்தது.. அவர் மட்டும் அவசீட்டை மாற்றாம இருந்திருந்தா அன்றைக்கு அவ பொறுப்பில் இருந்த பணம் காணாமல் போயிருக்காது.. அவ பணத்தைக் கொண்டு வந்த உடனே அதை ஷேப்டி லாக்கரில் வைத்துப் பூட்டியிருப்பா..."

"வாட் எ பிட்டி...!"

"பிட்டிதான்ம்மா.. அப்பா அவளை ரொம்பவும் இன்சல்ட் பண்ணிட்டார்.. அவ கடைக்கு வரக்கூடாதுங் கிறது அவரோட பிளான்... அவளும் வேலையை விட்டுடறேன்னு என்னிடம் தினமும் போனில் கெஞ்சினா.. நான் பாவிம்மா... அதுக்கு பெர்மிசன் கொடுக்க மாட்டேன்னுட்டேன்.."

"ஏன் அர்ஜீன்...? நீயில்லாத கடையில் அவ வேலைக்கு வந்தா என்ன... வராவிட்டால் என்ன..?"

"ஈகோம்மா... காவ்யாவோட அண்ணன் என் காதலை அப்ஜெக்ட் பண்ணினான்.. பணக்காரங்க காதலை காப்பாற்ற மாட்டாங்கன்னு சொன்னான்.. நான் அவன் தங்கையை பெண் கேட்டு வரமாட்டேன்னு சொன்னான்..

அதுக்கேத்த மாதிரி அப்பாவால மன வேதனைப்பட்டு காவ்யா வேலையை விட்டா அவன் சொன்னதெல்லாம் உண்மைன்னு ஆகி விடாதான்னு நான் யோசிச்சேன்...”

“என்னடா இது...? கல்யாண வாழ்க்கையிலதான் இத்தனை சிக்கல் வருதுன்னா... காதல் வாழ்க்கையில இதைத் தூக்கிச் சாப்பிடறதைப் போல சிக்கல் வந்து சேருதே...”

“கொடுமைம்மா.. இந்த டாடி துணைக்கு வான்னு அந்த நேகாவையும் கூப்பிட்டு கூட்டணி போட்டுட்டார்.. அவ சேலரி கொடுக்க காவ்யா டிராப் பண்ணிக்கிட்டு வந்த பணத்தை எடுத்து அவ ஹேண்ட் பேகில் மறைத்து வைச்சுக்கிட்டு.. காவ்யா மேலே திருட்டுப் பழியைப் போட்டுட்டாம்மா...”

சுந்தரியின் மனம் வேதனைப் பட்டது.. அர்ஜீனின் கோபத்தை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது...

அவன் முழுமையான ஆண் மகன்.. அவனை நம்பி காதல் சொன்ன பெண்ணின் மீது திருட்டுப் பழியைப் போடுவது அவனைப் பெற்ற தந்தையாக இருந்தாலும் அவன் அதை மன்னிக்க மாட்டான்.. சும்மா விடவும் மாட்டான்...

“கனடாவில நான் இருக்கிறப்பவே டாடிக்கும் எனக்கும் இடையே போராட்டம் ஆரம்பிச்சரும்மா.. நேகாவும்.. அவரும் கூட்டணி போட்டுக்கிட்டு காவ்யாவை பாடாய் படுத்துவதை அவ பிரண்டு தினமும் எனக்குப் போனில் சொல்லி விடுவா.. அதனாலதான் வேலை முடிந்து இந்தியா திரும்பினதும் நேரா மதுரைக்கு நான் ஓடினேன்.. பட்.. நான் என்னதான் ஓடியும் காவ்யாவை அவங்க ‘திருடின்னு’ சொல்லி திருட்டுப் பட்டம் கட்டிநிற்க வைத்து விட்டதை என்னால தடுக்க முடியாமலே போயிருச்சு...”

அர்ஜீனின் குரலில் தெரிந்த வலியில் சுந்தரியின் மனம் அதிகமான வலியை ஏற்றது... அவள் மகனைப் பேச விட்டு அமைதி காத்தாள்....

கொட்டட்டும்.. அவன் மனதில் இருப்பதை யெல்லாம் கொட்டட்டும்.. வியாபாரத்தின் வெற்றி மீது மட்டும் ஆசை கொண்ட அவன் மகன் முதன் முதலாக ஒரு பெண்ணின்மீது ஆசை வைத்திருக்கிறான்.. அவன் ஆசை வைத்த அந்தப் பெண்ணுக்கு அவன் அவள் மேல் ஆசை கொண்டதினாலேயே துன்பம் ஏற்பட்டு விட்டது...

அதைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அவள் தெரிந்து கொள்ள வேண்டாமா...?

“நான் கடைக்குள்ள கால் வைக்கிறேன்.. என் காவ்யா திருட்டுப் பட்டத்தை சுமந்துக்கிட்டு நிற்கிறாம்மா.. என்னைக் கண்டதும் ‘கோ’ ன்னு அழுகிறா... நான் டாடியைக் கண்டிச்சா அவர் காவ்யாவோட தப்பை நான் மறைக்கப் பார்க்கிறேன்னு என் மேலயும் பழி போடறார்.. அதை அந்த நேகாவும் ஆதரிக்கிறா... யோசிச்சுப் பாருங்கம்மா... அந்த நிலைமையில காவ்யா மேல தப்பில்லைன்னு நான் புரூவ் பண்ணலைன்னா இவங்க இரண்டு பேரும் அதை இந்த ஊர் உலகம் முழுவதும் பரப்பி விட்டுவிட மாட்டாங்களா...? காவ்யாதான் என் வொய்ஃப்ம்மா.. அதில எந்தவித மாற்றமும் இல்லை.. அதனால என் மனைவிமேல எந்தப் பழியும் வந்து விடக் கூடாதுன்னு நான் அவளை விசாரித்தேன்.. அதில அவ கோபப்பட்டுட்டா..”

சுந்தரியில் காவ்யாவின் கோபத்தை புரிந்து கொள்ள முடிந்தது.. தவறு செய்தவர்கள் விசாரணையினால் பாதிக்கப்படமாட்டார்கள்.. பயப்படவும் மாட்டார்கள்.. அதையே தவறு செய்யாதவர்கள் எதிர் கொள்ள நேரிடும் போது துடித்துப் போய் விட மாட்டார்களா...?

“பாவம்டா அவ...” சுந்தரி அனுதாபப் பட்டாள்..

“எனக்கும் அது தெரியுதும்மா.. அன்னைக்கு அவ துடிச்ச துடிப்பு இன்னும் என் கண்ணுக்குள் நிற்குது..

விசயத்தைக் கேள்விப் பட்டதும் அவ அண்ணன் உடனடியா ஓடி வந்து பணத்தைக் கட்டிட்டு அவன் தங்கையை கூப்பிட்டுக்கிட்டுப் போயிட்டான்.. போகும்போது அவன் பார்த்த பார்வை இருக்கே... இன்னும் என் நெஞ்சை அறுக்குதும்மா..." அர்ஜீன் வேதனையுடன் கண்மூடிக் கொண்டான் ...

"அர்ஜீன்.." சுந்தரி துடித்துப் போனாள்..

அது ஆசை வைத்தவளைக் காக்க முடியாத ஒரு ஆணின் வேதனை... அவள் அண்ணனின் முன்பு தலைகுனிவு ஏற்பட்டுவிட்டதே என்ற ஒரு காதலனின் வேதனை...

## 174

*ஊரோர தோப்புப் பக்கம்..*
*உனைப் பார்க்க ஆசை கொண்டேன்...*

**பா**ர்த்தசாரதி தோட்டத்துப் பக்கம் வந்தார்.. சுந்தரி தென்படுகிறாளா என்று பார்வையால் துழாவினார்.. ஆழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்த தாயும்...

மகனும் அவர் பார்வையில் பட்டார்கள்.. அவர்களுக்கு இடையிலிருந்த அந்த பிணைப்பில் அவருக்கு பொறாமை வந்தது.. தீர்க்கமாக அவர்களைப் பார்த்தபடி அருகில் போனார்.. தாயிடம் பேசியபடி திரும்பிப் பார்த்த அர்ஜீன் சட்டென்று மௌனமானான்.. மகனின் திடிக் மௌனத்தில் புருவங்கள் சுருங்கிய சுந்தரி தானும் திரும்பிப் பார்த்து விட்டு மகனைப் பின் பற்றினாள்...

பார்த்தசாரதி அவர்களுக்கு அருகில் போனபோது.. அவர்கள் இருவரும் பேசா மடந்தைகளாகி வானத்தைப் பார்த்தார்கள்.. பூமியைப் பார்த்தார்கள்.. பார்த்தசாரதியை மட்டும் பார்க்கவே இல்லை...

‘என்னடா இது... இவ்வளவு நேரமா பேசித் தள்ளிக்கிட்டு இருந்தவங்க... என்னைக் கண்டதும் ஊமை வேசம் கட்டறாங்க...’ பார்த்தசாரதிக்கு கடுப்பு வந்தது..

“சுந்தரி...”

“ம்ம்ம்...”

“காபி குடிக்கறிங்களான்னு கேட்டுட்டு இங்கே வந்து நிற்கிறயே.. இங்கே எதுவும் காபி மேக்கர் மெஷின் இருக்கா..?”

இடக்காக கேள்வி கேட்ட பார்த்தசாரதிக்கு அதை விட இடக்காக பதில் சொன்னாள் சுந்தரி...

“ஏன் இல்லாம...? நானே ஒரு மெஷின்தானே.. காபி மேக்கர்.. இட்லி மேக்கர்.. ரைஸ் மேக்கர்.. ஹவுஸ் மேக்கர்ன்னு அத்தனை வேலைகளையும் செய்யற ஒரே மெஷின் இங்கே நிற்கிறப்ப.. நீங்க காபி மேக்கர் மெஷின் மட்டும் இருக்கான்னு கேட்டா எப்படிங்க...”

“ஒரு மார்க்கமாத்தாண்டி பேசற...”

“நீங்க ஒரு மார்க்கமா ஆனபின்னாலே நானும் ஒரு மார்க்கமாத்தான பேச வேண்டியிருக்கு...”

விட்டால் அன்று இரவு முழுவதும் இதே ரீதியில் உரையாடல் நீண்டு விடும் அபாயம் இருந்ததால்

‘உன்னை அப்புறமா கவனிச்சுக்கறேண்டி.. தூங்கறதுக்கு பெட்ரூமுக்குத்தான வருவ.. இன்னைக்கு விடிய விடிய ராமாயணம் ஓதலைன்னா... என்னன்னு கேளு...! என்று மனதுக்குள் கருவியபடி அர்ஜீனின் பக்கமாக அவர் திரும்பினார்...’

“அர்ஜீன்...”

“ம்ம்ம்...”

‘என்னடா இது.. அம்மாவும் மகனும் ஒன்னு போல ‘ம்’ கொட்டறாங்க...?’ பல்லைக் கடித்தார் பார்த்தசாரதி...

“கம்பெனிக்கு தீனதயாளன் வந்திருந்தார்...”

“இதை எதுக்காக என்னிடம் சொல்கிறிங்க..?”

‘இதுக்கு மட்டும் ஊம் கொட்ட மாட்டியே.. நீளமா பதில் சொல்வியே...’ மகனை முறைத்தார் பார்த்தசாரதி...

அவன் அந்த முறைப்புக்கெல்லாம் அலட்டிக் கொள்கிறவனாக இல்லை.. அவர் முறைப்பை அஞ்சாமல் எதிர் கொண்டான்..

“ரொம்ப வருத்தப் பட்டார்...”

“ஸோ வாட்..?”

“நீ பேசின பேச்சை மறக்க முடியாதுன்னு சொன்னார்...”

“அவர் மறக்கக் கூடாதுன்னுதானே அந்தப் பேச்சையே பேசினேன்...?”

“அர்ஜீன்...”

“யெஸ் டாட்... காவ்யா சொன்னா.. நம்ம வீட்டுக்கு அவ மருமகளா வந்தா... உங்களைப் பார்க்கிறப்பல்லாம் நீங்க பேசின பேச்சுக்கள்தான் ஞாபகம் வருமாம்... எப்படி

அதை மறக்கிறதுன்னு கேட்டா டாடி.. அதுக்காக என்னை மறக்கவும் துணிஞ்சிட்டா டாடி...”

“அதுக்குப் பழிவாங்கறியா அர்ஜீன்...”

“அஃப் கோர்ஸ் நானும் மனிதன்தானே...”

“அப்படிப் பழி வாங்கறதா இருந்தா என்னைத்தானே நீ பழி வாங்கனும்...? பாவம் தீனதயாளன்.. அவருக்கும் இந்தப் பிரச்னைக்கும் என்ன சம்பந்தம்..? அவரை ஏன் நீ பழிவாங்கின...?”

“அவர்தானே நேகாவைப் பெற்றவர்...! எப்படி காவ்யாவுக்கு உங்களைப் பார்த்தவுடன் நீங்க பேசின பேச்சுக்கள் ஞாபகம் வருதோ.. அதைப் போல நேகாவோட டாடிக்கும் என்னைப் பார்த்ததும் நான் பேசின பேச்சுக்கள்தான் ஞாபகம் வரனும்... காவ்யா என்னை அவாய்டு பண்றதுக்கான காரணத்தை நீங்களும் நேகாவும் உண்டு பண்ணினீங்க.. தீனதயாளன் என்னை அவாய்டு பண்றதுக்கான காரணத்தை நான் உண்டு பண்ணியிருக்கேன்...”

அர்ஜீன் கன கச்சிதமான தனது திட்டத்தை நிதானமான குரலில் விளக்கியதில் பார்த்தசாரதி வாயடைத்துப் போய் விட்டார்...

“எங்கே அடித்தால் எங்கே வலிக்கும்ன்னு உங்களுக்கும் நேகாவுக்கும் மட்டும்தான் தெரியுமா என்ன..? எனக்கும் தெரியும் டாடி.. அது தெரியாமலா இவ்வளவு உயரத்தில் இருக்கிறேன்..?”

“அந்த மனிதர் நல்ல மனிதர் அர்ஜீன்...”

“யார் இல்லைன்னு சொன்னது..? காவ்யாவும் நல்ல பெண்தான் டாடி.. அது உங்களுக்கும் தெரியும்.. நேகாவுக்கும் தெரியும்.. நீங்களும் அவளும் அவ பாவம்ன்னு நினைத்துப் பார்த்தீங்களா..?”

“அவர் மனது நொந்து பேசினார் அர்ஜீன்...”

“காவ்யாவோட மனது சல்லடை.. சல்லடையாய் ஆகிருச்சே.. அதுக்கு அந்த நேகாவும்.. நீங்களும் விலை கொடுக்க வேண்டாமா..? உங்க திட்டம் என்ன டாடி...? உங்களோட சுய ரூபத்தில் பயந்து போய் காவ்யா... என்னோட காதலே வேண்டாம்ன்னு விலகி ஓடிரனும்.. அதுதானே..? நீங்களும் நேகாவும் நினைத்ததை சாதிச்சீங்க.. என்னால என்ன முடியும்ன்னு நானும் காட்ட வேண்டாமா...?”

“இதில தீனதயாளனை எதுக்காக இழுக்கனும்..?”

“காலையில்தானே அம்மாகிட்ட விடிய விடிய ராமாயணம் சொன்ன கதையை விளக்கிச் சொல்லிக்கிட்டு

இருந்தீங்க..? அவங்களைச் சொல்லிட்டு நீங்களும் அதே வேலையைச் செய்தால் என்ன அர்த்தம் டாடி...?"

"உன் பேச்சு என்னிடமும்.. நேகாவிடமும் மட்டும்தான் இருந்திருக்கனும் அர்ஜீன்.. நீ ஜென்டில் மேன்னு நினைத்தேன்..."

"ஜென்டில் மேனுக்கும்.. ஜென்டில் வுமனுக்கும்தான் நான் ஜென்டில் மேன்... தேர்ட் ரேட் வேலைகளைச் செய்கிறவங்களுக்கு இல்லை..."

"அர்ஜீன்.. நான் உன் டாடி..."

"அந்த ஒரு காரணத்துக்காகத்தான் நான் ஆசை வைத்த என் காதலி என்னை வேணாம்னு தூக்கியெறிஞ்சுட்டுப் போயிட்டா..."

"நான் என்னடா செய்தேன்...?"

"எதைச் செய்யலை...? உங்க மனச்சாட்சியைக் கேட்டுப் பாருங்க... அது கதை கதையாய் எடுத்துச் சொல்லும்..."

"நீ மட்டுமா ஆசை வைத்த...? நேகாவும் உன்மேல ஆசை வைத்திருக்காடா..."

"எனக்கு நல்லா வந்திரும் வாயில.. மகனிடம் டாடி பேசறதைப் போல பேசித் தொலைங்க.. அவளுக்கு நீங்க என்ன தூதா....?"

“அவளும் ஒரு பெண்தானே...”

“இது உங்க காலத்து சினிமா இல்லையே.. உங்க அப்பா காலத்து சினிமாவாச்சே.. இன்னுமா நினைப்பில் வைத்திருக்கீங்க..?”

“அவ என்னடா பண்ணினா..? ஆசைப் பட்டவனையே மேரேஜ் பண்ணிக்கனும்னு மத்த பெண்கள் நினைப்பதை போல்தான் அவளும் நினைத்தா.. அதில் குற்றமில்லையே.. அதுக்காக சில வேலைகளை செய்தா.. உன் மேல இருக்கிற ஆசையினாலதானே அதைச் செய்தா...?”

“வேண்டாம் டாடி.. விட்டுவிடுங்க.. நானே செம காண்டில் இருக்கேன்.. நீங்க வேற கிளப்பி விடாதீங்க..”

“நேகா அருமையான பெண் அர்ஜீன்.. உனக்குத்தான் அவ அருமை தெரியலை...”

“உங்களுக்குத் தெரிந்திருக்கில்ல..? அது போதும்..”

“அவ உனக்கு ஈக்குவல் ஸ்டேட்டஸில் இருக்கிறவ..”

“ஸ்டேட்டஸ் பார்த்தெல்லாம் காதல் வராது...”

“இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிடலை அர்ஜீன்..”

“இதை எதுக்குச் சொல்கிறீங்க...?”

“நீ மனது வைத்தால் நிலைமையை சரியாக்கி விட முடியும்...”

“பேராசைதான் டாடி உங்களுக்கு.. அதுக்கா இத்தனை பாடுபட்டு காய் நகர்த்தினேன்...?”

“ஒன் வொர்டு.. ஒன்லி ஒன் வொர்டு.. அதை மட்டும் நீ தீனதயாளனிடம் சொல்லி விட்டால் போதும்.. எல்லாமே சரியாகி விடும்...”

“ஒன் வொர்டேல்லாம் எனக்குச் சரிப்பட்டு வராது டாடி.. நான் யூசுவலா அதிகம் பேச மாட்டேன்தான்.. ஆனாப் பேச வாய் திறந்துட்டா நான்ஸ்டாப்தான்.. வாயை மூடவே மாட்டேன்”

“அர்ஜீன்.. ப்ளீஸ்...”

“அந்த நேகாவுக்காக இவ்வளவு துரத்துக்கு நீங்க இறங்கனுமா டாடி...?”

“அவ இந்த வீட்டுக்கு மருமகளா ஆகனும்டா..”

“நோ வே... அதுமட்டும் நடக்காது... எனக்கு வொஃய்பா வரனும்னா அது காவ்யாவா மட்டும்தான் இருக்க முடியும்.. அதில எப்பவும் மாற்றமில்ல...”

“அவதான் உன்னைத் தூக்கி யெறிஞ்சுட்டான்னு சொன்னியே...”

“அதனால்தான் தீனதயாளனையும் என்னைத் தூக்கியெறிய வைத்தேன் டாடி.. முள்ளை முள்ளால்தானே

எடுக்கனும்..? ‘நேகா’ங்கிறமுள் காவ்யாவின் மனதைக் குத்திக் காயமாக்கிருச்சுன்னா.. நேகாவோட மனதிலும் முள் தைக்கனும்தானே..? என்ன ஒன்னு.. அவ ஒன்னுமே நடக்காததைப் போல முள்ளைப் பிடுங்கியெறிந்து போட்டுட்டு வேற வேலையைப் பார்க்கப் போயிருவா.. அதனால் தான் அவ மேல முள்ளை வீசி பிரயோசன மில்லைன்னு அவ டாடி மேல முள்ளை வீசினேன்.. அது வொர்க் அவுட் ஆகிருச்சு...”

“அர்ஜுன்...”

“தி கேம் இஸ் ஓவர் டாடி.. தீனதயாளன் காவ்யாவைப் போலவே ரோசக்கார மனிதர்... இனி என்னை அவர் மாப்பிள்ளையாக்கிக்கனும்னு கனவில் கூட நினைத்துப் பார்க்கமாட்டார்.. இதைத்தானே காவ்யா விசயத்தில் நீங்க செய்தீங்க..? பதிலுக்கு தீனதயாளன் விசயத்தில் நான் செய்து விட்டேன்... தட்ஸ் ஆல்...”

அர்ஜுன் அவரின் பதிலை எதிர்பார்க்காமல் சுந்தரியைப் பார்த்து..

“குளித்துட்டு சாப்பிட வர்றேன்ம்மா..” என்று சொல்லி விட்டு வீட்டை நோக்கிப் போய் விட்டான்...

தனித்து விடப்பட்ட அந்தக் கணவனும்.. மனைவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதை தவிர்த்தார்கள்...

மனைவியின் முகத்தைப் பார்க்க முடியாத சங்கடம் பார்த்தசாரதியிடம் வந்து நின்றது.. கணவரின் முகத்தைப் பார்க்க விரும்பாத வெறுப்பு சுந்தரியிடம் மையம் கொண்டது...

பார்த்தசாரதி எதையோ பேச முயன்றார்.. அதைக் கவனிக்காமல் சுந்தரி விலகி வீட்டை நோக்கி நடந்தாள்.. அவரை தனிமை சூழ்ந்து கொண்டது.. முதன் முதலாக தனிமையுணர்வை அவர் உணர்ந்தார்...

*"மலரிருந்தால் மணமிருக்கும்*
*தனிமையில்லை...*
*செங்கனியிருந்தால் சுவையிருக்கும்*
*தனிமையில்லை...*
*நிலவிருந்தால் வானிருக்கும்*
*தனிமையில்லை....*
*நாம் காணும் உலகில் எங்கும்*
*தனிமையில்லை...."*

சாலையில் கடந்து போன சோன் பப்டி வண்டியிலிருந்து பாடல் ஒலித்தது... தனித்து நின்ற பார்த்தசாரதி.. தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தார்.. அவர் மனம் குடும்பத்தாரின் விலகலிலேயே சிக்கி உழன்றது...

*"தனிமையிலே இனிமை*
*காண முடியுமா...?*
*நள்ளிரவினிலே சூரியனும்*
*தெரியுமா...?"*

பாடல் கேட்ட கேள்விக்கு அவர் மனம் இல்லையென்று பதில் சொன்னது...

# 175

## உன்னைத்தான் தஞ்சமென்று நான் உறைந்துவிட ஆசை கொண்டேன்..

**சு**ந்தரி பார்த்தசாரதியிடம் பேசுவதில்லை.. அர்ஜீனின் மனக்குமுறலை கேட்டபின்பு பார்த்த சாரதியிடம் நன்றாக நான்கு வார்த்தை கேட்டு விடவேண்டுமென்றுதான் அவள் ஆசைப்பட்டாள்... ஆனால் அதைத் தொடர்ந்து நடந்த தகப்பனுக்கும் மகனுக்குமான பேச்சில் வெளிப்பட்ட உண்மைகளிலும்.. அதற்குப் பின்னாலும் அர்ஜீன் தீனதயாளனுடன்

சமாதானமாகப் போய் நேகாவை மணந்து கொள்ள வேண்டும் என்ற பார்த்தசாரதியின் எதிர்பார்ப்பிலும் அவள் மனம் வெறுத்துப் போய் விட்டாள்... என்ன நினைத்தாளோ.. அவருடன் பேசுவதை முழுவதுமாக நிறுத்திவிட்டாள்.. அவர் எதைக் கேட்டாலும் ‘ஆம்’.. ‘இல்லை..’ யென்ற பாவனையில் தலையசைவு தான் வந்தது.. அவர் மிகவும் அழுத்திக் கேட்டால் மிக நீண்ட பேச்சாக.. ‘ம்...’ என்ற ஒலி மட்டும் வெளிப்பட்டதில் நொந்து போன பார்த்த சாரதி.. மனைவியிடம் மீண்டும் பேச்சை வரவழைக்க என்ன மார்க்கம் செய்வது என்ற நீண்ட யோசனையில் முடியை பிய்த்துக் கொண்டார்...

சுந்தரி ஆனந்தியின் வீட்டிற்கு அடிக்கடி போய் வரலானாள்.. அதற்கு முன்பு ஆனந்தியின் வீட்டுக்கு அவள் போய் வந்தாலும் அடிக்கடி போக மாட்டாள்... மாறாக மகளைத்தான் பிறந்த வீட்டிற்கு வரவைத்து சீராட்டி அனுப்பி வைப்பாள்.. அப்போதுதான் பெற்ற மகளின் மனம் குளிரும் என்று பார்த்தசாரதிக்கு எடுத்துச் சொல்வாள்...

“எனக்கு இன்னமும் பிறந்த வீட்டில இருந்து சீர் வருது.. காஞ்சிபுரம் போகனும்ங்கிற நினைப்பு

வருது.. அப்பாம்மா இருக்காங்க.. அவங்களோட வீடு இருக்கு.. இந்தப் பொறுப்புகளையெல்லாம் ஏறக்கட்டிட்டு அங்கே போய் அக்கடான்னு ஒரு வாரம் இருந்துட்டு வரலாம்ன்னு ஏக்கம் வருது... இதைப் போலதானே ஆனந்திக்கும் இருக்கும்.. என்னதான் உள்ளூரிலேயே அவளை மேரேஜ் பண்ணிக் கொடுத்திருந்தாலும் பிறந்த வீடு.. பிறந்த வீடுதானே...” என்பாள்...

அந்தச் சுந்தரிதான் ஆனந்தியை அழைக்காமல் அவள் வீட்டுக்கு அடிக்கடி போய் வந்தாள்..

‘தாயும் மகளும் என்ன பேசிக்கிறாங்க...?’

அதை அறியும் ஆவல் பார்த்தசாரதியின் மனதைத் துளைத்தது.. பேச்சுவார்த்தை நடக்குமிடம் அவரது வீடாக இருந்தால் அதை அவர் எளிதில் கண்டுபிடித்து விடுவார்.. அவர் வீட்டின் எந்தவொரு மூலையில் நின்று ரகசியம் பேசினாலும் எப்படியும் அவர் காதுக்கு பறந்து வந்து விடும்..

“உங்க டாடி காதைக் கழட்டி சுவரில் ஒட்ட வைத்திருக்கிறார் ஆனந்தி...”

சுந்தரி விளையாட்டாகச் சொன்னாலும் அதுதான் உண்மைபோல இருந்தது.. பார்த்தசாரதிக்கு தெரியாமல்

எந்தவொரு பேச்சையும் அவர் வீட்டில் பேசி விட முடியாது..

ஆனந்தியின் வீட்டில் அப்படியில்லை.. அவர் முன் ஹாலில் உட்கார்ந்து விட சுந்தரி மட்டும்தான் சுவாதீனமாக ஆனந்தியின் வீடு முழுவதும் சுற்றி விட்டு வருவாள்...

அவள் வரும் வரைக்கும் சத்திய மூர்த்தியிடம் பேசிக் கொண்டும்.. பேரக்குழந்தைகளிடம் விளையாடிக் கொண்டும் அவர் பொழுதைக் கழித்தாக வேண்டும்..

அதற்கு அஞ்சியே அவர் ஆனந்தியின் வீட்டுப் பக்கம் அதிகமாக தலையைக் காட்ட மாட்டார்... தவிர்க்க முடியாத விழாநாள்களில் சீர் கொடுக்கவென்று குடும்பத்துடன் போய் வர வேண்டி வரும் போது குடும்பத் தலைவனாக போய் தலையைக் காட்டி விட்டு வந்து விடுவார்...

அப்படிப்பட்ட பார்த்தசாரதிதான் அன்று ஆனந்தியின் வீட்டுக்குப் போக ஆசை கொண்டார்.. அவருக்கு மகளுக்கும் மனைவிக்கும் இடையில் நடக்கும் பேச்சு வார்த்தைகளின் சாராம்சத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது..

“நானும் வர்றேனே...” சுந்தரியிடம் கேட்டுப் பார்த்தார்..

அவளோ தலையை மேலும் கீழுமாக அசைக்காமல் இடம் வலமாக அசைத்து வைத்து மறுப்பை வெளிப்படுத்தி விட்டாள்...

“நீ மட்டும் போகலாம்.. நான் வரக் கூடாதா..? அது எனக்கும் மகள் வீடுதான்..” பார்த்தசாரதி உரிமைக் குரலை எழுப்பி விட்டு முதல் ஆளாக காருக்குள் போய் உட்கார்ந்து கொண்டார்..

வந்து தொலைங்க என்ற பார்வையுடன் அவர் பக்கம் முகத்தையே திருப்பாமல் ஜன்னல் வழி வெளியே வெறித்துக் கொண்டிருந்த மனைவியிடம் பேச அவர் மேற்கொண்ட பிரயத்தனங்கள் பலனின்றி வீணாகப் போயின...

அதற்கு மேலும் கெஞ்சுவதற்கு அவர் தயாராகத்தான் இருந்தார்.. ஆனால்.. என்னவோ அவர் அவருடைய மனைவியை கொஞ்சிக் கொண்டிருப்பதைப் போல காரை ஒட்டிக் கொண்டிருந்த வரதன் சாலையை பார்ப்பதை விட்டு ஓரவழிப் பார்வையிலே அவர்களைப் பார்க்க ஆரம்பித்ததை உணர்ந்து கொண்டவராய் அவர் பிரயத்தனங்களை நிறுத்திக் கொண்டார்...

ஆனந்தியின் வீடு வந்தது.. வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சரனும்.. சாராவும்... அவர்களைக் கண்டதும்

“ஹாய் பாட்டி...” என்று ஓடிவந்து சுந்தரியின் கால்களைக் கட்டிக் கொண்டார்கள்...

கூடவே தாத்தாவும் வந்திருக்கிறேன் என்று சொல்லத் துடித்த மனதை அடக்கிக் கொண்டு வரவேற்க வந்த மருமகனுக்கு தலையை அசைத்தார் பார்த்தசாரதி...

“டாடி... அம்மா.. வாங்க.. வாங்க...”

ஆனந்திதான் அவரை முதலில் அழைத்து அவரின் துடித்த மனதைக் குளிர வைத்தாள்...

‘என்ன இருந்தாலும்.. பெண் குழந்தை.. பெண் குழந்தைதான்..’ மகிழ்ந்து போனார் பார்த்தசாரதி...

இன்றைக்கு எப்படியும் முன்பக்க ஹாலைத் தாண்டி உள் பக்கமாக நுழைந்து விட வேண்டும் என்ற தீர்மானத்தை மனதுக்குள் எடுத்துக் கொண்டவர் மகளையும்.. மனைவியையும் பின்பற்ற முனைந்த போது...

“அப்புறம் மாமா.. பிஸினெஸ்ஸெல்லாம் எப்படிப் போய்க்கிட்டு இருக்கு..?” என்று கனகாரியமாக கேள்வி கேட்டபடி ஹாலில் இருந்த சோபாவில் உட்கார்ந்து வைத்தான் சத்தியமூர்த்தி...

கேள்வி கேட்கும் மாப்பிள்ளைக்கு பதில் சொல்லாமல்.. வீட்டுக்குள் போகும் பெண்களை அவர் பின் தொடர முடியுமா..?

வேறு வழியில்லாமல் எரிச்சலை அடக்கியபடி அவனுக்கு எதிரேயிருந்த சோபாவின் முனையில் ஒட்டப் பந்தயத்தில் ஓடத் தயாரானவரைப் போல அவர் தொற்றிக் கொண்டு...

"நல்லாப் போய்கிட்டிருக்கு மாப்பிள்ளை.." என்று பதில் சொன்னார்...

"ஹௌ இஸ் அர்ஜீன்..?" அடுத்த கேள்வி சத்திய மூர்த்தியிடமிருந்து பறந்து வந்தது...

'இதை அர்ஜீனுக்கே போன் போட்டு கேட்க வேண்டியதுதானே...' எரிச்சலானார் பார்த்தசாரதி...

அந்த எரிச்சலை அவரால் வெளிக்காட்டி விட முடியுமா...? அவர் பெண்ணைக் கொடுத்தவர்.. அதனால்

"ஓ.. ஹி இஸ் ஃபைன் மாப்பிள்ளை.." என்று பதிலைச் சொன்னார்...

வேலைக்காரப் பெண் ஜீஸ் தம்ளர்களோடு வந்து சேர்ந்தாள்...

“அம்மாவும்.. ஆனந்தியும் எங்கே...?” என்று அவளிடம் அவர் கேட்டார்...

“அவங்க ரூமில பேசிக்கிட்டு இருக்காங்க..” வேலைக்காரப் பெண் பதிலைச் சொல்லிவிட்டு மாயமானாள்..

“என்னத்தைப் பேசிக்கிட்டு இருக்காங்க...?” பொறுக்க முடியாமல் அவர் மருமகனைக் கேட்க... அவன் தோள்களைக் குழுக்கி கைவிரல்களை விரித்தான்..

“ஹூ நோ’ஸ்...? அம்மாவுக்கும் பெண்ணுக்கும் பேசிக்க ஆயிரம் விசயங்கள் இருக்கும்.. அது எதுக்கு நமக்கு..? நீங்க சொல்லுங்க மாமா.. லாஸ்ட் மண்த்ல உங்களுக்கு ஹெவி எக்ஸ்போர்ட் ஆர்டர் ஒன்னு கிடைச்சதாமே...”

சத்திய மூர்த்தி கேட்டு வைக்க.. இதைப் பேசத்தான் இங்கே வந்தேனா என்று விரக்தியாகி அவனைப் பார்த்தார் பார்த்தசாரதி...

என்னவோ.. ஏழுகடல்.. ஏழுமலைகளைத் தாண்டி.. அகழி சூழ்ந்த அரண்மனையின் மேல் மாடத்தில் அவருடைய மனைவியும்.. மகளும் ரகசியம் பேசிக் கொண்டிருப்பதைப் போல இருக்கிறதே...

ஒரு வீடான வீட்டில் என்னதான் நடக்கிறது என்று அவரால் அறிய முடியாத பேச்சு வார்த்தை நிகழ்ந்தால் அது வீடென்று சொல்ல முடியுமா..? ரகசிய சுரங்கமென்று தானே சொல்ல வேண்டும்..?

சத்தியமூர்த்தி அதைப் பற்றியெல்லாம் கவலைப் படுகிறவனாகத் தெரியவில்லை.. ஷேர் மார்க்கெட்டில் ஆரம்பித்து.. உலக வணிக செய்திகளை அவன் அலசி ஆராய ஆரம்பித்ததில் எப்படி இவனால் இப்படி இருக்க முடிகின்றது என்று ஆச்சரியமாகிப் போனார் பார்த்தசாரதி..

‘வீட்டுக்குள்ள என்ன பேச்சு ஓடுதுன்னு தெரிஞ்சுக்கிறதில இவனுக்கு கொஞ்சம்கூட இன்ட்ரெஸ்ட் இல்லையா..?’

சத்தியமூர்த்தி கலங்கடித்ததில்.. பார்த்தசாரதி கைக் கடிகாரத்தைப் பார்க்க ஆரம்பித்தார்.. அவரால் கேட்க முடியாத பேச்சை அவருடைய மனைவியும் மகளும் தனித்துப் பேசிக் கொண்டிருப்பதா..?

அதனால்.. அவர் கலந்து கொள்ளாத அந்த ஆட்டத்தைக் கலைக்க அவரால் ஆன முயற்சியாக...

“நேரமாகுதே மாப்பிள்ளை.. ஒரு இம்பார்டண்ட் மீட்டிங் இருக்கு..” என்று சொன்னார்..

அப்படியா.. இதோ அத்தையை வரச் சொல்கிறேன் என்று சொல்லி அவன் பேச்சு வார்த்தையை உடைப்பானென்று அவர் நினைத்துக் கொண்டிருக்க.. அந்த நினைப்பில் மண்ணை அள்ளிப் போட்டான் அவருடைய மருமகன்..

“அப்படின்னா நீங்க கிளம்புங்களேன் மாமா...”

‘நான் மட்டும் போகிறதுக்கா உன்னிடம் விவரம் சொன்னேன்..? என் பெண்டாட்டியும் வரணுமே மாப்பிள்ளை..’

“பிஸினெஸ்தான் முக்கியம்.. வீடு அடுத்தபடிதான்..”

‘அப்புறம் எதுக்காக உங்க கம்பெனியைப் பார்க்கப் போகாமல் அடைகோழி போல என்னை அடைகாத்துக்கிட்டு உட்கார்ந்திருந்தீங்க..? கம்பெனி பக்கம் ஓடியிருக்கலாமில்ல..’

“மீட்டிங்கை விட்டுவிட்டு நீங்க வந்திருக்கவே கூடாது...”

‘அதுசரி...’

“அத்தையைப் பற்றிக் கவலைப்படாம நீங்க கிளம்பிப் போங்க மாமா.. அவங்க வர நைட்டாகிரும்.. நாங்களே கொண்டு வந்து விட்டுட்டு வர்றோம்...”

‘அடக்கடவுளே...’ இப்பவாவது ஒரு மணி நேரப் பேச்சோடு வந்து விடுவா.. நீங்க சொல்கிறதைப் போலன்னா நைட் வரைக்குமில்ல பேச்சு வார்த்தை நீடிக்கும்..?

அரண்டு போன பார்த்தசாரதி அவசரமாக அதை மறுத்தார்..

“வேணாம் மாப்பிள்ளை... அது அப்படியொன்னும் ரொம்ப இம்பார்டண்டான மீட்டிங்கில்லை... என்ன செய்யனும்னு ஜி.எம் மிடம் சொல்லியிருக்கேன்.. அவர் பார்த்துக்குவார்...”

“ஓ.. நைஸ்...”

“உங்களுக்கு அர்ஜன்ட் வொர்க் இருந்தா நீங்க கிளம்புங்க மாப்பிள்ளை.. நான் வெயிட் பண்ணி சுந்தரியைக் கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்...”

“உங்களை விட இம்பார்டண்டா எனக்கு என்ன இருக்கு மாமா..? நீங்க வீட்டுக்கு வந்திருக்கிறப்ப நான் கம்பெனிக்குப் போகிறதா..? நெவர்.. எனக்கும் உங்களுக்கு வாய்த்ததைப் போல அருமையான ஜி.எம். வாய்த்திருக்கார்..”

சத்தியமூர்த்தி நகருவேனா என்று அடம் பிடித்தவனாக கோந்து போட்டு ஒட்டியதைப் போல

அங்கேயே சட்டமாக உட்கார்ந்து விட்டான்.. காலாண்டு விடுமுறையென்று வீட்டிலிருந்த சரணும் சாராவும் பார்த்த சாரதியின் தோள்களில் தூளி கட்டி ஆடாத குறையாக தொங்கி விளையாடினார்கள்.. ஒட்டுக் கேட்க வந்து அது முடியாமல் போன மன வருத்தத்தில் மணித்துளிகளை கடத்திக் கொண்டிருந்தார் பார்த்தசாரதி.. ஒருவழியாக நண்பகல் உணவு வேளையில் கீழேவந்த ஆனந்தி..

“சாப்பிடாம போவிங்களா டாடி..?” என்று சண்டைக்கு வந்தாள்...

‘இதுக்கா நான் வந்தேன்..?’ என்று நொந்தபடி சாப்பிடப் போனார் பார்த்தசாரதி...

உணவு விருந்துதான்.. ஆனால்.. மகளுக்கும்.. மனைவிக்கும் இடையில் நடக்கும் பேச்சு வார்த்தையின் சாராம்சம் என்னவாக இருக்கும் என்ற மன உளைச்சலில் அது மருந்தாக அவர் தொண்டையில் இறங்கியது...

# 176

*நீ இளைப்பாறும் இடமாக..*
*என் மடியிருக்க ஆசைகொண்டேன்...*

**ஆ**னந்தி தெளிவான முடிவோடு இருந்தாள்..

“அது எப்படிம்மா முடியாம போயிரும்..? முடித்து வைக்க நாம இருக்கோம்ல்ல...?”

“நாம என்னதான் திட்டம் தீட்டினாலும் அதை நடக்க விடாமல் முறித்து வைக்க உன் டாடி இருக்காரே ஆனந்தி...”

“ம்மா.. கூட்டணி ஸ்ட்ரான்கா இருக்கு.. அவர் சுயேச்சையாய் என்ன செய்ய முடியும்..?”

“அவர் ஒன் மேன் ஆர்மியைப் போல எதையாவது செய்து வைத்தா என்னடி செய்கிறது..?”

“ஒன் மேன் ஆர்மியா..? நீங்க வேற.. இவர் குறுக்கு வழியில் போகிறவர்.. ஆர்மின்னு சொல்லக் கூடாது.. அதுக்குன்னு ஒரு பவர் இருக்கில்ல..”

“ம்ப்ச்.. என்னத்தைச் சொல்ல.. இத்தனை நடந்திருக்கு.. இவர் கூடவே குடும்பம் நடத்தறேன்.. எனக்கு எதுவுமே தெரியலையே ஆனந்தி...”

“விடுங்கம்மா.. இதையே புலம்பிக்கிட்டு இருக்காம அடுத்து என்ன செய்கிறதுன்னு யோசிக்கலாம்...”

“நேரா மதுரைக்குப் போய் விடலாமா..?”

“போயி...?”

“பெண் கேட்கலாம்..”

“அந்தப் பெண்ணோட வீட்டில எதை வைத்து பெண் கேட்டு வந்தீங்கன்னு கேட்பாங்க.. நாம உடனே காதல்ன்னு சொல்லனும்.. அந்தப் பெண்ணைக் கூப்பிட்டுக் கேட்டா அவ இல்லைன்னு சொல்லி வைப்பா.. தேவையா..?”

“இல்லைன்னு சொல்லிருவாளா..?”

“சான்ஸ் இருக்கும்மா.. அவதான் அர்ஜீனை மேரேஜ் பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதமா மறுத்திட்டாளாமே..”

“என் மகனைக்கூட ஒருத்தி வேண்டாம்ன்னு சொல்லி விடுவாளா..?”

“நம்ம டாடி சொல்ல வைப்பார்.. அப்படி அந்த நேகாவிடம் என்னம்மா இருக்கு..?”

“எதுதான் இல்ல..? அகங்காரம் இருக்கு.. ஆணவம் இருக்கு.. திமிர் இருக்கு.. கொலஸ்ட்ரால் இருக்கு.. நினைத்ததை சாதிக்க எதை வேண்டும்னாலும் செய்யலாம்கிற வெறி இருக்கு...”

“டூ பேட்.. இப்படிப்பட்ட பெண்ணை அர்ஜீன் மேரேஜ் பண்ணிக்க முடியுமா..? இந்த டாடிக்கு புத்தி போகுதே...”

“அவ ஸ்டேட்டஸோட இருக்கிறாளாம்.. நேகா குருப் ஆஃப் கம்பெனிஸீக்கு எம்.டியாம்.. நம்ம அர்ஜீன் காதலித்த பெண் அப்படியில்லையாம்.. மிடில் கிளாஸ் பெண்ணாம்..”

“ஆக மொத்தம் இவர் கிளாஸைத்தான் பார்க்கிறார்.. அர்ஜீனோட விருப்பத்தையும்.. மனதையும் பார்க்கலை.. வருத்தமா இருக்கும்மா.. இதுநாள் வரைக்கும் அர்ஜீனுக்கும் அவருக்கும் தான் ஆகாது.. இரண்டு பேரும் எதிரும் புதிருமா நிற்பாங்க.. இப்ப எனக்கும் டாடிக்கும் ஆகாமல் போயிரும் போல இருக்கே...”

“ஆல்ரெடி.. எனக்கும் அந்த நிலைமை வந்தாச்சு...”

“இப்படி ஒட்டு மொத்த குடும்பத்தையும் விரோதம் பண்ணிக்கிட்டு நேகா.. நேகான்னு புலம்பிக்கிட்டு இருக்கிறாரே.. இவரை என்ன செய்தால் தேவலாம்..?”

“எதுவும் செய்ய முடியாது ஆனந்தி.. இன்னமும் அந்தப் பேச்சுக்கு இவர் புல்ஸ்டாப் வைக்க மாட்டேங்கிறார்.. நேற்று யாரோ ஒருத்தரிடம் போனில் பேசிக்கிட்டு இருந்தார்.. அந்த மனிதர் நோகவைப் பற்றி ஏதோ கேட்டிருப்பார் போல... இவர் இல்லையில்லை.. இப்போதைக்கு மேரேஜை தள்ளித்தான் வைத்திருக்கோம்.. மொத்தமா டிராப் பண்ணலைன்னு சொல்கிறார்.. அதைக் கேட்டுக்கிட்டே அர்ஜீன் அங்கே வந்துட்டான்.. அவன் முகத்தில் தெரிஞ்ச கோபத்தில நான் நடுங்கிப் போயிட்டேன் ஆனந்தி.. இவரானா.. அலட்டிக்காம அவனைப் பார்க்கிறார்.. எனக்கு முடியலை ஆனந்தி...”

“இவர் அடங்கவே மாட்டாராம்மா..?”

“ஊஹீம்.. மாட்டார்ன்னுதான் தோணுது.. அந்த தீனதயாளன் வீட்டில இவருக்கு வசிய மருந்து கொடுத்து வைத்திட்டாங்களோ என்னவோ...”

சுந்தரி கவலைப்பட்டதில் ஆனந்தி வாய் விட்டுச் சிரித்துவிட்டாள்...

“குட்ஜோக்.. இந்தக் காலத்தில் போய் வசிய மருந்தா..? டாடி வசிய மருந்துக்கெல்லாம் மசிகிற ரகமில்லை.. அவருடைய டார்கெட்டே வேற.. அந்த நேகாகிட்ட மட்டும் நேகா குருப் ஆஃப் கம்பெனி இல்லாமலிருந்தா இவர் அவளைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டார்...”

“அர்ஜீனுக்கு அது தேவையே இல்லையே ஆனந்தி.. இவர் கையில் இருக்கிற நியு எக்ஸ்போர்ட் கம்பெனியையே அவன் திரும்பிப் பார்க்க மாட்டேன் என்கிறான்.. அவனா நேகா குருப் ஆஃப் கம்பெனியை வளைத்துப் போட ஆசைப்படுவான்..?”

“அதானே.. அவன் ஆசையே வேறாச்சே.. மதுரை மல்லி மேல ஆசை வைக்கிறவன் நேகாவோட கம்பெனிமேல எப்படி ஆசை வைப்பான்..?”

ஆனந்தி கண்சிமிட்டிச் சிரித்தாள்.. சுந்தரியின் முகத்திலிருந்த கவலையின் ரேகைகள் மறைந்து மெலிதான சிரிப்பு படர்ந்தது...

“பொண்ணு பார்க்க அழகாத்தான் இருக்கா...”

“நீங்க பார்த்தீங்களா..? போட்டா இருக்கா..?”

“ஊஹீம்.. அவன் செல்போனை ஒரு நாள் பிடுங்கிப் பார்த்தேன்.. அதில் அவளோட போட்டோக்களை ஸ்டோர் பண்ணி வைச்சிருக்கான்...”

“நானும் அப்படித்தான்.. அவன் போனைச் சுட்டு அதில இருந்த படங்களைப் பார்த்தேன்.. அவன் தேடு தேடுன்னு தேடிக்கிட்டு என்னைத் துப்பறிஞ்சு வாறதுக்குள்ள என் போனுக்கு அதை இடம் மாற்றிட்டேன்..”

“பளிச்சுன்னு குத்து விளக்கின் சுடர் போல இருக்கா...”

“எனக்கும் பிடிச்சிருக்கும்மா...”

“உன் டாடிக்கு பிடித்து தொலைக்கலையே..”

“இவளும் காவ்யா குருப் ஆஃப் கம்பெனின்னு ஒரு பெரிய கம்பெனிக்கு எம்.டியா அப்பாம்மா சம்பாதித்து வைத்திருக்கிற சொத்துக்கு ஒற்றை வாரிசா இருந்தா டாடிக்கு பிடித்து தொலைத்திருக்கும்...”

மீண்டும் ஆனந்தி சிரித்தாள்.. சுந்தரி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. கணவரின் அதுபோன்ற மனப் போக்கைக் குறித்த மனவலி அவள் முகத்தில் தெரிந்தது..

“என்னையும் அதைப் போல கணக்குப் போட்டு மேரேஜ் பண்ணிக்கிட்டவர்தானே உங்க டாடி... நானும் என்னைப் பெத்தவங்களுக்கு ஒற்றைப் பெண்ணா.. கோடிக் கணக்கான சொத்துக்களுக்கு வாரிசா இல்லாமலிருந்திருந்தா உன் டாடி என்னைத் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டார்தானே...?”

சுந்தரியின் துயரத்தில் அவள் மனதிலிருந்த வலி இடம் பெயர்ந்து ஆனந்தியின் மனதில் படிந்தது... அவள் சத்தியமூர்த்தியை நினைத்துப் பார்த்தாள்.. ஆனந்தியை ஆனந்திக்காகவே நேசிக்கிறவன் அவன்.. அவளுக்காக கொடுக்கப்பட்ட பங்களாக்களையும் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸையும் அவன் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.. ஆனந்திதான் அவற்றுக்கான வாடகை வசூலை பார்த்துக் கொள்வாள்... அந்தப் பணத்தை அவள் என்ன செய்தாளென்றுகூட அவன் கேட்க மாட்டான்.. பார்த்தசாரதியே ஒருமுறை அதைப்பற்றி ஆனந்தியிடம் குறை பட்டிருக்கிறார்..

“உன் ஹஸ்பெண்டுக்கு மாமனார்.. மச்சினனோட இன்புளுயன்ஸை யூஸ் பண்ணிக்கத் தெரியலை ஆனந்தி.. எங்களிடம் கேட்டா அவர் பிஸினெஸ்ஸை விரிவு பண்ண பணம் தர மாட்டோமா..? ஒரே

கம்பெனியில நின்றுக்கிட்டு இருக்காம வேற இரண்டு மூன்று கம்பெனிகளையும் சேர்த்து ஆரம்பித்தால் நல்லாயிருக்குமே...”

“அவருக்கு அது பிடிக்காது டாடி...”

“ஏன்..?”

“இதென்ன கொஸ்டின் டாடி.. அர்ஜீன் நீங்க பெத்த மகன்.. அவனே உங்க பணம் வேண்டாம்ன்னு சொல்லி சொந்தக்காலில் நிற்கிறப்ப உங்க மருமகன் மட்டும் உங்களிடம் பணம் வாங்குவாரா..? இல்லை அர்ஜீனிடம் தான் பணம் வாங்குவாரா..?”

“ம்ஹீம்.. எனக்குப் போய் இப்படியாகப்பட்ட மகனும்.. மருமகனும் வாய்த்திருக்காங்க...”

அவர்கள் இருவருக்குமே பிழைக்கத் தெரியவில்லை என்றுதான் பார்த்தசாரதி நினைத்திருந்தார்.. அதை உடைத்து அர்ஜீன் ஜெயித்து காட்டினான்.. சத்திய மூர்த்தியோ சீரான வேகத்தில் உயர்ந்து கொண்டிருந்தான்.. எப்படித்தான் இதுபோல தானாக வரும் பண உதவியையும் மறுத்து சொந்தக்கால் அது.. இது என்று பேசுகிறார்களோ என்று ஆச்சரியமாக இருந்தது பார்த்தசாரதிக்கு...

சுந்தரியின் மனம் அனுபவிக்கும் வேதனையை அவரால் உணர முடியாது.. அதை ஆனந்தியால் உணர முடிந்தது...

அதைப் பார்த்து பார்த்து வளர்ந்ததினால் தானே அவள் சத்தியமூர்த்தியைத் தேடிப் பிடித்து திருமணம் செய்து கொண்டாள்.. அவனைவிட அதிகமான வசதி வாய்ப்பு கொண்ட கோடிஸ்வரர்கள் பெண் கேட்டு வந்த போது அவள் மறுத்துவிட்டாள்...

“ம்ஹீம்.. நியு எக்ஸ்போர்ட் ஓனரோட செல்லப் பெண்ணுன்னு கோடிஸ்வரங்க போட்டி போட்டுக்கிட்டு பெண் கேட்கிறாங்க.. அவங்களில யார் யார் பெஸ்டுன்னு நான் நினைக்கிறனோ அவங்களையெல்லாம் நீ ரிஜக்ட் பண்ணிட்டு.. நான் எதிர்பார்க்காத ஆளை செலக்ட் பண்ணியிருக்க...”

பார்த்தசாரதி மனத்தாங்கலுடன் தான் ஆனந்தியின் திருமணத்தை முடித்து வைத்தார்.. அவருக்கு என்ன தெரியும்..? ஆனந்தி பார்த்தசாரதியின் மகளென்ற அடையாளத்தைத் தாண்டி.. ஆனந்தியாக அவளை அடையாளம் கண்ட சத்தியமூர்த்திக்கு மனைவியாகவே விரும்பினாள் என்பது.. வெளிநாட்டுக்கு சென்று விட்டால்

தம்பியை பார்க்க முடியாது என்பதினால் அவள் வெளிநாட்டு மாப்பிள்ளையை மறுத்தால் என்று தெரிய வந்ததும் சத்தியமூர்த்தி வெளிநாட்டில் தங்கி வேலை செய்ய வேண்டிய வியாபார ஒப்பந்தத்தை மறுத்தான்... மனைவிக்காக.. அவளுடைய தம்பியின் மீது அவளுக்கிருந்த பாசத்திற்காக சென்னையிலேயே நிலை கொண்டான்.. பிற்காலத்தில் எந்த தம்பிக்காக ஆனந்தி சென்னையிலேயே நிலை கொண்டாளோ.. அந்த தம்பியே வெளிநாடுகளில் பறந்து.. பறந்து.. தொழில் செய்ய ஆரம்பித்தான்.. அப்போதும் சத்தியமூர்த்தி அது பற்றி ஒருவார்த்தைகூட மனைவியிடம் சொல்லிக் காட்டியதில்லை...

இப்படிப்பட்ட கணவன் கிடைப்பது வரம்.. இதை பார்த்தசாரதிக்கு சொல்லி புரிய வைத்துவிட முடியாது.. உன் அம்மாவுக்கு என்ன குறை வைத்தேன் என்று கேட்பார்.. அத்துடன் ஆனந்தியைப் பொறுத்தவரை அவர் மிக அன்பான அப்பா என்பதினால் அவள் அவர் மனம் புண்படும்படியான கேள்விகளை கேட்கவே மாட்டாள்..

“இப்ப என்ன செய்யலாம் ஆனந்தி..?”

“அம்மா.. அர்ஜீனுக்கும் காவ்யாவுக்கும் இடையில பிரிவு வந்திருக்கு...”

“தானா வரலை.. உங்க அப்பா பிரிச்சு வைச்சிருக்கார்...”

“அதுவேதான்.. அதுக்குப்பின்னால் அர்ஜீன் சென்னைக்கு வந்துட்டான்... மதுரைக் கடையில அவ இல்லை.. அவ இல்லாத கடைக்கு இவனும் போகலை.. அவ வீட்டைவிட்டும் வெளியில வரலையாம்...”

“பாவம்டி என்மகன்.. இந்தப் பாடுபட்டிருக்கானே.. ஏன் ஆனந்தி.. இது இப்படியே நிலைச்சிருமோ.. அந்தப் பெண் அர்ஜீனை மன்னிக்கவே மாட்டாளோ...”

“உண்மையான காதலுக்குன்னு ஒரு பவர் இருக்கும்மா.. அது தான் அர்ஜீனையும் அவளையும் திரும்பச் சந்திக்க வைச்சிருக்கு...”

“என்னடி சொல்கிற...?”

“ஆமாம்மா.. நம்ம அர்ஜீன் திருநெல்வேலிக்கு போனானில்ல..?”

“ஆமாம்.. அதுக்கென்ன..? மனதுக்கு கஷ்டமா இருந்தா இவன் அங்கேயிருக்கிற பண்ணை வீட்டுக்குப் போயிருவானே...”

“நிஜம்தான்.. ஆனா.. அப்படிப்போறவன்.. இத்தனை நாள் தங்கி ரெஸ்ட் எடுக்க மாட்டான்.. போன வேகத்தில் திரும்பி வந்துருவான்...”

“ஆமாம்.. இந்தத் தடவை இவன் திரும்பி வர நாளாச்சுதான்.. ஏன் ஆனந்தி..?”

“ஏன்னா.. மதுரை மல்லி இடம் பெயர்ந்து திருநெல்வேலி அல்வாவா மாறி நின்னா நம்ம ஆளு எப்படி உடனே திரும்பி வருவான்..?”

“என்ன ஆனந்தி சொல்ற..?”

“யெஸ் மாம்.. அந்தப் பெண் திருநெல்வேலியில் இருந்தாளாம்.. அதுவும் நம்ம பாட்டி வீட்டில இருந்தாளாம்...”

“என்னடி சொல்ற..? பெரியத்தை வீட்டிலயா இருந்தா..? எப்படி ஆனந்தி..? அவங்களுக்கு இவளை எப்படித் தெரியுமாம்..?”

“அது பெரிய கதை மாம்...”

ஆனந்தி கதை கதையாம் காரணமாம் என்று சொல்ல.. அதை விழிவிரித்து ஊம் போட்டு சுந்தரி கேட்டாள்...

# 177

## *நதியோரம் நான் நின்றால்.. நீ தேடிவர ஆசைகொண்டேன்...*

'இவங்க இரண்டு பேரும் கூட்டுச்சதி பண்றாங்க..'

பார்த்தசாரதியின் சந்தேகம் சரியானதாகவே இருந்தது.. சுந்தரியும்.. ஆனந்தியும் கூட்டுச்சதிதான் செய்தார்கள்.. எல்லாநேரமும் பார்த்தசாரதியினால் சுந்தரியைப் பின் தொடர முடியாது.. அதைத் தெளிவாக கனித்து வைத்திருந்த சுந்தரி.. அவர் கம்பெனிக்குக் கிளம்பும் வரை வெளியில் கிளம்பும் எண்ணமே இல்லாதவளைப் போல வீட்டுக்குள் வளைய வந்து கொண்டிருப்பாள்.. அந்தப் பக்கம் அவர் தலை மறைந்ததும்.. இந்தப் பக்கம் இவள் கிளம்பி விடுவாள்.. அதைக் கண்காணிக்க ஆள் வைத்திருக்கும் பார்த்தசாரதி மாலையில் வந்ததும்..

"ஆனந்தி வீட்டுக்கு போயிருந்த போல.." என்று விசாரிக்க ஆரம்பிப்பார்..

“ம்ம்ம்..”

“என்ன விசயம்..”

ஒன்றுமில்லை என்ற பாவனையில் சுந்தரியின் தலை அசையும்..

“ஒன்றுமில்லாததிற்கா ஆறுமணி நேரமா அவ வீட்டில உட்கார்ந்திருந்த..?”

இந்தக் கேள்விக்கு சுந்தரி தலை நிமிர்ந்து இமைக்காமல் ஓர் பார்வை பார்த்து வைப்பாள்.. பார்த்தசாரதி வேகத்தை குறைத்துக் கொள்வார்..

“இல்ல.. இப்பல்லாம் நீ அடிக்கடி ஆனந்தி வீட்டுக்குப் போறியே... என்ன விசயம்..?”

திரும்பவும் ஒன்றுமில்லையென்ற கைவிரிப்பு வரும்.. மனிதர் என்னதான் செய்வார்..? வாய்திறந்து பேசினாலாவது தூண்டிலை போட்டு விலாங்கு மீனை வெளியில் இழுக்கலாம்.. வாயைத் திறக்க மாட்டேன் என்று அடம் பிடித்துக் கொண்டிருப்பவளிடம் அவர் என்னதான் சொய்வார்..?

“சுந்தரி..”

“ம்ம்ம்...”

“நேகா கம்பெனிக்கு வந்திருந்தாடி..”

இதற்கு சுந்தரியிடமிருந்து தலையசைவோ.. ‘ம்’ என்ற முணுமுணுப்போ இமைக்காத பார்வையோ வெளிவராது.. அவள் மௌனமாக உறைந்து விடுவாள்.. அந்த உறைதலில் பார்த்தசாரதியின் மனம் அசையும்...

அவருக்கு இது புதிது.. சுந்தரியின் இந்த மௌனம் புதிது.. உறைதல் புதிது.. எதிர்ப்பு புதிது..

எதுவும் பேசாமல்.. அவளிடமிருந்த அத்தனையையும் அவர்பெயருக்கு மாற்றிக் கொடுத்து தாரை வார்த்தவள் இன்று காட்டும் புதியதொர் போர் வியூகத்தில் அவர் ஆச்சரியமாகியிருந்தார்.. அவளின் அந்த எதிர்ப்பை அவர் விரும்பவில்லை.. எப்போது சுயமாக அவள் யோசிக்க ஆரம்பித்து விட்டாளோ.. அதற்குப் பின்னால் ‘சுயம்’ தேட ஆரம்பித்து விடுவாள் என்ற எச்சரிக்கை உணர்வு அவர் அடி மனதில் எழுந்தது...

அதற்கு அவரால் அனுமதி வழங்க முடியாது.. அவருக்கு வாய் திறவாத... அடிமைப் பெண்ணான சுந்தரிதான் வேண்டும்... அவள்தான் அவர் எதைச் செய்தாலும்... இதன் மூலம் என்னுடையது என்ற உண்மையை வெளியில் சொல்லாமல் அமைதியாக நிற்பாள்..

“பேசு சுந்தரி.. இத்தனைக்கும் பின்னாலும் அந்தப் பெண் உனக்கு மருமகளா வரனும்னு நினைக்கிறாளே.. அவ மனதை நீயாவது புரிஞ்சுக்க சுந்தரி.. அர்ஜீனிடம் எடுத்துச் சொல்லு...”

இது பார்த்தசாரதி கையாளும் யுக்தி.. நேகா அவருக்கு மருமகளாக வேண்டுமென்று நினைக்க வில்லையாம்.. அர்ஜீனுக்கு மனைவியாக வேண்டு மென்றும் நினைக்கவில்லையாம்.. சுந்தரிக்கு மருமகளாக வேண்டுமென்று நினைக்கிறாளாம்...

இதைக் கேட்டவுடன் ரத்த அழுத்தம் எகிற சுந்தரி தன் மௌனவிரதத்தை கைவிட்டு எப்படி அவள் அப்படிச் சொல்லலாம்..? அவள் சுந்தரிக்கு காட்டும் மரியாதை எத்தகையது என்று சுந்தரிக்குத் தெரியாதா என்று சண்டை போட்டு விடுவாளாம்...

அவரின் யுக்தி பலிக்கவில்லை.. சுந்தரி வாய் திறக்காமல் கடினமான முகத்துடன் அழுத்தமான பார்வையொன்றை அவர் பக்கம் வீசிவிட்டு எழுந்தே சென்று விட்டாள்...

சுந்தரியிடம் தென்பட்ட இந்த புதுவகையான பரிணாமம் பார்த்தசாரதியைப் பலமாக தாக்கியது.. இது

நாள்வரை மனைவியை அவர் புரிந்து வைத்திருப்பதாக நினைத்தது தவறா..? புரிந்து கொள்ள முடியாத நுண்ணுணர்வுகளை கொண்டவளா அவர் மனைவி..?

நேகாவைப் பற்றிய பேச்சை பார்த்தசாரதி விடவே மாட்டார் என்பதை தெளிவாக புரிந்து கொண்ட சுந்தரி ஆனந்தியிடம் அதைப்பற்றியும் பேசினாள்...

"ஏன் ஆனந்தி.. பார்ட்டியில வைத்து நீ எனக்கு வுட் பி யில்லைன்னு அர்ஜீன் சொல்லியிருக்கான்... மறுநாள் அந்த தீனதயாளன் உன் டாடியைத் தேடிவந்து அர்ஜீன் வேண்டாம்ன்னு சொல்லிவிட்டுப் போயிருக்கார்.. இத்தனைக்குப் பின்னாலும் அவ உங்க டாடியைத் தேடிவந்து உறவு கொண்டாறான்னா என்னடி அர்த்தம்..?"

"அவ மோசமான எதிரின்னு அர்த்தம்.."

"என்ன ஆனந்தி இப்படிச் சொல்ற..?"

"ஆமாம்மா.. ஒருத்தன் வேண்டாம்ன்னு சொல்லிட்ட பின்னாலும் அவனை எப்படியாவது பணிய வைத்து அவ சொன்ன சொல்லை உண்மையாக்கிறனும்ன்னு நினைக்கிறா பாருங்க.. ஷி இஸ் வெரி டேன்ஜரஸ் வுமன் மாம்..

இவ தோல்வியை ஒப்புக்காத குணம் படைச்சவம்மா.. ஜெயிக்கிறதுக்காக எதை வேண்டும்னாலும் செய்வா..”

“இப்படிப்பட்டவகிட்ட பணமிருந்து என்ன பிரயோசனம் ஆனந்தி..? உன் டாடி சொன்ன ஒரு வார்த்தைக்காக.. அர்ஜீனோட காதலையே வேண்டாம்னு தூக்கிப் போட்டா பாரு.. அவதான் உண்மையான கோடிஸ்வரி ஆனந்தி..”

“நான் நினைத்தேன்.. நீங்க சொல்லிட்டிங்க.. காவ்யாதான் அர்ஜீனுக்கு பொருத்தமானவ மாம்.. அர்ஜீன்கிட்ட இருக்கிற அத்தனை குணமும்.. அவகிட்ட மட்டும்தான் இருக்கு.. இவனைப் போல கோபமா.. ரோசமா.. உலகமே கிடைத்தாலும் வேண்டாம்னு தூக்கிப் போடற துணிவுள்ளவளா அவ இருக்கிறதினால தான் இவன் அவளைக் காதலிக்கிறான் மாம்..”

“எனக்கு மருமகளா வரனும்னு அந்த நேகா நினைக்கிறாளாம்.. என் மருமகள் காவ்யாதான் ஆனந்தி.. இதில மாற்றமேயில்லை...”

“அப்புறம் என்ன..? அடித்துத் தூள்கிளப்புவோம்..”

“எப்படி...”

“நீங்க பெரிய பாட்டிக்கு போனைப் போட்டு நாம அங்கே வரப்போகிறதா சொல்லுங்க.. சரணுக்கும்..

சாராவுக்கும் ஸ்கூல் ஹாலிடேஸ்.. அதனால் அதை ஸ்பெண்ட் பண்ண நாம எல்லோரும் குடும்பத்தோட திருநெல்வேலியில இருக்கிற பண்ணை வீட்டுக்குப் போறோம்...”

“உன் டாடியும் கூட வருவாரே...”

“வரமாட்டார்...”

“எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்ற..?”

“நேகா சென்னையில இருக்காங்கிற உறுதியில சொல்றேன்.. அவளை தினமும் இவர் மீட் பண்ணியாகனும்.. மனதைக் கரைக்கனும்.. அவ மனதை மாற விடாம பார்த்துக்கனும்.. இத்தனை இருக்கிறப்ப அவர் எப்படிம்மா சென்னையை விட்டு நகருவார்..?”

“ஆனந்தி..!...”

மகளின் அதீத புத்திசாலித்தனத்தை மெச்சிப் போய் அவளை உச்சி முகர்ந்தாள் சுந்தரி.. ஆனந்தியின் ஆலோசனையின் படி அவர்கள் திருநெல்வேலியின் பண்ணை வீட்டுக்குக் கிளம்பலாம் என்று முடிவாகியது.. அங்கே போன பின்னால் அம்புஜத்தின் வீட்டிற்கு அடிக்கடி வந்து போகும் காவ்யாவை மடக்கி.. அர்ஜீனின் ஆசையின் அளவை அவளுக்கு புரியவைத்து மனதை

மாற்ற வேண்டும் என்ற திட்டம் தீட்டப்பட்டது... அதைச் செயலாற்ற சுந்தரி அம்புஜத்திற்கு போனைப் போட்டாள்..

“அத்தை..” என்றாள்..

“சுந்தரி..” என்று மறுமுனையில் குரல் கொடுத்தாள் அம்புஜம்..

“எப்படித்தை இருக்கீங்க..?”

“நல்லா இருக்கேம்மா.. நீ எப்படி இருக்க..?”

“நல்லா இருக்கேன் அத்தை.. உங்க கால்வலி எப்படியிருக்கு..?”

“இப்பப் பரவாயில்லைம்மா.. உனக்கு அடிக்கடி தலை வலிக்குமே.. இப்ப எப்படியிருக்கு..?”

“அப்படியேதான் இருக்கு அத்தை.. வீட்டில சின்னவரும் சுமதியும் சௌக்கியம்தானே...”

“சௌக்கியமா இருக்காங்க சுந்தரி.. அங்கே பார்த்தசாரதி சௌக்கியமா..?”

“ரொம்ப சௌக்கியம் அத்தை.. கார்த்திக் எப்படியிருக்கான்..?”

“அவனுக்கென்னம்மா.. விளையாட்டுத்தனம் மாறாமலே இருக்கான்.. அங்கே அர்ஜீன் எப்படியிருக்கான்..?”

“அவனுக்கென்ன அத்தை.. நிற்க நேரமில்லாம ஒடிக்கிட்டே இருக்கான்..”

“ஆனந்தி எப்படியிருக்கா..?”

“நல்லா இருக்காத்தை..”

“மாப்பிள்ளை..?”

“அவரும் நல்லா இருக்கார்..”

“குழந்தைக..?”

“அதுகளுக்கென்னத்தை.. செம வாலுக..”

“குழந்தைகன்னா அப்படித்தான் இருக்கும்.. உன் வீட்டுத் தோட்டத்தில கண்டங்கத்திரிக்காய் போட்டயே.. முளைச்சதா..?”

“ஆ.. முளைச்சது அத்தை.. பொரியல் பண்ணி சாப்பிட்டோம்..”

நல விசாரிப்பு எப்போதுதான் முடிவடையும் என்று சுவர் கடிகாரத்தில விழி பதித்திருந்த ஆனந்தி.. அரைமணி நேரத்திற்கும் மேலாக நலவிசாரிப்பு நீண்டதில் நொந்து போயிருந்தாள் எப்போதுதான் விசயத்துக்கு

வருவார்கள் என்று ஆவலுடன் காத்திருந்தவளின் காதுகளில் குழந்தைகளின் நல விசாரணை விழுந்து வைத்தது.. அப்பாடி நல விசாரிப்பு நலமாக முடிந்தது என்று அவள் விவரத்திற்கு வர ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது நலவிசாரணை மனிதர்களிடமிருந்து இடம் பெயர்ந்து தோட்டத்திற்குத் தாவியதில் அவள் திகிலடைந்து விட்டாள்..

“அம்மா..” அலறினாள்..

“என்ன ஆனந்தி..”

“போனை இப்படிக் குடுங்க..”

போன் இடம் மாறியது.. ஆனந்தி போனை காதுக்கு கொடுத்து...

“பாட்டி..” என்றதும்...

“யாரு.. ஆனந்தியா..? எப்படிம்மா இருக்க..?” என்று அவளிடம் நலம் விசாரிக்க ஆரம்பித்து விட்டாள் அம்புஜம்..

அதற்குப் பதில் சொன்னால் நலவிசாரிப்பு அனுமார் வாலைப் போல நீண்டு விடும் என்பதால் நேரடியாக விசயத்துக்குள் குதித்தாள் ஆனந்தி...

“இப்பத்தான அம்மா நான் எப்படியிருக்கேன்னு சொன்னாங்க..? இதுக்கு மேலேயும் ஆனந்தி எப்படிம்மா

இருக்கேன்னு கேட்டா என்ன அர்த்தம் பாட்டி..? கன்னித்தீவு கதைகூட முடிவுக்கு வந்திரும்.. நீங்க போனில் நலம் விசாரிக்கிறது முடிவுக்கு வராதுன்னா என்னதான் செய்கிறது..?"

"எதுக்கு டென்சன் ஆகிற..?"

"நான் டென்சன் ஆகிறேனா..? நீங்க 'நலம்.. நலமறிய ஆவல்'ங்கிற பாட்டைக் கேட்டதேயில்லையா..? ஒற்றைவரியில முடிஞ்சு போகிற பேச்சை இன்னைக்குப் பூராவும் செல்போனில பேசி.. செல்போன் கம்பெனிக் காரங்களை வாழ வைத்துக்கிட்டு இருக்கீங்களே.."

"கோவிச்சுக்காத ஆனந்தி.."

"அதெல்லாம் கோவிச்சுக்குவேன்.. செல்போனில என் கோபத்தைக் காட்டமுடியாது.. நேரா திருநெல்-வேலிக்கே பறந்து வந்து என் கோபத்தை கொட்டறேன்.."

"வா.. வா.. கேட்கவே சந்தோசமா இருக்கு.."

"பிள்ளைகளுக்கு ஹாலிடேஸ்.. அம்மா வீட்டுக்குப் போகலாம்ன்னா அது உள்ளூராப் போயிருச்சு.. அதான் திருநெல்வேலி பண்ணை வீட்டுக்கு கிளம்பி வர்றோம்.."

"ரொம்ப சந்தோசம்.. உன்னைப் பார்த்தும் நாளாச்சு.. நானும் உன்னிடமும் சுந்தரியிடமும் ஒரு விசயத்தைப் பத்திப் பேசலாம்ன்னு இருந்தேன்..."

“என்ன பாட்டி..?”

“இங்கே.. காவ்யா.. காவ்யான்னு ஒரு பொண்ணு...”

எவளுக்காக தாயும் மகளும் திருநெல்வேலிப் பயணத்தை முடிவு செய்தார்களோ.. அவளைப் பற்றியே அம்புஜம் பேசவும் ஆனந்தி ஆச்சரியப்பட்டுப் போனாள்..

“அது யாரு பாட்டி.. புதுசா பெயர் சொல்கிறிங்க..?” எதுவும் அறியாதவளைப் போல கேட்டு வைத்தாள்..

“நம்ம வீட்டுக்கு அடிக்கடி வந்து போகிற பொண்ணும்மா...”

“ஓ.. அதைப்பற்றி எங்ககிட்ட பேச என்ன இருக்கு..?”

அம்புஜத்திற்கு விவரம் தெரியுமோ என்று அறியும் முயற்சியில் வெகு ஜாக்கிரதையாக வார்த்தைகளைக் கோர்த்துக் கேட்டாள் ஆனந்தி...

“இருக்கு ஆனந்தி.. அதைச் சொல்லத்தானே பேச்சை ஆரம்பிச்சேன்..? நம்ம கார்த்தி பயலுக்கு அந்தப் பொண்ணு மேல நோக்கமிருக்கு..”

அம்புஜம் அணுகுண்டைத் தூக்கிப் போட..

‘இது வேறா..?’ என்று நொந்து போனாள் ஆனந்தி..

“அந்தப் பொண்ணு மனசில என்ன இருக்குன்னு தெரியலை.. கார்த்திக் என்கிட்டயும் சுமதி கிட்டயும் மட்டும்தான் அவன் மனசை சொல்லியிருக்கான்.. சரவணனுக்கு இது தெரியாது.. அதனால முதல்ல அவ அண்ணனிடம் பெண் கேட்டுப் பார்க்கலாம்ன்னு நானும் சுமதியும் நினைத்திருந்தோம்.. அவன் சம்மதம் கிடைத்த பின்னால சரவணனை.. சம்மதிக்க வைக்கலாம்கிற எண்ணம்.. ஆனா பாரு.. இப்பப் பார்த்து அந்தப் பெண்ணோட அண்ணனுக்கு சொந்த ஊருக்கே மாறுதல் வந்திருச்சு.. நாளைக் காலையில அந்தப் பொண்ணும் அவ அண்ணனும் திருநெல்வேலியை விட்டு மதுரைக்கு கிளம்பிப் போறாங்க.. இங்கேயிருந்தாலாவது எதையாவது செய்யலாம்.. ம்ஹீம்..”

அம்புஜம் விட்டபெருமூச்சில் ஆனந்தி செல்போனை அணைத்து விட்டு சுந்தரியை பார்த்தாள்...

“இப்ப என்னம்மா செய்கிறது...?”

# 178

## ஒட்டி நிற்கும் உறவாக – நீ
## ஒட்டி வர ஆசைகொண்டேன்...

**ம**ருக் கொழுந்து மூக்கை உறிஞ்சிக் கொண்டே பெட்டிகளை கட்டிக் கொண்டிருந்தாள்...

“ஏன் பாப்பா.. பொசுக்குன்னு வந்துட்டு.. பொசுக்குன்னு மாறிப் போனா இந்த மருக்கொழுந்து என்ன பண்ணுவா.. அவ மனசு என்ன பாடுபடும்ன்னு நீ ஒரு நிமிசமாவது யோசனை பண்ணிப் பார்த்தியா..?”

“நான் யோசனை பண்ணி என்ன ஆகப் போகுதுக்கா.. அண்ணனுக்கு டிரான்ஸ்பர் வந்தா நான் கிளம்பித்தானே ஆகனும்..?”

“உனக்கு உங்க அண்ணன்தான் முக்கியம்.. இந்த அக்கா முக்கியமில்ல...”

மருக்கொழுந்து கண் கலங்கினாள்.. அவளின் அப்பழுக்கற்ற பாசத்தில் காவ்யாவின் மனம் உருகியது..

அவள் மருக்கொழுந்தின் கண்ணீரைத் துடைத்து விட்டாள்..

“பாப்பா..” என்று அவளைக் கட்டிக்கொண்டு அழுதாள் மருக்கொழுந்து..

ஹாலில் அமர்ந்து நடப்பதை பார்வையிட்டுக் கொண்டிருந்த கண்ணதாசனின் மனம் கனத்தது.. சில தருணங்களில் பாசமும் அன்பும்.. காதலும்கூட சுமையாக மாறி மனதில் ஏறி அமர்ந்து விடுகிறது என்று நினைத்துக் கொண்டான் அவன்...

“அழுகாதேக்கா..” காவ்யாவும் கண்கலங்கினாள்...

“இது வேல பாக்குற வீடுன்னே நான் நினச்சதில்ல பாப்பா.. இங்கே இருக்கிறவங்க என் சொந்த உடன் பிறப்புன்னுதான் நினைச்சிருந்தேன்..” மருக்கொழுந்து விம்மினாள்..

“நாங்களும் அப்படித்தான் நினைக்கிறோம்.. மருக்கொழுந்து..” கண்ணதாசன் எழுந்து வந்தான்..

“எங்க குடும்பத்தில எந்த விசேசம் நடந்தாலும் உனக்கும் குமாருக்கும் அழைப்பு வந்துரும் மருக்கொழுந்து.. அதைப்போல உங்க குடும்பத்தில நடக்கிற விசேங்களில நாங்க முன்னால நிற்போம்..”

அதுநாள் வரை அவளை அரட்டிக் கொண்டும் மிரட்டிக் கொண்டுமிருந்த கண்ணதாசன் முதன் முதலாக பாசப்பறவையை பறக்க விட்டதில் புளகாங்கிதப் பட்டுப் போனாள் மருக்கொழுந்து..

"இது போதும்ங்கய்யா.. உங்க வீட்டு விசேசத்துக்கு நீங்க அழைப்பு வைக்கலேன்னாலும் நாங்க முன்னாடி வந்து நிற்போமுங்க அதப்போல எங்க வீட்டு விசேத்துக்கு நீங்க வரலைன்னா நாயம் கேட்டு உங்க வீட்டுக்கு முன்னால உட்கார்ந்து உண்ணாவிரதம் இருப்போமுங்க.."

"போச்சுடா.. அது எதுக்கு தேவையில்லாம.. நீ வாய்க்கு ருசியா சமைச்சுப் போடற ஆளு.. உன்னைப் போயி உண்ணா விரதம் இருக்க விட்டா அந்தப் பழியும் பாவமும் எங்களைத்தான் வந்து சேரும்..? அந்தக் கொடுமையெல்லாம் நடக்க விடமாட்டேன்... கவலையே படாதே..."

கண்ணதாசன் அளித்த உத்தரவாதத்தில் மருக்கொழுந்து மனம் தேறியவளாக சாமான்களை கட்டும் வேலையைத் தொடர்ந்தாள்.. வாசலில் கார் சப்தம் கேட்டது.. கண்ணதாசன் எட்டிப் பார்த்தான்.. அம்புஜம் இறங்கி வந்து கொண்டிருந்தாள்..

"வாங்க பாட்டி.." கண்ணதாசன் வரவேற்றான்...

"நான் வர்றது இருக்கட்டும்.. இன்னைக்கு மதிய சாப்பாடு எங்க வீட்டிலதான்னு சொன்னேனா இல்லையா.." அம்புஜம் அதட்டினாள்..

"சொன்னீங்கதான்.."

"அதுக்குக் கிளம்பி வராம நீயும் காவ்யாவும் இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க.."

"சாயங்கால டிரெயினுக்கு கிளம்பனும்.. அதுக்கு முன்னால சாமான்களை கட்டி வைக்கனும்.. அந்த வேலைகளைத்தான் செய்துக்கிட்டு இருக்கோம்..."

"லாரி பிடிக்கப் போறயா..?"

"இல்ல பாட்டி.. பர்னிச்சரெல்லாம் இங்கே இருந்ததுதான்.. பாத்திரங்கள்.. மத்த பொருள்கள்ன்னு அம்மா கொடுத்து விட்டதைக் கட்டிக்கிட்டு இருக்கோம்.. டிவியை மருக்கொழுந்து வீட்டுக்கு எடுத்துட்டுப் போகச் சொல்லியிருக்கோம்..."

அந்தச் செய்தியில் அயர்ந்து போன மருக்கொழுந்து கண்களை விரித்து..

"ஐயா.." என்றாள்..

“ஸ்ஸ்ஸ்..” காவ்யா செல்லமாக அவளை அடக்கினாள்..

“புது எல்.ஸி.டி. டிவி எனக்கே.. எனக்கா பாப்பா..”

“உனக்கே உனக்குத்தான்க்கா.. வைச்சுக்க..” அன்புடன் சொன்னாள் காவ்யா..

மருக்கொழுந்தின் முகத்தில் தெரிந்த சந்தோசத்தில் அவள் இதயம் நெகிழ்ந்தது.. அந்த டிவியின் விலை சில ஆயிரங்களாக இருக்கலாம்.. அதைப் பரிசாக கொடுக்கும் போது கிடைத்த நிறைவு விலை மதிப்பில்லாதது..

“உனக்குப் பெரிய மனசுதான்..” அம்புஜம் மருக்கொழுந்தைப் பார்த்தபடி சொன்னாள்..

“நீயும்.. காவ்யாவும் பணத்தை வைச்சுப் பழகறதில்லை கண்ணதாசா.. மனசை வைத்துப் பழகறிங்க.. மனுசங்களுக்கு பாசத்தை அள்ளிக் கொடுக்கறிங்க.. தேடினாலும் உங்களைப் போல மனுசங்க கிடைக்க மாட்டாங்க...”

அம்புஜம் மனப்பூர்வமாக இதைச் சொன்னாள்.. மருக்கொழுந்து தலையை ஆட்டி அதை ஆமோதித்தாள்..

“சரியாச் சொன்னீங்கம்மா...”

“என்னத்தை சரியாச் சொல்லிட்டாங்க.. நாங்க மட்டும்தான் இப்படியிருக்கோமா..? பாட்டி இல்லையா..? நீ இல்லையா..? எங்களுக்காக விருந்து சமைக்கச் சொல்லிட்டு.. கூப்பிட்டுக்கிட்டுப் போக வீடு வரைக்கும் பாட்டி வந்திருக்காங்க.. நீ என்னடான்னா இந்த வீட்டை வேலை செய்கிற வீடாய் நினைக்கலை.. உன் உடன் பிறந்தவங்க வீடா நினைச்சேன்னு சொல்ற.. நீங்க மட்டும் எங்ககிட்ட பணத்தை வைச்சா பழகினீங்க..? மனசை வைத்துத்தான பழகினீங்க..?” கண்ணதாசன் மடக்க...

“ஊஹீம்..” என்று அதை ஆட்சேபித்தாள் அம்புஜம்..

“தப்பாச் சொல்ற கண்ணதாசா.. மனசை வைத்துப் பழகலை.. உங்க ரெண்டு பேரோட மனசைப் பார்த்துப் பழகினோம்.. இப்படி மனுசங்க காணக் கிடைக்காதவங்க..”

“இதை நாங்களும் சொல்லுவோம்..”

“அதுக்குப் பதிலை நாங்களும் சொல்லுவோம்..”

“அப்ப பேச்சு நீண்டுக் கிட்டே இருக்கும்.. முடிவே இருக்காது.. சாயங்கால டிரெயினுக்கு வெறும் வயிறாய்த்தான் போய் நிற்கனும்..”

“அடடா.. பேச்சு ஞாபகத்தில அதை மறந்திட்டனே..”

“இப்ப ஞாபகம் வந்தாச்சா..?”

"வந்தாச்சு.. வந்தாச்சு.."

அம்புஜம் மாமி சிரித்தபடி காவ்யாவை அழைத்துக் கொண்டாள்.. ஒருவழியாக பேச்சு வார்த்தையை நிறுத்தி விட்டோம் என்ற நினைவுடன் கண்ணதாசன் கிளம்ப யத்தனித்தான்..

"மருக்கொழுந்து.."

"ஐயா.."

"நாங்க சாப்பிட்டு வர்றதுக்குள்ள எல்லாத்தையும் கட்டி முடிச்சிருவியா..?"

"அதவிட வேற சோலி என்னங்கய்யா இருக்கு..?"

கண்ணதசானும் காவ்யாவும் அம்புஜத்துடன் பேசியபடி படியிறங்கிய போது யமுனாமாமி அவசரமாக எதிரே வந்தாள்..

"அவசரமாக கிளம்பறேளா.." என்று தயங்கினாள்..

"அப்படிச் சொல்ல முடியாத மாமி.. பாட்டி வீட்டுல எங்களுக்காக லன்ச் பிரிபேர் பண்ணியிருக்காங்க.. அதுக்குப் போறோம்.." என்றான் கண்ணதாசன்..

"மதியச் சாப்பாட்டுக்கு எங்க ஆத்துக்கு வாங்கோன்னு சொல்லத்தான் நான் வந்தேன்.." மாமியின் முகம் வாடியது...

“இப்ப என்ன.. சாயங்காலமா கும்பகோணம் டிகிரி காப்பிய போட்டுக் கொடுங்க.. பிள்ளைக மணமா காபியை குடிச்சுட்டு கிளம்பட்டுமே...” அம்புஜம் வழிசொன்னாள்..

“அப்ப ஈவினிங் காபி டிபன் எங்காத்திலதான்..” மாமி உறுதிபடுத்திக் கொண்டு கிளம்பினாள்..

அங்கிருந்த சில மாதங்களில் சொந்தங்களாய் மாறிவிட்ட மனிதர்களை நினைத்து கண்ணதாசனுக்கும்.. காவ்யாவுக்கும் நெகிழ்வாக இருந்தது..

அம்புஜத்தின் வீட்டில் கோழிவறுவல்.. பிரியாணி.. மீன் பொரியல் என்று அசைவ விருந்து களை கட்டியது..

“அசத்திட்டிங்க பாட்டி.. எங்க பக்க விசேசத்தில வெளுத்துக் கட்டினதப் போலவே இருக்கு..” கை கழுவ எழுந்தான் கண்ணதாசன்..

சாப்பாட்டுக்குப் பின்னால் முன் ஹாலில் அனைவரும் அமர்ந்தார்கள்.. வேலைக்காரப் பெண் ஐஸ்கிரிம் கோப்பைகளை ஒரு டிரேயில் வைத்துக் கொண்டு வந்து அனைவரிடமும் நீட்டினாள்.. ஐஸ்கிரிமைச் சுவைத்தபடி அவர்கள் பேச ஆரம்பித்தார்கள்..

“உங்க வீட்டுக்கு வரலாம்ன்னு இருக்கோம்...”

அம்புஜத்தைப் பார்த்தபடி சொன்னாள் சுமதி.. சரவணனின் புருவங்கள் உயர்ந்தன.. அவர் விழிகளும்.. சுமதியின் விழிகளும் சந்தித்து மீண்டன.. கார்த்திக்கின் முகம் பிரகாசமடைந்தது..

"என்னன்னு தெரியலை கண்ணதாசன்.. இவ அடிக்கடி இதைச் சொல்லிக்கிட்டிருக்கா.. உங்க அப்பாம்மாவை இவ பார்க்கனுமாம்.."

'எதுக்கு..?' கண்ணதாசனின் மனதில் கேள்வி எழுந்தாலும் அதை மறைத்துக் கொண்டு சிரித்த முகமாக பதில் சொன்னான்..

"எங்ககிட்டக் கேட்டுட்டுத்தான் நீங்க வரனுமா என்ன..? சித்திரைத் திருவிழாவுக்கு வாங்களேன்.. எங்க ஊரைச் சுற்றிப் பார்த்த மாதிரியும் இருக்கும்.. எங்க ஊரு சித்திரைத் திருவிழாவில கலந்துக்கிட்ட மாதிரியும் இருக்கும்..."

"நான்கூட நினைச்சேன் சுமதி" என்றாள் அம்புஜம்..

"மதுரையில சித்திரைத் திருவிழா எப்படி நடக்குதுன்னு பார்த்துட்டு வரலாம்ன்னு எனக்குள்ளேயும் எண்ணமிருக்கு.. அழகர் ஆத்தில இறங்குறதையும்.. மீனாட்சி கல்யாணத்தையும் எல்லாரும் விமரிசையா

பேசறாங்களே.. ஒரு தடவை போயி.. அதெல்லாம் என்னன்னுதான் பார்த்துட்டு வந்துரலாமே..."

"அப்படியா சொல்கிறிங்க அத்தை..?" சுமதி தயங்கினாள்..

"இதில உனக்கு என்ன சிரமம்..?" அம்புஜம் கேட்டாள்..

"இல்ல.. சித்திரைத் திருவிழா ஒரு நாளில நடந்து முடியற திருவிழா இல்லை.. அங்கேயே தங்கி நிதானமாப் பார்க்க வேண்டிய திருவிழா.. நாம இருக்கலாம்.. ஆனா உங்க மகனுக்கும் பேரனுக்கும் தோதுப்படுமா அத்தை..?" சுமதி சொல்லிக் கொண்டிருந்த போதே..

"எனக்குத் தோதுப் படும்மா.." என்று அவசரமாகச் சொன்னான் கார்த்திக்..

சரவணன் மகனை அனல் பார்வை பார்த்தார்.. அவன் வாய் மூடிக் கொண்டான்..

"சுமதி சொல்கிறது கரெக்டும்மா.. இப்பத்தான் கலிவரதனோட கம்பெனியையும் வாங்கியிருக்கேன்.. வேலை மூச்சு முட்டுது.. இதில திருவிழாப் பார்க்கிற ஃப்ரீ மைன்டோட என்னால வர முடியுமா...? ஒரு வாரம்தான் தங்க முடியுமா..?"

"கார்த்திக்..?"

"அவனுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.. அவனுக்கு பொறுப்பைத் தட்டிக் கழிச்சுட்டு ஊர் சுத்தறதுன்னா நம்ம ஊரு அல்வாவைச் சாப்பிடறதைப் போலத்தான் இருக்கும்.. நாம அதுக்கு இடம் கொடுக்கலாமா..? ம்ஹீம்.. இதையெல்லாம் நான் சொல்ல வேண்டியிருக்கு.. பார்த்தசாரதியண்ணன் கொடுத்து வைச்சவர்.. அவர் சொல்கிறதைப் போல அர்ஜீன் வைத்துக் கொண்டதே இல்லை.. இங்கே அப்படியா..?"

சரவணன் சொன்னதில் சுமதிக்கு உடன்பாடில்லை... அவளுக்கு கார்த்திக்கின் மனதைப் பற்றித் தெரியும்.. அதில் காவ்யாவைப் பற்றிய நினைவு இருந்ததை அவள் அறிவாள்.. மகன் விரும்பும் பெண்ணின் முன்னால் அவனைக் குறைவாகப் பேசுவதை எந்தத் தாய்தான் விரும்புவாள்..? அது அவனைப் பெற்ற தகப்பனாக இருந்தாலும் அவள் அதை ஆதரிக்க மாட்டாள்தானே.. கூடுதலாக பார்த்தசாரதி கொடுத்து வைத்தவர் என்று எதைக் குறித்து சரவணன் சொல்கிறார் என்ற ஐயப்பாடும் அவளுக்குள் எழுந்து வைத்தது.. அவரின் பொறாமை அர்ஜீனைப் போன்ற மகனை

பார்த்தசாரதி பெற்றவர் என்பதினாலா.. இல்லை.. சுந்தரியைப் போன்ற மனைவியை பார்த்தசாரதி அடைந்தவர் என்பதினாலா என்ற கோபம் அவள் நெஞ்சில் மூண்டது..

மருமகளின் முகத்திலிருந்து அவள் மனப்போக்கை யூகித்து விட்ட அம்புஜம் சரவணனை அதட்டினாள்..

“விடுலே.. இது ஒரு பேச்சுன்னு பேசிக்கிட்டு.. இப்ப என்ன..? சித்திரைத் திருவிழாவுக்கு உன்னாலயும்.. உன் மகனாலயும் வரமுடியாது.. அவ்வளவுதானே.. விட்டுத் தள்ளு.. நானும் சுமதியும் போய் திருவிழாவைக் கொண்டாடிட்டு வர்றோம்.. என்ன சுமதி சரிதானே..?”

சுமதிக்கும் அது சரியென்றே பட்டது.. முதலில் காவ்யாவின் குடும்பம் எப்படி என்று அவள் அவதானித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.. அதற்குப் பின்னால் தான் கார்த்திக்கின் மனதைப்பற்றி அவளால் சரவணனிடம் பேச முடியும்.. அதற்கு இந்தத் திருவிழாவைச் சாக்கிட்ட சுற்றுலாப் பயணம் உதவுமே...

“சரிதான் அத்தை..” அவள் சந்தோசமா ஆதரித்தாள்..

“அப்படின்னா.. எப்ப திருவிழா வரும்.. எத்தனை நாள் நீங்க மதுரையில தங்கனும்னு முன்கூட்டியே

சொல்லிருங்க.. என் பிரண்டோட கெஸ்ட் ஹவுஸில் நீங்க தங்கறதுக்கான ஏற்பாடுகளை நான் பண்ணிடறேன்..”

“நல்லா இருக்குங்க நீங்க சொல்கிறது...” கண்ணதாசன் அதை ஆட்சேபித்தான்..

“ஏன்.. என்ன ஆச்சு..?” சரவணனுக்குப் புரியவில்லை...

“ஆண்ட்டியும்.. பாட்டியும் எங்க ஊருக்கு.. எங்க விருந்தாளிகளா வந்துட்டு.. கெஸ்ட் ஹவுஸில் தங்கறதா..? எங்களுக்குன்னு வீடு இல்லையா..?” கண்ணதாசன் கோபப்பட்டான்...

“ஓ.. நீங்க அதைச் சொல்கிறீங்களா..? நான் என்னவோ.. ஏதோன்னு யோசிச்சேன்.. உங்களுக்கு எதுக்காக வீண் சிரமம்..? அதோட.. திருவிழா ஒருநாள்.. இரண்டு நாள்ன்னா பரவாயில்லை... ஓகேன்னு சொல்லலாம்.. ஒரு வாரம் தங்கனும்னு இவங்க பிளான் போடறாங்க.. அத்தனை நாளைக்கு இரண்டு தரப்பிலயும் அட்ஜஸ்ட் பண்ணிக்க முடியாது கண்ணதாசன்..” சரவணன் யதார்த்தத்தைச் சொன்னார்...

“எத்தனை நாள்ன்னா என்னங்க..? எங்களால இவங்களை பார்த்துக்க முடியாதா..? இதுவே காவ்யாவும்

எங்க அம்மாவும் இந்த ஊருக்கு உங்க வீட்டுக்கு விருந்தாளிகளா வந்திட்டு என் பிரண்ட் வீட்டில தங்கியிருக்கிறதா சொன்னா.. நீங்க விட்டுட்டுத்தான் வேற வேலை பார்ப்பீங்களா..?” கண்ணதாசன் சூடான கேள்வியைத்தான் கேட்டான்..

“இதென்ன கண்ணதாசன் இப்படிச் சொல்லிட்டிங்க.. எங்க வீட்டுக்கு விருந்தாளிகளா வந்த பெண்களை வெளியில் தங்க விடறதாவது.. அதெப்படி முடியும்..?” சரவணன் சொல்லி விட்டு கண்ணதாசனின் கிடுக்கிப் பிடியில் மாட்டிக் கொண்டு ஒரு மார்க்கமாக விழித்து வைத்தார்...

சுமதிக்கு சிரிப்பு வந்து விட்டது.. அம்புஜத்தின் முகத்திலும் அது பரவ.. அவள் மகனை செல்லமாக கடிந்து கொண்டாள்..

“இதுதான் வாயைக் கொடுத்து மாட்றதுங்கிறது.. ஏன்லே.. மதுரைக்காரங்க விருந்துக்கு சளைச்சவங்களா..?”

“நல்லாக் கேளுங்க பாட்டி.. சார்.. எங்க தரப்பில சிரமம் எதுவுமில்ல.. பாட்டி தரப்பிலயும் ஆண்ட்டி தரப்பிலயும் சிரமம் வர நாங்க விட மாட்டோம்.. மாடியில ஏஸி ரூமிருக்கு.. அவங்களை அங்க தங்க வைத்துப் பார்த்துக்கிறது எங்க பொறுப்பு.. நீங்க இதுக்குத்தானே கவலைப்பட்டீங்க..?”

“ஹி.. ஹி..”

“சரவணன் சிரித்த சிரிப்பில் அவர் அதற்குத்தான் கவலைப்பட்டார் என்பது வெட்ட வெளிச்சமாக.. சுமதி இப்போது வாய்விட்டுச் சிரித்தாள்.. காவ்யாவும் கண்ணதாசனும் விடைபெற்றுக் கொண்டார்கள்.. அம்புஜத்தின் கண்ணசைவில் சுமதி ஒரு பெரிய வெள்ளித்தட்டில் சேலை.. பூ.. சிறிய நகைப்பெட்டி.. குங்குமச்சிமிழ் முதலியவற்றை வைத்து காவ்யாவிடம் நீட்டினாள்..”

“வாங்கிக்கம்மா...”

அவள் அன்புடன் சொல்ல.. காவ்யா குங்குமச் சிமிழில் இருந்த குங்குமத்தை மட்டும் நெற்றியில் இட்டுக் கொண்டு.. சுமதியையும்.. அம்புஜத்தையும் வணங்கி எழுந்தாள்...

“எனக்கு இது மட்டும் போதும் ஆண்ட்டி..”

கண்ணதாசன் பெருமையாக சிரித்துக் கொண்டான்.. தங்கையின் தன்மையில் அவன் கொண்ட பெருமிதத்தை அந்தச்சிரிப்பு வெளிப்படுத்தியது...

“வாங்கிக்கச் சொல்லு கண்ணதாசா.. இது உங்க பாட்டியோட அன்பளிப்பு.. காவ்யா என்னோட பேத்தி.. இந்தப் பாட்டிக்கு அவபேத்திக்கு அன்பளிப்புக் கொடுக்க உரிமையில்லையா..?”

"உங்க அன்பு மட்டும் போதும் பாட்டி.. அது அளிக்கிற சந்தோசத்தை இந்த அன்பளிப்பு கொடுத்து விடாது.."

"மதுரைக்காரனில்ல.. சங்கத்தமிழ்.. சரளமா வரத்தானே செய்யும்.. அந்த வித்தையை இங்கே காட்ட வேணாம்.. என்னை பாட்டின்னு நீங்க இரண்டு பேரும் நினைக்கிறது உண்மையா இருந்தா.. காவ்யா இந்தப் பரிசை வாங்கிக்கிட்டுத்தான் ஆகனும்..."

வேறு வழியில்லாமல் பரிசை வாங்கிக் கொள்ளும் படி காவ்யாவிடம் சொன்னான் கண்ணதாசன்.. அவள் வாங்கிக் கொண்டதில் கார்த்திக்கின் முகத்தில் வெளிச்சம் பரவியதை கண்ணதாசன் கண்டு கொண்டான்...

'இங்கேயும் ஒரு காதல் கதையா..? ம்ஹீம்.. இவனுக்கு அர்ஜீன் மனதில் காவ்யா இருக்கிறதைப் பற்றித் தெரியுமா..?'

மனதுக்குள் நினைத்தபடி அவர்களிடம் சொல்லிக் கொண்டு காவ்யாவும் கண்ணதாசனும் வீட்டிற்குத் திரும்பினார்கள்.. சாமான்கள் கட்டி வைக்கப் பட்டுத் தயாராக இருந்தன.. மாலையில் யமுனா மாமியின் வீட்டில் காபி டிபன் காத்திருந்தன.. அந்த குடியிருப்புப் பகுதியில் வசித்த மக்கள் கூடி நின்று வழியனுப்பி

வைத்தார்கள்.. மருக்கொழுந்துவும் குமாரும் ரயிலில் அவர்கள் ஏறும்வரை கூடவே வந்தார்கள்.. ரயில் வந்தது காவ்யாவும் கண்ணதாசனும் கையாட்டிவிட்டு ஏறினார்கள்.. மருக்கொழுந்து கூடவே ஓடிவர ரயில் கிளம்பி வேகமெடுத்தது.. காவ்யா மதுரையிலிருந்து வந்த போது செய்ததைப் போலவே ஜன்னலின் கம்பிகளில் கண்ணீர் முகம் பதித்தாள்..

'இனி அவன் முகத்தை நான் பார்ப்பேனா..?' மனதுக்குள் அழுதாள்...

ரயிலின் தடக்.. தடக் என்ற ஒலியில்.. தாலாட்டு ஓசை கேட்க.. அதை ரசிக்க முடியாதவனாக தங்கையைப் பார்த்தான் கண்ணதாசன்.. அவள் மனதின் காயம் முகத்தில் தெரிந்தது.. திருநெல்வேலிக்கு எதைத் தேடி அவள் ஓடிவந்தாள் என்று அவன் யோசித்தான்...

"அண்ணா... எங்கேயாவது தொலைதூரமாய் போய்விடலாம்.." என்று அவள் கதறினாளே...

அந்த தொலைதூரத்திற்குத்தான் அவளை அழைத்துக் கொண்டு வந்தான்.. அந்த தொலைதூரத்தில் அவளால் துரத்தும் நினைவுகளில் இருந்து தப்பிக்க முடிந்ததா...? அந்த நினைவுகளைத் தந்தவனின் முகத்தைப் பார்க்காமல் இருக்க முடிந்ததா..?

'அவன் இங்கேயும் வந்துட்டானே...'

அதுதான் கண்ணதாசனிற்கு ஆச்சரியமான ஒன்றாக இருந்தது.. காவ்யா திருநெல்வேலியில் இருப்பதைத் தெரியாமல்தான் அர்ஜீன் வந்திருக்கிறான் என்றால் அது எப்படி நிகழ்ந்தது...?

புதிய ஊரில் காவ்யா பேசிப் பழகிய பாட்டி... அர்ஜீனுடைய சொந்தப் பாட்டியின் தங்கைப் பாட்டியாக எப்படி இருந்தாள்..?

இருவரும் ஒரேவீட்டில் சந்தித்துப் பேசிப் பழகும் வாய்ப்பு எப்படி கிடைத்தது..?

'இதுதான் காதலோ...'

காவ்யாவின் சோர்ந்த முகத்தை ஊன்றிக் கவனித்த கண்ணதாசனுக்கு... அர்ஜீன் அந்த ஊரில் இருந்த பதினைந்து நாளிலும் காவ்யாவின் முகத்தில் வெளிச்சம் பரவியிருந்தது என்பது நினைவுக்கு வந்தது...

எங்கிருந்தோ ஆசை வந்தால்.. இப்படித்தான் ஆகி விடுவார்களோ..?

அவன் இரக்கத்துடன் தங்கையைப் பார்த்தான்..

- ஆறாம் பாகத்தில் தொடரும் -


லட்சுமி பாலாஜி பதிப்பகம்